ஒரு புதிய ஏற்பாட்டு ஆராய்ச்சி – 1 பேதுரு

# நம்பிக்கை உள்ளவனாயிரு



உங்கள் கெட்ட நேரத்தை நல்ல நேரமாக மாற்றுவது எப்படி

வாரன் டபிள்யூ வியர்ஸ்பி

# நம்பிக்கை உள்ளவனாயிரு

# நம்பிக்கை உள்ளவனாயிரு

வாரன் டபிள்யூ வியர்ஸ்பே

தமிழாக்கம் : பென் செருபாபேல்

COOK INTERNATIONAL
a grassroots partner
&
OM India
Secunderabad

***Nambikkai Ullavanayiru***
(Tamil)

*Be Hopeful*
By Warren W. Wiersbe

Copyright © 1982 by SP Publications, Inc
Originally published in English language in the United States by Chariot Victor Publishing, Colorado Springs, Co.

First Tamil edition 2004
Reprint 2008

All rights reserved.
No part of this publication may be reproduced or transmitted in any form or by any means, electronic, or mechanical, including photocopying, recording, or any information storage and retrieval system, except for brief quotations in books and critical reviews, without permission in writing from the publisher.
*Published for the Shoebox Library Distribution Project for Pastor, co-ordinated by CCMI.*

*Not for Re-sale*

Jointly published by
CCMI
&
OM India,
Secunderabad 55.

Printed and bound by
Authentic India, Secunderabad 500 055.
E-mail: printing@ombooks.org

# பொருளடக்கம்


முன்னுரை 7

1. எங்கு கிறிஸ்து இருக்கிறாரோ, அங்கு நம்பிக்கை இருக்கிறது
1 பேதுரு 1:1; 5:12-14
1 பேதுரு பற்றிய ஒரு குறிப்புரை 9

2. எவ்வகையிலும் மகிமையே!
1 பேதுரு1:2-12 19

3. ஒரு மாசடைந்த உலகில் பரிசுத்தமாக இருத்தல்
1 பேதுரு 1:13-21 33

4. கிறிஸ்தவ ஒற்றுமை
1 பேதுரு 1:22-2:10 45

5. யாரோ ஒருவர் உங்களை கவனித்துக்கொண்டு இருக்கிறார்
1 பேதுரு 2:11-25 57

6. திருமண இணைப்பா? அல்லது மரணப் பிணைப்பா?
1 பேதுரு 3:1-7 69

7. சிறந்தவற்றிற்காக ஆயத்தப்படுதல்
1 பேதுரு 3:8-17 81

8. நோவாவிடம் இருந்து கற்றறிவது
1 பேதுரு 3:18-22 91

9. மீதி இருக்கும் உங்கள் வாழ்க்கைக் காலம்
1 பேதுரு 4:1-11 101

10. உலைகளைப் பற்றிய உண்மைகள்
1 பேதுரு 4:12-19 113

11. ஒரு நல்ல மேய்ப்பனாக இருப்பது எப்படி?
1 பேதுரு 5:1-4 125

12. கிருபையில் இருந்து மகிமைக்கு
1 பேதுரு 5:5-11 135

13. தியானத்திற்கான கேள்விகள் 145

எங்களது மருமக்களுக்கு

சூசன் வியர்ஸ்பே
கரன் வியர்ஸ்பே
டேவிட் ஜேக்கோப்சன்
டேவிட் ஜாண்சன்

எங்களில் ஒருவராக
நீங்கள் இருப்பது
எங்களுக்குப்
பெரியகாரியம்!

# முன்னுரை

பாடுகளையும், துன்புறுத்தப்படுவதையும் பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியும் என்றால், 1 பேதுரு உங்களுக்காக ஒரு செய்தியை வைத்திருக்கிறது: "நம்பிக்கையோடு இருங்கள்!"

பல்வேறு சோதனைகளுக்குள் போய்க்கொண்டு இருந்த கிறிஸ்தவர்களுக்காக பேதுரு இந்த கடிதத்தை எழுதினார். "பற்றி எரியும் அக்கினி சோதனைகள்" சூழ்ந்து வருவதை அறிந்த அந்த அப்போஸ்தலர், விசுவாசிகளை அதற்கு ஏற்றபடி ஆயத்தம் செய்ய விரும்பினார். கூறப்போனால் வாழ்க்கை நமக்கு என்ன செய்கிறது என்பது, வாழ்க்கை நம்மிடம் என்ன காண்கிறது என்பதைப் பொறுத்தே இருக்கிறது.

பெரும்பாலும், மேற்கத்திய உலகின் கிறிஸ்தவர்கள் வசதியான வாழ்க்கையையே அனுபவித்து இருக்கிறார்கள். இரும்பு மற்றும் மூங்கில் திரைகளுக்குப் பின்னால் நமது சகோதர சகோதரிகள் விசுவாசத்தின் நிமித்தமாகத் துன்பங்களை அடைந்திருக்கின்றனர். கிறிஸ்துவுக்காக ஒரு நிலை எடுத்தால், அதிகமான விலையைத் தந்தாக வேண்டும் என்ற ஒரு காலம் நெருங்கிக்கொண்டு இருக்கிறது என்பதற்கு அறிகுறிகள் தற்போது தென்படுகின்றன. "சமரசம்" செய்துகொள்ளும் கிறிஸ்தவனே "வசதியான" கிறிஸ்தவனாக வாழ முடியும் என்பதோடு அந்த வசதி விலை அதிகமானதாகவும் இருக்கும்.

ஆனால், நமக்கான தேவ செய்தி இதுவே: "நம்பிக்கை உள்ளவனாயிரு". பாடுகள் மகிமையின் பாதையில் நடத்துகிறது! வாழ்க்கைப் பாதை கடுமையாக இருக்கும் போது, என்னைக் கனப்படுத்த உனக்குத் தேவையான எல்லா கிருபையையும் என்னால் உனக்கு அளிக்கமுடியும்".

தேவ வாக்குத்தத்தங்களைப் போல, எதிர்காலம் இன்னும் பிரகாசமாகவே இருக்கிறது — நம்பிக்கையோடு இருங்கள்!

வாரன் டபிள்யூ. வியர்ஸ்பே.

1

# *எங்கு கிறிஸ்து இருக்கிறாரோ அங்கு நம்பிக்கை இருக்கிறது*

1 பேதுரு 1:1; 5:12-14

"வாழ்க்கை உள்ளளவும், நம்பிக்கையும் உள்ளது!"

இந்த பழங்கால ரோமப் பழமொழி இன்றும் மேற்கோள் காட்டப்பட்டு வருகிறது. பெரும்பான்மையான மூதுரைகளைப் போலவே ஆதார உண்மை இதில் இருந்தாலும், அது கூறுவது நிச்சயம் என்பதற்கு எந்த உறுதியும் இல்லை. வாழ்க்கையைப் பற்றிய *உண்மை* அல்ல, வாழ்க்கையைக் குறித்த *விசுவாசமே* நம்பிக்கையை நிர்ணயிக்கிறது. ஒரு கிறிஸ்தவ விசுவாசிக்கு "ஜீவனுள்ள நம்பிக்கை" இருக்கிறது (1 பேதுரு 1:3). ஏனென்றால், அவனுடைய விசுவாசமும் நம்பிக்கையும் தேவன் மேல் இருக்கிறது (1:21). இந்த "ஜீவனுள்ள நம்பிக்கையே" பேதுரு எழுதிய முதலாம் நிருபத்தின் முக்கிய விஷயம். அவர் எல்லா விசுவாசிகளுக்கும் கூறுகிறார்: "நம்பிக்கையோடு இருங்கள்!"

இந்த அற்புதமான நிருபத்தின் ஆழத்தை ஆராயுமுன், இதை எழுதிய மனிதரைப் பற்றியும், இதை அவர் யாருக்கு அனுப்பினாரோ அந்த மக்களைப் பற்றியும், இதை எழுதத் தூண்டிய பிரத்தியேகமான சூழ்நிலையைப் பற்றியும் நாம் புரிந்து கொள்ளுவோம்.

## 1. எழுதியவர்

அவர் தம்மை "இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனாகிய பேதுரு (1:1) என்று அறிமுகப்படுத்திக் கொள்ளுகிறார். அடிப்படைகளை ஆராயாத சிலர், சாதாரண மீனவர் ஒருவர் எவ்வாறு இந்த கடிதத்தை எழுதியிருக்க முடியும் என்று கேள்வி எழுப்புகின்றனர். ஏனெனில், குறிப்பாக பேதுருவும், யோவானும் "படிப்பறியாதவர்கள் என்றும், பேதைமை உள்ளவர்கள் என்றும்" அழைக்கப்பட்டனர் (அப். 4:13). ஆயினும் இந்த வாக்கியம் "முறையான கல்வி இல்லாத

பொதுமக்கள்" என்றே அர்த்தம் தருகிறது; அதாவது அவர்கள் முழுநேர மதத்தலைவர்கள் அல்ல. நாம் ஒருபோதும் கர்த்தராகிய இயேசுவுடன் பேதுரு பெற்ற மூன்றாண்டுப் பயிற்சியைக் குறைத்து மதிப்பிடவோ, அல்லது அவரது வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவர் நடத்திய கிரியைகளை அலட்சியப்படுத்தவோ கூடாது. 1 கொரிந்தியர் 1:26-31-ல் கூறப்பட்டுள்ள உண்மைக்கு பேதுருவே சரியான ஓர் உதாரணமாகும்..

கொடுக்கப்பட்டுள்ள அவரது பெயர் சீமோன். ஆனால் இயேசு அதைப் பேதுரு என்று மாற்றினார். அதற்கு அர்த்தம் "கல்" (யோவான் 1:35-42). 'பேதுரு' என்பதற்கு நிகரான அரமெய்க் மொழிப் பதம் 'செபாஸ்' (Cephas). ஆக மூன்று பெயர்களைக் கொண்ட ஒரு மனிதராகப் பேதுரு திகழ்ந்தார். புதிய ஏற்பாட்டில் ஏறத்தாழ ஐம்பது முறை அவர் "சீமோன்" என்றும், அடிக்கடி "சீமோன் பேதுரு" என்றும் அழைக்கப்படுகிறார். ஒருவேளை இந்த இரண்டு பெயர்களும் ஒரு கிறிஸ்தவனின் இரு தன்மைகளைக் குறிக்கலாம்: ஒரு பழைய சுபாவம் (சீமோன்); அது தோல்வி அடையும் இயல்புடையது; ஒரு புதிய சுபாவம் (பேதுரு); அது வெற்றி தரக்கூடியது. சீமோன் என்ற வகையில் அவர் களிமண்ணால் ஆன இன்னொரு மனித உருவமே; ஆனால் அவரை இயேசு ஒரு பாறையாக உருவாக்கினார்.

ஆதி சபையில் பேதுருவும் பவுலுமே தலையாய அப்போஸ்தலர்கள். புறஜாதியார் மத்தியில் ஊழியம் செய்யும்படி பவுலுக்கும், யூதர் மத்தியில் ஊழியம் செய்யும்படி பேதுருவுக்கும் கையளிக்கப்பட்டது (கலா. 2:1-10). தன் சகோதரர்களைப் பலப்படுத்தவும் (லூக். 22:32), மந்தையை மேய்க்கவும் (யோவான் 21:15-17; 1 பேதுரு 5:1-4-ஐயும் பார்க்க) கர்த்தர் பேதுருவுக்கும் கட்டளை கொடுத்தார். இந்த நிருபத்தை எழுதுவதும் அந்த ஊழியத்தின் ஒரு பகுதியே. இது ஊக்கம் அளிப்பதற்காகவும் (KJV), தனது சாட்சியை அறிவிப்பதற்காகவும் எழுதப்பட்டக் கடிதம் என்று பேதுரு வாசிப்பவர்களுக்குக் கூறுகிறார் (1 பேதுரு 5:12). புதிய மாணவர்கள் தங்கள் பருவத் தேர்வுகளை (term examination) எழுதுவது போல, சில எழுத்துக்கள் (writings) புத்தகங்களைப் பார்த்து உற்பத்தி செய்யப்படுவதுண்டு; ஆனால் இந்த கடிதமோ, தேவ மகிமைக்காகவே வாழ்ந்த ஒரு வாழ்க்கையில் இருந்து அரும்பி வளர்ந்தது ஆகும். இந்த கடிதத்தின் கட்டமைப்புக்குள் பேதுருவின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் பலவும் சேர்த்துப் பின்னப்பட்டுள்ளன.

இந் நிருபம் சீலாவோடும் (சில்வான், 5:12) சம்பந்தப் பட்டுள்ளது. ஆதி சபையில் அவனும் ஒரு விசேஷித்தவனாகவும் (அப். 15:22), ஒரு தீர்க்கத்தரிசியாகவும் இருந்தான் (15:32). அதாவது, பரிசுத்த ஆவியானவரின் ஏவுதல் படி, தேவனுடைய செய்திகளைச் சபைக்கு அறிவித்து வந்தான் என்று இதற்கு அர்த்தம் (பார்க்க: 1 கொரி: 14). சபையின் அடித்தளத்தை அமைக்க அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும் ஒன்றிணைந்து செயலாற்றினர் (எபே. 2:20). அஸ்திபாரம் அமைக்கப்பட்டதும் அவர்கள் அந்தந்த இடங்களில் இருந்து

அகன்று போயினர். இன்றைய சபைகளில் *புதிய ஏற்பாடு தரும் அர்த்தத்தில்* எந்த அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும் இல்லை.

பேதுருவின் ஊழியத்தில் சீலா இணைந்திருந்தது ஆச்சரியத்தை அளிக்கிறது. ஏனெனில், முதன்முதலாக பர்னபாவிற்குப் பதிலாக அவனே பவுலோடு சென்றான் (அப். 15:36-41). பேதுரு மாற்கு என்னும் யோவானைப் பற்றியும் கூறுகிறார். சுவிசேஷ ஊழியக் களத்தில் இவனுக்கு ஏற்பட்ட தோல்வியே பவுலும் பர்னபாவும் பிரிவதற்கான சூழ்நிலையை உருவாக்கிற்று. பேதுரு மாற்கை கிறிஸ்துவுக்குள் வழிநடத்தியதால் ("என் குமாரனாகிய மாற்கு") அவன்பால் உள்ள அக்கறை நிச்சயமாகத் தொடரத்தானே செய்யும். சந்தேகத்திற்கு இடமின்றி ஆதி சபைக்கூடுகை ஒன்று எருசலேமில் உள்ள மாற்கு என்னும் யோவான் வீட்டிலேயே நடந்தது (அப். 12:12). இறுதியில் பவுல் மாற்கை மன்னித்து, தமது ஊழியத்தின் பிரயோஜனமுள்ள ஊழியக்காரனாக ஏற்றுக்கொண்டார் (2 தீமோ. 4:11).

பேதுரு தாம் இந்த நிருபத்தைப் பாபிலோனில் வைத்து எழுதுவதாகத் தெரிவிக்கிறார் (1 பேதுரு 5:13). அங்கு விசுவாசிகளின் ஒரு சபை இருந்தது. அக்காலகட்டத்தில் பழைய பாபிலோனில் பெருந்தொகையான யூதசமுதாயம் இருந்த போதிலும், பேதுரு அங்கு ஊழியம் செய்ததற்கான எந்தச் சான்றையும் சபை வரலாற்றில் இருந்தோ, சபை மரபில் இருந்தோ பெற முடியவில்லை. எகிப்தில் "பாபிலோன்" என்று ஒரு நகரம் இருந்தது. ஆனால், பேதுரு எப்போதாவது அங்கு சென்றாரா என்பதற்கு எந்தவித ஆதாரமும் இல்லை. "பாபிலோன்" என்பது ரோமாபுரிக்கு இன்னொரு பெயராக இருக்கலாம். பேதுரு ரோமாபுரியில் ஊழியம் செய்து, அங்கு தியாகமரணம் அடைந்தார் என்பதை நாம் நம்புவதற்குக் காரணம் இருக்கிறது. ரோமாபுரி, பாபிலோன் என்று வெளிப்படுத்தின விசேஷம் 17:5-லும், 18:10-லும் அழைக்கப்படுகிறது. துன்புறுத்தப்பட்ட விசுவாசிகள் அந்த நாட்களில் சங்கேத மொழியில் பேசுவதும், எழுதுவதும் புதிதான ஒன்றல்ல.

இருப்பினும், பேதுருவைக் குறித்து நாம் இவ்வாறு கூறும்போது, இல்லாதவற்றைப் புனைந்து கற்பித்துவிடக் கூடாது. அவர் ரோமாபுரிச் சபையை நிறுவி அதன் முதல் பேராயராகப் பணிபுரியவில்லை. வேறு யாராவது ஓர் அப்போஸ்தலர் ஏற்கெனவே ஓர் இடத்திற்கு ஊழியம் செய்யச் சென்றிருந்தால் அங்கு ஊழியம் செய்வதில்லை என்று பவுல் ஒரு கொள்கை வைத்திருந்தார் (ரோமர் 15:20). எனவே, பேதுரு முன்னரே ரோமாபுரிக்கு வந்திருப்பாரேயானால் பவுல் அங்கு ஊழியம் செய்திருக்க மாட்டார். கி.பி. 62ல், தமது முதல் சிறையிருப்பில் இருந்து பவுல் விடுதலையான பின்னர் பேதுரு ஒருவேளை அங்கு வந்திருக்கலாம். பேதுரு எழுதிய முதலாம் நிருபம் கி.பி. 63 வாக்கில் எழுதப்பட்டது. பவுல், கி.பி. 64ல் தியாக மரணம் அடைந்தார். ஒருவேளை அதே ஆண்டில், அல்லது சற்றுப் பிந்தி, பேதுரு கிறிஸ்துவுக்காகத் தன் உயிரை அர்ப்பணித்தார்.

## 2. பெற்றுக்கொள்வோர்

பேதுரு அவர்களைப் "பரதேசிகள்" என்று அழைத்தார் (1 பேதுரு 1:1). அதற்கு அர்த்தம்: "தங்கி இருக்கும் அந்நியர். தற்காலிகமாகத் தங்கி இருப்போர்." 1 பேதுரு 2:11 அவர்களை "அந்நியர்களும் பரதேசிகளும்" என்று அழைக்கிறது. இந்த ஜனங்கள் இயேசு கிறிஸ்துவின் மூலமாக பரலோகத்தின் குடிமக்கள் ஆனவர்கள் (பிலி. 3:20). அதனால் பூலோகத்தின் நிரந்தரவாசிகள் அல்ல. ஆபிரகாமைப் போலவே அவர்களுடைய விசுவாச விழிகளும் தேவனின் வருங்காலப் பட்டினத்தின் மேல் நோக்கமாய் இருந்தன (எபி. 11:8-16). அவர்கள் இந்த உலகத்தில் இருந்தாலும், இந்த உலகத்தார் அல்ல (யோவான் 17:16).

கிறிஸ்தவர்கள் இந்த உலகத்தில் "அந்நியராய்" இருப்பதால், உலகத்தின் கண்களுக்கு அவர்கள் "அந்நியமாய்த்" தென்படுகின்றனர் (1 பேதுரு 4:4). கிறிஸ்தவர்களின் அளவீடுகளும் (standards), மதிப்பீடுகளும் (values) இந்த உலகத்திற்கு உரியவற்றில் இருந்து வேறாய் இருப்பதால் அவை அவர்களுக்கு சாட்சி கொடுக்கவும் போர்த் தொடுக்கவும் வாய்ப்பளிக்கின்றன. இதை வாசிப்போரில் கூட சிலர் துன்பங்களை அனுபவித்து வருவதற்குக் காரணம் அவர்களது வேறுவிதமான வாழ்க்கை முறையே என்பதை இந்த நிருபத்தின் வாயிலாக நாம் கண்டறியலாம்.

இந்த விசுவாசிகள் "சிதறுண்ட" மக்களும், அதே நேரத்தில் "அந்நிய" மக்களுமாய் இருந்தனர். "சிதறி இருக்கிறவர்கள்" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை ஒரு நுட்பச்சொல் (technical term): அது பலஸ்தீனாவை விட்டு வெளியே வாழும் யூதர்களைக் குறிக்கிறது. யோவான் 7:35லும், யாக்கோபு 1:1லும் அது இவ்வாறே உபயோகிக்கப்படுகிறது. இருந்தாலும், பேதுரு இந்த வார்த்தையை யூத கிறிஸ்தவர்களை மட்டும் குறிப்பதற்காக பயன்படுத்தவில்லை; ஏனெனில், அவரது வாசகர்களில் சிலர் பிறமதத்தைச் சார்ந்த புறஜாதி மக்களில் இருந்து மாறியவர்கள் என்பதை இந்தக் கடிதத்தின் சில வாசகங்கள் சூசகமாகத் தெரிவிக்கின்றன (1:14, 18; 2:9-10; 4:1-4). இந்த நிருபத்தைப் பெற்றுக் கொண்ட சபைகளில் சந்தேகத்திற்கு இடமின்றி யூதர்களும் புறஜாதியினருடன் கலந்தே இருந்தனர். ஏராளமான பழைய ஏற்பாட்டுக் குறிப்புகளும் (references), சுட்டுரைகளும் (allusions) இந்த அத்தியாயங்களில் இருப்பதை நாம் காணலாம்.

வடக்கு ஆசியா மைனரில் (நவீன துருக்கி) அமைந்திருந்த ரோமப் பேரரசின் வெவ்வேறு பகுதிகளில் இந்த கிறிஸ்தவர்கள் சிதறி இருந்தனர். பரிசுத்த ஆவியானவர் பவுலை பித்தினியாவில் ஊழியம் செய்ய அனுமதிக்கவில்லை (அப். 16:7). எனவே அவர் இந்த வேலையை ஆரம்பித்தார். பெந்தெகொஸ்தே நாளில் பொந்துஸ் மற்றும் கப்பதோக்கியாவில் இருந்து வந்த

யூதர்களும் இருந்தனர். இவர்கள் ஒருவேளை சுவிசேஷத்தைத் தங்களுக்கு அருகில் இருந்த பிரதேசங்களுக்கும் கொண்டு சென்றிருக்கலாம். பேதுருவின் ஊழியத்தின் கீழிருந்த யூத விசுவாசிகள் இந்த பகுதிகளில் உள்ள நகரங்களுக்கு குடிபெயர்ந்து இருக்கவும் சாத்தியம் உண்டு. அக்காலத்தில் மக்கள் இடம்பெயர்ந்து சென்றவண்ணமாய் இருந்தனர். அர்ப்பணித்துக் கொண்ட விசுவாசிகள் தாங்கள் சென்ற இடம் எல்லாம் வார்த்தையைப் பகிர்ந்து கொண்டனர் (8:4).

இந்த "சிதறுண்ட அந்நியர்களைப்" பற்றி நாம் அறிந்து கொள்ள-வேண்டிய முக்கியமான விஷயம் என்னவென்றால், அவர்கள் வேதனையும் பாடுகளும் நிறைந்த ஒரு காலகட்டத்தைக் கடந்து சென்றுகொண்டே இருந்தனர் என்பதே. குறைந்தபட்சம் பதினைந்து முறை, எட்டு வெவ்வேறு கிரேக்கப் பதங்களைப் பயன்படுத்தி பாடுகளைப் பற்றிப் பேதுரு குறிப்பிடுகிறார். இந்த கிறிஸ்தவர்களில் சிலர் தெய்வபக்தி உள்ள ஒரு வாழ்க்கையை வாழ்ந்ததாலும் நீதியும் நியாயமும் செய்ததாலுமே பாடுபட்டனர் (1 பேதுரு 2: 19-23; 3:14-18; 4:1-4, 15-19). மற்றவர்கள் கிறிஸ்துவின் நாமத்தின் நிமித்தம் நிந்திக்கப்பட்டு வேதனை அடைந்தனர் (4:4). இரட்சிக்கப்படாத மக்களால் தூஷிக்கப்பட்டனர் (3:9-10). தங்களைத் துன்பப்படுத்துகிறவர்களின் மத்தியில் நல்ல சாட்சியாக வாழ அவர்களை உற்சாகப்படுத்தியும் பாடுகள் அவர்களை மகிமைக்கு நேராய் வழிநடத்தும் என்று ஞாபகப்படுத்தியும் பேதுரு எழுதினார். (1:6-7; 4:13-14; 5:10).

ஆயினும் பேதுருவின் மனதுக்குள் இன்னொரு நோக்கம் இருந்தது. ஓர் "அக்கினிப் பரீட்சை" துவங்க இருப்பதை அவர் அறிவார்: ரோமப் பேரரசின் அதிகாரப்பூர்வமான அடக்குமுறையே அது (4:12). எருசலேமில் சபை ஆரம்பமானபோது அது மரபுவழி வந்த யூத நம்பிக்கையின் ஒரு பிரிவாகவே பார்க்கப்பட்டது. ஆதிக் கிறிஸ்தவர்கள் யூதர்களே. அவர்கள் ஆலய வளாகத்திலேயே கூடினர். யூத மதம் ஏற்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டு இருந்ததால், ரோம அரசு கிறிஸ்தவர்களுக்கு எதிராக எந்த அதிகாரப்பூர்வமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. கிறிஸ்தவம், யூதாயிசத்தின் ஒரு பிரிவல்ல என்பது தெளிவான பின், ரோமாபுரி அதிகாரப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதாயிற்று.

இந்த "அக்கினி சோதனை" உருவாக உதவிய பல்வேறு நிகழ்ச்சிகள் நடந்தேறின. ரோமாபுரியின் அதிகாரப்பூர்வமான நீதிமன்றத்தில் கிறிஸ்தவ விசுவாசத்தைக் குறித்துப் பவுல் நியாயப்படுத்தி பேசியதை இதன் ஆரம்பம் எனலாம் (பிலி. 1:12-24). அவர் விடுதலை செய்யப்பட்டாலும் மீண்டும் கைது செய்யப்பட்டார். இரண்டாவது முறை அவரது வாதம் தோல்வியுற்று அவர் தியாக மரணம் அடைந்தார் (2 தீமோ. 4:16-18). இரண்டாவதாக, புத்தி மாறாட்டம் கொண்ட பேரரசனான நீரோ, ரோமாபுரியில் பற்றிய நெருப்புக்குக் காரணம் (கி.பி. 64, ஜூலை) கிறிஸ்தவர்களே என்று குற்றம்சாட்டி அவர்களை பலியாடாக பயன்படுத்தினான். அச்சமயத்தில் பேதுருவும் ஒருவேளை

அங்கேயே இருந்திருக்கலாம். பவுலைக் கொன்ற நீரோவே அவரையும் கொலை செய்தான். முதன்முதலில், கிறிஸ்தவர்களுக்கு எதிரான நீரோவின் அடக்குமுறை உள்ளூருக்குள்ளேயே இருந்தது. ஆனால், பின் அது ஒருவேளை பரந்திருக்கலாம். எவ்விதத்திலாவது, சபைகளை ஆயத்தப்படுத்தவே பேதுரு விரும்பினார்.

சாம்ராஜ்யத்தின் எல்லா பகுதியிலும் இருந்த கிறிஸ்தவர்கள் யாவரும் ஒரே நேரத்தில், ஒரே அளவில், ஒரே சோதனைகளைச் சந்தித்தனர் என்று நாம் எண்ணிவிடக் கூடாது. பாடுகளும் எதிர்ப்புகளும் பரவலாக இருந்தாலும் அது இடத்துக்கு இடம் வேறுபட்டது (1 பேதுரு 5:9). நீரோ சபைக்கு எதிரான அதிகாரப் பூர்வமான அடக்குமுறையை ஆரம்பித்து வைத்தான். பிற்காலத்தில் வந்த பேரரசர்களும் அவனுடைய முன்மாதிரியைப் பின்பற்றினர். டிராஜன் (Trajan-98-117), ஹேட்ரியன் (Hadrian-117-138), டயோகிளிடியன் (Diocletian-284-305) ஆகிய பிற்கால சாம்ராஜ்யபதிகளின் ஆட்சியில் பாடனுபவித்தக் கிறிஸ்தவர்களுக்கு பேதுருவின் கடிதம் பேருதவியாக இருந்திருக்கும். இன்றுள்ள உலகக் கிறிஸ்தவர்கள் தங்களுக்கு "அக்கினி சோதனைகளும்" அடக்குமுறைகளும் ஆரம்பிக்கும்போது பேதுருவின் நிருபத்தின் மதிப்பை அறிந்து கொள்ளலாம். சபையானது உபத்திரவ காலத்துக்குள் (the tribulation) செல்லாது என்று தனிப்பட்ட முறையில் நான் நம்பினாலும், வருங்காலங்கள் தேவமக்களுக்கு மிகுந்த உபத்திரவத்தைக் கொண்டுவரும் என்றே நிச்சயமாக நம்புகிறேன்.

இந்த கடிதத்தை அந்தந்தப் பகுதிகளுக்குக் கொண்டு சேர்த்தவனும், காரியதரிசியாக இருந்து இக் கடிதத்தை எழுதியவனும் சீலாவே என்று எண்ணச் சாத்தியக்கூறுகள் உண்டு.

### 3. செய்தி

பேதுரு எழுதிய முதலாம் நிருபம் "புத்தி சொல்லும்படி எழுதப்பட்டக்" கடிதம் (1 பேதுரு 5:12). *பாடனுபவிப்பது* பற்றிய கருத்து கடிதம் முழுவதும் பரந்து காணப்படுவதை நாம் பார்த்தாலும், *மகிமை* பற்றிய கருத்தும் நிருபம் முழுவதும் காணப்படுகிறது (பார்க்க: 1:7-8, 11, 21; 2:12; 4:11-16; 5:1, 4, 10-11). பாடனுபவிக்கும் பரிசுத்தவான்களுக்குப் பேதுரு தரும் ஒரு ஊக்க வார்த்தை என்னவெனில், ஒருநாள் அவர்களது உபத்திரவம் மகிமையாக மாற்றப்படும் என்பதே (1:6-7; 4:13-14; 5:10). இரட்சகர் நமக்காகப் பாடுபட்டு மகிமைக்குள் பிரவேசித்தார் எனபதினாலேயே இது சாத்தியமாகிறது (1:11; 5:1). கிறிஸ்துவின் பாடுகள் அடிக்கடி இந்த கடிதத்தில் குறிப்பிடப்படுகின்றன (1:11; 3:18; 4:1, 13; 5:1).

பவுல் *விசுவாசத்தின்* அப்போஸ்தலராகவும், யோவான் *அன்பின்* அப்போஸ்தலராகவும் இருப்பது போல், பேதுரு தலைசிறந்த *நம்பிக்கையின்* அப்போஸ்தலர் ஆவார். விசுவாசிகளாகிய நாம் ஜீவனுள்ள கிறிஸ்துவின் மேல் நம்பிக்கை வைத்திருப்பதால், நமக்கு "ஜீவனுள்ள நம்பிக்கை" இருக்கிறது (1:4).

இந்த நம்பிக்கை நமது மனதைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவும், இயேசு கிறிஸ்து திரும்பி வரும்போது "பூரண நம்பிக்கை உள்ளவர்களாக" இருக்கவும் உதவுகிறது. நமது நம்பிக்கையைக் குறித்து நாம் வெட்கப்படாமலும், விளக்கி உத்தரவு சொல்லி அதைத் தற்காத்துக் கொள்ளவும் ஆயத்தமாக இருக்க வேண்டும் (3:15). சாராளைப் போலவே, கிறிஸ்தவ மனைவிமார்களும் கர்த்தரிடத்தில் நம்பிக்கையோடு இருக்க வேண்டும். பாடுகள் மகிமையைக் கொண்டு வருவதாலும், இயேசு மறுபடியும் வருவதாலும் நாம் நிச்சயமாக நம்பிக்கையோடு இருக்கலாம்.

ஆனால், உபத்திரவங்கள் *தாமாகவே* தேவனுக்கு மகிமையையும், தேவமக்களுக்கு ஆசீர்வாதத்தையும் கொண்டு வருவதில்லை. சில விசுவாசிகள் சோதனை காலங்களில் அஞ்சியும் விழுந்தும் கிறிஸ்துவின் நாமத்திற்கு அவமானத்தைக் கொண்டுவந்துள்ளனர். தேவ கிருபையைச் சார்ந்திருந்தால் மட்டுமே பாடுகளின்போது நம்மால் தேவனை மகிமைப்படுத்த முடியும். பேதுருவும் தேவ கிருபையைப் பற்றி இக்கடிதத்தில் வலியுறுத்துகிறார். "உங்களுக்குப் புத்தி சொல்லும்படிக்கும், நீங்கள் நிலைகொண்டு நிற்கிற கிருபை தேவனுடைய மெய்யான கிருபை தானென்று, சாட்சியிடும் படிக்கும் நான் உங்களுக்கு சுருக்கமாய் எழுதி"யிருக்கிறேன் (5:12).

1 பேதுருவின் ஒவ்வொரு அத்தியாயத்திலும் "கிருபை" என்ற வார்த்தை பயன்படுத்தப்படுகிறது: 1:2, 10, 13; 2:19, 20 ("பிரீதியாய் இருக்கும்") 3:7; 4:10; 5:5; 10, 12. கிருபை என்பது தகுதியற்ற பாவிகளுக்கும், தேவையில் இருக்கும் பரிசுத்தவான்களுக்கும் தேவன் அருளும் தயாளமிக்க உதவியே. தேவ கிருபையைச் சார்ந்து இருக்கும்போது நம்மால் பாடுகளைச் சகிக்கவும், சோதனைகளை மகத்தான வெற்றிகளாக மாற்றவும் முடியும். கிருபையே நம்மைக் காக்கிறது (எபே. 2:8-10). தேவ கிருபை சோதனைகளின் காலத்தில் நமக்கு பலம் அளிக்கிறது (2 கொரி. 12:1-10). உபத்திரவங்கள் இருந்தாலும் தேவனுக்கு சேவை செய்வதற்கு கிருபை நமக்கு உதவி செய்கிறது (1 கொரி. 15:9-10). தேவ கிருபையைக் கொண்டு ஆரம்பிக்கும் எதுவும் மகிமையை நோக்கி வழிநடத்துகிறது (சங். 84:11; 1 பேதுரு 5:10).

நாம் 1 பேதுருவைப் படிக்கும் போது, உபத்திரவம், கிருபை, மகிமை ஆகிய மூன்று விஷயங்களும் ஒன்றிணைந்து, வேதனையும் பாடுகளும் நிறைந்த ஒரு காலத்தை அனுபவிக்கும் விசுவாசிகளுக்கு ஓர் உற்சாகம் அளிக்கும் செய்தியைத் தருகின்றன என்பதை நாம் காணலாம். இந்த விஷயங்கள் 1 பேதுரு 5:10ல் திரட்டித் தரப்படுகின்றன. அந்த வசனம் நாம் மனப்பாடம் செய்துகொள்ள வேண்டிய ஒன்று.

எதிலும் குற்றம் கண்டுபிடிக்கும் பத்திரிக்கை ஆசிரியரும் எழுத்தாளருமான ஹைச். எல். மென்கன் (H. L. Menckon) ஒருமுறை நம்பிக்கையை இவ்வாறு வரையறுத்தார்: "சாத்தியமற்றவை சாத்தியமாகும் என்ற காரணகாரியங்களுக்கு அப்பாற்பட்ட ஓர் எதிர்பார்ப்பு." ஆனால் அந்த

வரையறை புதிய ஏற்பாடு தரும் அந்த வார்த்தைக்கான அர்த்தத்தோடு ஒத்துப்போகவில்லை. உண்மைக் கிறிஸ்தவனின் நம்பிக்கை 'அவ்வாறு நம்புகிறேன்' என்பதை விட ஆழமானது. அது எதிர்கால மகிமைக்கும், ஆசீர்வாதத்துக்குமான ஒரு தன்னம்பிக்கையுள்ள உறுதி.

ஒரு பழைய ஏற்பாட்டு விசுவாசி தேவனை "இஸ்ரவேலின் நம்பிக்கை" என்று அழைத்தார் (எரே. 14:8). ஒரு புதிய ஏற்பாட்டு விசுவாசி இயேசு கிறிஸ்துவே தமது நம்பிக்கை என்று உறுதியாகக் கூறினார் (1 தீமோ. 1:1; கொலோ. 1:27ஐப் பார்க்க) இரட்சிக்கப்படாத பாவி "நம்பிக்கை இல்லாதவன்" (எபே. 2:12). மேலும் கிறிஸ்து இல்லாமல் மரித்தால் நிரந்தரமாகவே அவனுக்கு இனிமேல் எந்த நம்பிக்கையும் இல்லை. இத்தாலியக் கவிஞனான தாந்தே தனது "டிவைன் காமெடியில்", இறந்தோர் உலகத்தின் மேல் இந்த சாசனத்தைப் பொறித்தான்: "இங்கு நுழைபவர்களே, எல்லா நம்பிக்கையையும் விட்டொழித்து விடுங்கள்!"

தினசரி வாழ்க்கையை நாம் நடத்துவதற்குத் தேவையான ஊக்கத்தையும், உதவியையும் இந்த உறுதியான நம்பிக்கை நமக்கு அளிக்கிறது. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை எதிர்நோக்கி நாம் மெத்தனமாக அமர்ந்து கொள்ள அது ஓர் அசைவாடும் நாற்காலியில் நம்மை உட்கார வைப்பதில்லை. மாறாக நம்மை அது சந்தைப் புறங்களிலும், சண்டைக் களங்களிலும் தள்ளிவிடுகிறது. அங்கு நாம் பாரமான சுமைகளோடும், கடுமையான போர்களைக் கடந்தும் முன்னேறிச் செல்கிறோம். நம்பிக்கை ஒரு தூக்க மருந்தல்ல; இரத்த ஓட்டத்தை மிகைப்படுத்தும் அட்ரீனலைன் (adrenaline), புது இரத்தம் பாய்ச்சுதல். கிறிஸ்துவின் மேல் உள்ள நம்பிக்கை நங்கூரத்தைப் போல வாழ்க்கைப் புயலில் நம்மை நிலைப்படுத்துகிறது (எபி. 6:18-19). ஆயினும் நங்கூரத்தைப் போல் நம்மைப் பின்னால் பிடித்து இழுக்காமல், முன்னுக்குத் தள்ளுகிறது.

பேதுருவின் தொடர் எண்ணங்களைப் புரிந்துகொள்வது சிரமமல்ல. எல்லாம் இரட்சிப்பில் இருந்து ஆரம்பிக்கிறது; அதாவது இயேசு கிறிஸ்துவின் மூலமாக நாம் தேவனிடம் கொள்ளும் தனிப்பட்ட உறவில் இருந்து. கிறிஸ்துவே இரட்சகர் என்று நாம் அறிந்து கொண்டுவிட்டோமானால் அதன்பின் நமக்கு நம்பிக்கை வந்துவிடுகிறது. நமக்கு நம்பிக்கை இருக்குமானால் நாம் பரிசுத்தத்தோடும் ஓர் ஒழுங்குமுறையோடும் நடக்கலாம். சமுதாயத்தில் நம்மைச் சுற்றி இருப்பவர்களோடும், வீட்டிலுள்ளோரிடமும், சபைக் குடும்பத்தாரோடும் தாழ்மையோடு நடந்து கொள்ள எந்த பிரச்சினையும் இருக்கக்கூடாது. இரட்சிப்பும், கீழ்ப்படிதலும் பாடனுபவிப்பதற்கு ஆயத்தங்கள். ஆயினும், நாம் கிறிஸ்துவின் மேலேயே நோக்கமாக இருந்தால், பாடுகளை நம்மால் மேற்கொள்ள முடியும். தேவன் பாடுகளை மகிமையாக மாற்றுவார்.

## 1 பேதுருவை சுருக்கமாக விளக்கும் ஒரு முறை.

**I. தேவ கிருபையும் இரட்சிப்பும் - 1:1-2:10**

a) நம்பிக்கையோடு வாழுங்கள் - 1:1-12
b) பரிசுத்தமாக வாழுங்கள் - 1:13-21
c) இணக்கத்தோடு வாழுங்கள் - 1:22-2:10

**II. தேவ கிருபையும் கீழ்ப்படிதலும் - 2:11-3:12**

a) அதிகாரிகளுக்குக் கீழ்ப்படியுங்கள் - 2:11-17
b) எஜமானர்களுக்குக் கீழ்ப்படியுங்கள் - 2:18-25
c) குடும்பத்தில் கீழ்ப்படியுங்கள் - 3:1-7
d) சபையில் கீழ்ப்படியுங்கள் - 3:8-12

**III. தேவ கிருபையும் பாடுகளும் - 3:13-5:11**

a) இயேசு கிறிஸ்துவையே கர்த்தராக சேவியுங்கள் - 3:13-22
b) கிறிஸ்துவின் சிந்தை உடையவர்களாய் இருங்கள் - 4:1-11
c) கிறிஸ்துவின் நாமத்தை மகிமைப்படுத்துங்கள் - 4:12-19
d) கிறிஸ்துவின் மறுவருகையை எதிர்நோக்குங்கள் - 5:1-6
e) கிறிஸ்துவின் கிருபையைச் சார்ந்திருங்கள் - 5:7-11

**மேலும் சில குறிப்புகள் : 1 பேதுருவும் எபேசியரும்**

பல வேத அறிஞர்கள் எபேசியருக்கும், 1 பேதுருவுக்கும் இடையில் உள்ள பல்வேறு ஒப்புமைகளைக் கண்டுள்ளனர். பவுலும், பேதுருவும் வெவ்வேறு செய்திகளைப் பிரசங்கித்தனர் என்ற எண்ணத்தை இந்த ஒப்புமைகள் மறுக்கின்றன. உண்மையில் பேதுருவே இத்தகைய எண்ணத்தை மறுத்துள்ளார் (2 பேதுரு 3:15-16). பவுலும், பேதுருவும் வெவ்வேறு பிரதேசங்களில் ஊழியம் செய்ய ஒத்துக்கொண்டாலும் (கலா. 2:1-10), அவர்கள் ஒரே சுவிசேஷத்தையே பிரசங்கித்து, ஒரே கர்த்தரையே மகிமைப்படுத்தினர். இத்தகைய சில இணையான வசனங்களை நீங்களே ஆராய விரும்பலாம் அல்லவா:

| எபேசியர் | 1 பேதுரு. |
|---|---|
| 1:3 | 1:3 |
| 3:5, 10 | 1:12 |
| 3:6, 21 | 4:11 |
| 3:8 | 1:8 |
| 4:2 | 3:9 |

| | |
|---|---|
| 4:7, 11 | 4:10 |
| 4:13, 15 | 2:2 |

தேவ வார்த்தை பிழையற்றது. பரிசுத்த ஆவியானவர் எழுதிய எதுவும் உண்மையானதே; அதில் முரண்பாடுகள் இருக்க முடியாது. 1 பேதுருவைப் படிக்கும் போது, உங்கள் வேதாகமத்தில் உள்ள ஒத்து வசனங்களை நீங்கள் பார்க்க விரும்பலாம். ஒரே விஷயத்தைப் பற்றி பிற வசனங்கள் என்ன சொல்லுகின்றன என்பதை ஒப்பிட்டுப் பாருங்கள்.

### 1 பேதுருவும் சுவிசேஷங்களும்

சுவிசேஷங்களில் பதிவாகியுள்ள கிறிஸ்துவின் வார்த்தைகளையும், நிகழ்ச்சிகளையும், உரையாடல்களையும், நிச்சயமாக பேதுரு குறித்திருப்பார் என்று நாம் எதிர்பார்க்கலாம். இங்கு நீங்கள் படிப்பதற்காகச் சில குறிப்புகள்.

| 1 பேதுரு | சுவிசேஷங்கள் |
|---|---|
| 1:16 | மத். 5:48 |
| 1:17 | மத். 22:16 |
| 1:18 | மாற்கு 10:45 |
| 1:22 | யோவான் 15:12 |
| 2:19 | மத். 5:39; லூக். 6:32 |
| 3:9 | மத். 5:38 லிருந்து |
| 3:14 | மத். 5:10 |
| 4:11 | மத். 5:16 |
| 4:13 | மத். 5:10 லிருந்து |
| 4:18 | மத். 24:22 |
| 5:3 | மத். 20:25 லிருந்து |
| 5:5 | யோவான் 13:1 லிருந்து |
| 5:7 | மத். 6:25 லிருந்து |
| 5:8 | லூக். 22:31 லிருந்து |

2

# எவ்வகையிலும் மகிமையே!

1 பேதுரு 1:2-12

ஓர் இதமான கோடை நாளில், எனது மனைவியும் நானும் உலகத்தின் புகழ்பெற்ற கல்லறைத் தோட்டங்களில் ஒன்றைப் பார்ப்பதற்காக ஸ்டோக் போகஸ் (Stoke Poges) என்ற ஒரு சிறு கிராமத்திற்குச் சென்றோம். இது இங்கிலாந்தின் வின்சர் கேசிலில் (Windsor Castle) இருந்து அதிக தூரத்தில் இல்லை. இந்த இடத்தில் இருந்துதான் நம்மில் பலர் பள்ளியில் ஏதாவது ஒரு வகுப்பில் படித்திருக்கக் கூடிய 'ஓர் ஆலயக் கல்லறைத் தோட்டத்தில் எழுதிய இரங்கற்பா' (Elegy Written in a Country Churchyard) என்ற புகழ்பெற்றப் பாடலை தாமஸ் கிரே (Thomas Gray) எழுதினார்.

நாங்கள் அந்த பழங்காலத்துக் கல்லறைகளின் மத்தியில் அமைதியாக நின்றபோது, பாடலின் ஒரு பத்தி எனக்கு நினைவுக்கு வந்தது:

கட்டியங்கூறி அறைந்த பெருமையும்,
அதிகாரத்தின் ஆடம்பரமும்,
ஒட்டுமொத்த அழகின் ஜொலிப்பும்,
ஓங்கிக்குவித்த சொத்தின் மிகையும்,
தவிர்க்க இயலா கணத்தின் வருகையை,
ஒன்றாய்த்தானே எதிர்நோக்கி இருக்கும்!
புவியின் புகழ்ச்சிப் பாதைகள் யாவும்
புதைகுழி நோக்கியே பயணம் போகும்!

மனிதனின் புகழ் நிலைத்து நிற்பதில்லை; ஆனால் தேவ மகிமையோ நித்தியமானது. அவரோ அந்த மகிமையை நம்மோடு பகிர்ந்து கொள்ளும்படியாக அருள்கூர்ந்தார். நிருபத்தின் இந்த பகுதியில் தேவ மகிமையைப்

பற்றித் தாம் ஆராய்ந்து கண்ட நான்கு அதிசயங்களைப் பேதுரு பகிர்ந்து-கொள்கிறார்.

**1. கிறிஸ்தவர்கள் மகிமைக்காகவே பிறந்திருக்கின்றனர் (1:2-4)**

இயேசு கிறிஸ்துவின் மரணத்தினாலும், உயிர்த்தெழுதலினாலும் ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி விசுவாசிகள் "மறுபடியும் ஜெநிப்பிக்கப் பட்டார்கள்". இந்த நம்பிக்கையில் தேவ மகிமையும் அடங்கும். ஆனால் "தேவ மகிமை" என்பதற்கு நாம் கொள்ளும் அர்த்தம் என்ன?

தேவனின் இருப்பும் செய்கையுமாகியவற்றின் மொத்தமே தேவ மகிமை என்பதற்கு அர்த்தம். அவரது பரிசுத்தம், ஞானம், இரக்கம் போன்று, மகிமை என்பது தேவனுடைய தனி ஒரு குணநலனோ ஒழுக்கச் சிறப்போ ஆகாது. தேவனாக இருக்கும் யாவும், அவர் செய்வது யாவும் மகிமை என்ற குணாம்சம் கொண்டதாக இருக்கிறது. அவர் ஞானத்திலும், வல்லமையிலும் மகிமை பொருந்தியவராக இருப்பதால், அவர் நினைப்பதும் செய்வதுமாகிய யாவும் மகிமை என்றே குறிக்கப்படுகிறது. சிருஷ்டிப்பிலும் (சங். 19), இஸ்ரவேல் மக்களோடு இடைபடுவதிலும், சிறப்பாக வழிவிலகிப்போன பாவிகளுக்கான தமது இரட்சிப்பின் திட்டத்திலும் அவர் தமது மகிமையை வெளிப்படுத்துகிறார்.

முதல்முறை பிறந்தபோது நாம் மகிமைக்காகப் பிறக்கவில்லை. "மாம்சம் எல்லாம் புல்லைப் போலவும், மனுஷருடைய மகிமை எல்லாம் புல்லின் பூவைப் போலவும் இருக்கிறது". (1 பேதுரு 1:24; ஏசா. 40:6 லிருந்து மேற்கோள் காட்டப்பட்டுள்ளது) மனிதனுக்கு இருக்கும் கொஞ்சநஞ்ச மகிமையும் முடிவில் மங்கி மறைந்து போகும்; ஆனால், கர்த்தருடைய மகிமையோ என்றுமுள்ளது. தேவ மகிமைக்காக மனிதன் ஆற்றும் காரியங்கள் நிலைத்து நின்று ஈவுகளைப் பெறும் (1 யோவான் 2:17). ஆனால், பாவிகளின் சுயநலமான மானிட சாதனைகள் ஒருநாள் மறைந்து ஒருபோதும் காண முடியாதவைகளாகப் போய்விடும். நாம் ஏன் கலைக்களஞ்சியங்களை வைத்திருக்கிறோம் என்றால், மறைந்து போய்விட்ட புகழ்பெற்ற மனிதர்களைக் குறித்து அறிந்து கொள்ளவே.

மகிமையைப் பற்றிய அற்புதமான உண்மையை நாம் நன்கு புரிந்து கொள்ளுவதற்காக, பேதுரு இரண்டு விளக்கங்களைத் தருகிறார்.

***அ. ஒரு கிறிஸ்தவனின் பிறப்பு விளக்கப்படுகிறது (1:2-3).***

இந்த அதிசயமெல்லாம் தேவனிடம் இருந்தே ஆரம்பித்தது: நாம் பிதாவால் தெரிந்துகொள்ளப்பட்டோம் (எபே. 1:3-4). ஆழமான நித்திய ஆலோசனையில் நிகழ்ந்தது இது; தேவ வார்த்தைகள் இதைக் குறித்து வெளிப்படுத்தும் வரை இதைப்பற்றி நமக்கு ஒன்றும் தெரியாது. இந்த தேர்வு நாம் செய்த எதையும் அடிப்படையாகக் கொண்டதல்ல; ஏனென்றால் அப்போது நாம் அந்தக் காட்சியில் இல்லவே இல்லை. நாம் எப்படி இருக்கப் போகிறோம் அல்லது என்ன செய்யப் போகிறோம் என்பதை தேவன் பார்த்து அதன் அடிப்படை-

யிலும் அத்தேர்வு நிகழவில்லை. தேவனுடைய தேர்வு முற்றிலும் அவரது கிருபையையும். அன்பையும் அடிப்படையாகக் கொண்டே அமைந்தது. அதை நம்மால் விளக்க முடியாது (ரோமர் 11:33-36). ஆனால் அதில் நாம் களிகூரலாம்.

"முன்னறிவு" என்பது நாம் விசுவாசிப்போம் என்பதை தேவன் காலத்திற்கு முன்நோக்கி அறிந்ததனால் நம்மைத் தெரிந்து கொண்டார் என்ற கருத்தைத் தரவில்லை. 'கிறிஸ்துவுக்காக நம்மைத் தீர்மானிக்க வைத்தது யார் அல்லது என்ன?' என்ற கேள்வியை இது எழுப்பி, நமது இரட்சிப்பை முற்றிலுமாக தேவனுடைய கரத்தில் இருந்து எடுத்துப்போட்டு விடும். வேதாகமத்தின் படி "முன்னறிவது" என்பது "ஒருவர் தன் அன்பை இன்னொருவர் மேல் அல்லது பலர் மேல் தனிப்பட்ட முறையில் வைப்பது" என்ற அர்த்தத்தைத் தரும். ஆமோஸ் 3:2ல் இது இவ்வாறே பயன்படுத்தப்பட்டுள்ளது: "பூமியின் எல்லா வம்சங்களுக்குள்ளும் உங்களை மாத்திரம் அறிந்து கொண்டேன்." தேவன் தமது தேர்ந்து செலுத்தும் அன்பை இஸ்ரவேல் ஜனங்களின் மேல் வைத்தார். 'அறிவது' என்பதை இத்தகைய சிறப்பான அர்த்தத்தில் உபயோகிக்கும் வேறு வசனங்கள்: 1 கொரி. 8:3; யோவான் 10:14, 27; மத். 7:23; சங். 1:6.

ஆயினும் இரட்சிப்புத் திட்டம், பிதாவின் தேர்ந்து செலுத்தும் அன்போடு, வேறு சிலவற்றையும் உள்ளடக்கியுள்ளது. பாவிக்கு குற்றம் உணர்த்தி, அவனை கிறிஸ்துவின் மேல் விசுவாசம் உள்ளவனாக மாற்றும் பரிசுத்த ஆவியின் பணியையும் அது உள்ளடக்கியுள்ளது. 2 தெசலோனிக்கியர் 2:13-14, இது குறித்த சிறந்த விளக்கமாகும். மேலும், தேவனுடைய குமாரன் நமது பாவங்களுக்காக சிலுவையில் மரிக்கவேண்டி இருந்தது. அல்லது இரட்சிப்பு என்ற ஒன்றே இருந்திருக்க முடியாது. நாம் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டோம்; குமாரனால் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டோம்; பரிசுத்த ஆவியால் பிரித்தெடுக்கப்பட்டோம். உண்மையிலேயே இரட்சிப்பின் அனுபவம் ஏற்பட வேண்டுமானால், மூவருடைய பங்களிப்பும் இருக்க வேண்டும்.

பிதாவாகிய தேவனைப் பொறுத்தவரையில், அவர் என்னை உலகத் தோற்றத்துக்கு முன்னதாகவே கிறிஸ்துவுக்குள் தெரிந்துகொண்ட போது நான் இரட்சிக்கப்பட்டேன். குமாரனைப் பொறுத்தவரையில், அவர் சிலுவையில் எனக்காக மரித்தபோது நான் இரட்சிக்கப்பட்டேன். ஆனால் ஆவியானவரைப் பொறுத்தவரையில், 1945-ஆம் ஆண்டு ஒரு மே மாத இரவில் சுவிசேஷத்தைக் கேட்டு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட போதே நான் இரட்சிக்கப்பட்டேன். அப்போதே எல்லாம் ஒன்றுகூடி வந்தன. ஆனால் என்னை இரட்சிப்புக்குள் கொண்டுவர தேவத்துவத்தின் மூன்று ஆட்களுமே தேவைப்பட்டனர். இந்த பரம ஊழியங்களை தனித்தனியாகப் பிரித்துவிடுவோமேயானால், ஒன்றில் நாம் தேவ அதிகாரங்களையோ அல்லது மானிடப் பொறுப்புகளையோ மறுப்பவர்களாய் இருப்போம்; அது கருத்து வேறுபாடுகளுக்கே வழிவகுக்கும்.

பாவிகளை இரட்சிக்கும் தேவனுடைய திட்டத்தில் உள்ள மனிதனின் பங்களிப்பைப் பேதுரு மறுக்கவில்லை. 1 பேதுரு 1:23ல் சுவிசேஷம் மக்களுக்குப் பிரசங்கிக்கப்பட்டு அவர்கள் அதைக் கேட்டு விசுவாசித்தார்கள் என்ற உண்மையை அவர் அழுத்தமாகக் கூறுகிறார் (1:12-ஐயும் பார்க்கவும்). நாம் வழிவிலகிப்போன பாவிகளை கிறிஸ்துவினிடத்தில் வர ஊக்கப்படுத்த-வேண்டும்; "எல்லாவற்றையும் தேவனிடத்தில் விட்டுவிடக்" கூடாது; இதற்கு பெந்தெகொஸ்தே நாளில் பேதுருவின் உதாரணமே முன்மாதிரியாகும். (அப் 2:37-40). முடிவை - இரட்சிப்பை — தீர்மானித்த தேவனே, அந்த *முடிவை அடையும் வழியையும்* - தேவ கிருபையைப் பற்றிய சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல் - தீர்மானித்தார்.

### *ஆ. ஒரு கிறிஸ்தவனின் நம்பிக்கை விளக்கப்படுகிறது (1:3-4).*

முதலில், அது ஒரு *ஜீவனுள்ள நம்பிக்கை*, ஏனெனில் அது ஜீவனுள்ள தேவ வார்த்தைகளை அஸ்திபாரமாகக் கொண்டுள்ளது (1:23). மரித்தோரில் இருந்து எழுந்த தேவனுடைய ஜீவனுள்ள குமாரனால் இது சாத்தியம் ஆயிற்று. ஒரு 'ஜீவனுள்ள நம்பிக்கையில்' ஜீவன் இருப்பதால் நமக்கு அது ஜீவனைக் கொடுக்கமுடியும். அதற்கு ஜீவன் இருப்பதால் அது காலம் போகப்போகப் பெரிதாகவும், மேலும்மேலும் அழகுள்ளதாகவும் மாறும். காலம், பெரும்பாலான நம்பிக்கைகளை அழித்து விடுகிறது; அவை மங்கி மறைந்து போய்-விடுகின்றன. ஆனால் ஒரு கிறிஸ்தவனின் நம்பிக்கை காலம் செல்லச்செல்ல மேலும் மகிமை உள்ளதாக மாறுகிறது.

பேதுரு இந்த நம்பிக்கையை *ஒரு சுதந்திரம்* என்று அழைத்தார் (1:4). இராஜாவின் பிள்ளைகளாகிய நாம் அவருடைய சுதந்திரத்தில் மகிமையோடு பங்குகொள்கிறோம் (ரோமர் 8:17-18; எபே. 1:9-12). கிறிஸ்துவின் இறுதி சாசனத்திலும், ஏற்பாட்டிலும் நாம் சேர்க்கப்பட்டுள்ளதால், மகிமையை அவரோடு பகிர்ந்து கொள்ளுகிறோம் (யோவான் 17:22-24).

இந்த சுதந்திரமாகுதல் பற்றிய விளக்கத்தை நன்றாகக் கவனிக்க வேண்டும்; ஏனெனில் இது எந்த ஒரு உலக சம்பந்தமான சுதந்திரமாகுதலையும் போன்றது அல்ல. ஒரு விஷயம் என்னவென்றால் இது *களங்கப்படுத்த முடியாதது*; அதாவது அதனைப் பாழடிக்க முடியாது. அது தூய்மை *கெடாததாக* இருப்பதால், அதனை எந்த வழியிலும் மாசுப்படுத்தவோ, மலிவாக்கவோ முடியாது. அது நித்தியமானதாக இருப்பதால், ஒருபோதும் பழமை ஆகாது; அது தேய்ந்து ஒழியாது; நம்மை எந்த வகையிலும் ஏமாற்றம் அடையச் செய்யாது.

இந்த சுதந்திரம் 5-ஆம் வசனத்திலும், 9-ஆம் வசனத்திலும் "இரட்சிப்பு" என்று அழைக்கப்படுகிறது. கிறிஸ்துவின் மேல் உள்ள விசுவாசத்-தின் நிமித்தமாக ஒரு விசுவாசி ஏற்கெனவே இரட்சிக்கப்பட்டு விட்டாலும் (எபே. 2:8-9), அந்த இரட்சிப்பு முழுமை அடைய இரட்சகரின் இரண்டாம்

வருகைக்கு காத்திருக்க வேண்டும். பின் நமக்குப் புதிய சரீரம் கிடைத்து பரலோகப் பட்டிணம் என்ற புதிய சூழலுக்குள் நுழையலாம். பேதுரு இந்த நம்பிக்கையை "இயேசு கிறிஸ்து வெளிப்படுதல்" என்று 7-ஆம் வசனத்தில் கூறுகிறார். பவுல் இதை "நாம் நம்பி இருக்கிற ஆனந்த பாக்கியம்" என்று அழைக்கிறார் (தீத்து 2:13).

நாம் மகிமை அடையவே பிறந்திருக்கிறோம் என்பதை அறிவது ஒரு சிலிர்ப்பைத் தரும் விஷயமாக இருக்கிறது. நாம் மறுபடியும் பிறந்த போது, கடந்து போகிற மானிட மகிமைக்குப் பதிலாக, நித்தியமான தேவ மகிமையைப் பெற்றுக்கொண்டோம்.

**2. கிறிஸ்தவர்கள் மகிமைக்காகவே காக்கப்பட்டுள்ளனர் (1:5).**

இந்த மகிமை நமக்காகவே "வைக்கப்பட்டு" இருப்பதோடு மட்டும் அல்லாமல், நாமும் அந்த மகிமைக்காகவே காக்கப்பட்டு இருக்கிறோம். என்னுடைய பயணங்களில், நான் ஒரு தங்கும்விடுதிக்கோ, சாலையோரவிடுதிக்கோ செல்லும்-போது, சிலசமயங்களில் என்னுடைய பெயர்ப்பதிவில் குழப்பங்களையும், பதிவு ரத்துசெய்யப்பட்டிருப்பதையும் கண்டிருக்கிறேன். ஆனால் நாம் பரலோகம் சென்றடையும்போது இவ்வாறாக இருக்காது; ஏனெனில், நமது வருங்கால வீடும், சுதந்திரமும் உத்தரவாதம் செய்யப்பட்டு பதிவு பெற்றுள்ளன.

"ஆனால், ஒருவேளை நாம் அங்கு செல்ல முடியாவிட்டால்?" என்று ஒரு பயந்த சுபாவமுள்ள பரிசுத்தவான் கேட்கலாம். ஆயினும், நாம் நிச்சயமாக செல்வோம்; ஏனெனில், எல்லா விசுவாசிகளும் "தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிறார்கள்". "காக்கப்பட்டு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை இராணுவத்தில் உபயோகிக்கப்படும் ஒரு சொல். "பாதுகாக்கப்பட்ட, அரணாக்கப்பட்ட" என்பது அதன் அர்த்தம். இந்த வினைச்சொல்லில் காலம் (tense) நாம் *நிரந்தரமாக* தேவனால் காக்கப்படுகிறோம் என்பதை வெளிப்படுத்துகிறது; நாம் பரலோகத்துக்கு பாதுகாப்பாக வந்து சேருவோம் என்பதை அது உறுதிப்படுத்துகிறது. பவுல் தப்பிச்சென்றபோது தமஸ்குவை வீரர்கள் காவல் காத்ததை விவரிக்க இதே சொல் பயன்படுத்தப்படுகிறது (2 கொரி. 11:32). மேலும் யூதா 24-25-ஐயும், ரோமர் 8:28-39-ஐயும் பார்க்க.

விசுவாசிகள் தங்கள் சொந்த பலத்தால் காக்கப்படுவதில்லை; தேவ வல்லமையாலேயே காக்கப்படுகின்றனர். கிறிஸ்துவின் மேல் உள்ள விசுவாசம் நம்மை அவரோடு மிகவும் ஐக்கியப்படுத்தி விட்டதால், இப்போது அவரது வல்லமையே நம்மைப் பாதுகாத்து வழிநடத்துகிறது. நாம் நமது வலிமையால் காக்கப்படவில்லை; ஆனால் அவர் உண்மையுள்ளவராக இருப்பதாலேயே காக்கப்படுகிறோம். எதுவரை அவர் நம்மைக் காப்பார்? இயேசு கிறிஸ்து மறுபடியும் வந்து, அவரது பெரும் இரட்சிப்பின் முழு வெளிப்பாட்டையும் நாம் பகிர்ந்துகொள்ளும் வரை. இதே உண்மை 9-ஆம் வசனத்தில் மீண்டும் கூறப்படுகிறது.

நாம் "மகிமைக்காக காக்கப்படுகிறோம்" என்று அறியும்போது அது நமக்கு ஊக்கம் அளிக்கிறது. ரோமர் 8:30-ன் படி நாம் *ஏற்கெனவே* மகிமைப்படுத்தப்பட்டுள்ளோம். இந்த மகிமை உலகத்துக்கு வெளிப்படுத்தப்படவே காத்திருக்கிறது (ரோமா 8:18-23). ஒரு விசுவாசி தவறிவிட்டாலும் தேவனுக்கு அவர் மகிமையில் அது குறைவை ஏற்படுத்துகிறது. நாம் பரலோகத்தில் இருப்போம் என்பதில் தேவன் மிக உறுதியாக இருப்பதால், உறுதிப்பொருளாக தமது மகிமையை நமக்கு ஏற்கெனவே அளித்துவிட்டார் (யோவான் 17:24; எபே. 1:13-14).

பரலோகம் அளித்துள்ள இந்த உறுதி இன்று நமக்கு மிகவும் உதவிகரமாக இருக்கிறது. இதை டாக்டர். ஜேம்ஸ் எம். கிரே (Dr. James M Gray) தமது ஒரு கவிதையில் இவ்வாறு வெளிப்படுத்தினார். "சாலை வீட்டை நோக்கி செல்லும்போது, பயணத்தைப் பற்றி யாராவது கவலைப்படுவார்களா?" இன்றைய உபத்திரவங்கள் நாளைய மகிமை என்கின்ற போது, துன்பங்கள் நமக்கு ஆசீர்வாதங்களாக மாறுகின்றன. இரட்சிக்கப்படாதவர்களுக்கு "மகிமை" இப்போதே இருக்கிறது. ஆனால், *தேவ மகிமையை விட்டு நீங்கித் தொலைவில் இருக்கும்* நித்திய வேதனை அதனைத் தொடர்ந்து வரும் (2 தெச. 1:3-10). இந்த வெளிச்சத்தில், 2 கொரிந்தியர் 4:7-18-ஐ தியானித்து களிகூருங்கள்.

**3. கிறிஸ்தவர்கள் மகிமைக்காக ஆயத்தம் செய்யப்படுகிறார்கள் (1:6-7).**

இங்கு திட்டம் இட்டு தேவன் செய்வது எல்லாம், பரலோகத்தில் அவர் நமக்காக வைத்திருப்பவைகளுக்கான ஆயத்தம் என்பதை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். இனி வரப்போகும் வாழ்க்கைக்கும், சேவைகளுக்கும் அவர் நம்மை ஆயத்தப்படுத்துகிறார். பரலோகத்தில் நமக்காக வைத்திருப்பவைகளைப் பற்றி எல்லாம் யாருக்கும் தெரியாது என்றாலும் ஒன்றை மட்டும் நாம் அறிவோம்: நித்தியத்தில் நாம் செய்யப் போகும் ஊழியத்திற்காக நம்மை தேவன் பயிற்றுவிக்கும் பள்ளியே இன்றைய வாழ்க்கை. சோதனைகள் ஏன் நம் வாழ்க்கையில் வருகிறது என்பதை இது விளக்குகிறது: கிறிஸ்தவ அனுபவம் என்ற பள்ளியில் அவைகள் தேவன் அளிக்கும் சில கருவிகளும் பாட புத்தகங்களும் ஆகும்.

"உபத்திரவங்கள்", "பாடுகள்" என்பதை விட "சோதனைகள்" என்ற வார்த்தையையே பேதுரு அதிகம் உபயோகிப்பதற்குக் காரணம், அவிசுவாசிகளால் சூழப்பட்டக் கிறிஸ்தவர்கள் சந்திக்கும் *பொதுவான* பிரச்சினைகளைப் பற்றி அவர் எழுதுவதே. சோதனைகளைப் பற்றி அவர் அநேக உண்மைகளைப் பகிர்ந்துகொள்ளுகிறார்.

### *அ) தேவைகளைச் சந்திக்கும் சோதனைகள்.*

சில சமயங்களில் நாம் சோதனைக்கு உட்பட வேண்டியது அவசியம் என்பதை தேவன் அறிவார்; இதையே "அவசியமானதால்" என்ற சொற்றொடர் உணர்த்துகிறது. சில நேரங்களில் தேவ சித்தத்தை நாம் மீறும்போது சோதனை-களின் மூலம் தேவன் நம்மை ஒழுங்குபடுத்துகிறார் (சங். 119:67). சில வேளைகளில், சோதனை நம்மை ஆவிக்குரிய வளர்ச்சிக்கு ஆயத்தப்-படுத்துவதோடு, பாவம் செய்வதில் இருந்து நம்மை தடுத்து உதவுகிறது (2 கொரி. 12:1-9). தேவை சந்திக்கப்பட்டதா என்பதை எப்போதும் நாம் அறிய முடியாது. ஆயினும் தேவன் அதை அறிவார் என்பதையும், அவர் நன்மையானதையே செய்வார் என்பதையும் நாம் நம்பலாம்.

### *ஆ) சோதனைகள் பலவிதமானவை.*

பேதுரு "பலவிதமான" என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறார். இலக்கியப்-பூர்வமாக அதன் அர்த்தம் "வண்ணமயமான, பல்வண்ணமான" என்பதாகும். வசனம் 4:10-ல் தேவ கிருபையைப் பற்றி வருணிக்க இதே வார்த்தையை உபயோகப்படுத்துகிறார். நமது நாட்கள் எந்த "நிறத்தில்" வேண்டுமானாலும் இருக்கலாம்: "நீலத்" திங்களாகவோ அல்லது "சாம்பல்" செவ்வாயாகவோ! ஆனால் எந்தவிதமான தேவைகளைச் சந்திக்கவும் தேவகிருபை போதுமானதாகும். ஒருவித சோதனையை வென்றவுடன் நாமாகவே "எல்லாவற்-றையும்" வென்றுவிடலாம் என்று நாம் எண்ணக்கூடாது. சோதனைகள் பலவிதமானவை. நமது தேவைக்கும், பலத்துக்கும் பொருந்துமாறு தேவன் அவைகளை அமைக்கிறார்.

### *இ) சோதனைகள் எளிதானவை அல்ல.*

சோதனைகளைக் குறித்து நாம் கவலையற்ற சிந்தை உள்ளவர்களாய் இருக்கலாம் என்று பேதுரு உணர்த்தவில்லை; ஏனெனில் இது நம்மை ஏமாற்றிவிடக் கூடும். சோதனைகள் "துக்கத்தை" உண்டாக்குகிறது என்று பேதுரு கூறுகிறார். இந்த வார்த்தைக்கு அர்த்தம் "வேதனை அல்லது வலியை அனுபவித்தல்". இது, கெத்செமனேயில் கர்த்தரையும் (மத். 26:37), நேசிக்கப்பட்டவர்களின் இறப்பில் பரிசுத்தவான்களின் துயரத்தையும் (1 தெச. 4:13) விவரிக்கப் பயன்படுத்-தப்படுகிறது. நமது சோதனைகள் வேதனையானவை என்பதை மறுப்பது அவற்றை மேலும் மோசமாக்கும். கிறிஸ்தவர்களின் வாழ்க்கையில் கடுமையான அனுபவங்கள் உண்டு என்ற உண்மையை ஏற்றுக்கொள்ள வேண்டும். "ஆவிக்குரிய வாழ்க்கையில் ஆழமாக இருப்பதாக" காட்டிக் கொள்வதற்காக தைரியமாக இருப்பது போல் நடிக்கக் கூடாது.

*ஈ. சோதனைகள் தேவனால் கட்டுப்படுத்தப்படுகின்றன.*

அவைகள் எப்போதும் அப்படியே தொடருவதில்லை; அவைகள் "கொஞ்சக்-காலம்" இருக்கும். தேவன் தமது பிள்ளைகளை நெருப்புலையின் வழியாகப் போக அனுமதிக்கும் போது, அவரது கண்கள் கடிகாரத்தின் மேலும், அவரது கரம் வெப்பக்கட்டுப்பாட்டுப் பொறியின் மேலும் இருக்கும். நாம் கலகம் செய்தால் அவர் கடிகாரத்தைத் திரும்பவும் மாற்றி அமைக்க நேரிடும்; கீழ்ப்படிந்தால் ஒரு நிமிடம் கூட அதிகமாக நாம் துன்பப்பட அவர் அனுமதிக்கமாட்டார். முக்கியமான விஷயம் என்னவென்றால் அவர் கற்பிக்க விரும்பும் பாடத்தை நாம் கற்றுக்கொண்டு, அவருக்கு மட்டுமே மகிமையைக் கொண்டுவர வேண்டும்.

பேதுரு இந்த உண்மையை ஒரு நகையாசாரியின் மூலமாக விளக்குகிறார். எந்த ஒரு நகையாசாரியும் வேண்டுமென்றே அந்த விலையுயர்ந்த உலோகத்தை வீணடிக்க மாட்டான். கழிவுகளை வெளியேற்றத் தேவையான அளவுக்கே அவன் அதை ஊதுலையில் வைத்திருப்பான்; பின் அதை வடித்து அழகியதும் மதிப்புமிக்கதுமான நகைகளாக உருவாக்குவான். கீழ்த்தேசத்து நகையாசாரி தன் முகத்தைப் பிரதிபலிக்கும் வரை அதை உலையில் வைத்திருப்பான் என்று கூறப்படுவதுண்டு. இயேசு கிறிஸ்துவின் மகிமையையும், அழகையும் பிரதிபலிக்கும் வரை நமது கர்த்தரும் நம்மை உபத்திரவம் என்ற உலையில் வைத்திருக்கிறார்.

இயேசு தமது சபையைப் பெற்றுக்கொள்ள வரும் வரை இந்த மகிமை பூரணமாக வெளிப்படுத்தப்பட மாட்டாது என்பதே முக்கியமான விஷயம். நமது இன்றைய சோதனையான அனுபவங்கள் நாளைய மகிமைக்கு நம்மை ஆயத்தப்படுத்தவே. நாம் நமது வாழ்க்கை உபத்திரவங்களின் மத்தியில் உண்மை உள்ளவர்களாய் இருந்தால், இயேசு கிறிஸ்துவைப் பார்க்கும் நாளில் அவருக்கு "புகழ்ச்சியும், கனமும், மகிமையும்" கொண்டு வருவோம் (ரோமர் 8:17-18 பார்க்க). *உபத்திரவத்தைக் களிகூருதலோடு* பேதுரு ஏன் இணைத்துப் பேசுகிறார் என்பதை இது விளக்குகிறது. சோதனைக் காலங்களில் நம்மைச் *சுற்றிப்* பார்க்கும் போது ஒருவேளை நம்மால் களிகூர முடியாமற் போகலாம்; ஆனால் வரப்போவதை *எதிர்நோக்கும்* போது நாம் களிகூரலாம். 6-ஆம் வசனத்தில் வரும் "இதிலே" என்பது 5-ஆம் வசனத்தில் உள்ள "இரட்சிப்பைக்" குறிக்கிறது (கிறிஸ்துவின் இரண்டாம் வருகை).

ஒரு தாதுப்பொருள் ஆய்வாளர் தங்கம் சுத்தமானதா அல்லது போலியானதா என்று பார்க்க அதைச் சோதிப்பது போல, நமது வாழ்க்கைச் சோதனைகளும் நமது விசுவாசத்தைச் சோதித்து அதன் உண்மையை நிரூபிக்கிறது. சோதிக்கப்படாத விசுவாசம் நம்ப முடியாதது ஆகும். வெளிப்-படையாகக் கூறிக்கொள்ளும் பல கிறிஸ்தவர்கள் "போலி விசுவாசம்" கொண்டவர்களாக இருக்கிறார்கள். இது வாழ்க்கை சோதனைகளின் போது வெளியாகும். ஆழமில்லாத மண்ணில் விழுந்த விதை வேரற்றச் செடிகளை

உருவாக்கியது; சூரியன் வந்தபோதோ அவை செத்து மடிந்தன (மத். 13:1-9. 18-23 பார்க்க). இந்த உவமையில் சூரியன் என்பது "உபத்திரவங்களையும் பாடுகளையும்" குறிக்கிறது. போகும் பாதை கடினமாகும் போது "தனது விசுவாசத்தை விட்டொழிக்கும் மனிதன்". உண்மையில் அவனுக்கு விசுவாசம் இல்லை என்பதை நிரூபித்துக் காட்டுகிறான்.

ஆதிப்பிதாக்களில் ஒருவரான யோபு பல்வேறு வேதனையான சோதனைகளைக் கடந்துசென்றார்; எல்லாம் தேவனால் அனுமதிக்கப்பட்டவையே; அவர் இந்த புடமிடும் நெருப்பின் உண்மையைக் குறித்து ஓரளவுக்கு அறிந்து கொண்டார்: "ஆனாலும் நான் போகும் வழியை அவர் அறிவார்; அவர் என்னைச் சோதித்தபின் நான் பொன்னாக விளங்குவேன்." (யோபு 23:10). ஆம், அவ்வாறே அவர் விளங்கினார்.

நாம் மகிமைக்காகவே பிறந்தோம், மகிமைக்காகவே காக்கப்படுகிறோம், மகிமைக்காகவே ஆயத்தப்படுத்தப் படுகிறோம் என்பதை அறியும்போது உற்சாகம் அடைகிறோம். இருந்தாலும் பேதுரு கண்டுணர்ந்து வாசகர்களோடு பகிர்ந்துகொள்ளும் நான்காவது உண்மையே நிச்சயமாக மிகவும் எழுச்சியூட்டுவதாக இருக்கிறது.

## 4. கிறிஸ்தவர்கள் அந்த மகிமையை இப்போதே அனுபவித்து மகிழலாம் (1:8-12).

கிறிஸ்தவ வாழ்க்கைத் தத்துவம் ஓர் "ஆகாயக் கோட்டை" அல்ல! அது தன்னோடு ஒரு *நிகழ்கால* வல்லமையைக் கொண்டு செல்கிறது; அது உபத்திரவத்தை *இன்றே* மகிமையாக மாற்ற வல்லது. சோதனைகளின் மத்தியிலும், அந்த மகிமையை அனுபவித்து மகிழ பேதுரு நான்கு வழிகளைத் தருகிறார்.

### *அ. கிறிஸ்துவினிடத்தில் அன்புகூருங்கள் (1:8).*

கிறிஸ்துவின் மேல் நாம் வைக்கும் அன்பு, அவரைக் கண்ணால் கண்டதை அடிப்படையாகக் கொண்டதல்ல; ஏனெனில் அவரை நாம் நேரடியாகக் காணவில்லை. அது, அவரோடு நாம் கொள்ளும் ஆவிக்குரிய ஐக்கியத்தையும், வார்த்தை அவரைப்பற்றி நமக்கு என்ன போதித்தது என்பதையும் அடிப்படையாகக் கொண்டது. பரிசுத்த ஆவி தேவ அன்பை நமது உள்ளத்தில் ஊற்றி இருக்கிறது (ரோமர் 5:5). நாம் அந்த அன்பை அவர் மேல் திருப்பிச் செலுத்துகிறோம். நீங்கள் சோதனைக்குள் அகப்பட்டு வேதனைப்படும்போது, உடனடியாக உங்கள் இருதயத்தைக் கிறிஸ்துவை நோக்கி உயர்த்தி, உண்மை அன்போடு அவரை ஆராதியுங்கள். ஏன்? ஏனெனில் இது அந்த வேதனையான அனுபவத்தில் இருந்து நஞ்சை அகற்றி, அதற்குப் பதிலாக ஆற்றும் மருந்தை அளிக்கும்.

நமது வாழ்க்கைச் சோதனைகளைப் பயன்படுத்தி, நம்மிடம் இருந்து மிக மோசமானதை வெளிக்கொண்டு வர சாத்தான் விரும்புகிறான். ஆனால், தேவனோ மிகச்சிறந்தவற்றை நம்மில் இருந்து கொண்டுவர விரும்புகிறார். கிறிஸ்துவை நேசிப்பதைப் பார்க்கிலும் நம்மையே நாம் அதிகமாக நேசித்தால் அந்த மகிமையில் எதையும் *இப்போது* நம்மால் அனுபவிக்க முடியாது. அந்த அக்கினி நம்மை *எரிக்குமே* தவிர *பரிசுத்தப் படுத்தாது.*

### *ஆ. கிறிஸ்துவை நம்புங்கள் (1:8).*

நாம் பார்வையைக் கொண்டு அல்ல, விசுவாசத்தைக் கொண்டு வாழ்க்கையை நடத்த வேண்டும். ஒரு கோடைக் கால வேதாகம மாநாட்டில் கலந்துகொண்ட வயதான மூதாட்டி ஒருவர் விழுந்து தமது காலை முறித்துக்கொண்டார். அவரைப் பார்க்கச் சென்ற போதகரிடம் அவர் கூறினார்: "அந்த மாநாட்டுக்குப் போகக் கர்த்தர் என்னை வழிநடத்தினார். ஆனால் இப்படி ஏன் ஆகவேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை. இதில் இருந்து எந்த நன்மையும் கிடைப்பதாகவும் எனக்குத் தெரியவில்லை!" அந்த போதகர் ஞானமாகப் பதிலளித்தார்: "ரோமர் 8:28, சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதைப் *பார்க்கிறோம்* என்று கூறவில்லை; *அறிந்திருக்கிறோம்* என்றே அது கூறுகிறது!"

சூழ்நிலைகளையும், விளைவுகளையும் பொருட்படுத்தாமல், எல்லாவற்றையும் தேவனுக்கு அர்ப்பணித்து, அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிதலே விசுவாசம் ஆகும். அன்பும், விசுவாசமும் ஒன்றாகச் செல்லுகின்றன; ஒருவர் மேல் அன்பு வைக்கும் போது அவரை நம்புகிறோம். விசுவாசமும், அன்பும் இணைந்து நம்பிக்கை பலமடைவதற்கு உதவுகின்றன; விசுவாசத்தையும் அன்பையும் எங்கு பார்க்கிறீர்களோ அங்கு எதிர்காலத்தைப் பற்றிய உறுதியை உங்களால் காண முடியும்.

சோதனைகள் மற்றும் உபத்திரவங்களின் காலத்தில் நாம் எவ்வாறு விசுவாசத்தில் வளர முடியும்? எல்லாம் நல்லபடியாகவே செல்லும்போது எவ்வாறு விசுவாசத்தில் வளருகிறோமோ அவ்வாறேதான்: தேவ வார்த்தைகளை உட்கொண்டு (ரோமர் 10:17). கிறிஸ்துவின் வார்த்தை மூலமாக நாம் அவரோடு கொள்ளும் ஐக்கியம், நமது விசுவாசத்தைப் பலப்படுத்துவதோடு, நமது அன்பையும் ஆழமாக்குகிறது. தேவன் நம்மைச் சோதிக்கும் போதும், சாத்தான் நம்மை இச்சைக்கு உட்படுத்தும் போதும் நாம் வார்த்தையில் அதிகமான நேரத்தைச் செலவழிக்க வேண்டும் என்பது கிறிஸ்தவ வாழ்க்கையின் அடிப்படைக் கொள்கையாகும்.

### *இ. கிறிஸ்துவுக்குள் களிகூருங்கள் (1:8).*

சூழ்நிலைகளின் *காரணமாக* நீங்கள் சந்தோஷமாக இருக்க முடியாமற் போனாலும், இயேசு கிறிஸ்துவின் மேல் உங்கள் இருதயத்தையும், மனதையும் மையப்படுத்துவதின் மூலம் *அவற்றில்* உங்களால் களிகூரமுடியும். ஒவ்வொரு சோதனையான அனுபவமும் நமது இரட்சகரைப் பற்றிய சில புதியதும்

அதிசயமுமானவற்றை அறிந்துகொள்ள நமக்கு உதவுகிறது. தமது மகனை ஒப்புக்கொடுத்த மலையில் ஆபிரகாம் கர்த்தரைப் பற்றிய புதிய உண்மைகளை அறிந்து கொண்டார் (ஆதி. 22). அந்த மூன்று எபிரேயப் பிள்ளைகளும் எரியும் உலையின் வழியாகச் சென்றபோது அவருடைய அருகாமையைக் கண்டு கொண்டனர் (தானி 3). தமது மாம்சத்தில் உள்ள முள்ளினால் வருத்தப்பட்ட போது, அவருடைய கிருபை போதும் என்பதைப் பவுல் அறிந்துகொண்டார் (2 கொரி. 12).

அவர் உருவாக்கும் சந்தோஷம் "சொல்லிமுடியாததும், மகிமையால் நிறைந்ததுமாய் இருப்பதைக்" கவனியுங்கள். இந்த சந்தோஷம் நாம் விளக்கிக் கூற முடியாத அளவுக்கு ஆழமானதும் அதிசயமானதுமாய் இருக்கிறது; வார்த்தைகளால் இதை வருணிக்க முடியாது! மறுரூப மலையில் மோசேயுடனும், எலியாவுடனும் இயேசு தாம் அனுபவிக்கப் போகும் துன்பத்தையும் மரணத்தையும் பற்றி உரையாடியபோது இந்த மகிமையின் ஒரு பகுதியைப் பேதுரு பார்த்திருக்கிறார் (லூக் 9:28-36).

*ஈ. கிறிஸ்துவிடம் இருந்து பெற்றுக்கொள்ளுங்கள் (1:9).*

"விசுவாசிப்பதும்... பெற்றுக்கொள்வதும்"நமது தேவைகளைச் சந்திக்கும் தேவனுடைய வழியாகும். நாம் அவரிடத்தில் அன்புகூர்ந்து, விசுவாசித்து, களிகூர்ந்தோமானால், நமது சோதனைகளைச் சாதனையாக மாற்றத் தேவையானவைகளை அவரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம். 9-ஆம் வசனம் இவ்வாறு மொழிபெயர்க்கப்படலாம்: "நீங்கள் உங்கள் விசுவாசத்தின் நிறைவை, அதாவது உங்கள் ஆத்துமாவின் இறுதி இரட்சிப்பைப் பெறுகிறீர்கள்." வேறு வார்த்தைகளில் கூறப்போனால், வருங்கால மகிமையில் சிலவற்றை *இன்றே* நம்மால் அனுபவிக்க முடியும். சார்லஸ் ஸ்பர்ஜன் (Charles Spurgeon) வழக்கமாகக் கூறுவதுண்டு: "சிறிதளவு விசுவாசம் உங்கள் ஆத்துமாவைப் பரலோகத்துக்கு எடுத்துச் செல்லும். ஆனால் பெரிய விசுவாசமோ பரலோகத்தை உங்கள் ஆத்துமாவுக்குள் கொண்டு வரும்." உபத்திரவ நேரங்களில் பரலோகத்துக்காக ஏங்குவது மட்டும் போதாது; ஏனெனில், அதை யார் வேண்டுமானாலும் செய்யலாம். அன்பு, விசுவாசம், சந்தோஷம் ஆகியவற்றைப் பிரயோகப் படுத்துமாறு பேதுரு தமது வாசகர்களை ஊக்குவிக்கிறார்; அவ்வாறு செய்யும்போது பரலோக மகிமையில் சிலவற்றை *இப்போதைய* உபத்திரவங்களுக்கு மத்தியிலும் அவர்களால் அனுபவிக்க முடியும்.

நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் இந்த "இரட்சிப்பு" — கிறிஸ்துவின் வருகை — தேவன் நித்தியத்தில் வகுத்த மாபெரும் திட்டத்தின் ஒரு பகுதி என்பதே ஆச்சரியகரமான விஷயம். பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் இந்த இரட்சிப்பைப் பற்றி எழுதி, தங்களுக்கு தேவன் வெளிப்படுத்தியதைக் குறித்து ஆழமாக ஆராய்ந்தனர். மேசியாவின் பாடுகள் குறித்தும், அதைத் தொடர்ந்து

வரும் மகிமையைப் பற்றியும் கண்டுணர்ந்தனர். ஆனால் இவை இரண்டிற்கும் இடையில் இருக்கும் தொடர்பை முற்றிலுமாக அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. உண்மையில், மேசியாவின் பாடுகளையும் மகிமையையும் பற்றி சில தீர்க்கதரிசனங்களில் ஒரு வசனத்திலோ அல்லது ஒரே பத்தியிலோ ஒன்றிணைத்து எழுதப்பட்டுள்ளது.

இயேசு இந்த உலகத்திற்கு வந்த காலத்தில் வாழ்ந்த யூத ஆசிரியர்கள், இஸ்ரவேலின் விரோதிகளைத் தோற்கடித்து தாவீதுக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்ட புகழ்வாய்ந்த சாம்ராஜ்யத்தை நிறுவப் போகும் வெற்றிவீரரான ஒரு மேசியாவை எதிர்பார்த்துக் காத்திருந்தனர். அவரது சொந்த சீடர்களுக்கே கூட அவர் சிலுவையில் மரிக்க வேண்டியதின் அவசியம் குறித்த தெளிவு இல்லை (மத். 16:13-28). அவரது உயிர்த்தெழுதலுக்குப் பின் கூட அவர்கள் இன்னும் யூத ராஜ்யத்தைப் பற்றி வினவிக் கொண்டு இருந்தனர் (அப். 1:1-8). தேவனுடைய திட்டத்தைக் குறித்து *சீடர்களுக்கே* தெளிவில்லை என்கின்ற போது நிச்சயமாகப் பழைய ஏற்பாட்டுத் *தீர்க்கதரிசிகளை* விட்டுவிடலாம்.

தேவன் தீர்க்கத்தரிசிகளிடம் அவர்கள் ஓர் *எதிர்கால* சந்ததிக்கு ஊழியம் செய்து கொண்டு இருப்பதாகக் கூறினார். மேசியாவின் பாடுகளுக்கும், அவர் மகிமையோடு திரும்பி வருவதற்கும் இடைப்பட்ட காலமே நாம் அழைக்கும் "சபையின் காலம்". பழைய ஏற்பாட்டுக் காலத்தில் சபையைப் பற்றிய உண்மை வெளிப்படாத "இரகசியமாய்" இருந்தது (எபே. 3:1-13). பழைய ஏற்பாட்டு விசுவாசிகள், தங்கள் விசுவாசத்தினால் எதிர்காலத்தை நோக்கி இரண்டு மலைச்-சிகரங்களைக் கண்டனர்: மேசியா பாடுபட்டு மரித்த கல்வாரி மலையும் (ஏசா. 53), அவர் மகிமையோடு மீண்டும் வரப்போகும் ஒலிவ மலையுமே (சக. 14:4) அவை. நடுவில் இருந்த "பள்ளத்தாக்கை" அவர்களால் பார்க்க முடியவில்லை: அதுவே இன்று நடைபெறும் சபையின் காலம்.

அவரது சபையிலும், சபை மூலமாகவும் தேவன் செய்துகொண்டு இருப்பதைப் பார்க்கத் தூதர்களும் ஆர்வம் உள்ளவர்களாய் இருக்கின்றனர். மேலும் விவரங்களுக்கு 1 கொரிந்தியர் 4:9-ஐயும், எபேசியர் 3:10-ஐயும் வாசித்து தேவன் எவ்வாறு தூதர்களுக்கு சபையின் மூலமாகப் போதிக்கிறார் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

விஷயங்கள் மிகக் குறைவாக கிடைத்தபோதே பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் இவ்வளவு கடுமையாக இரட்சிப்பின் உண்மையைத் தேடினார்கள் என்றால், தற்போது தேவனின் வார்த்தையை முழுமையாகப் பெற்ற நாம் இந்த விஷயம் குறித்து எவ்வளவு அதிகமாகத் தேடவேண்டும்? தீர்க்கதரிசிகளுக்குப் போதித்து அவர்கள் மூலமாக தேவவார்த்தையை எழுதிய பரிசுத்த ஆவியானவரே இதில் உள்ள உண்மைகளை நமக்குப் போதிக்க முடியும் (யோவான் 16:12-15).

மேலும், இந்த உண்மைகளை பழைய ஏற்பாட்டில் இருந்தும், புதிய ஏற்பாட்டில் இருந்தும் நம்மால் அறிந்துகொள்ள முடியும். பழைய ஏற்பாட்டு வேத பாடத்தின் ஒவ்வொரு பகுதியிலும் உங்களால் கிறிஸ்துவைக் காண-

முடியும். (லூக். 24:25-27). பழைய ஏற்பாட்டு பிரமாணத்திலும், சங்கீதங்களிலும், தீர்க்கதரிசிகளின் எழுத்துகளிலும் கிறிஸ்துவைச் சந்திப்பது எவ்வளவு சந்தோஷத்தைத் தருகிறது! சோதனைக் காலங்களில் உங்களை ஊக்கமூட்டி, உற்சாகப்படுத்தும் எல்லாவற்றையும் வேதாகமத்தைப் புரட்டி பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் கண்டு கொள்ள முடியும்.

ஆம், கிறிஸ்தவர்களுக்கு எவ்வகையிலும் மகிமையே! கிறிஸ்துவை விசுவாசித்தபோது நாம் மகிமையடையப் பிறந்தோம்! நாம் மகிமைக்காகவே காக்கப்பட்டிருக்கிறோம்! அவருக்குக் கீழ்ப்படிந்து, சோதனைகளை அனுபவிக்கும் போது மகிமைக்காகவே ஆயத்தம் செய்யப்படுகிறோம். அவரை நேசித்து, அவரை விசுவாசித்து, அவரில் களிகூரும்போது அந்த மகிமையை இங்கேயே இப்போதே அனுபவிக்கிறோம்.

சொல்லிமுடியாததும் மகிமையால் நிறைந்ததுமாய் இருக்கிற சந்தோஷம்!

3

# ஒரு மாசடைந்த உலகில் பரிசுத்தமாக இருத்தல்

1 பேதுரு 1:13-21

இந்த அத்தியாத்தின் முதற் பகுதியில் *நம்பிக்கையில் நடப்பது* குறித்துப் பேதுரு வலியுறுத்தினார்; இப்போதோ *பரிசுத்தத்தில் நடப்பது* பற்றி வலியுறுத்துகிறார். இவை இரண்டும் ஒன்றாகவே செல்லுகின்றன; ஏனெனில், "அவர் மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிற எவனும், அவர் சுத்தம் உள்ளவராய் இருக்கிறது போல, தன்னையும் சுத்திகரித்துக் கொள்ளுகிறான் ( 1 யோவான் 3:3).

"பரிசுத்தம்" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையின் வேர் அர்த்தம் "வேறானது". ஒரு பரிசுத்தமான மனிதன் ஒரு வித்தியாசமான மனிதன் அல்ல; ஆனால் அவன் ஒரு வேறுபட்ட மனுஷன். அவனது வாழ்க்கையில் ஒரு மேலான இயல்பு இருக்கிறதே, அது வேறுபட்டது. அவனது தற்போதைய "வாழ்க்கை முறை", பழைய வாழ்க்கை முறையை விடவும் வேறுபட்டது; மட்டுமன்றி, அவனைச் சுற்றியுள்ள அவிசுவாசிகளின் வாழ்க்கை முறையை விடவும் வேறானது. ஒரு கிறிஸ்தவனின் பரிசுத்தமான வாழ்க்கை கெட்டுப்போனவர்களுக்கு அபூர்வமானதாகத் தெரிந்தாலும் (1 பேது. 4:4), மற்ற விசுவாசிகளுக்கு அது அபூர்வமானதல்ல.

இருப்பினும், இந்த உலகத்தில் வாழ்ந்து கொண்டே, ஒரு பரிசுத்தமான நடையைக் காத்துக்கொள்வது என்பது எளிதான விஷயம் அல்ல. நம்மைச் சுற்றியுள்ள தேவனுக்கு எதிரான சூழ்நிலையை வேதாகமம் "உலகம்" என்று கூறுகிறது. அது எப்போதும் நமக்கு எதிராக நின்று நம்மை அழுத்தி, இந்த உலகத்துக்குரிய வேஷத்தை நாம் தரித்துக்கொள்ளும் படியாக நம்மைத் தள்ள முயலுகிறது. இந்த பத்தியில், ஒரு மாசடைந்த உலகில் பரிசுத்தமாக நடக்கும் ஒரு மாறுபட்ட வாழ்க்கை முறையைக் காத்துக் கொள்ளும் படியாகத் தமது

வாசகர்களை (நம்மையும்) உற்சாகப்படுத்தப் பேதுரு ஐந்து ஆவிக்குரிய ஊக்கங்களை அளிக்கிறார்.

**1. தேவ மகிமை (1:13).**

"இயேசு கிறிஸ்து வெளிப்படுவது" என்பது "ஜீவனுள்ள நம்பிக்கை" யையும். "இயேசு கிறிஸ்துவின் வருகை" யையும் இன்னொரு வகையில் வருணிப்பதே. கிறிஸ்தவர்கள் எதிர்காலத்தில் வாழ்கின்றனர்: அவர்களுடைய தற்போதைய காரியங்களையும், தீர்மானங்களையும் இந்த எதிர்கால நம்பிக்கையே ஆளுகை செய்கிறது. நிச்சயிக்கப்பட்ட மணமக்கள் எதிர்வரும் திருமணத்தை நோக்கியே தங்கள் திட்டங்களைத் தீட்டுவது போல, இயேசு கிறிஸ்துவைப் பார்ப்போம் என்ற எதிர்பார்ப்போடு கிறிஸ்தவர்கள் இன்று வாழ்கிறார்கள்.

"உங்கள் சிந்தனைகளை ஒருமுகப்படுத்துங்கள்! மனதைக் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளுங்கள்" என்பதுதான் "நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக்" கொள்ளுங்கள் என்பதற்கு அர்த்தம். இதில் உள்ள உருவகம் என்னவென்றால் நீண்ட அங்கி தரித்த ஒருவன் சுதந்திரமாக ஓடுவதற்கு ஏற்றவாறு தன் ஆடையைக் கச்சைக்கு அடியில் திணித்துக் கொள்வது போலாகும். உங்கள் சிந்தனைகளைக் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை நோக்கி ஒருமுகப்படுத்தி, அதற்கு ஏற்றவாறு வாழும்போது, உங்கள் மனதை மடக்கி, ஆவிக்குரிய முன்னேற்றத்தைத் தடுக்கும் உலகுக்குரிய விஷயங்களில் இருந்து நீங்கள் தப்பித்துவிடலாம். பேதுரு இக்கருத்தைப் பஸ்காவில் இருந்து பெற்றிருக்கலாம். ஏனெனில், இப்பகுதியில் பின்னர் அவர் கிறிஸ்துவை ஆட்டுக்குட்டியோடு ஒப்பிடுகிறார் (வ. 19). பஸ்கா உணவை துரிதமாக உண்டு புறப்பட ஆயத்தமாக இருக்க வேண்டும் என்பது யூதர்களுக்குக் கண்டிப்பு (யாத். 12:11).

எண்ணமே எதிர்வருவதைத் தீர்மானிக்கிறது; சிந்தையே செயலைத் தீர்மானிக்கிறது. கர்த்தரின் வருகையை அலட்சியப் படுத்தும் ஒரு கிறிஸ்தவனை விடவும், தேவ மகிமையை எதிர்நோக்கி இருக்கும் ஒரு கிறிஸ்தவன் இப்போது கீழ்ப்படிதல் உள்ளவனாய் இருப்பதற்கு அதிக ஊக்கம் உடையவனாக இருப்பான். இந்த முரண்பாடு ஆபிரகாம் மற்றும் லோத்தின் வாழ்க்கையில் சித்தரிக்கப்படுகிறது (ஆதி. 12:13; எபி. 11:8-16). ஆபிரகாமின் விசுவாச விழிகள் பரலோகப் பட்டிணத்தின் மேல் நோக்கமாக இருந்ததால் அவருக்கு இந்த உலகத்தின் ஆஸ்திகள் மேல் ஆசை இருக்கவில்லை. ஆனால் உலக இன்பங்களை எகிப்தில் ருசிபார்த்த லோத்து படிப்படியாக சோதோமை நோக்கி நகர்ந்தான். ஆபிரகாம் தன் வீட்டிற்கு ஆசீர்வாதத்தைக் கொண்டுவந்தார்; ஆனால் லோத்தோ நியாயத்தீர்ப்பைக் கொண்டு வந்தான். எண்ணமே எதிர்வந்ததைத் தீர்மானித்தது.

கட்டுப்பாடான மனம் மட்டுமின்றி நமக்குத் *தெளிந்த புத்தியும்* இருக்க வேண்டும். இந்த வார்த்தைக்கு "சாந்தமான, நிதானமான, கட்டுப்பாடான,

விஷயங்களை ஆழ்ந்துணரும்'' என்ற பொருள்கள் உண்டு. துரதிர்ஷ்டவசமாக சிலர் தீர்க்கதரிசன ஆராய்ச்சியால் ''இழுத்துக்கொண்டு போகப்பட்டு'' தங்கள் ஆவிக்குரிய நிதானத்தை இழந்துவிடுகின்றனர். கிறிஸ்து வருகிறார் என்ற உண்மை, நம்மை அமைதியாகவும், நிதானமாகவும் இருப்பதற்கு ஊக்குவிக்க வேண்டும் (1 பேதுரு 4:7). சாத்தான் கள்ளத்தனமாய்ப் பதுங்கிப்பதுங்கி வருகிறான் என்ற உண்மையும் நாம் அமைதியான மனம் உள்ளவர்களாய் இருக்க வேண்டும் என்பதற்கு இன்னொரு காரணம் (5:8). யாருடைய மனம் கட்டுப்பாடு இழந்து போகிறதோ, யாருடைய வாழ்க்கை தீர்க்கதரிசன ஆராய்ச்சிகளால் ''விழுந்து சிதறுகிறதோ'' அது, அவர்கள் வேதாகமத் தீர்க்கதரிசனங்களை உண்மையில் புரிந்துகொள்ளவில்லை என்பதற்குச் சான்றாகும்.

எல்லாம் நன்மையாகவே முடியும் என்ற மனநிலை நமக்கு வேண்டும். ''பூரண நம்பிக்கையின்'' அர்த்தம், ''முற்றிலுமாக நம்பிக்கையோடு இருங்கள்'' என்பதே. நமது எதிர்பார்ப்பு நம்பிக்கையோடு இருக்கவேண்டும். எனது நண்பர் ஒருவர் ஒருநாள் ஒரு குறிப்புரை எனக்கு அனுப்பினார். அதில் 'எதிர்பார்ப்பது இருண்டதாக இருக்கும் போது, எதிர்நோக்குவதை முயற்சி செய்யுங்கள்' என்று எழுதப்பட்டிருந்தது. உண்மையாகவே நல்ல ஆலோசனை! நட்சத்திரங்கள் தெரிவதற்கு இருட்டாக இருக்கவேண்டியது அவசியம்.

இத்தகைய ஆவிக்குரிய சிந்தையின் விளைவாக ஒரு விசுவாசி அவனுடைய வாழ்க்கையில் தேவ கிருபையை அனுபவிக்கிறான். நாம் இயேசு கிறிஸ்துவைக் காணும்போது நிச்சயமாக கிருபையை அனுபவிப்போம். ஆனால், அவர் வருகையை நாம் எதிர்நோக்கும் போது இன்றுகூட கிருபையை அனுபவிக்கலாம். கிருபையால் இரட்சிக்கப்பட்ட நாம் ஒவ்வொரு வினாடியும் தேவ கிருபையையே சார்ந்திருக்கிறோம் (1:10). கிறிஸ்துவின் மறுவருகையை எதிர்நோக்கி இருக்கும்போது, கஷ்டமான நாட்களில் அது நமது விசுவாசத்தையும் நம்பிக்கையையும் பலப்படுத்துகிறது; இது தேவகிருபையை நமக்கு மேலும் மேலும் அளிக்கிறது. கிருபைக்கும் இயேசு கிறிஸ்துவின் வருகைக்கும் இடையில் இருக்கும் சம்பந்தத்தைக் காட்டும் இன்னொரு வசனம் தீத்து 2:10-13 ஆகும்.

**2. தேவனின் பரிசுத்தம் (1:14-15).**

இங்குள்ள வாதம் நியாயமானதும், எளிதானதுமாகும். பிள்ளைகள் தங்கள் பெற்றோரின் இயல்பை மரபுவழியாகப் பெறுகின்றனர். தேவன் பரிசுத்தமானவர்; எனவே, அவரது பிள்ளைகளாகிய நாமும், பரிசுத்தமாக வாழவேண்டும். நாம் ''திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்கள்'' (2 பேதுரு 1:4). இந்த சுபாவத்தை தேவபக்தி உள்ளவர்களாக வாழ்ந்து வெளிக்காட்ட வேண்டும்.

கிறிஸ்துவை நம்புவதற்கு முன் அவர்கள் எவ்வாறு இருந்தனர் என்பதைப் பேதுரு தன் வாசகர்களுக்கு ஞாபகப்படுத்துகிறார். அவர்கள் *கீழ்ப்படியாமையின் பிள்ளைகளாய்* இருந்தார்கள் (எபே. 2:1-3). ஆனால்,

இப்போதோ அவர்கள் கீழ்ப்படிதலுள்ள பிள்ளைகளாய் இருக்க வேண்டும். உண்மையான இரட்சிப்பின் விளைவு எப்போதும் கீழ்ப்படிதலே (ரோமர் 1:5; 1 பேதுரு 1:2). அவர்கள் *உலக இச்சைகளின்படி நடந்தவர்களாய்,* இந்த உலகின் மாதிரிகளாலும், இன்பங்களினாலும் "தங்களை அலங்கரித்தவர்களாய்" இருந்-தனர். ரோமர் 12:2 இதே வார்த்தையை "உலகத்துக்கு ஒத்த வேஷம் தரித்தவர்கள்" என்று மொழிபெயர்க்கிறது. இரட்சிக்கப்படாத மக்கள், தாங்கள் "சுதந்திரமாகவும் மாறுபட்டவர்களாகவும்" இருக்க விரும்புவதாக நம்மிடம் கூறுகின்றனர்; ஆனாலும், அவர்கள் ஒருவரைப் போல ஒருவர் நடந்து கொள்ளுகிறார்களே தவிர வேறல்ல.

இவற்றிற்கு எல்லாம் காரணமான *அறியாமையே* தீவினைக்கு *இடம்கொடுக்கிறது.* இரட்சிப்படையாத ஜனங்கள் ஆவிக்குரிய அறிவு இல்லாத காரணத்தால் தங்களை மாம்சபிரகாரமான உலக இச்சைகளுக்கு ஒப்புக்கொடுக்-கின்றனர் (அப். 17:30; எபே. 4:17 லிருந்து). இச்சைக்குட்படும் இயல்போடு நாம் பிறந்ததால் பாவ வாழ்க்கை வாழ்வது நமக்கு இயல்பானதே. நமது வேட்கைகளையும் (appetites) செயல்பாடுகளையும் தீர்மானிப்பது நமது இயல்பே. ஒரு நாயும் பூனையும் வெவ்வேறு விதமாக நடந்து கொள்ளக் காரணம் அவற்றின் தனித்தனியான இயல்புகளே (nature).

தேவ கிருபை மட்டும் இல்லாமல் இருந்திருந்தால் நாம் இன்னும் அதே பாவகரமான நிலையிலேயே இருந்திருப்போம். அவர் நம்மை அழைத்தார்! ஒருநாள் இயேசு பேதுருவையும் அவரது நண்பர்களையும் அழைத்து, கூறினார்: "என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷர்களைப் பிடிக்கிறவர்கள் ஆக்குவேன்!" (மாற்கு 1:17). அவரது அழைப்பிற்கு அவர்கள் விசுவாசத்தின் மூலமாகப் பதில் அளித்தனர். இது அவர்களுடைய வாழ்க்கையை முற்றிலுமாக மாற்றியது.

"அழைக்கப்பட்ட" என்ற வார்த்தையை இந்த நிருபத்தில் பேதுரு அடிக்கடி பயன்படுத்துவதற்கு இதுவே காரணமாக இ.ருக்கலாம். பரிசுத்தர் ஆவதற்கு நாம் அழைக்கப்பட்டோம் (1:15). நாம் "அந்தகாரத்தினின்று (அவ-ருடைய) ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைக்கப்" பட்டவர்கள் (2:9). நாம் பாடுபடவும், தாழ்மையில் கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்றவும் அழைக்கப்பட்டோம் (2:21). நாம் பாடுகளின் மத்தியில் "ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும்படி அழைக்கப்பட்டு இருக்கிறோம்" (3:9). எல்லாவற்-றையும் விட சிறந்ததாக "அவருடைய நித்திய மகிமைக்கு" நாம் அழைக்கப்-பட்டுள்ளோம் (5:10). நம்மை இரட்சிப்பதற்கு நாம் அவரை அழைக்கு முன்னரே தேவன் நம்மை அழைத்தார். இவை எல்லாம் முற்றிலுமாக கிருபையின் நிமித்தமாக நிகழந்தவைகளே.

தேவ கிருபையின் நிமித்தமாகப் பரிசுத்தவான்கள் ஆகும்படி பாவிகள் தெரிந்துகொள்ளப்படுவதில் பொறுப்புகளும் உள்ளடங்கியுள்ளது; வெறும்

சலுகைகள் மட்டுமல்ல. அவர் நம்மைத் "தமக்கு முன்பாக.. பரிசுத்தம் உள்ளவர்களும், குற்றம் இல்லாதவர்களுமாய் இருப்பதற்கு" கிறிஸ்துவுக்குள்ளாகத் தெரிந்து கொண்டார் (எபே. 1:4). அவரிடமாக நம்மை அழைத்துக் கொண்டார்; அவர் பரிசுத்தமானவர். எனவே நாமும் பரிசுத்தமாக இருக்க வேண்டும். பேதுரு தமது புத்திமதிகளை வலுவாக்க பழைய ஏற்பாட்டு பிரமாணத்திலிருந்து மேற்கோள் காட்டுகிறார் (லேவி. 11:44-45; 19:2; 20:7, 26).

தேவனின் பரிசுத்தம் அவரது இயல்புகளில் ஒரு முக்கியமான பகுதியாகும். "தேவன் ஒளியாய் இருக்கிறார். அவரில் எவ்வளவேனும் இருளில்லை" (1 யோவான் 1:5). நமது ஒழுக்கத்திலும், நடத்தையிலும் நமக்கு இருக்கும் எவ்விதப் பரிசுத்தமும் அவரில் இருந்தே கிடைக்கப்பெற்றாக வேண்டும். "பரிசுத்தப்படுத்துதல்" என்பதற்கு அடிப்படை அர்த்தம் என்னவென்றால் "தேவனுடைய தனிப்பட்ட உபயோகத்திற்கும், மகிழ்ச்சிக்குமாகப் பிரித்து வைக்கப்பட்டது" என்பதே. அசுத்தமானதில் இருந்து பிரித்தெடுத்தலையும், முழுமையாக தேவனுக்கென்று அர்ப்பணித்தலையும் அது உள்ளடக்கியுள்ளது (2 கொரி. 6:14-7:1). நம் "நடவடிக்கைகள் எல்லாவற்றிலேயும்" நாம் பரிசுத்தமாய் இருக்க வேண்டும். அப்போது, நாம் செய்யும் எல்லாவற்றிலேயும் தேவனுடைய பரிசுத்தம் பிரதிபலிக்கும்.

ஓர் அர்ப்பணித்த விசுவாசிக்கு "உலகப் பிரகாரமானது" "புனிதமானது" போன்ற விஷயங்கள் எதுவும் இல்லை. தேவனை மகிமைப்படுத்துவதற்காகவே நாம் வாழும்போது, நமது முழு வாழ்க்கையுமே பரிசுத்தமாக இருக்கிறது. சாதாரண காரியங்கள் ஆகிய உண்ணுவதையும் குடிப்பதையும் கூட தேவ மகிமைக்காகவே செய்ய முடியும் (1 கொரி. 10:31). எதையாவது தேவ மகிமைக்கு என்று செய்ய முடியாவிட்டால், நிச்சயமாக அது தேவ சித்தத்துக்கு அப்பாற்பட்டது என்று அறிந்து கொள்ளலாம்.

### 3. தேவ வார்த்தை (1:16).

"என்று எழுதியிருக்கிறது!" என்ற அறிக்கை ஒரு விசுவாசிக்குப் பெரும் அதிகாரத்தைக் கொண்டு வருகிறது. நமது கர்த்தர் தேவ வார்த்தைகளை உபயோகித்து சாத்தானை முறியடித்தது போல நாமும் செய்யலாம் (மத். 4:1-11, எபே. 6:17). ஆனால், தேவ வார்த்தை போரிட ஒரு வாள் மட்டுமல்ல, அது இந்த இருண்ட உலகத்தில் நம்மை வழிநடத்தும் ஒளியும் (2 பேதுரு 1:19; சங். 119:105), நம்மைப் பலப்படுத்தும் உணவும் (மத். 4:4; 1 பேதுரு 2:2), நம்மைக் கழுவிச் சுத்திகரிக்கும் நீரும் ஆகும் (எபே. 5:25-27).

அர்ப்பணித்த விசுவாசிகளின் வாழ்க்கையில், தேவ வார்த்தைக்கு ஒரு பரிசுத்தப்படுத்தும் ஊழியம் உண்டு (யோவான் 17:17). தேவ வார்த்தைகளில் பிரியமாய் இருந்து, அதைத் தியானித்து, அதற்குக் கீழ்ப்படியும் எவரும் தேவ வழிகாட்டலையும், ஆசீர்வாதத்தையும் அனுபவிக்கலாம் (சங். 1:1-3). வார்த்தை தேவனுடைய மனதை வெளிப்படுத்துகிறது; எனவே நாம் அதைக் *கற்றறிய*

வேண்டும்; தேவனுடைய இருதயத்தை வெளிப்படுத்துகிறது: அதை நாம் *நேசிக்க* வேண்டும்; தேவ சித்தத்தை வெளிப்படுத்துகிறது; அதன்படி நாம் *வாழ* வேண்டும். மனம், சித்தம், இருதயம் ஆகிய நமது முழுமையும் தேவ வார்த்தையால் கட்டுப்படுத்தப்பட வேண்டும்.

பேதுரு லேவியராகமத்தில் இருந்து மேற்கோள் காட்டுகிறார்: "நான் பரிசுத்தர்.. (நீங்களும்) பரிசுத்தராய் இருப்பீர்களாக!" (லேவி. 11:44). ஒரு புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவனைப் பழைய ஏற்பாட்டுப் பிரமாணம் கட்டுப்படுத்தும் அதிகாரம் கொண்டது என்று இதற்கு அர்த்தமா? ஆதிக்கிறிஸ்தவர்களுக்குப் புதிய ஏற்பாடும் கூட இல்லை என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அவர்களிடம் இருந்த ஒரே தேவ வார்த்தை பழைய ஏற்பாடே. தேவன் அந்த வார்த்தைகளைக் கொண்டே அவர்களை வழி நடத்திப் போஷித்தார். இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்ட சடங்காச்சாரச் சட்டங்களுக்கு இன்றைய விசுவாசிகள் கீழ்ப்பட்டிருக்கவில்லை. இருந்தாலும் இந்தப் பிரமாணத்திலும் ஒழுக்கம் மற்றும் ஆவிக்குரிய கொள்கைகள் வெளிப்படுத்தப்படுவதை நாம் காணலாம். பத்துக் கட்டளைகளில் ஒன்பது கட்டளைகள் திரும்பவும் நிருபங்களில் கூறப்படுகின்றன. அதனால் நாம் அவற்றிற்குக் கீழ்ப்படிய வேண்டும் (ஓய்வுநாள் பற்றிய கட்டளை இஸ்ரவேலுக்கு என்று குறிப்பாகக் கொடுக்கப்பட்டதால் அது இன்று நமக்குப் பொருந்தாது (பார்க்க: ரோமர் 14:1-9). நாம் பழைய ஏற்பாட்டை வாசித்து ஆராயும் போது, தேவனின் குணாதிசயத்தையும், செயல்பாடுகளையும், குறியீடுகளாக சித்திரமாக்கப்பட்டுள்ள சத்தியத்தையும் பற்றி அதிகதிகமாக அறிந்துகொள்ளலாம்.

அசுத்தமான ஓர் உலகில் நம்மை சுத்தமாக வைத்துக்கொள்வதற்கான முதற்படி, "வேதாகமம் என்ன கூறுகிறது?" என்ற கேள்வியை எழுப்புவதே. வேதாகமத்தில், இன்றையத் தீர்மானங்களை நாம் எடுப்பதற்கு வழிகாட்டி உதவும் கட்டளைகளையும், கொள்கைகளையும், வாக்குத்தத்தங்களையும், மனிதர்களையும் நம்மால் காண முடியும். நாம் தேவனுக்குக் கீழ்ப்படிய சித்தமாய் இருந்தால், அவர் தமது சத்தியத்தை நமக்கு உணர்த்துவார் (யோவான் 7:17). தேவன் காரியமாற்றும் விதம் காலத்துக்குக் காலம் மாறினாலும், அவரது குணாதிசயம் என்றென்றைக்கும் மாறாது நிலைத்துநிற்கும்; அவரது ஆவிக்குரிய கொள்கைகளில் ஒருபோதும் மாற்றம் இருக்காது. நாம் வேதாகமத்தைப் பற்றி அறிந்துகொள்ள அதைப் படிப்பதில்லை. தேவனைப் பற்றி நன்கு அறிந்து கொள்ளவே வேதாகமத்தைப் படிக்கிறோம். பெரும்பான்மையான வேதாகம மாணவர்கள் குறிப்புகளையும் விளக்கங்களையும் படிப்பதோடு திருப்தி அடைந்து விடுவதால் தேவனை அவர்களால் உண்மையில் அறிய முடியாமல் போய்விடுகிறது. தேவனின் வார்த்தையை அறிந்து கொள்வது நல்லதே; ஆனால் அது வார்த்தையின் தேவனை நன்கு அறிந்துகொள்ள உதவ வேண்டும்.

4. தேவனின் நியாயத்தீர்ப்பு (1:17).
தேவனுடைய பிள்ளைகளாகிய நாம், பாவம் மற்றும் பரிசுத்தமாக வாழ்தல் ஆகியவை பற்றி தீவிர சிந்தனை உள்ளவர்களாய் இருக்கவேண்டும்.

நமது பரலோகப் பிதா பரிசுத்தமானவரும் (யோவான் 17:17), நீதி உள்ளவருமாய் இருக்கிறார் (17:25). அவர் ஒருபோதும் பாவத்தோடு சமரசம் செய்துகொள்ள மாட்டார். அவர் இரக்கம் உள்ளவரும், மன்னிக்கிறவருமாக இருந்தாலும், தமது பிள்ளைகள் பாவத்தை அனுபவித்து மகிழ அனுமதிக்காத அன்புநிறைந்த கட்டுப்பாட்டாளர். பாவம் அல்லவா அவரது குமாரனை சிலுவைக்கு அனுப்பியது! நாம் தேவனைப் பிதா என்று அழைப்போமானால் அவரது தன்மையையும் பிரதிபலிக்க வேண்டும்.

பேதுரு எந்த நியாயத்தீர்ப்பைப் பற்றி எழுதினார்? அது ஒரு விசுவாசியின் பணிகளைக் குறித்த நியாயத்தீர்ப்பே. அதற்கும் இரட்சிப்புக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. ஆயினும் இரட்சிப்பு நற்கிரியைகளை உருவாக்க வேண்டும் (தீத்து 1:16; 2:7, 12). நாம் கிறிஸ்துவை விசுவாசித்தபோது, தேவன் நமது பாவங்களை மன்னித்து, தமது குமாரனுக்குள் நாம் நீதிமான்களாக இருப்பதாக அறிவித்தார் (ரோமர் 5:1-10; 8:1-4; கொலோ 2:13). நமது பாவங்கள் ஏற்கெனவே சிலுவையில் நியாயந்தீர்க்கப்பட்டுவிட்டன (1 பேதுரு 2:24). எனவே அவை நமக்கு எதிராக நிற்க முடியாது (எபி. 10:10-18).

கர்த்தரின் இரண்டாம் வருகையின் போது "கிறிஸ்துவினுடைய நியாயாசனம்" என்ற ஒரு நியாயத்தீர்ப்பு உண்டு (ரோமர் 14:10-12; 2 கொரி. 5:9-10). ஒவ்வொருவரும் தங்கள் பணிகளைப் பற்றிய கணக்கைக் கொடுத்து, தகுந்த பலனைப் பெற்றுக்கொள்வோம். இது ஒரு "குடும்ப நியாயத்தீர்ப்பு", தமது அருமைப் பிள்ளைகளுக்கும் பிதாவுக்கும் இடையில் உள்ள ஒரு காரியம். "நியாயந்தீர்க்கிற" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்கச் சொல் "ஏதாவது நன்மையைக் கண்டுணரச் செய்யப்படும் பரிசோதனை" என்று அர்த்தமளிக்கிறது. தேவன் நமது ஊழியங்களின் உள்நோக்கங்களை ஆராய்வார்; அவர் நமது இருதயங்களைச் சோதித்துப் பார்ப்பார். ஆனால், அவரை நமது வாழ்க்கையிலும் ஊழியங்களிலும் மகிமைப்படுத்துவதே அவருடைய நோக்கம் என்பதை அவர் உறுதிப்படுத்துகிறார். "அப்பொழுது அவனவனுக்குரிய புகழ்ச்சி தேவனால் உண்டாகும்" (1 கொரி. 4:5). எத்தகைய ஓர் உற்சாகம் அளிக்கும் செய்தி!

கிறிஸ்தவ வாழ்க்கையில் நாம் வளர்ந்து வரும்போது தேவன் நமக்குப் பல ஈவுகளையும், பாக்கியங்களையும் அளிக்கிறார்; ஆனால் கீழ்ப்படியாமல் இருப்பதற்கும், பாவம் செய்வதற்கும் அவர் ஒருநாளும் சலுகை அளிக்க மாட்டார். அவர் தேவையில்லாமல் அதிகப்படியான சலுகைகளை அளிக்கவோ அவரவர் இஷ்டப்படி நடக்கத் தமது பிள்ளைகளை விட்டுவிடவோ மாட்டார். அவர் ஆட்களை மதிப்பவர் அல்லர். "அவர் பட்சபாதம் பண்ணுகிறவரும் அல்ல, பரிதானம் வாங்குகிறவரும் அல்ல" (உபா. 10:17). "தேவனிடத்தில்

பட்சபாதம் இல்லை'' (ரோமர் 2:11). வருடக் கணக்கிலான கீழ்ப்படிதலைக் கொண்டு, ஒரு மணிநேரக் கீழ்ப்படியாமையை வாங்க முடியாது. தமது பிள்ளைகளில் ஒன்று கீழ்ப்படியாமற் போனாலும், தேவன் அதைத் தண்டித்துத் திருத்தவேண்டி உள்ளது (எபி. 12:1-13). ஆயினும் தமது பிள்ளை கீழ்ப்படிந்து அவருக்கு அன்போடு சேவை செய்யும்போது, அதை அவர் குறித்துவைத்துக் கொண்டு தகுந்த ஈவை ஆயத்தம் செய்கிறார்.

தமது நிருபத்தை வாசிப்பவர்களுக்கு அவர்கள் இந்த உலகில் வெறும் "பரதேசிகளே'' என்பதைப் பேதுரு ஞாபகப் படுத்துகிறார். வாழ்க்கையைக் கீழ்ப்படியாமையிலும், பாவத்திலும் வீணடிக்கக்கூடாது; ஏனெனில் அது மிகவும் குறுகியது (1 பேதுரு 4:1-6). லோத் தனது பரதேசி வாழ்க்கையை விட்டுவிட்டு, சோதோம் வாசியாக மாறிய போதே, தனது புனிதத்தையும், சாட்சியையும் இழந்துபோனான். அவன் எவைகளுக்காக வாழ்ந்தானோ அவைகள் எல்லாம் வெறும் புகையாகப் போயின. இந்த உலகில் நீங்கள் "அந்நியரும் பயணி-களுமாக'' இருக்கிறீர்கள் என்பதை எப்போதும் நினைவில் வைத்துக்கொண்டே இருங்கள் (1:1; 2:11). பிதா தமது பிள்ளைகள் கட்டுப்பாட்டோடு வாழ அவர்களை நிகழ்காலத்தில் சீர்ப்படுத்துகிறார், அவர்களுடைய சேவைகளைச் சீர்தூக்கிப்பார்த்து எதிர்காலத்தில் நியாயந்தீர்ப்பார் ஆகிய உண்மைகளை நாம் நோக்கிப்பார்த்து தெய்வ பயமிக்க ஒரு சிந்தையை வளர்த்துக்கொள்ள வேண்டும். இது ஓர் அடிமை தன் எஜமானுக்கு முன் கூனிக்குறுகுவது போன்ற பயம் அல்ல; தந்தையின் மேல் ஒரு குழந்தைக்கு இருக்கும் அன்புநிறைந்த மரியாதை. அது நியாயத்தீர்ப்பைக் குறித்த பயம் அல்ல (1 யோவான் 4:18). அவரது எதிர்பார்ப்பை ஏமாற்றிவிடக்கூடாது என்ற பயமே. அது "தேவ பயம்'' (2 கொரி. 7:1): பிதாவின் மேல் தெளிந்த புத்தியோடு நாம் வைக்கும் மரியாதை.

இன்று தேவனைக் குறித்துப் பேசுவதிலும் அல்லது தேவனோடு பேசுவதிலும் ஓர் அலட்சியமும், அவமரியாதையுமான போக்கு இருப்பதை சிலசமயம் நான் உணர்கிறேன். ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக்கு முன், பேராயர் பி. எஃப். வெஸ்ட் காட் (B.F. West Cott) கூறினார்: "ஆவிக்குரிய விஷயங்களைப் பற்றி மக்கள் துணிச்சலோடு பேசுவதைக் கேட்கும்போது, கடந்துபோகும் ஒவ்வொரு ஆண்டும் என்னை நடுநடுங்க வைக்கிறது.'' அந்த தேவபக்தியுள்ள பேராயர் இன்று பேசப்படுவதைக் கேட்டிருக்க வேண்டுமே. ஓர் உலகப்பூர்வமான நடிகை தேவனை "மாடியில் இருக்கும் அந்த மனிதர்'' என்று அழைக்கிறார். ஒரு பேஸ்பந்து வீரர், "ஆகாயத்தில் இருக்கும் பெரும் அமெரிக்கன்'' என்று வருணிக்கிறார். ஒரு பழைய ஏற்பாட்டு யூதர் தேவனுடைய பரிசுத்த நாமத்தை உச்சரிக்கவும் பயந்தார். ஆனால் இன்று நாமோ தேவனைக் குறித்து அலட்சியமாகவும், மரியாதை இன்றியும் பேசுகிறோம். பொது ஜெபங்களை நாம் சர்வசாதாரணமாக ஏறெடுப்பதால், கூடியிருக்கும் மக்கள் நாம் விண்ணப்பங்களைக் குறித்து மன்றாடுகிறோமா

அல்லது தேவனோடு நமக்குள்ள நெருக்கத்தைக் கேட்போருக்குக் காட்ட முனைகிறோமா என்று வியப்படைகின்றனர்.

### 5. தேவனின் அன்பு (1:18-21).

பரிசுத்தமாக வாழ்வதற்கு இதுவே உச்சக்கட்ட உந்துதல். பேதுரு வாசிப்பவர்களுக்கு அவர்களுடைய இரட்சிப்பின் அனுபவத்தை ஞாபகப்படுத்துகிறார். இது நாம் அனைவர்க்கும் தொடர்ந்து தேவைப்படும் ஒரு நினைவூட்டல். நமது கர்த்தர் இதற்காகவே கர்த்தருடைய போஜனத்தை ஏற்படுத்தினார். இதனால் அவருடைய ஜனங்கள் அவர் தங்களுக்காக மரித்தார் என்பதைத் தொடர்ந்து ஞாபகத்தில் வைத்துக் கொள்வார்கள். பேதுரு ஞாபகப்படுத்துபவைகளைக் கவனியுங்கள்.

*அவர்கள் என்னவாக இருந்தார்கள்* என்பதை அவர் ஞாபகப்படுத்தினார். மீட்கப்பட வேண்டிய அடிமைகளாக ஆரம்பத்தில் அவர்கள் இருந்தார்கள். "*மீட்கப்படுதல்*" என்ற இந்த வார்த்தை நமக்கு ஓர் இறையியல் பதம். ஆனால், முதல் நூற்றாண்டில் ரோமாபுரியில் வாழ்ந்தவர்களுக்கு இது ஒரு சிறப்பான அர்த்தத்தைத் தாங்கி நின்றது. ஏறக்குறைய 5 கோடி அடிமைகள் ரோம சாம்ராஜ்யத்தில் இருந்தனர். பல அடிமைகள் கிறிஸ்தவர்களாக மாறி அந்தந்த பகுதிகளில் இருந்த சபைகளில் ஐக்கியமாக இருந்தனர். போதுமான பணத்தைச் சேகரிக்க முடியுமானால் ஓர் அடிமையால் தனது விடுதலையை வாங்கிவிட முடியும். அல்லது அவனை வாங்கி விடுதலை அளிக்கக் கூடிய ஒருவனுக்கு அவனது எஜமான் அவனை விற்றுவிட முடியும். மீட்பு என்பது அன்று மிகவும் விலை உயர்ந்த விஷயமாக இருந்தது.

பாவத்திற்கு அடிமையாவது குறித்து நாம் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது (தீத்து 3:3). எகிப்தின் அடிமைத் தனத்தை நினைவுகூரும்படி மோசே இஸ்ரவேலரைத் தூண்டினார் (உபா. 5:15; 16:12; 24:18, 22). வனாந்திரத்தில் அழிந்துபோன தலைமுறை, எகிப்தின் அடிமைத்தனத்தை மறந்து, எப்போதும் திரும்பிப் போய்விடவே எண்ணினர்.

அடிமைத்தனமான ஒரு வாழ்க்கையை மட்டுமன்றி, *வெறுமையான* ஒரு வாழ்க்கையையும் நாம் வாழ்கிறோம். பவுல் இதை "உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாக நீங்கள் அனுசரித்து வந்த வீணான நடத்தை" என்று அழைக்கிறார் (1:18). இதை 4:1-4-ல் இன்னும் குறிப்பாக விளக்குகிறார். அதே நேரத்தில், இந்த மக்கள் தங்கள் வாழ்க்கை "முழுமை" யானது என்றும், "மகிழ்ச்சி" யானது என்றும் நினைத்தனர். உண்மையில் அவர்கள் வெறுமையிலும் துயரத்திலும் உழன்றனர். இரட்சிப்படையாத மக்கள் இன்று பொய்யானவைகளில் குருட்டுத்தனமாக வாழ்கின்றனர்.

கனடாவில் ஊழியம் செய்யும்போது நானொரு பெண்ணைச் சந்தித்தேன். அவர் தமது இளம் வயதிலேயே கிறிஸ்தவராக மாறியவர். ஆனால் "சமுதாய வாழ்க்கைக்குள்" இழுத்துச் செல்லப்பட்டார். ஒரு நாள் ஒரு சீட்டாட்டக்

கேளிக்கைக்கு செல்லும் வழியில் ஒரு கிறிஸ்தவ ஒலிபரப்பைக் கேட்க நேர்ந்தது. அதே வினாடியில் பேசியவர் கூறினார்: "பெண்களே! உங்களில் சிலர் உங்கள் வேதாகமத்தை அறிந்திருப்பதை விடவும் அதிகமாகச் சீட்டாட்டத்தைப் பற்றி அறிந்து வைத்திருக்கிறீர்கள்." அந்த வார்த்தைகள் அவரைச் செயலற்றுப் போகச் செய்தன. தேவன் அவருடைய உள்ளத்தில் பேசினார். அவர் வீட்டுக்குத் திரும்பிப் போனார். அந்த மணி நேரத்தில் இருந்து தமது வாழ்க்கையை முழுமையாக தேவனுக்கு அர்ப்பணித்தார். தேவ சித்தத்துக்கு மாறான ஒரு வாழ்க்கையின் பயனின்மையையும், நிலையாமை-யையும் கண்டுணர்ந்தார்.

பேதுரு, அவர்கள் என்னவாக இருந்தார்கள் என்பதை மட்டுமல்லாமல் அவர்களுக்காகக் *கிறிஸ்து என்ன செய்தார்* என்பதையும் நினைவூட்டினார். அவர் தமது விலையேறப்பெற்ற இரத்தத்தைச் சிந்தி நம்மை, பாவத்தின் அடிமைத்தனத்தில் இருந்து வாங்கி எப்போதும் சுதந்திரமாக இருக்கும்படிச் செய்தார். "மீட்கப்படுதல்" என்பதற்கு, விலைகொடுத்து வாங்கி சுதந்திரமாக விடுதல் என்று அர்த்தம். ஓர் அடிமை பணம் கொடுத்து விடுதலை ஆகலாம். ஆனால், எந்த ஒரு தொகை கொடுத்தும் ஒரு பாவியை விடுதலையாக்க முடியாது. கிறிஸ்துவின் இரத்தம் மட்டுமே நம்மை விடுதலை செய்ய முடியும்.

பேதுரு கிறிஸ்துவின் பாடுகளை நேரில் பார்த்த ஒரு சாட்சி (5:1). கிருபாதார பலியான அவரது மரணத்தைப் பேதுரு அடிக்கடி இந்த நிருபத்தில் குறிப்பிடுகிறார் (2:21 லிருந்து; 3:18; 4:1, 13; 5:1). "ஆட்டுக்குட்டி" என்று இயேசுவை அழைப்பதின் மூலம் பேதுரு பழைய ஏற்பாட்டுப் போதனையைத் தமது வாசகர்களுக்கு ஞாபகப்படுத்துகிறார். அது ஆதிசபைக்கு முக்கியமாக இருந்தது போல நமக்கும் இன்று முக்கியமானதாகவே இருக்க வேண்டும். அதுவே பதிலீட்டுக் கொள்கை (the doctrine of substitution): குற்றமுள்ளவர்களுக்காக குற்றமற்ற ஒருவர் பலியாகத் தன் வாழ்க்கையை அளித்தல்.

பலி என்ற கொள்கை, ஆதியாகமம் 3-ல், ஆதாமையும் ஏவாளையும் உடுத்திவிக்க தேவன் மிருகங்களைக் கொன்றபோது ஆரம்பித்தது. ஓர் ஆட்டுக்கிடா ஈசாக்குக்குப் பதிலாகச் செத்தது (ஆதி. 32:3). பஸ்காவின் ஆட்டுக்குட்டி ஒவ்வொரு யூதக்குடும்பத்துக்காகவும் கொல்லப்பட்டது (யாத். 12). ஏசாயா 53ல் மேசியா குற்றமற்ற ஆட்டுக்குட்டியாகக் காட்டப்படுகிறார். ஈசாக்கு ஒரு கேள்வியை எழுப்பினான்: "ஆட்டுக்குட்டி எங்கே?" (ஆதி. 22:7). இதற்கு இயேசுவைச் சுட்டிக்காட்டி யோவான் ஸ்நானகன் பதிலளித்தார்: "இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற ஆட்டுக்குட்டி!" (யோவான் 1:29). பரலோகத்தில், மீட்கப்பட்டவர்களும், தூதர்களும் பாடினார்கள், "ஆட்டுக்குட்டி-யானவர்.. (மகிமைக்குப்) பாத்திரர்" (வெளி. 5:11-14).

கிறிஸ்துவின் மரணம் ஒரு விபத்தல்ல, ஏற்பாடு என்பதைப் பேதுரு தெளிவாக்கினார். ஏனெனில் அது உலகத் தோற்றத்திற்கு முன்னரே தீர்மானிக்-

கப்பட்ட ஒன்று (அப். 2:23). மனிதனுடைய நோக்கில் பார்க்கும்போது நமது கர்த்தர் கொடூரமாகக் கொலைசெய்யப்பட்டார்; ஆனால் தெய்வீக நோக்கில், அவர் பாவிகளுக்காகத் தமது உயிரைத் தத்தம் செய்தார் (யோவான் 10:17-18). ஆனாலும் அவர் மரித்தோரில் இருந்து எழுப்பப்பட்டார். இப்போது அவரை நம்பும் எவரும் நித்தியத்திற்காக இரட்சிக்கப் படுவார்.

கிறிஸ்துவின் ஜீவாதார பலியைப்பற்றி தியானிக்கும் போது, நானும் நீங்களும் தேவனுக்குப் பயந்து, அவரது மகிமைக்காக ஒரு பரிசுத்தமான வாழ்க்கையையே வாழ விரும்புவோம். ஓர் இளம்பெண்ணாக இருக்கும்போது ஃபிரான்சஸ் ரிட்லி ஹேவர்கல் (Frances Ridley Havergal) கிறிஸ்துவின் சிலுவைக் காட்சியின் சித்திரம் ஒன்றைப் பார்த்தார். அதன் அடியில், "உனக்காக நான் இதைச் செய்தேன்! எனக்காக நீ என்ன செய்தாய்?" என்று எழுதப்பட்டு இருந்தது. அவர் உடனே வேகவேகமாக ஒரு கவிதையை எழுதினார். அது அவருக்குத் திருப்தி அளிக்காததால் அதை நெருப்புக்குள் வீசி எறிந்தார். எழுதிய காகிதம் எரியாமல் வெளியே வந்தது. பின்னர் தமது தந்தையின் ஆலோசனைப்படி, அவர் அந்தக் கவிதையை வெளியிட்டார். இன்று நாம் அதைப் பாடுகிறோம்:

*மரணப் பிடியில் இருந்துன்னை*
*மிகவும் விரைவாய் மீட்டிடவே*
*கிரயத் தொகையாய் விலையுயர்ந்த*
*குருதியும் சிந்தி உனக்காகத்*

*தந்தேன்!*
*தந்தேன்! என்னுயிரை!*
*தந்தது*
*நீ எதை எனக்காக?*

உண்மையிலேயே இது ஒரு நல்ல கேள்வி! தேவனுக்கு நாம் ஒரு நல்ல பதிலைக் கொடுக்க முடியும் என்று நம்புகிறேன்.

*கூடுதலாக சில குறிப்புகள்: "அழிவுள்ள", "விலையேறப்பெற்ற"*

"அழிவுள்ள", "அழியாத" என்ற சொற்களைப் பேதுரு அடிக்கடி பயன்படுத்துவதைக் கவனிக்கவும்: 1 பேதுரு 1:4, 18, 23; 3:4. மேலும் "விலை-யேறப்பெற்ற" என்ற வார்த்தை: 1:19, 2:4, 6, 7; 2 பேதுரு 1:1, 4.

# 4

## *கிறிஸ்தவ ஒற்றுமை*

1 பேதுரு 1:22-2:10

தேவமக்கள் எப்போதும் ஒருவருக்கொருவர் இணக்கமாக இருப்பதில்லை என்பது வாழ்க்கையின் ஒரு வேதனையான உண்மை. *நம்பிக்கையிலும், பரிசுத்தத்திலும்* நடைபோடும் மக்கள் *இணக்கமாகவும்* நடப்பார்கள் என்று நீங்கள் நினைத்தாலும் அது எப்போதும் உண்மையல்ல. தேவனுடைய பார்வையில் ஒரே ஒரு சரீரமே உண்டு (எபே. 4:4-6-ஐப் பார்க்கவும்). ஆனால், பிளவுபட்ட சபையையும் சில சமயங்களில் அவை ஒன்றுக்கொன்று போர் தொடுத்துக் கொண்டு இருப்பதையுமே நமது மனிதக் கண்களால் காணமுடிகிறது. இன்று ஆவிக்குரிய ஒற்றுமை என்பது அதிதீவிரமான தேவையாக இருக்கிறது.

நிருபத்தின் இப் பகுதியில், சபையின் நான்கு விரிவான சித்திரங்களின் மூலம் பேதுரு ஆவிக்குரிய ஒற்றுமையை வலியுறுத்துகிறார்.

**1. நாம் ஒரே குடும்பத்தின் பிள்ளைகள் (1:22-2:3)**

இந்த உண்மையின் தாக்கத்தை எண்ணிப் பார்ப்பீர்களேயானால், தேவ ஜனங்களுக்குள் ஒற்றுமையைக் கட்டவும், அதைக் காக்கவும் ஊக்கம் பெறுவீர்கள்.

***அ. நாம் ஒரே வகையான பிறப்பை அனுபவித்துள்ளோம் (1:23-25).***

இயேசு கிறிஸ்துவின் மேல் உள்ள விசுவாசத்தின் மூலமாக வரும் ஆவிக்குரிய பிறப்பின் வழியாக மட்டுமே தேவனுடைய ஆவிக்குரிய குடும்பத்திற்குள் நுழைய முடியும் (யோவான் 3:1-16). இயற்கையான பிறப்பில் இரண்டு பெற்றோர்கள் இருப்பது போலவே ஆவிக்குரிய பிறப்பிலும் இரு பெற்றோர்கள் உண்டு: தேவ ஆவியானவர் (3:5-6) மற்றும் தேவ வார்த்தை (1 பேதுரு 1:23). இந்த புதிய பிறப்பு நமக்கு ஒரு புதிய சுபாவத்தைத் தருவதோடு (2 பேதுரு 1:4), ஒரு புதியதும், ஜீவனுள்ளதுமான நம்பிக்கையையும் தருகிறது (1 பேதுரு 1:3).

நமது முதல் பிறப்பு மாம்ச பிரகாரமானது; மாம்சம் அழியும் தன்மை கொண்டது. மாம்சத்தால் பிறப்பவை யாவும் இறந்து சிதையும் விதியையுடையன. மனிதகுலம் நாகரிகத்தை ஒன்றாகப் பிடித்து வைக்க முடியாததற்கு இதுவே காரணம்: அவை எல்லாம் மனித மாம்சத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதால் சிதைந்து சிதறும் தன்மையன. வசந்த கால மலர்களைப் போல மனிதனின் கிரியைகள் சிலகாலம் வெற்றி அடைவது போல் தோன்றினாலும் பின் அவை அழிந்து மறையத் தொடங்குகின்றன. ஆதியாகமம் 11-ன் பாபேல் கோபுரத்தில் இருந்து, வெளிப்படுத்தின விசேஷம் 17, 18-ன் "மகா பாபிலோன் வரை" மனித ஒற்றுமைக்கான பெரும் முயற்சிகள் யாவும் விழுந்துபோகவே விதிபடைத்துள்ளன.

முதல் பிறப்பின் அடிப்படையில் சபை ஒற்றுமையைக் கட்டுவோமேயானால் நாம் தோற்றுப் போவோம்; மறுபிறப்பின் அடிப்படையில் ஒற்றுமையைக் கட்டினால், அது வெற்றி பெறும். ஒவ்வொரு விசுவாசிக்குள்ளும் ஒரே ஆவியானவரே வாசம் செய்கிறார் (ரோமர் 8:9). நாம் ஒரே பிதாவை நோக்கியே கூப்பிட்டு (1 பேதுரு 1:17), அவரது தெய்வீகத் தன்மையையே பகிர்ந்து கொள்ளுகிறோம். ஒருபோதும் அழிந்து மறையாத ஒரே வார்த்தையையே நாம் நம்புகிறோம். நாம் ஒரே சுவிசேஷத்தை விசுவாசித்து, ஒரே ஆவியினால் பிறந்திருக்கிறோம். நம்மைப் பிரிக்கக் கூடிய மாம்சத்தின் *வெளிப்பிரகாரமானவைகளை*, நம்மை ஒன்றிணைக்கும் ஆவிக்குரிய *நித்தியமானவைகளோடு* ஒப்பிடும்போது அவைகள் அர்த்தமற்றவை.

**ஆ. நாம் ஒரே அன்பை வெளிப்படுத்துகிறோம் (1:22)**

அன்பைப் பற்றி எழுத பேதுரு இரண்டு வெவ்வேறு சொற்களைப் பயன்படுத்துகிறார். *ஃபிலடெல்பியா* (Philadelphia) என்பது "சகோதர பாசம்"; *அகேப்பே* (Agape) என்பது தெய்வீகத் தியாகத்தின்பாற்பட்ட நேசம். இந்த இரு வகையான அன்பையும் நாம் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்பது முக்கியமானது. சகோதர பாசத்தை ஏன் பகிர்ந்து கொள்கிறோம் என்றால் நாம் கிறிஸ்துவுக்குள் சகோதர சகோதரிகளும், ஒரே சாயல் உள்ளவர்களாகவும் இருக்கிறோம். நாம் தெய்வீக அன்பைப்பகிர்ந்து கொள்ளக் காரணம் நாம் தேவனுக்கு உரியவர்கள்: அதனால் வேற்றுமைகளை நம்மால் ஒதுக்கித்தள்ள முடியும்.

இயற்கையாகவே நாம் யாவரும் சுயநலமானவர்கள். எனவே, ஒரு தேவ அற்புதமே இந்த அன்பை நமக்கு அளித்தது. ஏனெனில் நாம் "ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்ததால்" தேவன் நமது ஆத்துமாவை சுத்திகரித்து அவரது அன்பை நமது இருதயத்திற்குள் ஊற்றினார் (ரோமர் 5:5). நாம் உண்மையில் தேவனால் பிறந்திருக்கிறோம் என்பதற்கு சகோதர பாசமே ஒரு சான்றாகும் (1 யோவான் 4:7-21). இப்போது நாம் "கீழ்ப்படிதலுள்ள

பிள்ளைகள்" (1 பேதுரு 1:14). எனவே பழைய வாழ்க்கையின் சுயநலமான ஆசைகளில் வாழ நாம் இனிமேலும் விரும்புவதில்லை.

அன்பை "உற்பத்தி செய்ய" மக்கள் முயலுவது ஒரு சோகமான காரியமாகும்; ஏனெனில் அப்படி உற்பத்தி செய்யப்படும் பொருள் மலிவானதும் செயற்கையானதுமாய் இருக்கிறது. "அவன் வாயின் சொற்கள் வெண்ணெயைப் போல மெதுவானவைகள், அவன் இருதயமோ யுத்தம்; அவன் வார்த்தைகள் எண்ணெயிலும் மிருதுவானவைகள், ஆனாலும் அவைகள் உருவின பட்டயங்கள்" (சங். 55:21). நாம் ஒருவரோடு ஒருவரும், ஒரு கெட்டுப்போன உலகத்தோடும் பகிர்ந்துகொள்ளும் அன்பு ஆவியான தேவனால் உண்டாக்கப்பட வேண்டும். ஒரு வானொலியைப் போட்டு அணைப்பது போல் அல்லாமல் அது நம் வாழ்க்கையில் ஒரு *நிரந்தரமான* வல்லமை ஆகும்.

அது ஓர் ஆவிக்குரிய அன்பாக மாத்திரம் அல்லாமல், ஓர் *உண்மையான* அன்பாகவும் ("மாயமற்றது") இருக்கிறது. நாம் சுத்த இருதயத்தோடு அன்பு கூருகிறோம். நமது நோக்கம் பெறுவது அல்ல, கொடுப்பது. இன்று ஒருவகையான "வெற்றி மனப்பான்மை" பிரபலமாகி உள்ளது. அதன்படி ஒரு மனிதன் தன் தேவைக்காக மற்றவர்களை மிகநுட்பமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். நமது அன்பு உண்மையானதாகவும், சுத்த இருதயத்தோடும் இருந்தால் ஒருபோதும் "பிறரை" நமக்குச் சாதகமாகப் "பயன்படுத்திக்" கொள்ள முடியாது.

இந்த அன்பு "*ஊக்கமான*" அன்பு. இந்த வார்த்தை விளையாட்டுப் போட்டி சம்பந்தமானது. "ஒருவர் தன்னுடைய முழு சக்தியையும் கொண்டு முனைவது" என்று அதற்கு அர்த்தம். ஓர் ஒலிம்பிக் போட்டியாளர் தமது திறமையைத் தீட்டுவது போல, அன்பும் நாம் பதப்படுத்த வேண்டிய ஒன்றாகும். கிறிஸ்தவ அன்பு உணர்ச்சி சம்பந்தப்பட்டதல்ல; அது சித்தத்தைச் சார்ந்திருக்கும் ஒரு விஷயம். தேவன் நம்மை நடத்துகின்ற விதமாக நாம் மற்றவர்களை நடத்தும்போது அவர்கள் மேல் அன்பு காட்டுகிறோம். தேவன் நம்மை மன்னிக்கிறார், அதனால் நாம் பிறரை மன்னிக்கிறோம். தேவன் நம்மேல் பரிவோடு இருக்கிறார், அதனால் நாம் பிறர்மேல் பரிவுகாட்டுகிறோம். இது *உணர்ச்சியைப்* பொறுத்ததல்ல, *சித்தத்தைப்* பொறுத்த ஒரு விஷயம். இதில் நாம் வெற்றிபெற வேண்டுமானால் விடாது முயற்சி செய்ய வேண்டும்.

நமக்கு உதவி செய்ய இரு அற்புதமான உதவியாளர்கள் உள்ளனர்: தேவ வார்த்தையும் தேவ ஆவியும். நாம் தேவனுடைய பிள்ளைகள் ஆவதற்காக எந்த சத்தியத்தை நம்பிக் கீழ்ப்படிந்தோமோ, அதே சத்தியமே நம்மைப் போஷித்து வல்லவர்கள் ஆக்குகிறது. *சத்தியத்தை நேசித்து சகோதரனை வெறுப்பது சாத்தியமானதல்ல.* தேவ ஆவியானவர் "ஆவியின் கனிகளை" நம் வாழ்க்கையில் உற்பத்தி செய்கிறார். அதில் முதலாவது இந்த அன்பே (கலா. 5:22-23). நாம் தேவனுடைய வார்த்தையாலும் (கொலோ. 3:16

லிருந்து), தேவ ஆவியாலும் (எபே. 5:18 லிருந்து) நிறைந்தவர்களாய் இருப்போமானால், நமது தினசரி அனுபவங்களில் தேவ அன்பை வெளிப்படுத்துகிறவர்களாய் இருப்போம்.

**இ) நாம் ஒரே ஊட்டத்தையே அனுபவித்து மகிழ்கிறோம் (2:1-3).**

தேவ வார்த்தைக்கு ஜீவன் உள்ளது; அது ஜீவனைத் தருகிறது; ஜீவனைப் போஷிக்கிறது. பசியாய் இருக்கும் பிறந்த குழந்தைகளைப் போல் நமக்கு வார்த்தையின் மேல் வாஞ்சை இருக்க வேண்டும். தூய வார்த்தையை நாம் விரும்ப வேண்டும். ஏனெனில், அது மட்டுமே நாம் வளர நமக்கு உதவி செய்யும். குழந்தையாக இருந்தபோது எனக்குப் பால் பிடிக்காது (என் தந்தை போர்டன் பாற்பண்ணையில் (Borden Dairy) பணிபுரிந்தார்). இதனால் என் தாயார் பாலைச் சுவையாக்கப் பல்வேறு விதமான பொடிகளையும், பாகுகளையும் அதில் கலப்பார். ஆனாலும் அவை ஒன்றும் ஒருபோதும் என்னிடம் வேலைக்கானதில்லை. தேவ வார்த்தைகளில் கிறிஸ்தவர்களுக்கு வாஞ்சை இல்லாமற் போனதால், கிறிஸ்தவப் பொழுதுபோக்கு அம்சங்களால் அவர்களை "ஊட்ட" வேண்டி இருப்பது கவலைக்கு இடமளிக்கிறது. வார்த்தை குழந்தைகளுக்கேற்ற பாலாகவும் மட்டுமின்றி, நாம் வளரவளர அது வளர்ந்தவர்களுக்கேற்ற பலமான ஆகாரமாகவும் உள்ளது (எபி. 5:11-14; 1 கொரி. 3:1-4). அது அப்பமும் (மத். 4:4), தேனுமாகும் (சங். 119:103).

தவறான உணவுவகைகளை உண்ணுவதால் சில சமயங்களில் குழந்தைகளுக்குப் பசி இருப்பதில்லை. வாஞ்சையையும், ஆவிக்குரிய வளர்ச்சியையும் தடுக்கும் இருதயத்தின் சில தவறான சிந்தைகளை "ஒழித்துவிடும்படி" பேதுரு தமது வாசகர்களுக்குக் கூறுகிறார். "துர்க்குணம்" என்பது எல்லாவிதமான பொல்லாப்பையும் பொதுவாகக் குறிக்கிறது. **நாம் விரும்புவதை, பிறழ்ந்த சொற்களையும், செயல்களையும் உபயோகித்து அடையும் தந்திரத்தைக் கபடம் எனலாம்.** துர்க்குணத்தாலும், கபடத்தாலும் நாம் தவறிழைக்கும் போது அதை நாம் மறைக்க முயலுவோம். இது வஞ்சகத்தை உற்பத்தி செய்கிறது. பொதுவாக கெட்ட எண்ணமே பொறாமையாகும்; அதில் இருந்து உருவாவதே *புறங்கூறுதல்*, பிறரைப் புண்படுத்தி இழித்துக் கிழிக்கும் பேச்சுக்கள். இத்தகைய மனப்பாங்கும் செயல்பாடுகளும் நமது வாழ்க்கையில் இருந்தால், தூய தேவ வார்த்தைகளின் மேலுள்ள வாஞ்சையை நாம் இழந்து போவோம். வார்த்தைகளைப் புசிப்பதை நிறுத்திவிட்டால் வளர்ச்சி நின்று போகும். கர்த்தரிடம் காணப்படும் தயையை அனுபவிப்பது (ருசி பார்த்தல்) நின்று போகும். வார்த்தையில் வளரும் கிறிஸ்தவர்கள் சமாதானப் பிரியர்கள்; பிரச்சினைகளை உருவாக்கமாட்டார்கள்; சபையில் ஒற்றுமையை வளர்த்து ஊக்குவிப்பார்கள்.

**2. நாம் ஒரே கட்டிடத்தின் கற்கள் (2:4-8)**

ஒரே ஒரு இரட்சகர் உண்டு. அவர் இயேசு கிறிஸ்து. ஒரே ஒரு ஆவிக்குரிய கட்டிடம் உண்டு, அது சபை. கட்டிடத்தை ஒன்றாக இணைத்து வைத்திருக்கும் இயேசு கிறிஸ்துவே சபையின் தலையாய மூலைக்கல் (எபே. 2:20). நாம் ஒருவருக்கொருவர் ஒத்துப்போகிறோமோ இல்லையோ, எல்லா உண்மைக் கிறிஸ்தவர்களும் தேவனுடைய கட்டிடத்தில் ஒருவருக்கொருவர் சொந்தமானவர்களே.

கல்லாகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றி பேதுரு முழுவிளக்கம் அளிக்கிறார். மரித்தோரில் இருந்து ஜெயத்தோடு எழுப்பப்பட்ட காரணத்தால் அவர் ஜீவனுள்ள கல். அவர் பிதாவால் தெரிந்துகொள்ளப்பட்ட கல்லும், விலையேறப்பெற்ற கல்லுமாய் இருக்கிறார். பேதுரு தமது விளக்கத்தில் ஏசாயா 28:16-ஐயும், சங்கீதம் 118:22-ஐயும் மேற்கோள் காட்டி, தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டு இருந்தாலும், இயேசு கிறிஸ்து மனிதரால் தள்ளப்பட்டவர் என்று சுட்டிக் காட்டுகிறார். அவர்கள் எதிர்பார்த்த வகையிலான மேசியாவாக அவர் இல்லாததால் அவர்கள் அவரில் தடுக்கி விழுந்தனர். இயேசு இதே வேத பகுதியை யூதத் தலைவர்களோடு விவாதிக்கும் போது குறிப்பிடுகிறார் (மத். 2:42 லிருந்து; சங். 118:22-ஐப் பார்க்கவும்). மனிதரால் தள்ளப்பட்ட இயேசு கிறிஸ்து தேவனால் உயர்த்தப்பட்டார்.

யூதர்களின் இந்த இடறலுக்குக் காரணம் அவர்கள் வார்த்தைக்குக் கீழ்ப்படியாமற் போனதே (1 பேதுரு 2:8). வார்த்தையை விசுவாசித்துக் கீழ்ப்படிந்திருந்தால் அவர்கள் தமது மேசியாவை ஏற்றுக்கொண்டு இரட்சிப்பு அடைந்திருப்பார்கள். இன்றும் மக்கள் கிறிஸ்துவின் நிமித்தமும், அவரது சிலுவையின் நிமித்தமும் நிச்சயமாக இடறுகிறார்கள் (1 கொரி. 1:18 லிருந்து). கிறிஸ்துவை விசுவாசிப்பவர்கள் "வெட்கப்படமாட்டார்கள்".

சபையைப் பற்றி முதன் முதலாகக் குறிப்பிடும்போது இயசேு அதை ஒரு கட்டிடத்திற்கு ஒப்பிட்டார். "நான் என்னுடைய சபையைக் கட்டுவேன்" (மத். 16:18). விசுவாசிகள் அவருடைய கட்டிடத்தில் ஜீவனுள்ள கற்கள். ஒவ்வொரு முறையும் ஒருவர் கிறிஸ்துவை நம்பும்போது, இன்னொரு கல் பாவக் குழியில் இருந்து தோண்டி எடுக்கப்பட்டு கிருபை எனும் கலவையால் கட்டிடத்தோடு இணைக்கப்படுகிறது. இந்த உலகத்தில் இருக்கும் சபை இடிந்ததும், பழுதானதுமான ஒரு கற்குவியல் போன்று நமக்குத் தோன்றலாம். ஆனால் தேவன் முழு கட்டுமானத்தையும் அது வளரவளர நோக்கிப் பார்க்கிறார் (எபே. 2:19-22). "ஆவியின் மூலமாய் தேவன் வாசம் செய்யும்" அவரது சபையின் ஓர் அங்கமாக நாம் இருப்பது எவ்வளவு பெரிய பேறு!

ஐந்து வெவ்வேறு பிரதேசங்களில் வாழ்ந்து கொண்டிருந்த விசுவாசிகளுக்குப் பேதுரு இந்த கடிதத்தை எழுதியபோதும், அவர்கள் யாவரும் *ஒரே* "ஆவிக்குரிய வீட்டைச்" சேர்ந்தவர்கள் என்று அவர் கூறுகிறார். பிரதேச மற்றும் தனிப்பட்ட சபைகளையும் ஐக்கியங்களையும் கடந்து ஓர் ஒற்றுமை தேவமக்களிடையே நிலவுகிறது. நாம் கிறிஸ்துவுக்கு உரியவர்கள் ஆனதால்

ஒருவருக்கொருவர் சொந்தமானவர்கள். கொள்கை மற்றும் சபைப் பிரிவுகள் தவறு என்று இதற்கு அர்த்தமில்லை; ஏனெனில் ஒவ்வொரு பிரதேச சபையும் பரிசுத்த ஆவியானவரால் அறிவுறுத்தப்படவேண்டும். ஆயினும் கிறிஸ்துவுக்குள் நமக்கிருக்கும் ஆவிக்குரிய ஐக்கியத்தை நமது கருத்து வேற்றுமைகள் அழிக்கக் கூடாது என்று இதற்கு அர்த்தம். கருத்து வேறுபாடுகள் எந்த விதத்திலும் மனவேறுபாடுகளாக மாறாத அளவுக்கு நாம் வளர்ச்சி அடைந்தவர்களாக இருக்க வேண்டும்.

மிச்சிகனில் உள்ள ஓர் ஒப்பந்தக்காரர் ஒரு வீட்டைக் கட்டிக்கொண்டிருந்தார். முதல் மாடி எந்த விதப் பிரச்சினையும் இன்றி முடிந்தது. ஆனால் இரண்டாவது மாடியைக் கட்டத் தொடங்கியபோது பிரச்சினைகளைத் தவிர வேறு ஒன்றுமில்லை என்றாகிவிட்டது. மரக்கடையில் இருந்து வரும் எந்த பொருளும் சரியாகப் பொருந்துவதில்லை. பின்னர் அவர்கள் அதற்கான காரணத்தைக் கண்டு பிடித்தனர்: அவர்கள் அதுவரை இரண்டு வெவ்வேறு வரைபடங்களை (Blue Print) வைத்து வேலைபார்த்துக் கொண்டிருந்திருக்கின்றனர். பழையதைத் தூர எறிந்தபின், எல்லாம் ஒழுங்காக நடந்தேறி, முடிவில் அழகிய வீடும் கட்டப்பட்டது.

பெரும்பாலும் கிறிஸ்தவர்கள் சபை கட்டப்படுவதற்கு இடைஞ்சலாக இருக்கக் காரணம் அவர்கள் பின்பற்றும் தவறான திட்டங்களே. சாலொமோன் ஆலயத்தைக் கட்டிய போது அவனுடைய வேலையாட்கள் மிகவும் கவனமாகத் திட்டங்களைப் பின்பற்றியதால் கட்டும் இடத்தில் எல்லாம் ஒன்றோடு ஒன்று சரியாகப் பொருந்தின (1 இராஜா. 6:7). நாம் யாவரும் அவரது வார்த்தையின் மூலம் வழங்கப்பட்டுள்ள தேவனின் திட்ட வரைபடத்தைப் பின்பற்றுவோமேயானால், நாம் அனைவரும் மனஸ்தாபமின்றி ஒற்றுமையாகப் பணியாற்றி அவருடைய சபையை அவருடைய மகிமைக்காகக் கட்ட முடியும்.

**3. நாம் ஒரே ஆலயத்தில் ஆசாரியர்களாக இருக்கிறோம் (2:5, 9).**

நாம் ஒரு "பரிசுத்த ஆசாரியர் கூட்டமும்" ஓர் "இராஜரிக ஆசாரியர் கூட்டமாகவும்" இருக்கிறோம். இது நமது கர்த்தரின் பரலோக ஆசாரித்துவத்துக்கு ஒப்புமையானது, ஏனெனில் அவர் இராஜாவாகவும் அதே நேரத்தில் ஆசாரியராகவும் இருக்கிறார் (எபி. 7-ஐப் பார்க்கவும்). பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேலின் எந்த இராஜாவும் ஆசாரியனாக ஊழியம் செய்யவில்லை. அவ்வாறு செய்ய முயன்ற ஒரே இராஜாவும் தேவனால் நியாயந்தீர்க்கப்பட்டான் (2 நாளா. 26:16-21). நமது கர்த்தரின் பரலோக சிம்மாசனம் கிருபையின் சிங்காசனமாக இருப்பதால், அவருக்காக வாழவும், சேவையாற்றவும் தேவையான எல்லாவற்றையும் அதில் இருந்து நாம் பெற்றுக் கொள்ளலாம் (எபி. 4:14-16).

பழைய ஏற்பாட்டின் காலத்தில் தேவ மக்களுக்கு ஓர் ஆசாரியமுறை *இருந்தது*; ஆனால் இன்று தேவ மக்களே ஓர் *ஆசாரித்துவமாக* இருக்கிறார்கள். ஒவ்வொரு தனிப்பட்ட விசுவாசியும் தேவ சமுகத்தில் வரும் உரிமையைப்

பெற்றிருக்கிறார்கள் (எபி. 10:19-25). நாம் இந்த உலகத்தில் இருக்கும் எந்த மனிதனின் மூலமாகவும் அல்லாமல், ஒரே மத்தியஸ்தரான இயேசு கிறிஸ்துவின் மூலமாகவே தேவனிடத்தில் வருகிறோம் (1 தீமோ. 2:1-8). அவர் இன்றும் மகிமையில் ஜீவித்திருப்பதாலும், நமக்காகப் பரிந்து பேசிக்கொண்டு இருப்பதாலும், நாம் பரிசுத்த ஆசாரியர்களாக ஊழியம் செய்யலாம்..

இதன் அர்த்தம் என்னவென்றால் நமது வாழ்க்கை ஓர் ஆலயத்தின் ஆசாரியனின் வாழ்க்கையைப் போல் இருக்க வேண்டும் என்பதே. ஓர் ஆசாரியனாக ஊழியம் செய்வது என்பது உண்மையில் ஒரு பாக்கியமே. லேவி கோத்திரத்தில் பிறந்து, தேவ பணிகளுக்காகப் பிரித்து, பரிசுத்தமாக்கப்-பட்டவர்களைத் தவிர, இஸ்ரவேலில் எந்த மனிதனும் பலிபீடத்தண்டையில் சேவைசெய்யவோ, கூடாரம் அல்லது ஆலயத்தின் பரிசுத்த ஸ்தலங்களில் பிரவேசிக்கவோ முடியாது. ஒவ்வொரு ஆசாரியனுக்கும், லேவியனுக்கும் வெவ்வேறு ஊழியங்களை ஆற்ற வேண்டி இருந்தது. ஆயினும் அவர்கள் தலைமை ஆசாரியனின் கீழ் ஒன்றாக இருந்து தேவனை மகிமைப்-படுத்துவதற்காக சேவை செய்தனர். இன்று தேவனுடைய ஆசாரியர்களாக இருக்கின்ற நாம் நமது மாபெரும் தலைமை ஆசாரியரின் கட்டளைப்படி ஒன்றாக பணியாற்ற வேண்டும்.

“ஆவிக்கேற்ற பலிகளைச்” செலுத்தும் உரிமையைப் பற்றி பேதுரு சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார். பழைய ஏற்பாட்டின் காலத்தில் தொழுதுகொண்டவர்களைப் போல் இன்றைய கிறிஸ்தவர்கள் மிருக பலிகளைக் கொண்டு வருவதில்லை; ஆனால் தேவனுக்கு அளிக்கும்படியான நமக்கே உரித்த காணிக்கைகள் நமக்குண்டு. நாம் ஜீவபலியாக *நமது சரீரங்களை* அவருக்குக் கொடுக்க வேண்டும் (ரோமர் 12:1-2). மேலும் நமது உதடுகளின் *துதியையும்* (எபி. 13:15), நாம் மற்றவர்களுக்காகச் செய்யும் *நன்மையான செயல்களையும்* (எபி. 13:16) கொடுக்க வேண்டும். தேவ சேவையில் நாம் மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளும் *பணமும்,* மற்ற உலகப்பொருட்களும் ஆவிக்குரிய பலிகளே (பிலி. 4:10-20). கிறிஸ்துவுக்குள் நாம் வென்றெடுக்கும் *மனிதர்களும்* அவரது மகிமைக்கான பலிகளே (ரோமர் 15:16). நாம் இந்தக் காணிக்கைகளை இயேசு கிறிஸ்துவின் மூலமாகவே கொடுக்கிறோம். அப்படி என்றால் மட்டுமே அவை தேவனால் ஏற்றுக்கொள்ளப்படும். இவற்றில் எதை ஒன்றையும் நமது சொந்த மகிழ்ச்சிக்காகவும் புகழ்ச்சிக்காகவும் கொடுத்தால் அது ஆவிக்குரிய பலியாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

தேவன், தமது ஜனங்களாகிய இஸ்ரவேலர், தேவபக்தியை நிலைநாட்டும் ஓர் ஆவிக்குரிய சக்தியான “ஆசாரிய இராஜ்யமாக” இருக்கவே விரும்பினார் (யாத் 19:6); ஆனால் இஸ்ரவேலோ அவரது நோக்கத்தைத் தோற்கடித்தது. தன்னைச் சுற்றி இருந்த தேவ பக்தியற்ற ஜனங்களின் மேல் ஒரு நல்ல தாக்கத்தை (Positive influence) ஏற்படுத்தத் தவறி, அந்த தேசங்களைப் பின்பற்றி, அவர்களுடைய பழக்க வழக்கங்களை இஸ்ரவேல் தனதாக்கிக் கொண்டது. தேவன் தமது ஜனங்களின் விக்கிரக வழிபாட்டிற்காக

அவர்களைப் பலமுறை கட்டுப்படுத்த வேண்டியதாயிற்று. ஆயினும் அவர்கள் அப்பாவத்தைத் தொடர்ந்தனர். இன்று இஸ்ரவேலுக்கு ஆலயமும் இல்லை. ஆசாரித்துவமும் இல்லை.

தேவனுடைய ஆசாரியர்களாகிய நாம். இந்த உலகில் நமக்காகப் பிரித்தெடுக்கப்பட்ட நிலையை (Separated Position) கைக்கொள்ள வேண்டும் என்பது முக்கியம். நாம் தனிமைப்பட்டுவிடக் கூடாது. ஏனெனில் இந்த உலகத்துக்கு நமது தாக்கமும். சாட்சியும் தேவை. ஆனால் இந்த உலகம் நம்மீது தொற்றிக் கொள்ளவோ அல்லது நம்மை மாற்றிவிடவோ நாம் அனுமதிக்கக் கூடாது. பிரிவு என்பது தனிமை அல்ல; அது கறைபடாத தொடர்பே.

நம்மைப் பொறுத்த வரையில், தனியொரு விசுவாசி தேவனிடம் சென்று ஆவிக்குரிய பலிகளைச் செலுத்தலாம் என்ற உண்மை சுயநலத்தையும், தனித்துவத்தையும் (Individualism) ஊக்குவிக்கக் கூடாது. நாம் ஒரே தலைமை ஆசாரியரின் கீழ், ஒரே ஆவிக்குரிய ஆலயத்தில் *இணைந்து* பணியாற்றும் ஊழியர்கள். ஒரே தலைமை ஆசாரியரும், பரலோக மத்தியஸ்தரும் உண்டு என்ற உண்மை தேவ மக்களிடையே ஒற்றுமையை உணர்த்துகிறது. தனிப்பட்ட முறையில் நாம் தேவனோடு சஞ்சரிக்கும் அதே வேளையில், பிற கிறிஸ்தவர்களுக்குத் தாழ்வு ஏற்படும் வகையில் அவர்களை அலட்சியப்படுத்தியோ அல்லது புறக்கணித்தோ அதைச் செய்யக்கூடாது.

பல சமுதாய விஞ்ஞானிகள், நவீன சமுதாயத்தின் “எனக்கு என்ற மனப்பாங்கு” (me complex) குறித்து புத்தகங்கள் எழுதியுள்ளனர். உங்களைப் பற்றி மட்டும் கவனம் செலுத்தி மற்றவர்களை மறந்து விடுவதே இன்று முக்கியம் பெற்றிருக்கிறது. நான் பார்க்கின்ற வரையில் சபைக்குள்ளும் அதே மனப்பாங்கே உள்நுழைந்துள்ளது. இன்றைய சபைப் பாடல்கள் பெரும்பான்மையும் தனிநபரையே மையப்படுத்தி சபை ஐக்கியத்தைப் புறக்கணிக்கின்றன. பல புத்தகங்களும், பிரசங்கங்களும் தனிப்பட்ட அனுபவங்களை மையப்படுத்தி முழு சபையின் ஊழியத்தைப் புறக்கணிக்கின்றன. மற்றவர்களுக்கு உதவிசெய்ய வேண்டுமானால் ஒரு தனி நபர் தன்னையும் கவனித்துக்கொள்ள வேண்டும்; ஆனால் அதேசமயம் இரண்டிற்கும் இடையில் ஒரு சமநிலை இருக்கவேண்டும்.

### 4. நாம் ஒரே தேசத்தின் குடிமக்கள் (2:9-10).

சபையை விவரிக்கும் இந்த வசனங்கள், யாத்திராகமம் 19:5-6-லும், உபாகமம் 7:6-லும் தேவன் இஸ்ரவேலை வருணிப்பதற்கு ஒப்பாக இருக்கின்றன. கீழ்ப்படியாத கலகக்காரரான இஸ்ரவேலுக்கு முரண்பாடாக, இன்றைய தேவமக்கள் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்த ஜனங்களாய் இருக்கிறார்கள். இது இஸ்ரவேலரை தேவன் கைவிட்டுவிட்டார் என்ற குறிப்பைத் தரவில்லை. ஏனென்றால், அவர் தமது வாக்குத் தத்தங்களையும் உடன்படிக்கைகளையும் நிறைவேற்றி, வாக்குத்தத்தம் செய்யப்பட்ட இராஜ்யத்தை உருவாக்குவார் என்று

நான் நம்புகிறேன். தேவனுக்கும், உலகத்திற்கும் இஸ்ரவேல் எவ்வாறு இருந்திருக்க வேண்டுமோ அந்த இடத்தில் இருப்பதே இன்றைய சபை என்று இதற்கு அர்த்தமாகிறது.

நாம் *தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததி.* இது தேவ கிருபையின் நிமித்தம் நிகழ்ந்தது. பெரிய ஜனங்கள் என்பதால் தேவன் இஸ்ரவேலைத் தெரிந்து கொள்ளவில்லை. அவர் அவர்களை நேசித்தார் என்பதாலேயே தெரிந்து கொண்டார் (உபா. 7:7-8). தேவன் தமது அன்பாலும், கிருபையாலும்தான் நம்மைத் தெரிந்து கொண்டார். "நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை; நான் உங்களைத் தெரிந்து கொண்டேன் (யோவான் 15:16).

நாம் ஒரு *பரிசுத்த ஜாதி.* நாம் கர்த்தருக்குச் சொந்தமாவதற்காகத் தனியாகப் பிரித்தெடுக்கப்பட்டவர்கள். நமது குடியுரிமை பரலோகத்தில் இருக்கிறது (பிலி. 3:20). எனவே நாம் பரலோகப் பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிந்து, பரலோகத்தின் கர்த்தரை மனமகிழ்ச்சியாக்க விழைகிறோம். இஸ்ரவேல் தான் ஒரு பரிசுத்த ஜாதி என்பதை மறந்து, அதைச் சிறப்பானதாகவும், வேறுபட்டதாகவும் வைத்திருந்தப் பிரிவுச் சுவரை உடைத்தெறிய முற்பட்டது. தேவன் அவர்களுக்குக் கட்டளை இட்டு, "பரிசுத்தம் உள்ளதற்கும், பரிசுத்தம் இல்லாததற்கும் வித்தியாசம் பண்ணும்படி கூறினார் (லேவி. 10:10). அந்த வேறுபாடுகளை அவர்கள் அலட்சியம் செய்து தேவனுக்குக் கீழ்ப்படியாமற் போனார்கள்.

*நாம் தேவனுடைய ஜனங்கள்.* இரட்சிப்படையாத நிலையில் நாம் தேவ ஜனங்களாக இருக்கவில்லை. ஏனெனில், நாம் சாத்தானுக்கும் இந்த உலகத்திற்கும் சொந்தமாக இருந்தோம் (எபே. 2:1-3; 11-19). நாம் இப்போது இயேசுவை நம்பியதால், தேவ ஜனங்களின் ஒரு பகுதியாக இருக்கிறோம். நாம் "அவருக்கு விசேஷித்த சொந்த ஜனங்களாக இருக்கிறோம்", ஏனெனில் அவர் நம்மைத் தமது சொந்தக் குமாரனின் இரத்தத்தினால் கிரயத்துக்கு வாங்கி இருக்கிறார் (அப். 20:28).

இந்தச் சலுகைகளில் எல்லாம் ஒரு பெரும் பொறுப்பு அடங்கி இருக்கிறது. கெட்டுப்போன ஓர் உலகத்திற்கு தேவனுடைய புகழை அறிவிப்பதே. 'அறிவிப்பது' என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள வினைச்சொல்லின் அர்த்தம் "வெளியே சொல்லுதல், விளம்பரப்படுத்துதல்" என்பதாகும். இந்த உலகம் "அந்தகாரத்தில்" உள்ளது. மக்கள் தேவனுடைய "புண்ணியங்களை" அறியவில்லை. ஆனால் அவர் அதை நம் வாழ்க்கையில் காண வேண்டும். ஒவ்வொரு பரலோகக் குடிமகனும், தேவ நற்குணங்களுக்கும், கிறிஸ்தவ வாழ்க்கையின் ஆசீர்வாதங்களுக்கும் வாழும் "விளம்பரமே". தேவன் தமது கிருபையின் நிமித்தம் "ஆச்சரியமான ஒளிக்குள்" நம்மை அழைத்துள்ளார். அதனால் நமது வாழ்க்கை பிரகாசிக்க வேண்டும்.

சொல்லப்போனால், நாம் தேவனிடத்தில் இருந்து இரக்கம் பெற்றிருக்கிறோம். அவருடைய இரக்கம் மட்டும் இல்லாமல் இருந்திருந்தால்

நாம் இந்நேரம் கெட்டுப்போய் நித்திய நியாயத் தீர்ப்பை நோக்கி நகர்ந்து கொண்டு இருந்திருப்போம். அவர்களை எகிப்தின் அடிமைத் தனத்தில் இருந்து மீட்டது தம்மை சேவித்து மகிமைப்படுத்தவே என்பதை தேவன் பலமுறை இஸ்ரவேலுக்கு நினைவூட்டியபோதும். அத்தேசம் சீக்கிரமாய் அதை மறந்துபோய், அம்மக்கள் தங்கள் பாவ வழிகளை நோக்கித் திசைமாறிப் போயினர். நாம் அவருடைய இரக்கத்தினாலேயே தேவ ஜனங்களாய் இருக்கிறோம். அதனால் நாம் அவருக்கு உண்மையுள்வர்களாய் இருப்பது அவசியமாகிறது.

நாம் விரோதியின் பிரதேசத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அந்த எதிரி தொடர்ந்து நம்மைக் கவனித்துக்கொண்டும், நம்மைப் பிடிக்கும் வாய்ப்பை எதிர்பார்த்துக்கொண்டும் காத்திருக்கிறான். பரலோகக் குடிமக்களாகிய நாம் ஒற்றுமையாய் இருக்க வேண்டும். தேவ கிருபையும், இரக்கமும் என்ன செய்ய முடியும் என்பதை ஒற்றுமையாய் நின்று நாம் இந்த உலகத்திற்கு நிரூபித்துக் காட்ட வேண்டும். இந்த வார்த்தைகளை நான் எழுதிக்கொண்டு இருக்கும் இதே வேளையில், அமெரிக்க ஐக்கியநாட்டின் குடியரசுத் தலைவரோடு பணிபுரியும் ஆட்களுக்கு இடையில் நிலவும் "சச்சரவுகளை" செய்தித் தாள்கள் அறிவிக்கின்றன. இந்த மனிதர்கள் ஒற்றுமையோடு செயல்படாத காரணத்தால் நாடு சற்றே சங்கடத்துள்ளாகி உள்ளது. பரலோகவாசிகளான தேவ ஊழியர்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்வதைப் பார்க்கும் போது இரட்சிக்கப்படாத மக்கள் என்ன நினைத்துக் கொள்வார்களோ என்று நான் ஆச்சரியப்படுகிறேன்.

இந்த நான்கு சித்திரங்களில் ஒவ்வொன்றும் ஒற்றுமை மற்றும் இணக்கத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. நாம் ஒரே தேவ குடும்பத்தைச் சேர்ந்தவர்களும், ஒரே தெய்வீக இயல்பைப் பகிர்ந்து கொள்ளுகிறவர்களுமாய் இருக்கிறோம். நாம் ஒரே கட்டிடத்தின் ஜீவனுள்ள கற்களும், ஒரே ஆலயத்தில் சேவை செய்யும் ஆசாரியர்களுமாய் இருக்கிறோம். ஒரே பரலோகத் தாய்நாட்டின் குடிமக்களாய் இருக்கிறோம். இயேசு கிறிஸ்துவே இந்த ஒற்றுமையின் ஆதாரமும், மையமும் ஆவார். நாம் நமது கருத்தையும், அன்பையும் அவர் மேல் மையப்படுத்தினால் நம்மால் ஒன்றாக நடக்கவும் பணியாற்றவும் முடியும்; நாம் நம்மீதே கவனம் செலுத்தினால் பிளவையே உண்டாக்குவோம்.

ஒற்றுமை வேற்றுமையை இல்லாமல் ஆக்காது. ஒரு குடும்பத்தின் எல்லா பிள்ளைகளும் ஒரே மாதிரியாகவோ, ஒரு கட்டிடத்தின் எல்லா கற்களும் ஒன்றுபோலவோ இருப்பதில்லை. வேற்றுமைகளே ஒரு குடும்பத்திற்கோ, கட்டிடத்திற்கோ அழகையும், வளமையையும் அளிக்கின்றன. வேற்றுமை இல்லாமல் இருப்பது *ஒற்றுமை* அல்ல; அது *ஒரேமாதிரி* இருத்தல்; அது சுவையற்றது; இசைக்குழு ஒன்றாகப் பாடுவது சிறப்பானதுதான்; எனினும் நான் அவர்கள் ஒத்திசைந்து பாடுவதையே உசிதமெனக் கருதுகிறேன்.

கிறிஸ்தவர்கள் வேறுபட்டாலும் ஒன்றாகச் செல்ல முடியும். "ஒரே விசுவாசத்தை" வாஞ்சித்து வளர்ப்பவர்களும், "ஒரே தேவனைத்" தேடி கனம்

செய்பவர்களுமாகிய யாவரும் ஒருவரை ஒருவர் நேசித்து ஒன்றாக நடக்கலாம் (எபே. 4:1-6). தேவன் நம்மை வெவ்வேறு ஊழியத்திற்கு அழைக்கலாம் அல்லது வெவ்வேறு முறையில் உபயோகிக்கலாம். ஆயினும் நாம் யாவரும் ஒருவரை ஒருவர் நேசித்து இந்த உலகத்திற்கு ஒற்றுமையான சாட்சியை அளிக்க முயலலாம்.

எது எவ்வாறு இருந்தாலும் ஒருநாள் நாம் எல்லோரும் பரலோகத்தில் ஒன்றாக இருப்போம் (யோவான் 17:24); எனவே இவ்வுலகிலேயே நாம் ஒருவரில் ஒருவர் அன்புகூரக் கற்றுக்கொள்வது நல்லதல்லவா?

புனித அகஸ்டின் இதைச் சரியாகக் கூறினார்: "தேவையானவற்றில் ஒற்றுமை. தேவையற்றவைகளில் சுதந்திரம். எல்லாவற்றிலும் பெருந்தன்மை."

# 5

# யாரோ ஒருவர் உங்களை கவனித்துக்கொண்டு இருக்கிறார்

## 1 பேதுரு 2:11-25

பேதுருவினுடைய நிருபத்தின் மையப்பகுதி (2:11-3:12), ஒரு விசுவாசியின் வாழ்க்கையில் *கீழ்ப்படிதலை* வலியுறுத்துகிறது. சட்டம் ஒழுங்கற்றதும், "சுய-நிறைவையே" தேடுகின்றதுமான இந்த நாட்களில் இது நிச்சயமாக வரவேற்பைப் பெறும் ஒரு விஷயமல்ல. ஆனால் இது முக்கியமான ஒன்று. ஒரு விசுவாசியை, குடிமகனாகவும் (2:11-17), வேலையாளாகவும் (2:18-25), திருமணத்தில் பங்காளியாகவும் (3:1-7), சபையில் உறுபினராகவும் (3:8-12) வைத்து, அவனது வாழ்க்கையில் கீழ்ப்படிதல் வகிக்கும் பங்கைப் பேதுரு ஆராய்கிறார்.

கீழ்ப்படிதல் என்பது அடிமைத்தனமோ அல்லது அடங்கிக் கிடத்தலோ அல்ல; அது நமது வாழ்க்கையில் தேவனுடைய அதிகாரத்தை அங்கீகரித்தலே ஆகும். தேவன் குடும்பத்தையும், மானிட அரசாங்கத்தையும், சபையையும் உருவாக்கியுள்ளார். இந்த நிறுவனங்கள் எவ்வாறு நடத்தப்பட வேண்டும் என்று கூற அவருக்கு உரிமையுண்டு. நாம் ஒவ்வொருவரும் அதிகாரத்தைச் செலுத்தவே தேவன் விரும்புகிறார். எனினும் அதிகாரத்தைச் *செலுத்தும்* முன்னர் நாம் அதிகாரத்தின் *கீழடங்கி* இருக்கவேண்டும். சாத்தான் நமது ஆதிப்பெற்றோருக்கு அளிப்பதாகக் கூறியது அதிகாரமற்ற சுதந்திரம்; ஆனால் முடிவாக அவர்கள் சுதந்திரத்தையும் இழந்து அதிகாரத்தையும் இழந்துபோயினர். கெட்டகுமாரன் தனது தந்தையின் சித்தத்துக்கு அடங்கிய போதே சுதந்திரத்தைக் கண்டடைந்தான்.

அதிகாரத்துக்குக் கீழ்ப்படிந்து அர்ப்பணிக்கப்பட்ட, கீழ்ப்படிதலுள்ள கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ்வதற்கு உற்சாகமூட்டும் மூன்று சிறந்த கருத்துக்களைப் பேதுரு தன் வாசகர்களோடு பகிர்ந்து கொள்கிறார்.

1. வழிவிலகிப் போனவர்களுக்காக (2:11-12).
கிறிஸ்தவர்களாகிய நாம், *நாம் யார்* என்பதைத் தொடர்ந்து நமக்குநாமே நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும். பேதுரு இதை 11-ஆம் வசனத்தில் செய்கிறார். முதலாவதாக, நாம் தேவனுடைய பிரியமான பிள்ளைகள். தனது இரண்டு நிருபங்களிலும் மொத்தம் எட்டு முறை பேதுரு தம் வாசகர்களுக்கு தேவன் அவர்கள் மேல் வைத்துள்ள அன்பை ஞாபகப்படுத்துகிறார் (1 பேதுரு 2:11; 4:12; 2 பேதுரு 1:7; 3:1, 8, 14-15, 17). தேவன் நேசிக்கக்கூடியதாக நமக்குள் எதுவும் இல்லை. இயேசு கிறிஸ்துவின் நிமித்தமாகவே அவர் நம்மை நேசிக்கிறார். "இவர் என்னுடைய நேச குமாரன், இவரிடத்தில் பிரியமாய் இருக்கிறேன்" (2 பேதுரு 1:17). இயேசு கிறிஸ்துவின் மேல் நமக்குள்ள நம்பிக்கையின் காரணமாக நாம் "பிரியமானவருக்குள் ஏற்றுக் கொள்ளப்-பட்டிருக்கிறோம்" (KJV-எபே 1:6).

இயேசு கிறிஸ்துவோடு நமக்குள்ள "நேச உறவு", இந்த தேவ பக்தியற்ற உலகில், நம்மை தேவபக்தி உள்ளவர்களாக வாழ ஊக்கம் அளிப்பதாக இருக்க வேண்டும். "நீங்கள் என்னிடத்தில் அன்பாய் இருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்" (யோவான் 14:15). கடமையின் காரணமான கீழ்ப்படிதலை விட ஆழமான ஒன்று இருக்கிறது. அதுவே பக்தியின் நிமித்தமான கீழ்ப்படிதல். "ஒருவன் என்னில் அன்பாய் இருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான்!" (யோவான் 14:23).

இந்த உலகில் நாம் தேவனுடைய பிரியமான பிள்ளைகளாக மட்டும் அல்லாமல் "அந்நியர்களும் பரதேசிகளுமாய்" இருக்கிறோம். நாம் 'வாழும் வேற்றுலகவாசிகள்' (resident aliens). நமது குடியுரிமை இன்னொரு நாட்டில் இருக்கிறது — பரலோகம். பழைய ஆதிப்பிதாக்களைப் போல, இந்த வாழ்க்கையில் நாம் தற்காலிகமானவர்கள். பரலோகப் பட்டிணத்தை நோக்கிப் பயணம் போவோர் (எபி. 11:18-16). நீங்கள் எப்போதாவது ஒரு அந்நிய தேசத்தில் வாழ்ந்திருப்பீர்களேயானால், அந்நாட்டு மக்கள் உங்களைக் கூர்ந்து கவனித்ததையும், உங்களிடம் கிண்டல் செய்ய ஏதாவது விஷயம் அகப்படுமா என்று தேடியதையும் உணர்ந்திருப்பீர்கள் (நெஞ்சைத் தொட்டு சொல்வதென்றால் சில சமயம் நாமும் நம் நாட்டில் இருக்கும் அயல்நாட்டினரை கிண்டலோடு பார்த்தோம் என்பதை ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும்). சில வருடங்களுக்கு முன் "அசிங்கமான அமெரிக்கன்" என்ற ஒரு புதினம் நன்றாக விற்பனையானது? அது அந்நிய நாட்டு மக்களுக்கு உதவி செய்ய முயலும் ஓர் அமெரிக்கனைப் பற்றியது. துரதிர்ஷ்டவசமாகத் தன் சொந்த நாட்டு மக்கள் சூழ்நிலையை முற்றிலும் தவறாகப் புரிந்து கொண்ட அந்நிலையிலும் தன் நேர்மையை நிலை நாட்ட அவன் போராடுகிறான்.

நாமும் *ஓர் ஆவிக்குரிய போராட்டத்தில் ஈடுபட்டுள்ள வீரர்கள்.* பாவத்தின்பாற்பட்ட ஆசைகள் நமக்கெதிராய்ப் போரிட்டு நம்மை வீழ்த்த விரும்புகின்றன (பார்க்க: கலா. 5:16-26). நமது உண்மையான போராட்டம் நம்மைச் சுற்றியுள்ள மக்களிடம் அல்ல; நமக்குள் இருக்கும் ஆசைகளுடனேயே. டி.எல். மூடி கூறினார்: "நான் அறிந்த எந்த மனிதரை விடவும், எனக்கு அதிகமான பிரச்சினை இருப்பது டி.எல். மூடியிடமே". இந்த பாவ வேட்கைகளுக்கு நாம் இணங்கி விட்டால், நம்மைச் சுற்றி இருக்கும் இரட்சிக்கப்படாத மக்களைப்போல நாம் வாழ ஆரம்பித்து, சக்தியற்ற சாட்சிகளாகி விடுவோம். "போர்" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை "ஓர் இராணுவ நடவடிக்கை" என்ற கருத்தை ஏந்தியுள்ளது. நாம் ஒரு போராட்டத்தைக் கூட வெல்லவில்லை என்றாலும் போர் முடிந்து போகிறது! அது தொடர்ந்த ஒரு போர் நடவடிக்கை; நாம் எப்போதும் விழிப்போடு இருக்க வேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக நாம் *நம்மைச் சுற்றி வாழும் வழிவிலகிப்போனவர்கள் மத்தியில் சாட்சிகள்.* "புற ஜாதிகள்" என்ற வார்த்தைக்கும் ஜாதிகளுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. ஏனெனில் அது "இரட்சிக்கப்படாத மக்கள்" என்பதற்கு நிகரான சொல் (1 கொரி. 5:1; 12:2; 3 யோவான் 7). இரட்சிப்படையாத மக்கள் நம்மைக் கவனித்துக் கொண்டு இருக்கிறார்கள். நமக்கு எதிராகப் பேசிக்கொண்டு இருக்கிறார்கள் (1 பேதுரு 3:16; 4:4). மேலும் சுவிசேஷத்தை நிராகரிக்க சாக்குப் போக்குகளைத் தேடிக்கொண்டு இருக்கிறார்கள்.

நம்மைச் சுற்றி வாழும் வழிதவறிப்போன மக்களுக்கு நாம் சாட்சியாக இருக்க வேண்டுமானால் நாம் "நல்நடக்கை" (honest) உள்ளவர்களாய் வாழ வேண்டும். நன்மை செய்வதையும், உண்மையைச் சொல்லுவதையும் விட அதிகமான அர்த்தத்தை இந்த வார்த்தை உணர்த்துகிறது. அழகு, எழில், வியக்கத்தக்கது, மதிப்பிற்குரியது ஆகிய கருத்துக்களையும் அது ஏந்தி நிற்கிறது. அறுபதுகளில் பிரபலமான ஒரு சொற்றொடரை உபயோகிக்க வேண்டுமானால், அந்த வார்த்தையின் முழு அர்த்தத்தை நாம் "அழகுவாய்ந்த மக்களாக" (beautiful people) இருக்க வேண்டும் என்று கூறலாம்.

நாம் உதடுகளினால் மட்டுமே சாட்சி கொடுக்கக் கூடாது. நமது வார்த்தைகளை நடத்தைகளினால் உறுதிப்படுத்த வேண்டும். கிறிஸ்தவர்களையும், சுவிசேஷத்தையும் தாக்க இரட்சிக்கப்படாதவர்களுக்கு ஆயுதத்தை அளிக்கும் வண்ணமாக நமது நடத்தைகளில் எந்த விஷயமும் இருக்கக் கூடாது. நமது நற்கிரியைகள் நமது நல்வார்த்தைகளைத் தாங்கவேண்டும். இயேசு இதனை மத்தேயு 5:16 ல் கூறுகிறார். முழு வேதாகமமும் இந்த சத்தியத்தை எதிரொலிக்கிறது.

ஓர் அருமையான சாட்சியையும், தேவ பக்தியுள்ள வாழ்க்கையையும் இணைக்கும் போது, வழிவிலகிப்போனவர்களின் மேல் கிறிஸ்தவர்கள் ஒரு

சக்திவாய்ந்த தாக்கத்தை ஏற்படுத்தலாம் என்பதை என் முப்பதாண்டு கால ஊழியத்தில் நான் பார்த்திருக்கிறேன். அர்ப்பணித்தக் கிறிஸ்தவர்கள் தங்கள் ஒளியைப் பிரகாசிக்கச் செய்ததின் மூலமாகவே பலர் மனமாறுதல் அடைந்த நிகழ்ச்சிகள் என் ஞாபகத்துக்கு வருகின்றன. மாறாக, விசுவாசிகள் என்று விளம்பரம் செய்துகொள்பவர்களின் உறுதி இல்லாத வாழ்க்கையின் நிமித்தமாய் பல வழிவிலகிப்போன பாவிகள் வார்த்தையை நிராகரித்த சம்பவங்களையும் நான் வேதனையோடு நினைவு கூருகிறேன்.

பேதுரு தமது வாசகர்களை, வழிவிலகிப்போனவர்களின் மத்தியில் வார்த்தையாலும், செயலாலும் சாட்சியாக விளங்க ஊக்கப்படுத்துகிறார். அதனால், தேவன் ஒருநாள் அவர்களைச் சந்தித்து இரட்சிக்க முடியும். "சந்திப்பின் நாள்" என்பது கிறிஸ்து திரும்பி வரும்போது, எல்லா நாவுகளும் அவரே கர்த்தர் என்று அறிக்கையிடும் நாள் என்று அர்த்தமாகலாம். ஆனால் "சந்திப்பு" என்று பேதுரு இங்கு குறிப்பிடுவது, கெட்டுப்போன பாவிகளை தேவன் தமது கிருபையால் இரட்சிக்கும் நேரம் என்று எனக்குத் தோன்றுகிறது. இதே அர்த்தத்தில் தான் இந்த வார்த்தை லூக்கா 19:44ல் உபயோகிக்கப்படுகிறது. இந்த மக்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கும் போது தேவனை மகிமைப்படுத்தி நன்றி கூறுவார்கள்; ஏனெனில் நமது வாழ்க்கையை அவர்கள் கடினமாக்கிய போதும், நாம் அவர்களுக்கு உண்மையான சாட்சிகளாக விளங்கியதாலேயே.

1805 ஆம் ஆண்டு கோடைகாலத்தில், நியூயார்க்கில் உள்ள பஃப்ஃபெல்லோ கிரீக் (Buffalo Creek) என்ற இடத்தில், பாஸ்டன் மிஷனரி சொசைட்டியைச் சார்ந்த திரு. கிராம் (Mr. Cram) என்பவரின் செய்தியைக்கேட்க (சிவப்பு) இந்தியத் தலைவர்களும், போர்வீரர்களும் ஒன்றாகக் குழுமி இருந்தனர். செய்தி முடிந்ததும், முக்கிய தலைவர்களில் ஒருவரான ரெட் ஜேக்கட் (Red Jacket) என்பவர் நிகழ்ச்சியைக் குறித்த தமது எண்ணங்களை அளித்தார். அவர் கூறியிருந்த விஷயங்களில் ஒன்று:

"சகோதரரே! மகா ஆவியானவரை ஆராதிக்கவும் சேவிக்கவும் ஒரே வழிதான் உண்டு என்று நீங்கள் கூறுகிறீர்கள். அப்படியே ஒரே மதம்தான் உண்டு என்றால், ஒரே வெள்ளை இன மக்களான நீங்களே அது குறித்து ஏன் உங்களுக்குள் வேறுபடுகிறீர்கள்? நீங்கள் எல்லோருமே அந்த புத்தகத்தைப் படிக்க முடிகிற போது, ஏன் அனைவரும் ஒத்துப்போவதில்லை?

"சகோதரரே, நீங்கள் இந்த இடத்தில் உள்ள வெள்ளை இன மக்கள் மத்தியில் பிரசங்கிக்கப் போகிறீர்கள் என்று எங்களுக்குக் கூறப்பட்டது. இந்த ஜனங்கள் எங்கள் அயலகத்தார். நாங்கள் அவர்களோடு பழகி இருக்கிறோம். நாங்கள் கொஞ்ச நேரம் காத்திருந்து, அவர்களிடையே உங்கள் பிரசங்கத்தினால் ஏற்படும் விளைவைப் பார்க்கப்போகிறோம். அது அவர்களுக்கு நன்மை செய்து, அவர்களை நேர்மை உள்ளவர்களாகவும், இந்தியர்களை ஏமாற்றும் எண்ணத்தைக் குறைப்பதாகவும் கண்டால், நாங்கள் நீங்கள் கூறியதை மீண்டும் கருதிப்பார்ப்போம்."

**2. கர்த்தருக்காக (2:13-17).**

நாம் செய்வது *எல்லாம்* நிச்சயமாகக் கர்த்தருடைய மகிமைக்காகவும். அவரது இராஜ்யத்தின் நன்மைக்காகவும் இருக்க வேண்டும். சமுதாயத்தில் கிறிஸ்தவர்கள் இயேசு கிறிஸ்துவின் பிரதிநிதிகள் என்பதைப் பேதுரு கவனமாகச் சுட்டிக்காட்டுகிறார். "தேவனுடைய நன்மைகளை விளம்பரப்படுத்துவது" நமது கடமையாகும் (1 பேதுரு 2:9 – நூலாசிரியரின் மொழிபெயர்ப்பு). அதிகாரத்தில் இருக்கும் அரசாங்கத்தோடும். மக்களோடும் உள்ள நமது உறவைப் பொறுத்த வரையில் இது சிறப்பான உண்மையாகும்.

மானிட அரசாங்கங்களுக்கு உரித்தான அதிகாரத்துக்கு கிறிஸ்தவ ஜனங்களாகிய நாம் கீழ்ப்படிந்தேயாக வேண்டும். "கட்டளைகள்" (ordinance) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தைக்கு "உருவாக்குதல் அல்லது அமைப்பு" என்றே பொருள். அது தனித்தனிப் பிரமாணங்களைக் குறிக்கவில்லை. சட்டங்களை உருவாக்கி அமுல்படுத்தும் அமைப்பையே குறிக்கிறது. அந்த அமைப்புகளுக்குக் கீழ்ப்படிந்து அதேசமயத்தில் சட்டங்களுக்கு அடிபணியாமல் இருப்பதும் சாத்தியமானதே.

உதாரணமாக, தானியேலும் அவனுடைய மூன்று நண்பர்களும் உணவைக் குறித்த கட்டுப்பாட்டுக்கு அடிபணியாததால் அவர்கள் சட்டத்துக்குக் கீழ்ப்படியவில்லை; ஆயினும் அவர்கள் அதைச் செய்த விதம், அவர்கள் மன்னனைக் கனம் பண்ணி, அதிகாரிகளை மதித்தனர் என்றே நிரூபணம் செய்கிறது (தானி. 1). அவர்கள் கலகக்காரர்கள் அல்ல; அவர்கள் தங்களுக்குப் பொறுப்பாய் இருந்த அதிகாரிகளைச் சங்கடப்படுத்தி, பிரச்சினைக்குள் தள்ளக் கூடாது என்பதில் கவனமாக இருந்தனர். இருந்தாலும் தங்கள் நிலைபாட்டில் உறுதியாய் இருந்தனர். தேவனை அவர்கள் மகிமைப்படுத்திய அதே வேளையில் இராஜாவின் அதிகாரத்தையும் கனப்படுத்தினர்.

பெந்தெகொஸ்தே நாளுக்கு சற்று பின்னர், பேதுருவும் மற்ற அப்போஸ்தலர்களும் இதுபோன்ற ஒரு சவாலைச் சந்தித்தனர் (அப். 4:5). யூதர்கள் கூட்டம் கூடி, அவர்கள் இயேசுவின் நாமத்தினால் பிரசங்கிக்கக் கூடாது என்று கட்டளை இட்டனர். ஆனாலும் பேதுருவும் அவரைச் சார்ந்தவர்களும் கீழ்ப்படிய மறுத்தனர் (பார்க்க: அப். 4:9; 5:29). அவர்கள் கலகத்தை ஏற்படுத்தவோ, அல்லது அந்த கூட்டத்தின் (council) அதிகாரத்தை கேள்வி கேட்கவோ மறுக்கவோவில்லை. அவர்கள் அந்த அமைப்புக்குக் கீழ்ப்படிந்தனர். ஆனால் பிரசங்கிப்பதை நிறுத்த மறுத்தனர். தங்கள் தலைவர்கள் சுவிசேஷத்துக்கு எதிர்த்து நின்ற போதிலும் அவர்களுக்கு அவர்கள் மரியாதை காட்டினர்.

அதிகாரத்தில் இருக்கும் மனிதனை அல்லது பெண்ணை மதிக்க முடியாவிட்டாலும் அந்த அதிகார அமைப்புக்கு நாம் மரியாதை தரவேண்டும் என்பது முக்கியமாகும். முடிந்த வரையில் நாம் அரசாங்கத்தோடு ஒத்துழைத்து

சட்டங்களை மதிக்க வேண்டும். ஆனால் அந்த சட்டத்தின் காரணமாக நமது மனசாட்சியை மீறவோ அல்லது தேவ வார்த்தைக்குக் கீழ்ப்படியாமற் போகவோ வேண்டிய நிலை ஏற்பட்டால் அதற்கு நாம் அனுமதிக்கக் கூடாது. துரதிர்ஷ்டவசமாக, ஆர்வமிக்க ஆனால் அறியாமை கொண்ட கிறிஸ்தவர்கள் இந்த வேற்றுமைகளை சச்சரவுக்கான வாய்ப்பாகப் பயன்படுத்தி, "சுதந்திரம்" மற்றும் "சபையும் நாடும் தனித்தனி" என்றெல்லாம் சத்தமாகப் பிரசங்கம் செய்கின்றனர். ஒரு பிரதேச சபை ஒரு கட்டிடத்தைக் கட்டும் போதும், தேவைப்பொருட்களை அதில் வைக்கும்போதும் அந்தந்த பிரதேசச் சட்டங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும். (நான் அநேக சபைக் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டதால் இவைகளை அறிவேன்). மேடையை அமைப்பதிலோ, சபைக்கூட்டங்களிலோ தலையிடும் எந்தவித உரிமையும் அரசுக்கு இல்லை. ஆனால் பாதுகாப்புப் போன்ற விஷயங்களைக் கட்டுப்படுத்தும் எல்லா உரிமையும் உண்டு. சட்டத்தின் படி எத்தனை வழிகள் (Exits), நெருப்பணைக்கும் கருவிகள், அவசரகால விளக்குகள் போன்றவை தேவையோ அவற்றை நாம் நிறைவேற்றியே தீர வேண்டும். சட்டங்களை ஏற்றும்போதே அரசு தண்டனை அளிக்கவும் இல்லை, சட்டத்தை மதிப்பதால் சபை சமரசம் செய்து கொள்ளவும் இல்லை. ஆனாலும், இந்த விஷயங்களைக் குறித்த காரியங்களினாலும், மனோபாவங்களினாலும் சில மிகை ஆர்வம் கொண்ட பரிசுத்தவான்கள், கர்த்தரின் நாமத்தை அபகீர்த்தி ஆக்கியுள்ளதை நான் அறிவேன்.

நாம் மதிக்க வேண்டிய அதிகார அமைப்புகளின் பெயர்களைப் பேதுரு சுட்டிக்காட்டுகிறார். "இராஜா" என்பது "பேரரசர்". குடியரசு நாடுகளில் நமக்குக் குடியரசுத்தலைவர் அல்லது பிரதம மந்திரி உண்டு. பேதுரு ரோம அரசாங்கத்தை விமரிசிக்கவோ, அது அகற்றப்பட வேண்டுமென குறிப்பிடவோவில்லை. தேவ சபை எந்தவிதமான அரசியல் முறையிலும் வாழ்ந்து வளர முடியும். "அதிகாரிகள்" என்போர் மிக உயர்ந்த அதிகாரம் படைத்தவருக்கு கீழுள்ளவர்கள். அவர்கள் சட்டத்தை பரிபாலித்து நீதி செய்பவர்கள். கொள்கையின்படி, அவர்கள் தீமைசெய்வோரைத் தண்டித்து, நன்மை செய்வோரைப் பாராட்ட வேண்டும். இக் கொள்கை பேதுருவின் நாட்களிலும் சரிவரப் பேணப்படவில்லை. (பார்க்க: அப். 24:24-27). இன்றும் கூட அதே நிலைதான். அதிகாரியை மதிக்க முடியாவிட்டாலும், அந்த அதிகார பீடத்தை நாம் மதிக்க வேண்டும் என்பதை மறுபடியும் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இரு சொற்றொடர்கள் முக்கியமானவை:"தேவனுடைய சித்தம்" (1 பேதுரு 2:15), "தேவனுடைய அடிமைகள்" (வ. 16). எது ஒன்றையும் நாம் தேவனுடைய சித்தத்தின்படி அவருடைய அடிமையாகச் செய்யும்போது அதைக் "கர்த்தர் நிமித்தம் செய்கிறோம்". அதிகாரத்தை எதிர்ப்பதனால் அல்லாமல் நன்மை செய்வதின் மூலமாகவே விமரிசனம் செய்பவர்களின் வாயை அடைக்க

வேண்டும் என்பது தேவ சித்தமாகும். வசனம் 15-ல் உள்ள "அடக்குவது" என்பதின் நேரான அர்த்தம் "பலத்தைப் பிரயோகிப்பது" ஆகும். இங்கு புறஜாதி விமரிசகர்கள் குரைத்துக் கவ்வவரும் ஒரு கூட்டம் நாய்போல தோற்றம் அளிக்கின்றனர்.

ஒரு சிலர் வாதாடலாம். "கிறிஸ்தவர்களாகிய நாம் சுதந்திரமானவர்கள் அல்லவா?". ஆம், நாம் கிறிஸ்துவுக்குள் சுதந்திரமானவர்கள். ஆனால், அந்த சுதந்திரத்தை நாம் நமக்காக ஒருபோதும் உபயோகப்படுத்தக் கூடாது. எப்போதும் அதை நாம் அடுத்தவர்களுக்காகப் பயன்படுத்த வேண்டும். வேதனையான விஷயம் என்னவென்றால் "மதத்தை பயன்படுத்தி பணம் சம்பாதிக்கும் தீயோர்கூட்டம்" ஒன்று இருக்கிறது. அவர்கள் அறியாமையில் இருக்கும் மக்களை வேட்டையாடி, தங்கள் தீய செயல்களை மதத்திரையால் மறைத்துக்கொள்ளுகின்றனர். ஓர் உண்மைக் கிறிஸ்தவன் அதிகாரத்திற்குக் கீழ்ப்படிகிறான்; ஏனெனில் அவன் ஏற்கெனவே கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிந்தவனாய் இருக்கிறான். அவன் கட்டும் ஒரு கருவியாக சுதந்தரத்தைப் பயன்படுத்துகிறானே தவிர, ஒரு சண்டையிடும் ஆயுதமாக அல்ல. இந்த மனோபாவத்திற்கு சிறந்த ஓர் உதாரணம் நெகேமியாவாகும். அவர் தமது சொந்த உரிமையை விருப்பத்தோடு விட்டுக்கொடுத்து, அதனால் தம் மக்களுக்கு உதவவும், எருசலேம் சுவர்களைத் திரும்பக் கட்டவும் முனைகிறார்.

"கர்த்தர் நிமித்தம்" நாம் அதிகாரத்துக்குக் கீழ்ப்படியும்போது தகுதியுள்ள அனைவருக்கும் மரியாதை செலுத்தலாம். நம்மால் அவர்களுடைய அரசியலையும், நடத்தையையும் ஒத்துக்கொள்ள முடியாவிட்டாலும், அவர்கள் வகிக்கும் ஸ்தானத்தைக் கௌரவிப்போம் (பார்க்க: ரோமர் 13). நாம் "சகோதரத்துவத்தை" நேசிப்போம்; அதாவது நிச்சயமாக சபையில் உள்ள தேவமக்களை நேசிப்போம். இதுவே இக் கடிதத்தில் திரும்பத் திரும்ப வலியுறுத்தப்படும் கருத்து (1:22; 3:8; 4:8; 5:14). சகோதரரிடத்தில் அன்பு கூருவதைக்காட்டும் ஒருவழி, "அதிகாரமுள்ளவர்களால்" அனுப்பப்பட்ட அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிவதே. ஏனெனில், நாம் நமது கிறிஸ்தவ சாட்சியால் ஒருவருக்கொருவர் இணைத்துக் கட்டப்பட்டுள்ளோம்.

"கர்த்தருக்குப் பயப்படுதலும்", "இராஜாவைக் கனப்படுத்துவதும்" ஒன்றாகச் செல்லுகின்றன. ஏனெனில் "உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கின்றன" (ரோமர் 13:1). சாலொமோன் இதே அறிவுரையைத் தருகிறார்: "என் மகனே, நீ கர்த்தருக்கும் இராஜாவுக்கும் பயந்து நட!" (நீதி 24:21).

நாம் கர்த்தருக்குப் பயப்படுவதால் இராஜாவையும் கனப்படுத்துகிறோம். இந்த வினைச்சொற்கள் உணர்த்தும் காலம் (tense), நாம் *தொடர்ந்து* இந்த மனநிலையைக் கடைபிடிக்க வேண்டும் என்பதை உணர்த்துகிறது. "சகோதரரை

நேசித்துக் கொண்டே இருங்கள்! தேவனுக்குப் பயந்துகொண்டே இருங்கள்! இராஜாவைக் கனப்படுத்திக் கொண்டே இருங்கள்!".

கிறிஸ்தவர்களாகிய நாம் மானிட அரசாங்கங்களோடு நமக்கு உள்ள உறவைப் பகுத்துணர வேண்டும். சில நேரங்களில் நமது சொந்த உரிமைகளை ஒதுக்கி வைப்பதே சரியானதாக இருக்கும்; வேறு சில சமயங்களில் நமது குடியுரிமையை *உபயோகிப்பதே* சரியான நிலைப்பாடாக இருக்கும். பிலிப்பியில் தாம் துன்பப்படுவதை பவுல் விரும்பி ஏற்றுக்கொண்டார் (அப். 16:16-24). ஆனால், ஒரு குற்றவாளியைப் போல "இரகசியமாய் நகரைவிட்டு நழுவி மறைய" விரும்பவில்லை (16:35-40). தவறான குற்றசாட்டுகளின் பேரில் கைதுசெய்யப்பட்ட போது தன்னைக் காத்துக்கொள்ள பவுல் தமது குடியுரிமையைப் பயன்படுத்தினார் (22:22-29). மேலும் இராயனுக்கு முன் தனக்கு நியாயமான விசாரணை வேண்டும் என்று வற்புறுத்தினார் (25:1-12).

### 3. நமக்காக (2:18-26).

இந்த பத்தியில் சபையில் உள்ள கிறிஸ்தவ அடிமைகளுக்கு கீழ்ப்படிதலின் முக்கியத்துவம் குறித்து வலியுறுத்துகிறார். புதிதாக மனமாறிய சில அடிமைகள், ஆவிக்குரிய சுதந்திரமானது, தனிமனித மற்றும் அரசியல் சுதந்திரத்துக்கான உத்தரவாதம் என்று நினைத்து, தங்களுக்கும் சபைக்கும் பிரச்சினைகளை உருவாக்கினர். பவுல் இதைப்பற்றி 1 கொரிந்தியர் 7:20-24-ல் விவாதிக்கிறார். மேலும் தனது நண்பரான பிலேமோனுக்கு எழுதிய கடிதத்திலும் இதைக் குறிப்பிடுகிறார். ரோமசாம்ராஜ்யத்திற்கும், கொடூரமான அடிமைத்தனம் என்ற நிறுவனத்திற்கும் எதிராக ஆதி சபை பிரசங்கிக்கவில்லை என்ற போதிலும் முடிவாக சுவிசேஷம் இவை இரண்டையும் அகற்றி எறிந்தது.

இன்று கிறிஸ்தவ அடிமைகள் யாரும் இல்லை; குறைந்தபட்சம் புதிய ஏற்பாட்டு அர்த்தத்திலாவது. ஆனால் பேதுரு எழுதியுள்ள கருத்து, தொழிலாளர்களுக்கு பொருந்தவே செய்கிறது. அன்பாக இருக்கிறார்களோ இல்லையோ, நாம் நமக்கு மேலாக இருப்பவர்களுக்குக் கீழ்ப்படிந்தேயாக வேண்டும். கிறிஸ்தவத் தொழிலாளிகள் கிறிஸ்தவ முதலாளிகளிடம் தவறான முறையில் அனுகூலம் எடுத்துக்கொள்ளக் கூடாது. ஒவ்வொரு தொழிலாளியும் தங்கள் பணிகளைத் திறம்பட ஆற்றி நேர்மையான முறையில் தங்கள் ஊதியத்தைச் சம்பாதித்துக் கொள்ள வேண்டும்.

சில சமயம் ஒரு கிறிஸ்தவப் பணியாளருக்கு அவரது இரட்சிப்படையாத சக ஊழியன் அல்லது மேலதிகாரி தவறிழைத்திருக்கலாம். தவறு தன் பக்கம் இல்லை என்றாலும் இதை மனசாட்சியின் நிமித்தம் பொறுத்துக்கொள்ள வேண்டும். ஒரு கிறிஸ்தவனின் தேவனோடு கூடிய உறவு, மனிதனோடு உள்ள உறவை விட மிகவும் முக்கியமானதாகும். குற்றமற்றவர்களாய் இருக்கும் போது நிந்தனையை சகித்துக் கொள்வது "பாக்கியமானது" (பார்க்க: மத். 5:10-12). கீழ்ப்படியவும், 'சகித்துக்கொள்ளவும்', அந்த வகையில் தேவனை மகிமைப் படுத்தவும் நமக்கு தேவையான கிருபையை அவரால் அளிக்க முடியும்.

நிச்சயமாக மனித இயல்பு என்பது போராடி உரிமைகளைப் பெற்றுக்கொள்வதே. ஆனால் இது இரட்சிக்கப்படாத ஜனங்களின் இயல்பும் நடவடிக்கையும் ஆகும். நாம் அவர்களைவிட மேலானதைச் செய்ய வேண்டும் (லூக். 6:32-34). யார் வேண்டுமானாலும் திரும்பிப் போராட முடியும். ஆனால், ஆவியில் நிறைந்த ஒரு கிறிஸ்தவனால் மட்டுமே தாழ்மையுடன் இருந்து, தேவனைத் தனக்காகப் போராடும்படி அனுமதித்து, பொறுமையாக இருக்க முடியும் (ரோமர் 12:16-21).

வேதாகமத்தில், கடமை என்பது எப்போதுமே கொள்கையோடு இணைந்தது ஆகும். பவுல் அடிமைகளுக்கு எழுதியபோது, தமது கருத்துக்களை தேவ கிருபை என்ற கொள்கையோடு சம்பந்தப்படுத்தினார் (தீத்து 2:9-15). பேதுருவும் தமது ஆலோசனைகளை, "பாடுபடும் தேவனுடைய ஊழியக்-காரராகிய" இயேசு கிறிஸ்துவின் முன் மாதிரியோடு இணைத்துப் பேசுகிறார் (2:21-25; பார்க்கவும்: 52:13-53:12).

தேவ ஜனங்கள் *பாடுகளின் ஊடாகவே சேவை செய்கின்றனர்* என்பதைப் பேதுரு தன் அனுபத்தின் மூலமாக அறிந்து கொண்டவர். முதலில் கிறிஸ்துவின் சிலுவைப் பாடுகளைப் பேதுரு எதிர்த்தார் (மத். 16:21 லிருந்து); ஆயினும், பின்னர் அவர், சேவையின் மூலமாகவே நாம் தலைமை ஏற்கிறோம், பாடுபட்டே சேவை செய்கிறோம் என்ற முக்கியமான பாடத்தைப் படித்தார். இத்தகையப் பாடுகள் எப்போதும் மகிமைக்கே வழிநடத்தும் என்பதையும் அவர் அறிந்து கொண்டார்.

### *அ. அவருடைய வாழ்க்கையின் மூலமாக அவர் நமக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்தார் (2:21-23).*

இந்த உலகத்தில் இயேசு செய்தவைகள் யாவும், நான்கு சுவிசேஷங்களிலும் பதிவு செய்யப்பட்டுள்ளன. அது நாம் பின்பற்ற வேண்டிய முழுமையான முன் மாதிரியாகும். அதிலும் குறிப்பாகப் பாடுகளைச் சகித்துக்கொண்ட விதத்தில் அவர் நமக்கு முன்மாதிரியானவர். வார்த்தையிலும், நடத்தையிலும் அவர் பாவமற்றவர் என்பது உண்மையாக இருந்த போதிலும், அதிகாரிகளின் கரத்தில் அவர் பாடுபட்டார். இதையே 19 மற்றும் 20-ஆம் வசனங்களில் பேதுரு குறிப்பிடுகிறார். இதே கட்டத்தில் நாம் எவ்வாறு நடந்திருப்போம்? பேதுரு தமது பட்டயத்தை கெத்சமனே தோட்டத்தில் பயன்படுத்திய உண்மை, அவர் தேவ சித்தத்துக்குக் கீழ்ப்படிந்திருப்பார் என்பதை விட போராடி இருப்பார் என்பதையே உணர்த்துகிறது.

தேவ சித்தத்தின்படி நடந்தாலும், தேவனால் பெரிதும் நேசிக்கப்பட்டாலும் கூட, ஒரு மனிதன் அநியாயமாய்ப் பாடுபட நேரிடலாம் என்பதையே இயேசு நிரூபித்தார். இன்றைக்குப் பிரபலமாக இருக்கும் ஓர் ஆழமற்ற இறையியற் கருத்தின் படி, தேவ சித்தத்துக்கு ஏற்ப நடக்கும் கிறிஸ்தவர்கள் பாடுபடுவது *இல்லையாம்.* இத்தகைய கருத்துக்களைக் கூறுவோர் சிலுவையைப் பற்றி அதிகமாகத் தியானிக்கவில்லை என்பதுதான் உண்மை.

நமது கர்த்தரின் தாழ்மையும், கீழ்ப்படிதலும் பலவீனத்தைக் காட்டும் சான்றுகள் அல்ல. அது வல்லமையைக் காட்டுகிறது. இயேசு தம்மைக் காக்க பரலோகத்தின் சேனைகளை அழைத்திருக்கலாம். சூழ்நிலை அவருடைய முழுக்கட்டுப்பாட்டில் இருந்தது என்பதையே யோவான் 18:33-38 ல் அவர் பிலாத்துவிடம் கூறும் வார்த்தைகள் உணர்த்துகின்றன. இயேசு அல்ல, பிலாத்தே விசாரணையின் கீழ் இருந்தான். இயேசு பிதாவுக்குத் தன்னை ஒப்புக்கொடுத்து விட்டார். பிதா எப்போதும் நீதியின் படியே நியாயம் தீர்ப்பார்.

கிறிஸ்துவின் உதாரணங்களைப் பின்பற்றுவதால் நாம் இரட்சிக்கப்படுவதில்லை. ஏனெனில் நாம் ஒவ்வொருவரும் வசனம் 22-ல் இடற நேரிடும்: "அவர் பாவம் செய்யவில்லை." பாவிகளுக்குத் தேவை உதாரணம் அல்ல, ஓர் இரட்சகரே! ஆயினும், ஒரு மனிதன் இரட்சிக்கப்பட்ட பின், கிறிஸ்துவின் "அடிச்சுவடுகளைத் தொடர்ந்து" வந்து, அவரது முன்மாதிரியைப் பின்பற்றுவான்.

***ஆ. அவர் நமக்குப் பதிலாக மரித்தவர் (2:24).***

அவர் பாவிக்குப் பதிலாக மரித்தவர். இந்த முழுப்பகுதியும் மகா "ஊழியரதிகாரமான" ஏசாயா 53-ஐப் பிரதிபலிக்கிறது. அதிலும் குறிப்பாக வசனங்கள் 5-7 மட்டுமின்றி, வசனங்கள் 9-ம் 12-ம் கூட. இயேசு ஒரு தியாகவீரராக மரிக்கவில்லை; அவர் ஓர் இரட்சகராக மரித்தார். நமக்குப் பதிலாகப் பாவமற்றவராக மரித்தார். 'சுமந்தார்' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தைக்கு "ஒரு பலியைப் போல சுமப்பது" என்று அர்த்தம். யூத மக்கள் குற்றவாளிகளைச் சிலுவையில் அறைவதில்லை; கல்லெறிந்து கொன்றனர். ஆயினும், குற்றவாளி மிகவும் தீயவனாக இருந்தால், அவனது செத்த உடல் சாயுங்காலம் வரை ஒரு மரத்தில் தூக்கப்பட வேண்டும் (உபா. 21-23). இயேசு ஒரு மரத்தில் மரித்து — சிலுவை — நமது பாவங்களுக்கு எதிராக இருந்த பிரமாணங்களின் சாபத்தைச் சுமந்தார் (கலா. 3:13).

முரண்பட்டவைகள் போல் இருந்தாலும், சிலுவையின் சத்தியங்கள் எப்போதும் நம்மை ஆச்சரியப்படவே வைக்கின்றன. நாம் குணமாகும்படி அவர் காயப்பட்டார். நாம் பிழைத்திருக்கும்படி அவர் மரித்தார். நாம் அவரோடு மரித்தோம், எனவே "பாவத்துக்கு மரித்தோம்" (ரோமர் 6). "நாம் நீதிக்காக வாழ்ந்திருக்கும் படி" அவ்வாறு நேர்ந்தது. குணமாகுதல் என்று பேதுரு 24-ஆம் வசனத்தில் குறிப்பிடுவது சரீர பிரகாரமானது அல்ல. அது ஆத்துமாவின் ஆவிக்குரிய பிரகாரமான குணப்படுதல் (சங். 103:3). ஒருநாள், மகிமை வாய்ந்த சரீரம் நமக்குக் கிடைக்கும் போது, நோய்கள் யாவும் போய்விடும். ஆயினும் அதே நேரத்தில், தேவனால் குறிப்பாகத் தெரிந்துகொள்ளப்பட்ட சில ஊழியக்காரர்களுக்கும் சரீரபிரகாரமான வேதனைகள் இருக்கவே செய்யும் (பார்க்க: பிலே. 2:25-3-; 2 கொரி. 12:1 லிருந்து).

உதாரண புருஷரான இயேசுவோ அல்லது போதகரான இயேசுவோ நம்மை இரட்சிக்கவில்லை; ஆனால் பழுதற்ற தேவ ஆட்டுக்குட்டியான இயேசுவே இந்த உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிறார் (யோவான் 1:29).

***இ. அவர் பரலோகத்தில் இருக்கும் நமது விழிப்பான மேய்ப்பன் (2:25).***

பழைய ஏற்பாட்டில் ஆடு மேய்ப்பனுக்காகச் செத்தது. கல்வாரியிலோ மேய்ப்பன் ஆடுகளுக்காக மரித்தார் (யோவான் 10). ஒவ்வொரு பாவியும், அறியாமையிலும், அலைந்தும், தொலைந்தும், ஆபத்திலும், பாதுகாப்பான இடத்தில் இருந்து நீங்கியும், தனக்குத் தானே உதவிக்கொள்ள முடியாத நிலையிலும் இருக்கும் ஆட்டைப் போன்றவனே. காணமற் போன ஆட்டைத் தேடி மேய்ப்பன் சென்றார் (லூக். 15:1-7). அவர் ஆடுகளுக்காக மரித்தார்!

இப்போதோ நாம் மந்தைக்குள் திரும்பி வந்து அவரது கவனிப்பில் பத்திரமாக இருக்கிறோம். நாம் மீண்டும் பாவத்துக்குள் வழிவிலகிப் போய்விடாமல் இருப்பதற்காக அவர் கவனித்துக்கொண்டே இருக்கிறார். "கண்காணி" என்ற வார்த்தையின் நேர் அர்த்தம் "கவனித்துக் கொண்டு இருப்பவர், மேற்பார்வை செய்பவர்" என்பதாகும்.

மூப்பரான பேராயர் பிரதேச சபையாகிய (1 பேது 5:2). தேவ மந்தையை மேற்பார்வை செய்வது போல, மகிமை நிறைந்த இரட்சகரும் தமது ஆடுகளைக் காப்பதற்காகவும், குற்றமற பூரணப்படுத்துவதற்காகவும் எப்போதும் கவனித்துக்கொண்டே இருக்கிறார் (எபி. 13:20-21).

இங்கே, பேதுரு பகிர்ந்துகொள்ள விரும்பும் அதிசயமான சத்தியம் இருக்கிறது: நாம் தேவ பக்தியுள்ள வாழ்க்கை வாழ்ந்து, பாடுகளின் சமயத்தில் கீழ்ப்படிந்து இருப்போமானால், கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்றி அவரைப் போலவே மாறுகிறோம்.

இரட்சிப்படையாத உலகம் நம்மைக் கவனித்துக்கொண்டே இருக்கிறது. ஆனால் பரலோகத்தின் மேய்ப்பரும் நம்மை கண்காணித்துக் கொண்டே இருக்கிறார். அதனால் நாம் பயப்படுவதற்கு எதுவும் இல்லை. அவர் எல்லாவற்றையும் நமது நன்மைக்காகவும், அவரது மகிமைக்கு ஏதுவாகவும் செய்து முடிப்பார் என்பதை அவருக்குக் கீழ்ப்படிந்து அறிந்துகொள்ள முடியும்.

6

# திருமண இணைப்பா? அல்லது மரணப் பிணைப்பா?

1 பேதுரு 3:1-7

இன்றைய சமுதாயத்தில் ஓர் அபூர்வமான சூழ்நிலை நிலவுகிறது. முன் எப்போதும் இல்லாத வகையில் தற்போது பாலியல் உறவு குறித்தும், திருமணத்தைப் பற்றியும் நமக்கு ஏராளமான விவரங்கள் உடனடியாகக் கிடைக்கின்றன. இருந்தாலும், இன்று அதிகமான மணப்பிரச்சினைகளும், விவாகரத்தும் இருக்கின்றன. ஏதோ சில விஷயங்கள் சரியில்லை என்பது வெளிப்படையாகத் தெரிகின்றன. இந்த இல்லங்களில் கிறிஸ்து தேவை என்று சொன்னால் அது போதுமானதல்ல, ஏனெனில், பல கிறிஸ்தவத் திருமணங்களுமே உடைந்து சிதறிப்போகின்றன.

ஒரு பெண்ணும் ஆணும் இரட்சிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது மட்டுமே அவர்களுடைய திருமணம் வெற்றி பெற்றுவிடும் என்பதற்கு உத்தரவாதம் ஆகாது. திருமண வாழ்க்கை நாம் கவனமாக நடத்தவேண்டிய ஒன்று; அதிலும், தம்பதிகளில் ஒருவர் கிறிஸ்தவராக இல்லாமல் இருந்தால் அது மேலும் விஷயங்களைச் சிக்கலாக்கிவிடும். நிருபத்தின் இந்த பகுதியில், இரட்சிக்கப்படாத கணவனைக் கைபிடித்த பெண்களுக்கு, அவர்கள் எவ்வாறு தங்கள் துணைவர்களைக் கிறிஸ்துவுக்குள் வென்றெடுக்க வேண்டும் என்று பேதுரு எழுதுகிறார். பின், கிறிஸ்தவ கணவன்மார்களுக்கு சில புத்திமதிகளையும் சேர்த்துள்ளார்.

நீங்கள் திருமணமானவரானாலும் சரி, திருமணம் ஆகாதவரானாலும் சரி, ஒரு மகிழ்ச்சியான வெற்றிகரமான திருமணத்திற்கு முக்கியமாக என்ன தேவையோ அதைப் பேதுருவிடம் இருந்து கற்றுக்கொள்ளலாம்.

1. கிறிஸ்துவின் உதாரணம் (3:1a, 7a).

“அந்தப்படி” என்ற சொற்றொடர், இயேசு கிறிஸ்துவை உதாரணமாகக் கொண்டு பேதுரு ஏற்கெனவே கூறியுள்ள விவாதங்களைக் குறிக்கிறது (2:21-25). தேவ சித்தத்துக்கு இயேசு கீழ்ப்படிந்த பிரகாரம், கிறிஸ்தவ கணவர்களும், மனைவிகளும் அவருடைய முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டும்.

ஒன்றைப் பார்த்து அதுபோல் செய்வதின் மூலமாகவே வாழ்க்கையில் நாம் பெரும்பாலும் அறிவைப் பெறுகிறோம். வளரவளரப் புதுப்புது திறமைகளையும், வார்த்தைகளையும் தங்கள் பேரப்பிள்ளைகள் “பெற்றுக்” கொள்வதைப் பார்த்து தாத்தாபாட்டிகள் சந்தோஷமாகத் தங்கள் நேரத்தைக் கழிப்பார்கள். நாம் சிறந்த முன்மாதிரிகளைப் பின்பற்றினால் நல்ல மக்களாகவும் நல்ல சாதனையாளர்களாகவும் மாற முடியும். ஆனால் மோசமான முன்மாதிரிகளைப் பின்பற்றினால், அது நம் வாழ்க்கையை முடக்கி, நமது ஒழுக்கச் சிறப்பையும் பாழடித்து விடலாம். நாம் பின்பற்றும் ‘முன் மாதிரிகள்’ நமது வாழ்க்கையின் எல்லா பகுதிகளிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

ஒரு பேரங்காடியில் இருந்து வெளிவர, வரிசையில் நின்று கொண்டிருந்தபோது, இரு பெண்களின் விவாதம் என் காதில் விழுந்தது (அதைக் கேட்காமல் இருக்க முடியவில்லை). அங்கிருந்த “கவுண்டரின்” மேல் வைக்கப்பட்டிருந்த செய்தித்தாளின் முதல்பக்கத்தில் வெளியான ஒரு சமீபத்திய ஹாலிவுட் உலகின் “கிசுகிசு” பற்றியே அவர்கள் விவாதித்தனர். “நடிக நடிகைகளின் பாவ வாழ்க்கையைக் குறித்து வருத்தப்படுவது எவ்வளவு மடமையானது? வெறும் குப்பைகளால் உங்கள் மனதை ஏன் குழப்பிக்கொள்ள வேண்டும்? ஏன் சிறந்த மனிதர்களோடு பழகி அவர்கள் வாழ்க்கையில் இருந்து பாடம் கற்றுக் கொள்ளக் கூடாது?” என்று நான் நினைத்துக் கொண்டேன். அதற்கு சிலநாள் கழித்து ஒரு தொலைக்காட்சி தொடரில் வரும் திருமண பிரச்சினைகளைக் குறித்த ஒரு விவாதமும் இப்படியே என் காதில் விழுந்தது. அப்போதும் இதே எண்ணங்களே எனக்கு வந்தன.

கிறிஸ்தவத் தம்பதிகள் பரலோகத்திற்குப் பதிலாக, இந்த உலகத்தைப் பின்பற்றி, ஹாலிவுட்டின் அளவீடுகளை தங்கள் வாழ்க்கையில் புகுத்தினால், வீட்டில் பிரச்சினைகளே இருக்கும். ஆனால் அவர்கள், தாழ்மையிலும், கீழ்ப்படிதலிலும், பிறருக்குச் சேவை செய்யும் ஆசையிலும் இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றி நடந்தால் அவர்கள் வீட்டில் வெற்றியும், மகிழ்ச்சியும் இருக்கும். ஒரு கிறிஸ்தவக் கணவனால் செய்யக்கூடிய சிறப்பான விஷயம் என்னவென்றால் அவன் தன்னைக் கிறிஸ்துவைப் போல மாற்றிக் கொள்வதுதான் என்று என்னுடைய மனவியல் நிபுணரான ஒரு நண்பர் கூறுகிறார். வலிமையும் மென்மையும் கலந்த ஒரு குழைவை நாம் கிறிஸ்துவில் காண்கிறோம். ஒரு வெற்றிகரமான கணவனாக இருப்பதற்குத் தேவையானதும் இதுவே.

கிறிஸ்தவ மனைவிகள் பின்பற்ற வேண்டிய ஒரு முன்மாதிரியாகப் பேதுரு சாராளைக் கூறுகிறார். சாராள் நிச்சயமாகப் பூரணமானவள் அல்ல; இருந்தாலும் அவள் ஆபிரகாமுக்கு ஒரு சிறந்த துணைவியாக இருந்தாள். எபிரேயர் 11-ல் குறிப்பிடப்படும் ஒருசில பெண்மணிகளில் அவளும் ஒருத்தி. ஒருமுறை சபையின் சார்பாக ஒரு பெண்மணியைச் சந்திக்க நேர்ந்தது. அவர் தமது விவாக சம்பந்தமான பிரச்சினைகளைக் கூறினார். புத்தக அலமாறியில் ஏராளமான "திரைப்பட இரசிகர் சங்க இதழ்கள்" இருப்பதைக் கண்டேன். அவர் சொன்னதை எல்லாம் கேட்டு முடித்துவிட்டு, அவர் தமது மனதில் இருந்து உலக மாதிரிகளை எல்லாம் ஒதுக்கி விட்டு, வேதாகம முன்மாதிரிகளையும், உதாரணங்களையும் பின்பற்ற வேண்டும் என்று முடிவாகக் கூறினேன்.

முதலாவதாகக் கிறிஸ்துவை இரட்சகர் என்று அறிந்து, கர்த்தராகிய அவருக்கு நம்மை ஒப்புக்கொடுக்காவிட்டால், கிறிஸ்துவின் முன்மாதிரியை நம்மால் பின்பற்ற முடியாது. ஒவ்வொரு நாளும் வார்த்தையைத் தியானித்து, ஜெபித்து நாம் அவரோடு நேரத்தைக் கழிக்க வேண்டும். கிறிஸ்தவக் கணவனும் மனைவியும் ஒன்றாக ஜெபித்து, விசுவாசத்தில் வளரும்படியாக ஒருவரை ஒருவர் ஊக்குவிக்க வேண்டும்.

**2. கீழ்ப்படிதல் (3:1-6).**

இந்த பத்தியில், கிறிஸ்தவ மனைவிமார்கள் தங்கள் கணவர்களுக்கு கீழ்ப்படிந்து இருக்குமாறு பேதுரு இருமுறை நினைவூட்டுகிறார் (வச. 1:5). "கீழ்ப்படிந்து" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொல் ஓர் இராணுவ வார்த்தை. அதன் அர்த்தம் "ஒரு பதவிஸ்தானத்திற்குள் அமர்த்துதல்" (to place under a rank). தேவனிடம் எல்லாவற்றிற்கும் ஓர் இடமுண்டு. அவர் பல்வேறு அதிகார நிலைகளை நியமித்துள்ளார் (பார்க்க: 1 பேது. 2:13-14). புருஷனே குடும்பத்தின் தலைவன் என்று அவர் நியமித்துள்ளார் (எபே. 5:21 லிருந்து). அவன் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிவது போல, மனைவி அவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும். தலைமை என்பது சர்வாதிகாரம் அல்ல; மாறாக இயேசு கிறிஸ்துவினுடைய கர்த்தத்துவத்தின் கீழடங்கி இருந்து தெய்வீக அதிகாரத்தை அன்போடு பிரயோகிப்பது ஆகும்.

ஒரு கிறிஸ்தவ மனைவி இரட்சிக்கப்படாத கணவனுக்கும் கூட கீழ்ப்படிந்து ஏன் நடக்க வேண்டும் என்பதற்குப் பேதுரு மூன்று காரணங்களைத் தருகிறார்.

*அ. கீழ்ப்படிதல் ஒரு கடமை (3:1).*

ஒரு மகிழ்ச்சியான, நிறைவான வாழ்க்கைக்கு சிறந்த ஏற்பாடு என்பதை அவர் தமது ஞானத்தால் அறிகிறபடியால்தான் இதை அவர் கட்டளை இட்டார். கீழ்ப்படிதல் என்பதற்கு மனைவி கணவனுக்குக் கீழானவள் என்று அர்த்த-மாகாது. 7-வது வசனத்தில் கணவன் மனைவி ஆகிய இருவருமே "சுதந்திர-

வாளிகள்" என்று பேதுரு தெளிவாக்குகிறார். பெண்ணும், ஆணும் ஒரே சிருஷ்டிகரால், ஒரே அடிப்படையான பொருட்களில் இருந்து தேவ சாயலாக உருவாக்கப்பட்டவர்கள். தேவன் ஆளுமையை ஆண்பெண் ஆகிய இருவருக்குமே கொடுத்தார் (ஆதி. 1:28). இயேசு கிறிஸ்துவுக்குள் அவர்கள் ஒன்றாக இருக்கின்றனர் (கலா. 3:28).

கீழ்ப்படிதல் என்பது மதிப்பைப் பொறுத்ததல்ல. கட்டளைக்கும் அதிகாரத்துக்கும் உட்பட்டது. உதாரணமாக, ஒரு சாதாரண ரோமக் குடும்பத்தில் அடிமைகள் அவர்களுடைய எஜமானர்களை விடவும் பலவகையில் மேம்பட்ட-வர்களாய் இருந்தனர். எனினும் அவர்கள் அதிகாரத்துக்கு உட்பட வேண்டியது ஆயிற்று. ஓர் இராணுவத்தில் உள்ள தனியார் ஒருவர், ஓர் ஐந்து நட்சத்திர முத்திரை பெற்ற தளபதியைவிட பெரியவராக இருந்தாலும் அவர் தனியாரே. கிறிஸ்துவே ஓர் ஊழியராகி தேவ சித்தத்துக்குக் கீழ்ப்படிந்தார். அதிகாரத்துக்கு அடிபணிவதிலோ, தேவ கட்டளைகளை ஏற்றுக்கொள்வதிலோ குறைவு ஒன்றுமில்லை அதுவே நிறைவுக்கான முதற்படி. எபேசியர் 5:21 தெளிவாக்-குவது போல, கணவன் மனைவி *இருவருமே* கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

கணவனும் மனைவியும் போட்டியாளர்களாக இல்லாமல் பங்காளிகளாக இருக்க வேண்டும். திருமண வைபவம் முடிந்தபின்னர் நான் எப்போதும் மணமக்களுக்குத் தனியாக இவ்வாறு கூறுவது வழக்கம்: "ஒன்றை ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள்! இப்போதில் இருந்து *என்னுடையது* அல்லது *உன்னுடையது* அல்ல; *நம்முடையது!*" கிறிஸ்தவர்கள் ஏன் எப்போதும் இன்னொரு கிறிஸ்தவரையே திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்பதை இது விளக்குகிறது. ஒரு விசுவாசி, ஒரு அவிசுவாசியோடு ஆழமான "அந்நியோன்யத்தை" உருவாக்க முடியாது.

### *ஆ. கீழ்ப்படிதல் ஒரு வாய்ப்பு (3:1b-2).*

எதற்கான வாய்ப்பு? ஓர் இரட்சிப்படையாத கணவனை கிறிஸ்துவுக்குள் வென்றெடுக்க. தேவன் கீழ்ப்படிதலைக் *கட்டளை* இடுவதோடு, அதை ஒரு குடும்பத்தில் வல்லமையுள்ள ஆவிக்குரிய தாக்கமாகவும் *பயன்படுத்துகிறார்.* அதற்காக, ஒரு கிறிஸ்தவ மனைவி தன் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக, தன் இரட்சிக்கப்படாத கணவனை ஏமாற்றுகிறாள் என்பது அர்த்தமல்ல. அத்தகைய சுயநலமான, மனோரீதியான வற்புறுத்தல் கிறிஸ்தவ உள்ளங்களிலும், இல்லங்களிலும் இருக்கவே கூடாது.

பிரசங்கத்தாலோ, வீட்டில் குறைகூறி வசைபாடுவதாலோ ஓர் இரட்சிக்கப்படாத கணவனை மனமாற்ற முடியாது. "போதனை இன்றி" என்ற சொற்றொடர், "தேசவார்த்தை இன்றி" என்று பொருள்படாது; ஏனெனில் இரட்சிப்பு வார்த்தையாலேயே வருகிறது (யோவான் 5:24). அதற்கு, "பேச்சில்லாமல், ஏராளமாகப் பேசாமல்" என்று அர்த்தம். கிறிஸ்தவ மனைவி-

கள் தங்கள் கணவர்களுக்கு உபதேசிப்பது அவர்களைக் கர்த்தரைவிட்டு தூரமாகத் தள்ளிக்கொண்டு போய்விடுகிறது. எனக்குத் தெரிந்த ஒரு மிகையார்வமிக்க மனைவி. தனது இரட்சிப்படையாத கணவன் சத்தியத்தை அறியும்படியாக. சாயுங்காலம் தோறும் கிறிஸ்தவ வானொலி நிகழ்ச்சிகளை மிகவும் சத்தமாக வைப்பது வழக்கம். இதனால் அந்த கணவர் ஒவ்வொரு மாலைநேரமும் வீட்டைவிட்டு வெளியேறி தன் நண்பர்களோடு காலத்தைக் கழிப்பதற்கு அது வழியை எளிதாக்கித் தந்தது.

மனைவியின் ஒழுக்கமும் நடத்தையுமே வழிவிலகிப்போன கணவனை வெல்ல முடியும் - விவாதங்களல்ல. கீழ்ப்படிதலும். புரிந்துகொள்ளுதலும். அன்பும். இரக்கமும். பொறுமையுமே. இது உற்பத்தி செய்யப்படுவதல்ல. கிறிஸ்துவுக்கும். ஒருவருக்கு ஒருவரும் கீழ்ப்படியும் போது ஆவியின் கனிகளாக நமக்குக் கிடைப்பவைகளே இவைகள். ஒரு கிறிஸ்தவ மனைவியின் "பயபக்தியோடு கூடிய கற்புள்ள நடவடிக்கை" அவளுடைய வாழ்க்கையில் தேவனுடைய "புண்ணியங்களை" வெளிப்படுத்தி. அது அவளுடைய கணவனைக் கிறிஸ்துவை விசுவாசிக்குமாறு தூண்டும்.

சபை வரலாற்றில், தேவபக்தி உள்ள மனைவிக்கும். தாய்க்கும் ஒரு மிகப்பெரிய உதாரணம் புனித அகஸ்டினின் தாயார் மோனிக்கா அம்மையார் ஆவார். அவருடைய மகனையும். கணவரையும் கிறிஸ்துவுக்குள் கொண்டுவர தேவன் மோனிக்காவின் ஜெபத்தையும். சாட்சியையும் உபயோகப் படுத்தினார். இத்தனைக்கும் தனது இறப்புக்கு சற்று முன் வரை அவருடைய கணவர் மனம்மாறாதவராகவே இருந்தார். தமது அறிக்கையிடல் (Confessions) என்ற நூலில் அகஸ்டின் எழுதினார்: "அவர் (அம்மா) அவரை (கணவரை) பிரபுவாக சேவித்தார். அக்கறையோடு அவரை உம்மிடம் (தேவனிடம்) கொண்டுவர பாடுபட்டார்.. தமது நடத்தையால் உம்மைப்பற்றி அவருக்கு போதித்தார். தமது கணவருக்குப் பிடித்தமானவராக, மரியாதையோடு நடந்து கொள்ளத் தேவையானவைகளை நீர் அணிகலன்களாக அவருக்கு அளித்தீர்!"

ஒரு கிறிஸ்தவக் குடும்பத்தில் நாம் ஒருவருக்கொருவர் ஊழியம் செய்யவேண்டும். கர்த்தருக்குள் "அலங்காரமாக" இருக்கும்படியாக ஒரு கிறிஸ்தவக் கணவன் தன் மனைவிக்கு ஊழியம் செய்து உதவ வேண்டும் (எபே. 5:25-30). ஒரு கிறிஸ்தவ மனைவி தன் கணவனை ஊக்கப்படுத்தி கர்த்தருக்குள் வல்லமையாக வளர உதவி செய்ய வேண்டும். பெற்றோரும். குழந்தைகளும் பாரத்தையும். ஆசீர்வாதத்தையும் பகிர்ந்து கொண்டு. ஆவிக்குரிய உற்சாகம் நிறைந்த சூழ்நிலையைக் காத்துக்கொள்ள முயற்சி செய்ய வேண்டும். நமது சாட்சிகளைக் கேட்பதை விடவும். நமது வாழ்க்கையையும் நமது உறவுகளையும் பார்த்தே நம் வீட்டில் வாழும் இரட்சிப்படையாத ஜனங்கள் கிறிஸ்துவுக்குள் வருவார்கள்.

*இ. கீழ்ப்படிதல் ஓர் அலங்காரம் (3:3-6).*

"அலங்காரம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க மொழிப்பதம் "KOSMOS". ஆங்கில மொழிக்கு "Cosmos" (ஒழுங்கு படுத்தப்பட்ட வானங்கள்) "Cosmetic" என்ற வார்த்தைகளைத் தந்தது. இது "Chaos" (குழப்பம்) என்பதற்கு எதிர் பதம். கிறிஸ்தவ மனைவி வெளி அலங்காரத்திற்கு முக்கியத்துவம் அளிக்காமல் உள்ளான குணாதிசயத்திற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று பேதுரு எச்சரிக்கை செய்கிறார். ரோமப் பெண்கள் நாளுக்கு நாள் நவநாகரிகத்துக்கு அடிமையாகி, ஆடை மற்றும் சிகை அலங்காரத்தில் ஒருவருக்கொருவர் போட்டியிட்டுக் கொண்டனர். தங்கம் மற்றும் வெள்ளிச் சீப்புகளையும், ஆபரணங்களையும் கொண்டு அந்நாளைய மகளிர் தங்களைச் சிகையலங்காரம் செய்து கொள்வது வழக்கமாக இருந்தது. ஒருவரை ஒருவர் அதிசயப்பட வைப்பதற்காக அவர்கள் விலை உயர்ந்ததும், தையல் வேலைப்பாடுகள் மிகுந்ததுமான ஆடைகளை அணிந்தனர்.

ஒரு கிறிஸ்தவ மனைவி, உலகைப்பார்த்து அதுபோல நடப்பதால் தனது இரட்சிப்படையாத கணவனை வென்று விட முடியும் என நினைக்கலாம். ஆனால் உண்மை அதற்கு நேர் மாறானது. கவர்ச்சி செயற்கையானதும், மேலோட்டமானதும் ஆகும்; உண்மை அழகு மெய்யானதும் உள்ளோட்டமானதும் ஆகும். ஒருவர் போட்டு பின் கழற்றி விடுவதே கவர்ச்சி; உண்மை அழகு நின்று நிலவுவது. கவர்ச்சி களங்கம் அடையக் கூடியது; அது அழுகி மங்கிப் போகும். காலம் செல்லச் செல்ல உண்மை அழகு உள்ளத்தில் இருந்து வளர்ந்து மேலும் மேலும் வனப்புடையதாக மாறும். உள்ளார்ந்த அழகை உருவாக்கும் ஒரு கிறிஸ்தவப் பெண் மலிவான வெளிப்பகட்டை நம்ப அவசியமே இல்லை. தேவன் மதிப்புகளைப் பற்றிய அக்கறை கொண்டவரே அல்லாமல் விலையைப் பற்றி அல்ல.

அதற்காக ஒரு மனைவி தன்னை அலட்சியப்படுத்தி, தனது உடைகளில் காலத்திற்கு ஏற்றவாறு இருக்க முயற்சி செய்யக்கூடாது என்பது அர்த்தமல்ல. அதனுடைய வெளிப்படையான அர்த்தம் என்னவென்றால், கூட்டத்திற்கு ஏற்பத் தன்னை காட்டிக் கொள்வதற்காக நாகரீகக் கொலு பொம்மையாக மாறுவதற்கு *முக்கியத்துவம்* அளிக்கக் கூடாது. அழகாக இருக்கும் மனைவியைப் பற்றி எந்த கணவனும் பெருமைப்படுவான். ஆனால் அந்த அழகு உள்ளத்தில் இருந்து வரவேண்டும், கடைகளில் இருந்தல்ல. நாம் இந்த *உலகத்திற்கு உரியவர்கள் இல்லை*. ஆனால், அதற்காக இந்த உலகத்திற்கு வெளியே *இருந்து* வந்தவர்களாகவும் தென்படக்கூடாது.

நகை அணிவதையோ, சிறந்த ஆடைகளை உடுத்துவதையோ பேதுரு தடை செய்யவில்லை. 3-ஆம் வசனத்திலுள்ள "அணிந்து" என்பது "சுற்றிப் போடுவது" என்ற அர்த்தத்தைத் தருகிறது. அதாவது பகட்டாக நகைகளைப் போட்டுக்கொள்வது. நகைகளை அணிந்தாலும் கூட தேவனை மகிமைப்படுத்தலாம். நாம் ஒருவரை ஒருவர் இந்த விஷயத்தில் நியாயந்தீர்க்கக் கூடாது.

தேவ பக்திக்கும், கீழ்ப்படிதலுக்கும் ஓர் உதாரணமான மனைவியாக சாராளைச் சுட்டிக்காட்டி பேதுரு இப்பகுதியை நிறைவு செய்கிறார். இதன் பின்னணியைத் தெரிந்துகொள்ள ஆதியாகமம் 18-ஐ வாசிக்கவும். இன்றைய கிறிஸ்தவ மனைவி தன் கணவனை "ஆண்டவனே" என்று அழைத்தால் அவர் சங்கடப்படக்கூடும். ஆனால் அவர்களுடைய மனப்பாங்கு அவ்வாறு "ஆண்டவனே" என்று அழைக்கத் தக்கதாகவும், அதை மக்கள் நம்பும்படியாகவும் இருக்க வேண்டும். ஒரு விசுவாசமுள்ள மனைவி, கிறிஸ்துவுக்கும், தன் கணவனுக்கும் கீழ்ப்படிந்து, "சாந்தமும் அமைதலுமுள் ஆவியை" வளர்க்கும்போது, அவள் எப்போதும் பயப்படத் தேவையில்லை (பயம் என்று இந்த வசனத்தில் குறிப்பிடப்படுவது "அச்சம்". வசனம் 2-ல் அது "பக்தி"). அவளது இரட்சிக்கப்படாத கணவன் அவளுக்கு பிரச்சினைகளையும், தொல்லைகளையும் உருவாக்கும் போதும் தேவன் அவளை கவனித்துக் கொள்வார்.

### 3. அக்கறை (3:7).

கணவர்களை விடவும், மனைவிகளுக்கு அறிவுரை கூறப் பேதுரு அதிகமான பக்கங்களை ஏன் ஒதுக்குகிறார்? ஏனெனில், கிறிஸ்தவ மனைவிமார்கள் முற்றிலும் ஒரு புதிய சூழ்நிலையைச் சந்திக்க வேண்டி இருந்ததால் அவர்களுக்கு வழிகாட்டுதல் தேவைப்பட்டது. பொதுவாக, ரோம சாம்ராஜ்யத்தில் பெண்கள் கீழான நிலையில் வைக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்குக் கிடைத்த புதிய சுதந்திரம் புதிய பிரச்சினைகளையும் சவால்களையும் உருவாக்கின. மேலும், பெரும்பாலோனோர்க்கு இரட்சிப்படையாத கணவர்கள் இருந்தனர். அதனால் அதிகமான ஊக்கமும், உபதேசமும் அவர்களுக்குத் தேவைப்பட்டன.

தங்கள் மனைவியோடு கூடிய உறவில் கிறிஸ்தவக் கணவன்மார்களுக்கு உள்ள நான்கு வகையான பொறுப்புகளைப் பற்றி பேதுரு அவர்களுக்கு ஞாபகப்படுத்துகிறார்.

### *அ. மாம்சபிரகாரமாக – "அவர்களுடன் வாழுங்கள்".*

ஒரே விலாசத்தைப் பகிர்ந்து கொள்வதைவிட இது ஆழமானது. திருமணம் அடிப்படையில் ஒரு மாம்சபிரகாரமான உறவே. "இருவரும் ஒரே மாம்சமாய் இருப்பார்கள்" (எபே. 5:31). கிறிஸ்தவத் தம்பதிகள் ஓர் ஆழமான ஆவிக்குரிய உறவை நிச்சயமாக அனுபவித்தாலும், அவை இரண்டும் ஒன்றாகவே செல்லுகின்றன (1 கொரி. 7:1-5). உண்மையான ஓர் ஆவிக்குரிய கணவன் திருமணக் கடமைகளையும் நிறைவேற்றி தன் மனைவியையும் நேசிப்பான்.

மனைவியோடு வீட்டில் இருக்கக் கணவன் நேரம் ஒதுக்கவேண்டும். கிறிஸ்தவ ஊழியக்காரர்களும், சபை அலுவலர்களும் பிறருடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக ஓடியாடித் திரிந்து, தங்கள் சொந்தக் குடும்பத்தில் பிரச்சினைகளை உருவாக்கிக் கொள்கிறார்கள். ஒரு சராசரி கணவனும்

மனைவியும் வாரத்துக்கு முப்பத்தேழு நிமிடமே சேர்ந்திருந்து பேசி தங்கள் எண்ணங்களைப் பரிமாறிக் கொள்கிறார்கள் என்று ஒரு புள்ளிவிவரம் கூறுகிறது. பிள்ளைகள் வளர்ந்து வீட்டை விட்டுப் போன பிறகு விவாகங்கள் சிதறி விழுவதில் வியப்பில்லை என்று இதனால் தெளிவாகிறது அல்லவா? கணவனும் மனைவியும் தனியாக விடப்படுகின்றனர் - அந்நியர்களோடு வாழ!

"அவர்களுடன் வாழுங்கள்" என்பது கணவன் குடும்பத்தின் மாம்ச பிரகாரமான மற்றும் பொருள் ரீதியான தேவைகளையும் பூர்த்தி செய்ய வேண்டும் என்பதைக் குறிக்கிறது. ஒரு மனைவி வேலைக்குப் போவது தவறில்லை என்றாலும். அவளது முதல் பொறுப்பு குடும்பத்தைக் கவனிப்பதே (தீத்து 2:4-5). கணவனே குடும்பத்தின் தேவைகளை நிவிர்த்தி செய்ய வேண்டும் (1 தீமோ. 5:8).

### *ஆ. அறிவுப்பூர்வமாக – "விவேகத்தோடு".*

யாரோ ஒருவர் ஆல்பர்ட் ஐயன்ஸ்டீனின் மனைவியிடம் டாக்டர் ஐயன்ஸ்டீனின் சார்புக் கொள்கை (theory of relativity) புரிகிறதா என்று கேட்டார். அவர் பதில் அளித்தார்: "இல்லைதான்! என்றாலும் நான் டாக்டரைப் புரிந்து கொள்கிறேன்!" ஒரு போதகர் என்ற முறையில் நான் திருமணத்துக்கு முன் நடைபெறும் ஆலோசனையில் தம்பதிகளுக்கு காகிதப்பேட் ஒன்றைக் கொடுத்து, தங்கள் துணைவர்கள் மிகவும் விரும்பிச் செய்யும் மூன்று காரியங்களை எழுதச் சொல்வேன். பொதுவாக மணப்பெண் உடனடியாக எழுதிவிடுவாள். மணமகன் உட்கார்ந்து யோசிப்பான். பெண் பெரும்பாலும் சரியாக எழுதிவிடுவாள். ஆண் எழுதியது தவறாகவே இருக்கும். ஒரு திருமணத்துக்கு எப்படிப்பட்ட துவக்கம்!

திருமணமான இருவர் ஒன்றாக வாழ முடியும், ஆனால் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள முடியாது என்றால் அது வியப்பாக இருக்கிறது. அறியாமை என்பது வாழ்க்கையின் எப்பகுதியில் இருந்தாலும் ஆபத்தானது, குறிப்பாகத் திருமணத்தில் மிகவும் அபாயகரமானது. ஒரு கிறிஸ்தவக் கணவன் தன் மனைவியின் மனநிலை, உணர்ச்சிகள், தேவைகள், பயங்கள், நம்பிக்கைகளைப் பற்றி எல்லாம் அறிந்திருக்க வேண்டும். அவள் சொல்வதை "மனப்பூர்வமாகக் கேட்டு", கலந்து பேசி, அர்த்தமுள்ள விஷயங்களைப் பகிர்ந்துகொள்ள வேண்டும். வீட்டில் அன்பும், கீழ்ப்படிதலும் உள்ள சுமூகமான சூழ்நிலை நிலவ வேண்டும். இதனால், சில விஷயங்களில் ஒத்துப்போக முடியாவிட்டாலும், மகிழ்ச்சியுடன் ஒன்றாக வாழ முடியும்.

"உண்மையை அன்போடு பேசுதலே" (KJV) உணர்வுகளையும், விஷயங்களையும் பகிர்ந்து கொள்ளுவதில் உருவாகும் பிரச்சினைகளுக்குத் தீர்வு (எபே. 4:15). உண்மையில்லாத அன்பு வெறும் பாசாங்கு. அன்பில்லாத சத்தியம் மிருகத்தனமானது என்று சொல்லப்படுவது சரியானதே. ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளுதலில் வளர வேண்டுமானால் அன்பும், உண்மையும்

அவசியம். மனைவியின் தேவைகளையும் பிரச்சினைகளையும் புரிந்துகொள்ளாமல் ஒரு கணவனால் அவளிடம் எவ்வாறு பரிவோடு இருக்க முடியும்? "நீ அப்படி எடுத்துக் கொண்டாய் என்று நான் நினைக்கவில்லை" என்று கூறுவது, ஏதோ ஒரு கட்டத்தில் ஒருவர் இன்னொருவரோடு தன் உணர்வுகளைச் சரியாகப் பகிர்ந்து கொள்ளவில்லை என்பதை ஒத்துக் கொள்வதாகும். இருவரும், ஒரு விஷயத்தைப் பற்றி திறந்த மனதோடும், நேர்மையாகவும் இருக்கவில்லை என்றால், நீங்கள் பாலத்திற்குப் பதிலாகச் சுவர்களைக் கட்டுகிறீர்கள் என்று அர்த்தம்.

***இ. உணர்ச்சிபூர்வமான – "செய்யவேண்டிய கனத்தைச் செய்யுங்கள்".***

வீரம் செத்துப்போய்விட்டதாகவே இருக்கலாம். ஆயினும், ஒவ்வொரு கணவனும் தன் மனைவியை ஓர் இளவரசியாக நடத்தும் "மின்னும் கவசம் பூண்ட வீரனாகவே" இருக்க வேண்டும் (சாராள் என்றால் இராஜகுமாரி என்று அர்த்தம்) பேதுரு பெண்ணை மனதில், ஒழுக்கத்தில், ஆவிக்குரியவற்றில் 'பெலவீன பாண்டம்' என்று கூறவில்லை; மாம்சபிரகாரமாகவே அவ்வாறு கூறினார்.சில விதிவிலக்குகள் நிச்சயமாக இருக்கலாம். ஆனால், பொதுவாகப் பேசும்போது, இருவரிலும் ஆணே மாம்ச பிரகாரமாக வலிமையானவன். கணவன் தன் மனைவியை உள்ளே பொக்கிஷத்தைக் கொண்டே விலையுயர்ந்த, அழகிய, மெல்லிய ஜாடியைப் போல கருதி நடத்தவேண்டும்.

இருவர் காதலிக்க ஆரம்பிக்கும் போது, ஆண் மரியாதையோடும், ஜாக்கிரதையாகவும் நடந்து கொள்ளுகிறான். நிச்சயதார்த்தம் முடிந்த உடன் மரியாதையும், பெருந்தன்மையும் இன்னும் கூடுகிறது. ஆனால் இதில் வேதனையான விஷயம் என்னவென்றால், திருமணம் முடிந்த உடன் ஆண் தன் மனைவியை சாதாரணமாக எண்ணி, அன்போடும், பெருந்தன்மையோடும் நடக்க மறந்து போகிறான். ஒரு குடும்பத்தின் மகிழ்ச்சி, சிறு சிறு விநயமான காரியங்களை உள்ளடக்கிய பல *சிறிய* விஷயங்களினால் உருவாக்கப்படுகிறது என்பது அவனுக்குத் தெரியாமல் போய்விடுகிறது.

சிறிய வேதனைகளில் இருந்தே பெரும்பாலும் பெரிய வெறுப்புகள் வளர்ந்துவிடுகின்றன. கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் நேர்மை-யோடு நடந்து, புண்பட்டதை ஒத்துக்கொண்டு, மன்னிப்பைக் கோரி, காயத்தை ஆற்ற முற்பட வேண்டும். "செய்ய வேண்டிய கனத்தை மனைவிக்கு செய்வது" என்பது "மனைவி சொல்வதை எல்லாம் கேட்டு நடப்பது" என்பதல்ல. ஒரு கணவன் சில விஷயங்களில் மனைவியோடு ஒத்துப்-போகாமலும் இருக்கலாம். ஆனால் அதே சமயம் அவளை மதித்துக் கனப்படுத்தலாம். ஆவிக்குரிய வாழ்க்கையின் தலைவனாக கணவன் இருப்பதால் பிடிக்காத சில முடிவுகளைக்கூட அவன் எடுக்க நேரிடலாம். இருப்பினும் அவன் மரியாதையோடும், பெருந்தன்மையோடும் நடந்து கொள்ளலாம்.

"கனத்தை செய்யுங்கள்" என்பதற்கு கணவன் மனைவியின் உணர்வுகள். சிந்தனைகள். விருப்பங்கள் ஆகியவற்றை மதிப்பது என்றுதான் பொருள். அவளது சில எண்ணங்களோடு ஒத்துப்போக முடியாவிட்டாலும். அவன் அவைகளை மதிக்கிறான். பெரும்பாலும் தேவன் ஒரு திருமணத்தை சமன் செய்கிறார்: ஆகவே மனைவியின் ஆளுமையில் உள்ள ஏதோ ஒன்று கணவனுக்கு தேவைப்படுகிறது; அதுபோலவே அவனுடைய நல்ல பண்புகள் அவளுக்கும் தேவைப்படுகின்றன. உணர்ச்சிவசப்படுகிற கணவனுக்குப் பொதுவாக பொறுமையான மனைவி அமைவதால் அது அவனை தொல்லைகளில் இருந்து காப்பாற்ற உதவுகிறது.

ஒரு கணவன் குடும்பத்தின் வெப்பக்கட்டுப்பாட்டு கருவியாக இருந்து. உணர்ச்சி மற்றும் ஆவிக்குரிய வெப்பத்தை அவ்வப்போது சரியாக்கவேண்டும். மனைவியே வெப்பமானியாக இருக்கிறாள். வெப்பத்தின் அளவை அவனுக்கு அறிவிக்கிறாள். இரண்டுமே அவசியமானவை. தனது மனைவியின் உணர்ச்சி-களை அறிந்துகொள்ளும் கணவன் அவளை மகிழ்ச்சியாக வைத்திருப்பதோடு. தானும் வளர்ந்து. பிள்ளைகள் தேவனைக் கனப்படுத்தும் ஒரு வீட்டில் வாழ வழி செய்கிறான்.

*ஈ. ஆவிக்குரிய பிரகாரமானது —"உங்கள் ஜெபங்களுக்குத் தடைவராதபடி".* கணவனும். மனைவியும் சேர்ந்து ஜெபிப்பார்கள் என்று பேதுரு இங்கு பாவனை செய்து கொள்கிறார். பெரும்பாலும் அவர்கள் அவ்வாறு செய்வ-தில்லை; இதுவே பெரும் தோல்விக்கும். சந்தோஷம் இல்லாமல் போவதற்கும் காரணம் இரட்சிப்பு அடையாத மக்களுக்கு *ஜெபம் இல்லாமலேயே* மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கை அமைய முடியுமானால் (உண்மையும் கூட). *ஜெபத்தோடு கூடிய* கிறிஸ்தவ வாழ்க்கை எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்? ஒரு தம்பதியின் ஜெப வாழ்க்கையே குடும்பத்தின் விஷயங்கள் எவ்வாறு செல்கின்றன என்பதை உணர்த்தும் குறிப்பாகும். ஏதாவது ஒரு விஷயம் தவறாகப் போனால் அவர்களது ஜெபமும் தடைபட்டுவிடும்.

ஒரு கணவன். மனைவிக்கு தினமும் அவரவர்களுடைய தனிப்பட்ட ஜெபநேரம் தேவைப்படுகிறது. மேலும் அவர்கள் ஒன்றாக ஜெபிப்பதும். பின் குடும்ப ஜெபமும் அவசியம். இவை குடும்பத்திற்குக் குடும்பமும். பிள்ளைகள் வளர வளர நேரத்திற்கு ஏற்பவும் மாறுபடும். தேவ வார்த்தையும். ஜெபமும் ஒரு மகிழ்ச்சியான. பரிசுத்தமான குடும்பத்தின் அடிப்படை (அப். 6:4).

ஒரு கணவனும். மனைவியும் "இணைந்த சுதந்திரவாளிகளாக" (heirs together) இருக்கின்றனர். மனைவி கீழ்ப்படிதலோடும். கணவன் அக்கறையோடும். இருவரும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிந்து அவரது முன்மாதிரிகளை பின்பற்றியும் வாழ்ந்தால். அவர்களது திருமண வாழ்க்கையில் வளமான அனுபவத்தைப் பெறுவார்கள். அவ்வாறு இல்லை என்றால். அவர்கள் தேவனுடைய சிறப்பான ஈவுகளை இழந்து. ஆசீர்வாதத்தையும். வளர்ச்சியையும் ஒருவருக்கொருவர் கெடுத்துக்கொள்வார்கள். "வாழ்க்கையின் பாக்கியம்"

என்பது குழந்தைகளைக் குறிக்கலாம். அவர்கள் உண்மையிலேயே கர்த்தரால் வரும் சுதந்திரம் (சங். 127:3); ஆயினும் பிள்ளைகள் இல்லாதத் தம்பதியரும், பேதுருவின் புத்திமதிகளுக்குக் கீழ்ப்படிந்தால், ஆவிக்குரிய வளங்களை அனுபவிக்கலாம்.

கணவர்களும், மனைவிகளும் தங்கள் திருமண வாழ்க்கையைக் குறித்து ஆய்வு செய்து கொள்வது நல்லது. பேதுரு எழுதியவற்றின் அடிப்படையில் சில கேள்விகள்:

1. நாம் பங்காளிகளா (Partners) அல்லது போட்டியாளர்களா (competitors)?

2. ஆவிக்குரிய பிரகாரம் வளர ஒருவருக்கு ஒருவர் உதவி செய்து கொள்ளுகிறோமா?

3. நாம் வெளிப்பிரகாரமானவைகளையா (externals) அல்லது நித்தியமானவைகளையா சார்ந்திருக்கிறோம்?

4. நாம் ஒருவரை ஒருவர் சரியாகப் புரிந்துகொள்ளுகிறோமா?

5. ஒருவருக்கு ஒருவர் உணர்ச்சிகளையும் கருத்துக்களையும் உணர்ந்து கொள்ளுகிறோமா அல்லது அலட்சியப்படுத்திவிடுகிறோமா?

6. நமது ஜெபங்களுக்கு தேவன் பதிலளிப்பதை நம் வாழ்க்கையில் கண்டுவருகிறோமா?

7. நமது திருமணத்தால் நாம் வளமடைந்து உள்ளோமா அல்லது ஒருவருடைய தேவ ஆசீர்வாதத்தை இன்னொருவர் கெடுத்துக்கொண்டு இருக்கிறோமா?

இந்த கேள்விக்கான உங்கள் நேர்மையான பதில்கள் உங்கள் வாழ்க்கையில் ஒரு மாற்றத்தை உருவாக்க முடியும்.

# 7

## *சிறந்தவற்றிற்காக ஆயத்தப்படுதல்!*

1 பேதுரு 3:8-17

ஒரு பக்தியுள்ள போதகருக்கு ஓர் ஆபத்தான அறுவை சிகிற்சை நடைபெற இருந்தது. அவருடைய நண்பர் ஒருவர் அவரோடு கூட ஜெபிப்பதற்காக மருத்துவமனைக்குச் சென்றார். "இன்று ஒரு சுவையான நிகழ்ச்சி நடந்தது!" போதகர் நண்பரிடம் கூறினார். "பணிப்பெண்களில் ஒருவர் என் மருத்துவ அட்டையைப் பார்த்துவிட்டு, நீங்கள் மோசமானதற்காக ஆயத்தமாகிறீர்கள் என்று கூறினார். இல்லையம்மா! நான் நன்மையானதற்காக ஆயத்தமாகிறேன். நான் ஒரு கிறிஸ்தவன். தேவன் எல்லாவற்றையும் ஒன்றாக நன்மைக்கு ஏதுவாகவே நடத்துவதாக வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் என்று நான் அவரிடம் கூறினேன். அவர் அட்டையைப் போட்டுவிட்டு வேகவேகமாக அறையை விட்டு வெளியே போய்விட்டார்!"

கிறிஸ்தவர்களை 'அக்கினியின் சோதனைக்காகவும்', பாடுகளுக்காகவும் ஆயத்தப்படுத்தவே பேதுரு இந்த கடிதத்தை எழுதினார். ஆயினும் அவரது அணுகுமுறை நன்மைக்கு ஏதுவாகவும், நேர்மறையானதாகவும் (Positive) இருக்கிறது. "நன்மைக்கேதுவாக ஆயத்தமாகு" என்பதே அவரது செய்தி. மோசமான காலகட்டங்களிலும், மிகச்சிறந்த ஆசிர்வாதத்தை அனுபவிப்பதற்கு அவர்கள் பின்பற்ற வேண்டிய மூன்று அறிவுரைகளை இப்பகுதியில் அவர் தருகிறார்.

**1. கிறிஸ்தவ அன்பை விளைத்தெடுங்கள் (3:8-12).**

பேதுருவின் கடிதத்தில் மீண்டும் மீண்டும் கூறப்படும் கருத்து அன்பு என்பதைப் பார்த்தோம். தேவன் நம்மீது செலுத்தும் அன்பு மட்டுமல்ல, நாம் பிறர் மீது காட்டும் அன்பும் கூட. பேதுரு இந்த பாடத்தைத் தாமே படிக்க வேண்டியதாயிற்று. அதைக் கற்கும் காலம் கடினமாகவும் இருந்தது. இயேசு அவரோடு மிகவும் பொறுமையாக இருக்கவேண்டியதாகவும் இருந்தது.

*தேவ ஜனங்களிடம் காட்டும் அன்போடு* இதை நாம் ஆரம்பிக்க வேண்டும் (3:8). 'மேலும்' என்ற வார்த்தைக்கு 'எல்லாவற்றையும் தொகுத்துப் பார்த்தல்' என்பது பொருள். எல்லா பிரமாணங்களும் அன்பிற்குள் அடங்குவது போல (ரோமர் 13:8-10), எல்லா மானிட உறவுகளும் அன்பில் நிறைவடைகிறது. இது எல்லா கிறிஸ்தவர்களுக்கும், வாழ்க்கையின் எப்பகுதிக்கும் பொருந்துகிறது.

அன்பிற்கு சாட்சி ஏகசிந்தையே (பார்க்க: பிலி. 2:1-11). ஒற்றுமைக்கு அர்த்தம் ஒன்றுபோல் இருப்பது அல்ல; வேற்றுமைகளின் மத்தியிலும் கூட்டுறவோடு இருப்பதே. ஓரமைப்பின் உறுப்பினர்கள் வெவ்வேறாக இருந்தாலும் அவர்கள் ஒன்றுபட்டு ஒற்றுமையாகக் காரியமாற்றுகின்றனர். விஷயங்களை *எவ்வாறு* செய்வது என்பதில் கிறிஸ்தவர்களுக்குள் வேறுபாடு இருக்கலாம்; ஆனால் *என்ன* செய்யவேண்டும் என்பதிலும், *ஏன்* செய்யவேண்டும் என்பதிலும் அவர்கள் ஒத்துப்போக வேண்டும். ஒருவர் டி.எல். மூடி சுவிசேஷப்பணி ஆற்றும் முறைகளைப் பற்றி விமரிசித்தார். மூடி கேட்டார்: "நல்லது! நான் சீர் செய்துகொள்ள எப்போதும் ஆயத்தமாகவே இருக்கிறேன். *நீங்கள்* கூறும் *வழிமுறைகள்* என்ன?" அவர் தன்னிடம் ஒன்றுமில்லை என்று ஒத்துக்கொண்டார். "அப்படியானால் நான் என்னுடைய பாணியிலேயே செய்கிறேன்!" என்றார் மூடி. எந்த முறைகளைப் பின்பற்றினாலும் சரி, நாம் கிறிஸ்துவைக் கனப்படுத்தவும், வழிவிலகிப்போனவர்களை வென்றெடுக்கவும், சபையைக் கட்டவும் முனைய வேண்டும். சில முறைகள் நிச்சயமாக வேதாகமத்தில் சொல்லப்பட்டபடி இல்லாமல் இருக்கலாம்; இருந்தாலும், சபைகளில் வகைகளுக்கு (Variety) இடம் உண்டு.

அன்பிற்கு இன்னொரு சான்று *இரக்கம்* (Compassion). பிறருடைய தேவையைக் 'குறித்த உண்மையான உணர்வு'. ஆங்கில வார்த்தையான "sympathy" இந்த வார்த்தையில் இருந்து வந்ததே. நாம் ஒருவருக்கொருவர் கடின இருதயம் உள்ளவர்களாய் இருக்கக்கூடாது. நாம் சந்தோஷங்களையும், சோதனைகளையும் பகிர்ந்துகொள்ள வேண்டும் (ரோமர் 12:15) இதற்கான அடிப்படை நாம் ஒரே குடும்பத்தின் சகோதரர்கள் என்பதில் உள்ளது (பார்க்க: 1 பேதுரு 1:22; 2:17; 4:8; 5:14). நாம் "ஒருவரில் ஒருவர் அன்பாய் இருக்கும்படிக்கு தேவனால் போதிக்கப்பட்டவர்களாய்" இருக்கிறோம் (1 தெச. 4:9). மற்றவர்களின் மேல் இருதயத்தில் உண்டாகும் மென்மையான உணர்வான மன இரக்கத்தின் மூலமாக அன்பு தன்னை வெளிப்படுத்துகிறது. ரோம சாம்ராஜ்யத்தில் இக்குணம் போற்றப்படவில்லை. ஆனால் கிறிஸ்தவ (நற்) செய்தி இதை மாற்றியது. இன்று, மோசமான செய்திகள் வெள்ளம்போல் குவிவதால் நாம் மரத்துப்போனவர்களாகவும், உணர்ச்சி அற்றவர்களாகவும் இருப்பது எளிதே. நாம் இரக்கத்தை வளர்க்க வேண்டும். நாம் அவர்கள்பால் அக்கறை உள்ளவர்கள் என்பதைப் பிறருக்குக் காட்டவேண்டும்.

பெருந்தன்மைமிக்க மனிதனாகவும், மனுஷியாகவும் நடிப்பதை விட, இணக்கம் உள்ளவர்களாய் இருப்பதில் வேறு பல விஷயங்களும் அடங்கி-யுள்ளன. "தாழ்மை உள்ள மனது உள்ளவர்களாய்" என்பது ஒரு நல்ல மொழிபெயர்ப்பு. மொத்தத்தில் தாழ்மையே இணக்கத்திற்கு அடிப்படை. ஏனெனில் தாழ்மையுள்ள மனிதன் மற்றவர்களைத் தனக்கு முன்னாக வைக்கிறான்.

தேவ மக்களிடம் மட்டுமின்றி, நாம் நமது எதிரிகளிடமும் அன்பு செலுத்தவேண்டும் (1 பேது. 3:9). இந்த கடிதத்தைப் பெறுபவர்கள், தேவ சித்தத்தைச் செய்துவந்ததால், தனிப்பட்ட முறையில் பாடுகளையும் அனுபவித்து வந்தனர். *அதிகாரப்பூர்வமான* துன்புறுத்தல் நெருங்கி வந்துகொண்டு இருந்ததால், அதற்கு ஆயத்தமாக இருக்கும்படி பேதுரு எச்சரிக்கை செய்கிறார். கடினமான காலங்கள் வந்துகொண்டு இருப்பதால் இன்றைய சபையும் நன்றாக ஆயத்தமாகிக் கொள்ளவேண்டும்.

மூன்று நிலைப்பாடுகளில் (levels) ஒன்றில்தான் கிறிஸ்தவர்களாகிய நாம் வாழ முடியும். நன்மைக்கு நாம் தீமை செய்யலாம்; இது சாத்தானின் நிலைப்பாடு. நாம் நன்மைக்கு நன்மையும், தீமைக்கு தீமையும் சரிக்கட்டலாம்; இது மனிதனின் நிலைப்பாடு. அல்லது நாம் தீமைக்குப் பதில் நன்மை செய்யலாம்; இது தெய்வீக நிலைப்பாடு. இந்த கடைசி அணுகுமுறைக்கு இயேசுவே முழுமையான உதாரணமாகும் (2:21-23). தேவனுடைய அன்பான பிள்ளைகளாகிய நாம் "கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்" (மத். 5:38-48) என்று பதிலளிக்கக் கூடாது; அதுவே நீதியின் அடிப்படையாக இருந்த போதிலும் நாம் இரக்கத்தின் அடிப்படையில் செயல்பட வேண்டும்; ஏனெனில் அதுவே தேவன் நம்மோடு இடைபடும் வழிமுறையாகும்.

இந்த புத்திமதி அதிகமாகப் பேதுருவுக்கே பொருந்தும். ஏனெனில் அவர் ஒருமுறை கிறிஸ்துவின் விரோதிகளை வாளால் எதிர்த்து நிற்க முற்பட்டார் (லூக். 22:47-53). இரட்சிக்கப்படாத ரபியாக இருந்தபோது, தம்மால் முடிந்த எல்லா வகையிலும் பவுல் சபையை எதிர்த்தார். ஆனால் கிறிஸ்தவர் ஆன பிறகோ அவர் மனிதனின் ஆயுதங்களைக் கொண்டு தேவனுடைய போர்களை ஆற்றவில்லை (ரோமர். 12:17-21; 2 கொரி. 10:1-6). பேதுருவும் மற்ற அப்போஸ்தலர்களும் துன்புறுத்தப்பட்டபோது, அவர்கள் தங்கள் சொந்த ஞானத்தையும் பலத்தையும் சாராமல், ஜெபத்தையும், தேவ வல்லமையையும் சார்ந்திருந்தனர் (பார்க்க: அப். 4:23 லிருந்து).

கிறிஸ்தவர்களாக *அழைக்கப்பட்டுள்ளதை* நாம் எப்போதும் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். நமது எதிரிகள் நம்மை மோசமாக நடத்தும்போது அவர்களை நேசிக்க இது நமக்கு உதவி செய்யும். ஓர் "ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக் கொள்வதற்காக" நாம் அழைக்கப்பட்டிருக்-கிறோம். இன்று நாம் இந்த உலகத்தில் அனுபவிக்கும் பாடுகள், ஒருநாள் நமது ஆசீர்வதிக்கப்பட்ட சுதந்திரமாகிய பரலோக மகிமையோடு சேர்க்கப்படும் (மத். 5:10-12). ஆயினும் நமது எதிரிகளை அன்போடும், இரக்கத்தோடும்

நடத்தும்போது *இன்றே* ஓர் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக் கொள்கிறோம். அவர்களோடு ஓர் ஆசீர்வாதத்தைப் பகிர்ந்துகொள்ளும் போது நமக்காக ஓர் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்கிறோம்! ஒரு விசுவாசிக்கு பாடுகளின் காலம் என்பது ஆவிக்குரிய செழிப்பின் காலமாகும். சபை வரலாற்றில் பரிசுத்த-வான்களும். தியாக மரணமடைந்தவர்களும் இந்த உண்மைக்கு சாட்சி பகர்கின்றனர்.

நாம் ஒருவர் ஒருவரையும், நமது எதிரிகளையும், நமது *வாழ்க்கையையும் நேசிக்க வேண்டும்* (1 பேது. 3:10-12). வரவிருக்கும் பாடுகளைப் பற்றிய செய்தி ஒரு விசுவாசியை வாழ்க்கையில் பின்னடைவு செய்துவிடக் கூடாது. உலகத்துக்கு "மோசமான நாட்களாகத்" தெரிவது, சில கட்டுப்பாடுகளைக் கைக்-கொள்ளும் பட்சத்தில், ஒரு கிறிஸ்தவனுக்கு "நல்ல நாட்களாகவும்" இருக்க முடியும்.

முதலாவதாக, *நாம் ஜீவனை விரும்பத் திட்டவட்டமாகத் தீர்மானிக்க வேண்டும்.* இது சித்தத்தின்பாற் பட்ட ஒரு காரியம்: "ஜீவனை விரும்பி". இந்த விசுவாச சிந்தை ஒவ்வொரு சூழ்நிலையிலும் சிறந்ததையே பார்க்கிறது. இது பிரசங்கி 2:17ல் கூறப்பட்டுள்ள தீமையை எதிர்நோக்கும் மனோபாவத்துக்கு எதிரிடையானது. "ஆகையால் இந்த ஜீவனை வெறுத்தேன்... எல்லாம் மாயையும் மனதுக்கு சஞ்சலமுமாய் இருக்கிறது." நாம் *சகித்துக்கொள்ள* (endure) முடிவெடுத்து வாழ்க்கையை ஒரு பாரமாக்கலாம்; ஒரு போராட்டத்தில் இருந்து ஓடிவிடுவது போல் நாம் வாழ்க்கையில் இருந்து *தப்பித்து* (escape) கொள்ளலாம்; தேவன் தமது கட்டுப்பாட்டில் தான் வைத்தி-ருக்கிறார் என்பதை அறிந்து வாழ்க்கையை *அனுபவித்து மகிழலாம்* (enjoy). பேதுரு, உண்மையை சந்திக்க மறுக்கும் எதார்த்தத்துக்கு விரோதமான ஒரு மனோரீதியான உடற்பயிற்சியைப் பரிந்துரைக்கவில்லை. மாறாக, அவர் தமது வாசகர்களை வாழ்க்கையைப் பற்றி ஒரு நேரிய அணுகு-முறையை (Positive approach) எடுக்குமாறும், *விசுவாசத்தின் மூலமாக* ஒவ்வொரு சூழ்நிலையையும் சாதகமாக்கிக் கொள்ளுமாறும் தூண்டுகிறார்.

இரண்டாவதாக, *நாம் நமது நாவைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும்.* பெரும்பாலான வாழ்க்கைப் பிரச்சினைகள் தவறான வார்த்தைகளைத் தவறான உணர்வோடு பேசுவதாலேயே ஏற்படுகிறது. ஒவ்வொரு கிறிஸ்தவனும் யாக்கோபு 3-ஐத் தொடர்ந்து படித்து, சங்கீதம் 141:3-ஐ தினந்தோறும் ஜெபிக்க வேண்டும். அவசரப் பேச்சின் விளைவைப் பற்றி பேதுரு நன்றாகவே அறிவார். ஒரு பரிசுத்தவானின் வாழ்க்கையில் பொய்களுக்கு இடமே இல்லை.

மூன்றாவதாக, *நாம் நன்மை செய்து பொல்லாப்பை வெறுக்க வேண்டும்.* நமக்கு நேர்மறையும் (Positive) எதிர்மறையும் (negative) தேவை. ஆங்கில வேதாகமத்தில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கும் "eschew" (தமிழில் "நீங்கி") என்ற வார்த்தைக்கு "தவிர்த்தல்" (avoid) என்பதை

விடவும் ஆழமான அர்த்தம் உண்டு. "ஒன்றை அருவருத்து வெறுப்பதால் அதைத் தவிர்ப்பது" என்று அதற்கு அர்த்தம். பாவம் தவறானதால் அதைத் தவிர்ப்பது மட்டும் போதாது; நாம் அதை வெறுத்து ஒதுக்க வேண்டும்.

இறுதியாக, சமாதானத்தைத் தேடி அதைப் பின்தொடர வேண்டும். "சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் எனப்படுவார்கள்" (மத். 5:9). நாம் வெளியே சென்று பிரச்சினைகளைத் தேடினால் அவற்றைக் கண்டடையலாம்; ஆனால், நாம் சமாதானத்தைத் தேடினால் அதையும் கண்டடையலாம். அதற்காக, "என்ன விலை கொடுத்தும் சமாதானம்" என்று அர்த்தமில்லை. ஏனெனில், நீதியே எப்போதும் சமாதானத்துக்கு அடிப்படையானது (யாக். 3:13-18). மக்கள் சம்பந்தப்பட்ட விஷயங்களில் ஒரு கிறிஸ்தவன் மிதமான போக்கைக் கடைபிடித்து (exercises moderation), அவன் எப்போதும் தனக்கெனத் தனிவழியை விரும்புவதால் வீண் பிரச்சினைகளை உருவாக்குவதில்லை என்பதே அதற்குப் பொருள். "கூடுமானால் உங்களால் ஆன மட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாய் இருங்கள்" (ரோமர் 12:18). சில சமயங்களில் இது கூடுவதில்லை. ரோமர் 14:19-ல், சமாதானத்தை உருவாக்குவதற்காகக் கடினமாக உழைக்க புத்திமதி கூறப்பட்டுள்ளது. ஏனெனில் அது தானாக வருவதில்லை.

"நமது எதிரிகள் நம்மைப் பயன்படுத்தி அனுகூலம் அடைந்தால்?" என்று ஒரு பாடுபடும் கிறிஸ்தவர் கேட்கலாம். "நாம் சமாதானத்தை நாடுகிறோம்; ஆனால் அவர்களோ யுத்தத்துக்கு எத்தனப்படுகிறார்கள்!" பேதுரு அவர்களுக்கு உறுதி அளிக்கிறார்: கர்த்தருடைய கண்கள் தமது மக்கள் மேலும், அவருடைய செவிகள் அவர்கள் ஜெபத்துக்குத் திறந்தும் இருக்கின்றன. (பேதுரு இந்த பாடத்தை இயேசுவை நோக்காமல் நடக்க முயற்சி செய்தபோது கற்றுக் கொண்டார். மத். 14:22-33). நம்மைப் பாதுகாக்கவும், தேவைகளை அளிக்கவும் நாம் தேவனையே நம்பி இருக்க வேண்டும். அவர் மட்டுமே நமது எதிரிகளைத் தோற்கடிக்க முடியும் (ரோமர் 12:17-21).

பேதுரு சங்கீதம் 34:12-15-ஐ இங்கு மேற்கோள் காட்டுவதால் அந்த சங்கீதம் முழுவதையும் நீங்கள் வாசிப்பது பிரயோஜனமாக இருக்கும். "நல்ல நாட்கள்" என்பதற்கு தேவன் எவ்வாறு அர்த்தம் கொள்ளுகிறார் என்பதை அது விளக்குகிறது. அது பிரச்சினைகள் இல்லாத நாட்களாக இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. ஏனெனில், பயங்கள் (4) இடுக்கண்கள் (6, 17), துன்பங்கள் (19), மேலும் ஒரு "நொறுக்குண்ட இருதயத்தைப்" பற்றி கூட சங்கீதக்காரன் அதில் குறிப்பிடுகிறார். ஒரு விசுவாசிக்கு "நல்ல நாள்" என்பது அவன் செல்லமாகப் பாதுகாக்கப்படும் நாள் அல்ல; வாழ்க்கைப் பிரச்சினைகள், சோதனைகளின் காரணமாக அவன் தேவனுடைய உதவியையும், ஆசீர்வாதங்களையும் அனுபவிக்கும் நாளே. அந்த நாளில் அவன் தேவனை

உயர்த்துகிறான் (1-3); ஜெபங்களுக்குப் பதிலைப் பெறுகிறான் (4-7; கர்த்தருடைய நன்மைகளை ருசிபார்க்கிறான் (8); தேவனுடைய சமீபத்தை உணர்கிறான் (18).

அடுத்த முறை நீங்கள் "கெட்ட நாளாக" ஒன்றை நினைத்து வாழ்க்கையில் வெறுப்படையும் போது சங்கீதம் 34-ஐ வாசியுங்கள். நீங்கள் உண்மையிலேயே ஒரு "நல்ல நாள்" கிடைத்திருக்கிறது என்பதை உணர்ந்து தேவனை மகிமைப்படுத்துவீர்கள்.

**2. கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம் செய்யுங்கள்.**

இந்த வசனங்கள் 1 பேதுருவின் மூன்றாவது முக்கிய பகுதியை அறிமுகப்படுத்துகின்றன — பாடுகளின் மத்தியில் தேவ கிருபை. கர்த்தருக்குப் பயப்படும் பயமே மற்ற எல்லா பயங்களையும் வென்று விடுகிறது என்ற ஆவிக்குரிய முக்கியமான கொள்கையை அவைகள் அறிமுகப்படுத்துகின்றன. பேதுரு தமது புத்திமதிகளுக்குப் பக்கபலமாக ஏசாயா 8:13-14-ஐ மேற்கோள் காட்டுகிறார். "கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம் பண்ணுங்கள்" (3:15).

ஏசாயாவில் இருந்து இங்கு மேற்கோள் காட்டுவது முக்கியத்துவம் வாய்ந்தது. யூதாவின் இராஜாவான ஆகாஸ், அசிரிய இராணுவம் படையெடுத்து வரும் என்ற நிலையில் ஒரு பெரும் சிக்கலை சந்தித்தான். இஸ்ரவேலின் இராஜாவும், சீரிய இராஜாவும் ஆகாஸ் ஒரு கூட்டணியாகத் தங்களோடு சேர வேண்டும் என்று விரும்பினார். ஆகாஸ் மறுத்துவிட்டான். ஆகவே இஸ்ரவேலும், சீரியாவும் யூதாவின் மேல் படையெடுப்பதாக பயமுறுத்தின. ஆகாஸ் இரகசியமாய் அசிரியாவுடன் கூட்டணி அமைத்துக் கொண்டான். தீர்க்கதரிசியான ஏசாயா தேவனுக்கு விரோதமான இத்தகையக் கூட்டு வேண்டாம் என்றும் இரட்சிப்புக்காக தேவனை நம்பும்படியாகவும் ஆலோசனை கூறினான். "சேனைகளின் கார்த்தரையே பரிசுத்தம் பண்ணுங்கள். அவரே உங்கள் பயமும் உங்கள் அச்சமுமாய் இருப்பாராக" (ஏசா 8:13).

கிறிஸ்தவர்களாகிய நாமும் சிக்கல்களை எடுக்குமாறு பயத்துக்கு இடமளித்து தவறான முடிவுகளை எடுக்குமாறு தூண்டப்படுகிறோம். ஆனால் நாம் நம் இருதயங்களில் கிறிஸ்துவைக் கர்த்தர் என்று பரிசுத்தம் செய்தால் மனிதர்களுக்கோ, சூழ்நிலைகளுக்கோ ஒருபோதும் பயப்படத் தேவையில்லை. நமது எதிரிகள் நம்மை *வேதனைப்* படுத்தலாம்; ஆனால் நமக்குத் *தீங்கு* செய்ய முடியாது. தேவனை நம்பாமல் போனால் நமக்கு நாமே தீங்கு விளைவித்துக் கொள்ளலாம். பொதுவாக, நாம் நன்மை செய்தால் மக்கள் அதை எதிர்ப்பதில்லை. அப்படியே செய்தாலும், நமது சாட்சியை விட்டுக்கொடுத்து சமரசம் செய்துகொள்வதை விடவும், நீதியின் நிமித்தம் பாடனுபவிக்கலாம். பேதுரு இதே கருத்தை 4:12-19-ல் விளக்கமாக விவாதிக்கிறார்.

இயேசு நமது இருதயத்தில் கர்த்தராக இருந்தால், எதிரியை சந்திக்கும் போது, பயத்தை உணர்வதற்குப் பதில் ஆசீர்வாதத்தை அனுபவிக்கலாம்.

வசனம் 14-ல் உள்ள "பாக்கியவான்கள்" என்பது, மத்தேயு 5:10-ல் கூறப்படும் "பாக்கியவான்கள்" என்பதற்கு நிகரானது. இது "சொல்லி முடியாததும், மகிமையால் நிறைந்ததுமாய் இருக்கிற சந்தோஷத்தின் ஒரு பகுதி (1 பேதுரு 1:8).

இயேசு கிறிஸ்து நமது வாழ்க்கையின் கர்த்தராக இருக்கும் போது, ஒவ்வொரு பிரச்சினையும் ஒரு வாய்ப்பாகவும், சாட்சியாகவும் மாறுகிறது. நாம் "உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாய்" இருக்கிறோம். இங்கு உத்தரவு சொல்ல (answer) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையில் இருந்து வந்ததுதான் ஆங்கில வார்த்தையான 'apology'. அதற்கு "வருத்தப்படுகிறேன்" என்பது மாத்திரம் அர்த்தமல்ல. மாறாக அது, "நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் எதிர்வாதத்தைக் குறிக்கிறது". "Apolegetics" என்பது விசுவாசத்திற்கு ஆதரவாக வாதம் செய்யும், இறையியலின் ஒரு கிளைப்பாடமாகும். மிகவும் நம்பிக்கை இழந்த சூழ்நிலைகளில் ஒவ்வொரு கிறிஸ்தவனும் காரணகாரியமான எதிர்வாதங்களினால் கிறிஸ்துவின் மேல் உள்ள தன் நம்பிக்கையைத் தக்கவைக்க வேண்டும். ஒரு பிரச்சினை சாட்சி அளிக்க ஒரு வாய்ப்பை ஏற்படுத்துகிறது. அச் சமயங்களில் ஒரு விசுவாசி விசுவாசத்தோடும, நம்பிக்கையோடும் நடந்து கொள்ளுவானேயானால் அவிசுவாசிகள் அமர்ந்திருந்து அதைக் கவனிப்பார்கள்.

இந்த சாட்சியைக், கர்வத்தோடும், எல்லாம் தெரிந்த மனோபாவத்தோடுமல்லாமல் "சாந்தத்தோடும், வணக்கத்தோடும்" அளிக்க வேண்டும். நாம் சாட்சிகளேயொழிய குற்றம்சாட்டுகிற வழக்கறிஞர்கள் அல்ல. நாம் கூறுவதை நம் வாழ்க்கை நிச்சயமாக உறுதிப்படுத்த வேண்டும். வழிவிலகிப்போனவர்களோடு கிறிஸ்தவர்கள் வாதிட வேண்டும் என்று பேதுரு குறிப்பிடவில்லை. மாறாக இரட்சிப்படையாதவர்களிடம், நாம் நம்புவது என்ன என்றும், நாம் ஏன் நம்புகிறோம் என்பதையும் அன்போடு எடுத்துக் கூற வேண்டும். நமது குறிக்கோள் ஒரு விவாதத்தில் வெல்லுவது அல்ல; இழந்துபோன ஆத்துமாக்களைக் கிறிஸ்துவுக்குள் வென்றெடுப்பதே.

'கிறிஸ்துவைக் கர்த்தராக இருதயத்தில் பரிசுத்தம் செய்வது' என்பதின் பொருள் என்ன? எல்லாவற்றையும் அவரிடமாகத் திருப்பி, அவரை மகிழ்விக்கவும், மகிமைப்படுத்தவும் மட்டுமே வாழ்வது என்பதே அதன் அர்த்தம். மனிதன் நமக்குச் செய்வது குறித்துப் பயப்படாமல், அவரை மனவருத்தம் அடையச் செய்துவிடக் கூடாதே என்பதற்காக மட்டுமே பயப்படுதல். இந்த அணுகுமுறை நமது வாழ்க்கையை எவ்வளவு அதிசயமாக எளிதாக்கி விடுகிறது. விளைவுகள் எப்படி இருந்தாலும் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவது என்ற மத்தேயு 6:33-ம், ரோமர் 12:1-2-ம் இணைந்ததொரு அன்றாட விசுவாச சிந்தையே அது. நமது வாழ்க்கையில், தேவ சித்தத்துக்குக் குறைந்த எது ஒன்றினாலும் திருப்தி அடைவதில்லை என்ற அர்த்தத்தை அது தருகிறது (யோவான் 4:31-34). இயேசு கிறிஸ்துவே நமது

வாழ்க்கையில் கர்த்தராக இருக்கிறார் என்பதற்கு ஒரு சான்று என்னவென்றால், அவரைப்பற்றி மற்றவர்களுக்கு சாட்சி கொடுப்பதில் நாம் எவ்வளவு தூரம் ஆயத்தமாய் இருக்கிறோம் என்பதும், அவர்களைக் கிறிஸ்துவுக்காக வென்றெடுப்பதுமே.

3. நல்மனசாட்சியைக் காத்துக்கொள்ளுங்கள் (3:16-17).

"Conscience" என்ற வார்த்தை இரண்டு இலத்தின் வார்த்தைகளில் இருந்து வந்தது: CON என்பதற்கு "கொண்டும்" என்றும் SCIO என்பதற்கு "அறிவது" என்றும் அர்த்தம். நமக்குள் இருக்கும் நீதிபதியான மனசாட்சி ஏற்றுக்கொண்டோ அல்லது குற்றம்சாட்டியோ சாட்சியிடுவதின் மூலம் நமது செயல்களின் தன்மையைப் பற்றி நம்மால் அறிந்துகொள்ள முடிகிறது (ரோமர் 2:14-15). மனசாட்சியை ஒரு ஜன்னலோடு ஒப்பிடலாம். தேவ சத்தியத்தின் ஒளியை தன்வழியே அது வர அனுமதிக்கிறது. நாம் தொடர்ந்து கீழ்ப்படியாமற் போகும்போது, அது அழுக்கேறி அழுக்கேறி ஒருநாள் அதன்வழி ஒளி உள்ளே வரமுடியாமற் போகிறது. இதுவே 'அசுத்தமான மனசாட்சிக்கு' வழிவகுக்கிறது (தீத்து 1:15) பாவம் செய்து நன்மை தீமை அறிந்துகொள்ள முடியாமற் போனது "சூடுண்ட மனசாட்சி" (1 தீமோ. 4:2). மனசாட்சி விஷமேறிப் போவதற்கும் வாய்ப்புண்டு. அது மோசமான விஷயங்களை அங்கீகரித்து, ஒருவர் நன்மை செய்யும்போது குற்றம் சாட்டும். இதை வேதாகமம் "துர்மனசாட்சி" என்று அழைக்கிறது (எபி. 10:22). ஒரு குற்றவாளி தன் நண்பர்களோடு பேசும்போது குற்றத்தை உணர்ந்தாலும், தனது குற்றச் செயலில் வெற்றி பெறும்போது மகிழ்ச்சி அடைகிறான்.

மனசாட்சி அறிவை சார்ந்திருக்கிறது. அதுவே ஜன்னல் வழியாக வரும் "ஒளி". வார்த்தையைப் படிக்கும் விசுவாசி ஒருவர் தேவ சித்தத்தை நன்றாகப் புரிந்து கொள்கிறார். அவரது மனசாட்சி நன்மை தீமை அறிவதில் மிகவும் துல்லிய உணர்வுள்ளதாக இருக்கிறது. ஒரு "நல் மனசாட்சி" நாம் தவறு செய்ய எண்ணும்போது கண்டிக்கிறது; நாம் சரியானதைச் செய்யும்போது ஏற்றுக்கொள்கிறது. மனசாட்சியை வலிமையாகவும், பரிசுத்தமாகவும் வைத்துக்-கொள்ள "பயிற்சி தேவைப்படுகிறது (அப். 24:16). ஆவிக்குரிய அறிவிலும், கீழ்ப்படிதலிலும் நாம் வளராவிட்டால், நமது மனசாட்சி "பலவீனமாகப்" போய்விடுவதால், சாதாரண விஷயங்களுக்காகவும் அது நிலைதடுமாறி விடுகிறது (1 கொரி. 8).

சோதனை மற்றும் எதிர்ப்புகளின் போது நல்மனசாட்சி ஒரு விசுவாசிக்கு எவ்வாறு உதவி செய்கிறது? ஒரு விஷயம் என்னவெனில், அவன் தேவனுக்கும், மனிதனுக்கும் முன் தான் சரி என்றும், ஒன்றுக்கும் பயப்படத் தேவை இல்லை என்றும் அறிவதால், மனசாட்சி அவனை தைரியத்தால் உறுதிப்படுத்துகிறது. ஜெர்மனியின் வோர்ம்ஸ் (Worms) நகரில் உள்ள மார்ட்டின் லூதரின் நினைவுச் சின்னத்தில், 1521 ஆம் ஆண்டு ஏப்ரல் 18-

ஆம் நாள் அவர் சபைப் பேரவையின் முன் நின்று பேசிய துணிச்சலான வார்த்தைகள் பொறிக்கப்பட்டுள்ளன: "நான் இங்கே நிற்கிறேன்; என்னால் வெறொன்றும் செய்ய முடியாது. தேவனே எனக்கு உதவி செய்யும். ஆமென்." அவரது மனசாட்சி தேவ வார்த்தையில் கட்டப்பட்டிருந்ததால், அமைப்பு ரீதியிலான சபையையே எதிர்க்கும் துணிச்சலை அவருக்கு அது கொடுத்தது.

நல் மனசாட்சி நமது இருதயத்தில் அமைதியைத் தருகிறது. அமைதி உள்ளுக்குள் இருக்கும்போது வெளியில் உள்ள போராட்டங்களை நம்மால் சந்திக்க முடியும். அமைதி இழந்த மனசாட்சி இருதயத்தில் பிரிவுண்டாக்கி, ஒரு மனிதனின் வலிமையை உறிஞ்சிவிடுவதால், அவன் சிறப்பாக செயல்பட முடியாதவனாய்ப் போய் விடுகிறான். மனசாட்சி நமக்கு எதிராக சாட்சியிடும் போது, நாம் எவ்வாறு கிறிஸ்துவைப் பற்றி சாட்சி பகர முடியும்.

நல் மனசாட்சி, பிற மனிதர்கள் நம்மைப் பற்றி எதை அறிந்து கொள்வார்களோ, நமக்கு எதிராக எதைப் பேசுவார்களோ, நமக்கு எதிராக எதைச் செய்வார்களோ என்ற பயத்தைப் போக்குகிறது. கிறிஸ்து கர்த்தராக இருக்கும்போது, தேவன் ஒருவருக்கே நாம் பயப்படும் போது, நமது எதிரிகளின் மிரட்டல்கள், எண்ணங்கள், செயல்கள் பற்றி எல்லாம் நாம் பயப்படத் தேவை இல்லை. "கர்த்தர் என் பட்சத்தில் இருக்கிறார், நான் பயப்படேன்; மனுஷன் எனக்கு என்ன செய்வான்" (சங்.118:6). எதிரிக்கு பயந்து கர்த்தரை மறுதலித்த இந்த விஷயத்தில் தான் பேதுருவும் தோல்வி அடைந்தார்.

எது சரி அல்லது தவறு என்பதற்கு மனசாட்சி மட்டுமே பரிட்சை அல்ல என்பதைப் பேதுரு தெளிவாக்குகிறார். ஒரு மனிதன் ஒன்றில் "நன்மை செய்வான்" அல்லது "தீமை செய்வான்". ஒரு மனிதன் தேவ வார்த்தைக்குக் கீழ்ப்படிய மறுத்து, தனது மனசாட்சி அதைத் தவறாகக் கருதவில்லை என்று கூறுவானேயானால், அடிப்படையிலேயே அவனது மனசாட்சியில் ஏதோ குறையுள்ளது என்பதை ஒத்துக் கொள்கிறான். தேவ வார்த்தை போதகராக இருக்கும்போது மட்டுமே மனசாட்சி ஒரு பாதுகாப்பான வழிகாட்டியாகும்.

இன்றைய சமூகத்தில் கிறிஸ்தவர்கள் மேலும் மேலும் குற்றம் சாட்டப்படுகிறவர்களாகவும், பொய்ப் பிரசாரத்துக்கு ஆட்படுபவர்களுமாகவே இருப்பார்கள். நமது தனிப்பட்ட அளவுகோல்கள் இந்த இரட்சிக்கப்படாத உலகத்தின் அளவுகோல்கள் அல்ல. கிறிஸ்தவர்கள் பிரச்சினைகளை உருவாக்குபவர்கள் அல்ல; அவற்றை வெளிப்படுத்துகின்றவர்கள். ஓர் இரட்சிக்கப்பட்ட மனிதன் ஓர் அலுவலகத்தில் வேலை பார்க்கத் தொடங்கும்போதும், அல்லது ஒரு கல்லூரி விடுதிக்குள் போகும்போதும், விரைவில் அங்கு பிரச்சினைகள் ஆரம்பமாகிவிடுகின்றன. கிறிஸ்தவர்கள் இந்த இருண்ட உலகத்தில் ஒளியாய் இருக்கிறார்கள் (பிலி. 2:15). அவர்கள் "கனியற்ற அந்தகாரக் கிரியைகளை" (எபே. 5:11) வெளியரங்கமாக்குகிறார்கள்.

யோசேப்பு போத்திபாரின் வீட்டில் அதிகாரியாக சேவையைத் தொடங்கி, பாவம் செய்ய மறுத்தபோது, பொய்யாகக் குற்றம் சாட்டப்பட்டு சிறைக்குள்

போடப்பட்டான். தங்களுக்கு எதிரான சாட்சியாக தானியேலின் வாழ்க்கையும், வேலைகளும் இருந்ததால், பாபிலோனிய அரசாங்க அதிகாரிகள் திட்டமிட்டு அவனைப் பிரச்சினைக்குள் இழுத்து விட்டனர். நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, இந்த உலகத்தில் தம்முடைய ஜீவியத்தால் மக்களின் பாவ இருதயத்தையும் செயல்களையும் வெளிப்படுத்தியதால் அவர்கள் அவரை சிலுவையில் அறைந்தனர் (யோவான் 15:18-25). "அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாய் இருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" (2 தீமோ. 3:12).

நாம் நல் மனசாட்சியைக் காத்துக்கொள்ள வேண்டுமானால், நமது வாழ்க்கையில், பாவத்தை குறித்து சிந்தித்து அதை உடனடியாக அறிக்கையிட வேண்டும் (1 யோவான் 1:9). நாம் "ஜன்னலைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்." நாம் கர்த்தருடைய வார்த்தைக்காக நேரம் செலவழித்து, "ஒளியை உட்புக அனுமதிக்க வேண்டும்." ஒரு வலிமையான மனசாட்சி என்பது அறிவை அடிப்படையாகக் கொண்ட கீழ்ப்படிதலின் விளைவே. ஒரு வலிமையான மனசாட்சி கெட்டுப்போனவர்களுக்கு ஒரு பலமான சாட்சியைத் தருகிறது. அது பாடுகள் மற்றும் கஷ்டங்களின் மத்தியில் நமக்குப் பலமளிக்கிறது.

தீமை செய்து ஒரு கிறிஸ்தவன் கூட துன்பப்படக்கூடாது. நன்மை செய்து அதனால் துன்பப்பட்டால் எந்த கிறிஸ்தவனும் ஆச்சரியமடையக் கூடாது. நமது உலகம் மிகுந்த கலப்படம் ஆகிவிட்டதால், மக்கள், "தீமையை நன்மை என்றும், நன்மையைத் தீமை என்றும் சொல்லி, இருளை வெளிச்சமும், வெளிச்சத்தை இருளுமாக பாவிக்கின்றனர்" (ஏசா. 5:20). இயேசுவின் நாட்களில் இருந்த மதத் தலைவர்கள் அவரைக் "குற்றவாளி" (male factor) என்று அழைத்தனர். "தீய செயல்களைச் செய்யும் ஒரு மனிதன்" என்று அதற்கு அர்த்தம் (யோவான் 18:29-30). மக்கள் எவ்வளவு தூரத்திற்கு தவறாக இருக்க முடியும் என்பதற்கு இது உதாரணம்.

சபைக்கு கஷ்டங்கள் வரும்போது நாம் கிறிஸ்தவ அன்பை விளைவித்து எடுக்கவேண்டும்; ஒருபோதும் இல்லாத வகையில் நாம் இப்போது, ஒருவருக்கு ஒருவர் உதவியையும், ஊக்கத்தையும் பெற்றுக் கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறோம். நல் மனசாட்சி, வலிமையான முதுகெலும்பு உள்ளவர்களாகவும், தைரியமிகுந்த சாட்சிகளாகவும் நம்மை உருவாக்குவதால் அதைப் பேணிக் காக்க வேண்டும். இயேசு கிறிஸ்துவின் கர்த்தத்துவத்தை பேணிக் கொள்வதே அதன் இரகசியம். தேவனுக்கு நாம் பயந்தால் மனிதனுக்கு நாம் பயப்படத் தேவையில்லை. "மனிதனுக்கு பயப்படுவதாலேயே அவமான உணர்ச்சி ஏற்படுகிறது" என்று கூறினார் சாமுவேல் ஜாண்சன்: "தேவனுக்கு பயப்படுவதால் மனசாட்சி உருவாகிறது".

8

# நோவாவிடம் இருந்து கற்றறிவது

1 பேதுரு 3:18-22

ஒரு போதகர் மத்தேயு 16-ஐக் குறித்த ஒரு வேத ஆராய்ச்சிப் பாடத்தை நடத்திக்கொண்டு இருந்தார். "நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்த கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன் (18) என்று நமது கர்த்தர் பேதுருவிடம் கூறிய வசனத்திற்குப் பல்வேறு விளக்கங்களை அளித்தார். பின்னர், ஒரு பெண்மணி அவரிடம் கூறினார், "பாஸ்டர், இந்த வார்த்தைகளினால் இவ்வளவு பிரச்சினைகள் ஏற்படும் என்று தெரிந்திருந்தால், இயேசு ஒருபோதும் அவற்றைக் கூறி இருக்க மாட்டார்!"

பேதுரு தமது நிருபத்தின் இந்த பகுதியை எழுதிய போது, இது புதிய ஏற்பாட்டின் மிகவும் கஷ்டமான பகுதிகளில் ஒன்றாகக் கருதப்படும் என்று எண்ணிப் பார்த்திருக்க மாட்டார். நல்ல பல தேவபக்தி உள்ள விளக்க உரைகாரர்கள் எல்லாம் இந்த வசனத்தை வைத்து மல்யுத்தமே நடத்திவிட்டனர்; விவாதம் புரிந்தனர்; ஒருவருக்கொருவர் ஒத்துக்கொள்ளவும் மறுத்தனர்; இருப்பினும் பெரிய அளவில் ஆவிக்குரிய வழிகாட்டுதலை அவர்கள் விட்டுச் செல்லவில்லை. இப்பகுதியில் உள்ள எல்லா பிரச்சினைகளையும் நம்மாலும் தீர்த்துவைக்க முடியாது. ஆயினும், கஷ்ட காலங்களில் கிறிஸ்தவர்களை உற்சாகப்படுத்தும்படியாக பேதுரு தந்துள்ள நடைமுறை உதவிகளை இதில் இருந்து பெற்றுக்கொள்ள நாம் விரும்புகிறோம்.

இப்பகுதி மூன்று வெவ்வேறு ஊழியங்களை நமக்கு அளிக்கிறது. இந்த ஊழியங்களைப் புரிந்துகொள்ள முடிந்தால், தேவ சித்தத்துக்காகவும், கிறிஸ்துவின் மகிமைக்காகவும் நம்மால் பாடுபட முடியும்.

### 1. கிறிஸ்துவின் ஊழியம்

இயேசு கிறிஸ்துவைப் பற்றியே பேதுரு இப்பகுதியில் பிரதானமாகக் கூறுகிறார்; பிற செய்திகள் எல்லாம் அதை ஒட்டி இடம் பெற்றவைகளே. இப்பகுதியில் உள்ள விஷயங்கள், 2:21-லிருந்து பேதுரு எழுதியவைகளுக்கு இணையான-

வைகள். நீதிக்குப் புறம்பாகப் பாடுபட்ட போதிலும், தேவனுக்குக் கீழ்ப்படிதலுக்கு இயேசு கிறிஸ்துவை முழுமையான உதாரணமாகப் பேதுரு காட்டுகிறார்.

*அ. கிறிஸ்துவின் மரணம் (3:18).*

தீமை செய்து பாடனுபவிப்பதிலும் நன்மை செய்து பாடனுபவிப்பது மேன்மை என்று வசனம் 17-ல் எழுதி, அதற்கு உதாரணமாக இயேசு கிறிஸ்துவைக் காட்டுகிறார். "நீதியுள்ளவர் இயேசுவே" (அப். 3:14). எனினும் அவர் நியாயமற்ற முறையில் நடத்தப்பட்டார். ஏன்? நீதியற்றவர்களுக்காக மரித்து அவர்களை தேவனிடத்தில் கொண்டு வரவே! நமக்குப் பதிலாக (1 பேது 2:24), ஒரே தரம் மரித்தார் (எபி. 9:24-28). வேறு வார்த்தைகளில் கூறப்போனால், இயேசு நன்மை செய்து பாடனுபவித்தார்; அவர் தமது பாவங்களுக்காக மரிக்கவில்லை; ஏனெனில் அவரிடம் பாவம் ஏதும் இல்லை (1 பேது. 2:22).

"நம்மை தேவனிடத்தில் சேர்க்கும்படி" என்ற வாக்கியத்தொடர் ஒரு நுட்பச்சொல் (Technical Term). அதற்கு அர்த்தம் "அரசவையில் ஆஜராக அனுமதி பெறுதல்". இப்போது நாம் பிதாவினிடத்தில் சேரும் பாக்கியத்தை கிறிஸ்துவின் சிலுவைப்பாடுகளின் மூலம் பெற்றுள்ளோம் (எபே. 2:18; 3:12). அவரது சிங்காசனத்துக்கு அருகில் நாம் தைரியமாக வரலாம் (எபி. 10:19 லிருந்து). நமது தினசரி தேவைகளைச் சந்திக்க அவரது அற்புதமான கிருபையைப் பெற்றுள்ளோம் (ரோமர் 5:2). தேவாலயத்து திரைச்சீலை கிழிந்த போது, கிறிஸ்துவின் மூலமாக தேவனை அடையும் புதிய திறந்த வழியை அது குறிப்பாக உணர்த்தியது.

*ஆ. கிறிஸ்துவை அறிவித்தல் (3:19-20).*

"ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்" என்ற சொற்றொடர் ஒரு பிரச்சினையை உருவாக்குகிறது. கிரேக்க மூலப் பிரதியில் பெரிய எழுத்துக்களால் (Capital) "ஆவி" என்ற பதம் எழுதப்படவில்லை. எனவே "ஆவி" என்று (spirit) எழுதுவதை விட்டுவிட்டு "ஆவியானவர்" (spirit) என்று எழுத நமக்கு அதிகாரம் இல்லை. கிரேக்க அறிஞர்கள் 18-ஆம் வசனத்தின் முடிவு இவ்வாறு இருக்க வேண்டும் என்று நமக்குச் சொல்லுகிறார்கள்: "மாம்சப் பிரகாரமாகக் கொலை செய்யப்பட்டு ஆவியின் பிரகாரமாக உயிர்ப்பிக்கப்பட்டார்". மத்தேயு 26:41-லும், ரோமர் 1:3-4-லும் இருப்பதுபோல், இங்கு மாம்சத்துக்கும், ஆவிக்கும் நடுவில்தானே தவிர, கிறிஸ்துவின் மாம்சத்திற்கும், பரிசுத்த ஆவிக்கும் இடையில் இல்லை.

நமது கர்த்தருக்கு மெய்யான சரீரமும் (மத். 26:26), ஆத்துமாவும் (யோவான் 12:27), ஆவியும் (லூக். 23:46) இருந்தன. அவர் ஒரு மனிதனில் வாசம் செய்த தேவனல்ல; அவர் உண்மையான தேவ மனிதன் (God-Man). அவர் மரித்த போது தன் ஆவியைப் பிதாவுக்கு ஒப்புக்கொடுத்தார்

(லூக். 23:46; யாக். 2:26). ஆயினும், வெளிப்படையாகத் தெரிவது என்னவென்றால், அவர் "ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டிருந்தால்", ஒரு குறிப்பிட்ட நிலையில் அவருடைய ஆவி மரித்திருக்க வேண்டும். அது எப்போது நிகழ்ந்திருக்கலாம் என்றால், அவர் நமக்காக பாவமாக்கப்பட்டு, பிதா அவரைக் கைவிட்டபோதாக இருக்கலாம் (மாற்கு 15:34; 2 கொரி. 5:21). "ஆவியில் (பிரகாரமாக) உயிரிப்பிக்கப்பட்டார்" என்பது உயிர்த்தெழுதலைக் குறிக்காது; ஏனெனில் உயிர்த்தெழுதல் *சரீரப்* பிரகாரமானது.

எனவே, சிலுவையில் நமது கர்த்தர் பாடுபட்டு மரித்தார். அவரது சரீரம் மரணத்துக்கு உட்படுத்தப்பட்டது. அவர் நமக்காகப் பாவமாக்கப்பட்ட போது, அவரது ஆவியும் மரித்தது. ஆனால் அவரது ஆவி உயிர்ப்பிக்கப்பட்டு, அதை அவர் தேவனுக்கு ஒப்புக்கொடுத்தார். பின், பேதுருவின் கருத்துப்படி, இறப்புக்கும் உயிர்த்தெழுதலுக்கும் நடுவில் "காவலில் உள்ள ஆவிகளுக்குப்" போய்ப் பிரசங்கித்தார். இங்கு இரண்டு கேள்விகள் எழுகின்றன. அவர் சென்று பிரசங்கித்த "ஆவிகள்" எவை? அவைகளுக்கு அவர் என்ன பிரசங்கித்தார்?

சிலர் கூறுவதுபோல், இந்த "காவலில் உள்ள ஆவிகள்" கெட்டுப்போன பாவிகளின் நரகத்தில் உள்ள ஆவிகள் என்றும், அவைகளுக்கு இயேசு இரட்சிப்பின் நற்செய்தியைக் கொண்டு சென்றார் என்றால், உண்மையிலேயே தீர்க்கப்படவேண்டிய பிரச்சினைகள் எழுகின்றன. முதலாவதாக, மக்களை "ஆவிகள" என்று குறிப்பிடாமல், ஆத்துமாக்கள் (SOULS – KJV; தமிழில் "பேர்") என்று பேதுரு குறிப்பிடுகிறார் (3:20). புதிய ஏற்பாட்டில் "ஆவிகள்" என்ற பதம், மனிதர்களை அல்ல, தூதர்களையும், பேய்களையும் குறிப்பிட பயன்படுத்தப்படுகிறது. வசனம் 22, இந்த அர்த்தத்தையே நிலை நாட்டுவது போல் தோன்றுகிறது. மேலும் இயேசு நரகத்திற்குச் சென்றார் என்று வேதாகமத்தில் எங்கும் கூறப்படவில்லை. அப்போஸ்தலர் 2:31, அவர் "பாதாளத்திற்குச்" (Hades) சென்றார் என்று கூறினாலும் "பாதாளம்" என்பது நரகம் அல்ல. "பாதாளம்" என்பது இறந்தோர் தேசம்; தற்காலிகமான இடம், அங்கு அவர்கள் உயிர்த்தெழுதலுக்காகக் காத்திருக்கின்றனர். NASB, NIV ஆகிய ஆங்கில வேதாகமங்களில், வெளிப்படுத்தின விசேஷம் 20:11-15-ஐ வாசிப்பீர்களேயானால் முக்கிய வேறுபாட்டை நீங்கள் அறிந்து கொள்ளலாம். நரகம் என்பது வழிவிலகிப்போனவர்களுக்கு தீர்ப்புக்குப் பின் கிடைக்கும் நிரந்தரமான இடம். பாதாளம் என்பது தற்காலிகமான இடம். ஒரு கிறிஸ்தவன் இறந்தபின் இந்த இரண்டு இடங்களுக்குமே செல்வதில்லை; கிறிஸ்துவுடன் இருக்க அவன் பரலோகத்திற்குப் போகிறான் (பிலி. 1:20-24).

நமது கர்த்தர் தமது ஆவியைப் பிதாவுக்கு ஒப்புக்கொடுத்து, மரித்து, தமது மரணத்துக்கும் உயிர்த்தெழுதலுக்கும் நடுவில் ஒரு காலகட்டத்தில் இறந்தோர் தேசத்துக்குப் போய் அங்கே இருந்த ஆவிகளுக்கு ஒரு பிரசங்கத்தை அருளினார் (ஒருவேளை இந்த ஆவிகள் விழுந்த தூதர்களாக

இருக்கலாம் - பார்க்க: யூதா:6). அவர்கள் எவ்வாறோ ஜலப்பிரளயத்துக்கு முந்திய காலகட்டத்தோடு சம்பந்தப்படுத்தப் பட்டிருக்கிறார்கள். இதை 20-வது வசனம் தெளிவாக்குகிறது. "பிரசங்கித்தார்" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள வார்த்தைக்கு "ஒரு முன்னோடியைப் போன்று அறிவித்தல், அறைதல் (to proclaim) என்று அர்த்தம். அது. 1:12-லும் 4:6-லும் பேதுரு "சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்காக" உபயோகித்த வார்த்தை அல்ல. இயேசு, காவலில் இருந்த ஆவிகளுக்கு *என்ன* பிரசங்கித்தார் என்பதைப் பேதுரு கூறவில்லை. தூதர்கள் இரட்சிக்கப்பட முடியாது என்பதால் (எபி. 2:16), அது இரட்சிப்பைக் குறித்த செய்தியாக இருக்க முடியாது. அது ஒருவேளை சாத்தானுக்கும், அவனுடைய கூட்டத்திற்கும் மேலாக கிடைத்துள்ள வெற்றியின் அறிவிப்பாக இருக்கலாம் (பார்க்க: 1 பேதுரு 3:22; கொலோ. 2:15).

இந்த ஆவிகள் எவ்வாறு ஜலப்பிரளயத்துக்கு முந்திய காலத்திற்கு உட்பட்டவர்கள் என்று பேதுரு விளக்கவில்லை. சில ஆராய்ச்சியாளர்கள் ஆதியாகமம் 6:1-4-ல் கூறப்பட்டுள்ளவர்கள் "தேவ குமாரர்" என்றும், அவர்கள் மனுஷகுமாரத்திகளோடு சேர்ந்து இராட்சதர் என்ற இனத்தை உருவாக்கினர் என்றும் கூறுகிறார்கள். ஆனால், என்னால் இந்த விளக்கத்தை ஒத்துக்கொள்ள முடியவில்லை. விழுந்து விடாத நல்ல தூதர்களே "தேவ குமாரர்" என்று அழைக்கப்பட்டார்களே தவிர, விழுந்த தூதர்கள் அல்ல (யோபு 1:6; 2:1; மேலும் சாத்தான், தேவ தூதர்களிடம் இருந்து வேறுபடுத்திக் காட்டப்படுவதையும் கவனிக்கவும்). ஜலப்பிரளயத்துக்கு முந்திய உலகம் நம்பமுடியாத அளவுக்குப் பொல்லாததாக இருந்தது. அதற்கு சந்தேகமின்றி இந்த ஆவிகளும் முக்கிய காரணமாக இருந்தன (பார்க்க: ஆதி. 6:5-13; மேலும் ரோமர் 1:18 லிருந்து).

### *இ. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் (3:21).*

ஆவி சரீரத்தை விட்டு எடுபட்டுப் போகும்போது மரணம் நேரிடுவதால் (யாக். 2:26), ஆவி திரும்பவும் சரீரத்துக்குள் வருவதே உயிர்த்தெழுதல் எனலாம் (லூக் 8:55). மரித்தோரில் இருந்து இயேசு பிதாவால் எழுப்பப்பட்டார் (ரோமர் 6:4; 8:11). ஆனால், மரித்தோரில் இருந்து தானாகவே எழுவதற்கும் குமாரனுக்கு அதிகாரம் உண்டு (யோவான் 10:17-18). அது ஓர் அற்புதம்! அவரது உயிர்த்தெழுதலின் காரணமாகவே கிறிஸ்தவர்களுக்கு "ஜீவனுள்ள நம்பிக்கை" இருக்கிறது. (1 பேதுரு 1:3-4). கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல், நோவாவின் அனுபவத்தோடு எவ்வாறு சம்பந்தப்பட்டுள்ளது என்பதைப் பின்னர் நாம் பார்ப்போம்.

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் உள்ள முக்கியத்துவத்தை ஒருபோதும் நாம் குறைத்து மதிப்பிட முடியாது. அவர் தேவன் என்பதையும் (ரோமர் 1:4), இரட்சிப்புப்பணி முடிவடைந்து பிதா அதை ஏற்றுக்கொண்டார் என்பதையும் (4:25), மரணம் வெற்றிகொள்ளப்பட்டது என்பதையும் (1 தெச. 4:13-18; வெளி.

1:17-18) அது அறிவிக்கிறது. சுவிசேஷச் செய்தியில் உயிர்த்தெழுதலும் உள்ளடக்கம் (1 கொரி. 15:1-14). ஏனெனில் மரித்த ஓர் இரட்சகரால் ஒருவரையும் காப்பாற்ற முடியாது. உயிர்த்தெழுந்த கிறிஸ்துவே, வாழ்க்கைக்கும், சேவைக்கும் நமக்குத் தினந்தோறும் தேவைப்படும் வல்லமையை அளிக்க முடியும் (கலா. 2:20).

*ஈ. கிறிஸ்து பரத்துக்கேறல்.*

உயிர்த்தெழுந்து நாற்பது நாட்களுக்குப் பிறகு, நமது கர்த்தர் மகிமை நிறைந்த ஸ்தானமான பிதாவின் வலது பாரிசத்தில் அமருவதற்காகப் பரலோகத்திற்குப் போனார் (சங். 110:1; பிலி. 2:5-11; எபி. 12:1-3; அப். 2:34-36). விசுவாசிகளும் அவரோடுகூட உன்னதங்களில் வீற்றிருக்கின்றனர் (எபே. 2:4-6). அவர் மூலமாய் நாமும் "ஜீவனை அடைந்து ஆள" முடிகிறது (ரோமர் 5:17); அவர் பிரதான ஆசாரியராக சபைக்கு ஊழியம் செய்கிறார் (எபி. 7:25; 4:14-16); ஆலோசனையும் அளிக்கிறார் (1 யோவான் 1:9-2:2); அவர் தமது ஜனத்துக்கு ஓர் இடத்தை ஆயத்தம் செய்துகொண்டு இருக்கிறார் (யோவான் 14:1-6). ஒரு நாள் அவரே வந்து அவர்களைத் தம்மிடமாகப் பெற்றுக் கொள்ள வருவார்.

ஆயினும், பேதுரு வலியுறுத்த விரும்பும் முக்கியமான கருத்து என்னவெனில், கிறிஸ்து, "தேவதூதர்களும், அதிகாரங்களும், வல்லமைகளும்" ஆகிய இவற்றின் மீது முழு வெற்றி அடைந்தார் என்பதே (1 பேது. 3:22). இது சாத்தானின் தீய கூட்டத்தைக் குறிக்கிறது (எபே. 6:10-12; கொலோ. 2:15). விழாத தூதர்கள் *எப்போதும்* அவருக்கு அடங்கி இருப்பவர்களே. கிறிஸ்தவர்களாகிய நாம் *வெற்றிக்காகப்* போராடுவதில்லை; *வெற்றியில் இருந்து* போராடுகிறோம் - கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமது மரணம், உயிர்த்தெழுதல், பரத்துக்கேறல் ஆகியவற்றால் நமக்காக அடைந்த மாபெரும் வெற்றியிலிருந்து.

**2. நோவாவின் ஊழியம்.**

பேதுருவின் நாட்களில் ஆதிபிதாவான நோவா, யூத ஜனங்களாலும், கிறிஸ்தவர்களாலும் மிகவும் உயர்வான நிலையில் வைக்கப்பட்டிருந்தான். எசேக்கியேல் 14:19-20 அவன் இரண்டு மாபெரும் மனிதர்களான தானியேலுடனும், யோபுவோடும் சம்பந்தப்படுத்தப்படுகிறான். தீர்க்கதரிசனப் புத்தகங்களிலும், சங்கீதங்களிலும் ஜலப்பிரளயம் குறிப்பிடப்படுகிறது. இயேசு தமது தீர்க்கதரிசன பிரசங்கத்தில் நோவாவைக் குறிப்பிடுகிறார் (மத். 24:37-39; பார்க்க: லூக். 17:26-27). பேதுரு தமது இரண்டாவது கடிதத்தில் அவனைப் பற்றி குறிப்பிடுகிறார் (2:5; பார்க்க 3:6). எபிரேயர் 11:7ல் அவன் விசுவாச வீரர்களோடு பெயர்சுட்டப்படுகிறான்.

நோவாவின் ஊழியத்திற்கும் தமது வாசகர்களுக்கும் இடையில் பேதுரு என்ன உறவைப் பார்க்கிறார்? வரலாற்றின் மிக முக்கியமான காலகட்டத்தில் நோவா நீதியின் பிரசங்கியாக இருந்தான் (2 பேதுரு 2:5). ஏகத்தாளமும், எதிர்ப்பும் நிறைந்த அந்த காலக்கட்டத்தில் நோவா தேவனோடு சஞ்சரித்து,

தேவ சத்தியத்தை 120 ஆண்டுகள் பிரசங்கித்தான் (ஆதி. 6:3). தமது வருகைக்கு முன் உலகம் "நோவாவின் காலத்தைப்போல்" (மத். 24:37-39) இருக்கும் என்ற இயேசுவின் வாக்குறுதியை ஆதி கிறிஸ்தவர்கள் அறிந்திருந்த படியால் அவர்கள் அவரைச் சீக்கிரமாக எதிர்பார்த்தனர் (2 பேது. 3:1-3). தங்களைச் சுற்றி இருந்த சமுதாயம் சீரழிந்து, துன்புறுத்தல்கள் ஆரம்ப-மானவுடன் அவர்கள் கர்த்தருடைய வார்த்தையை நினைத்திருப்பார்கள்.

விசுவாச மனிதனாகிய நோவா, தான் ஒரு தோல்வியாகத் தோன்றிய போதிலும், தேவசித்தத்தைச் செய்து கொண்டே இருந்தான். இது பேதுருவின் வாசகர்களுக்கு உற்சாகம் அளிப்பதாக நிச்சயம் இருந்திருக்கும். விளைவு-களைக் கொண்டு விசுவாசத்தை அளந்தோமானால் நோவாவுக்கு குறைந்த மதிப்பீடே கிடைக்கும். ஆனாலும் தேவன் அவனை உயர்ந்தநிலையில் வைத்து மதிப்பிட்டார்.

ஆனால் இன்னொரு தொடர்பும் உள்ளது: இந்த ஜலப்பிரளய சித்திரத்தில் ஒரு கிறிஸ்தவனின் ஞானஸ்நான அனுபவத்தைப் பேதுரு கண்டார். நீங்கள் எந்த ஞானஸ்நானத்தைப் பின்பற்றினாலும், ஆதி சபை முழுக்கு ஞானஸ்-நானத்தையே பின்பற்றியது. அது நமது கர்த்தரின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலின் ஒரு சித்திரம். இன்று மக்கள் ஞானஸ்நானத்தை முக்கியமாகக் கருதாவிட்டாலும், ஆதி சபையில் அது ஒரு தீவிரமான விஷயம். ஞானஸ்-நானம் என்பது இறந்த காலத்தில் இருந்து ஒரு வெளிப்படையான பிளவு. மனமாற்றம் அடைந்தவர், குடும்பம், நண்பர்கள், வேலை ஆகியவைகளிடம் இருந்து பிரிவதையும் உள்ளடக்கியது. ஞானஸ்நானம் பெறப்போகிறவர் முதலில் கவனமாக விசாரிப்புக்கு உள்ளானார். ஏனெனில் ஞானஸ்நானத்துக்குள் அவர்கள் கீழ்ப்படிவது, பரிசுத்தமாகுதலின் ஒரு படியாகும்; அது சபையில் சேருவதற்கான ஆரம்ப சடங்கல்ல.

ஜலப்பிரளயம், மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலைச் சித்தரிக்கிறது. ஜலப்பிரளயத்தின் நீர், பூமியை நியாயத்தீர்ப்பாக அடக்கம் செய்தது. ஆனால் அது பாதுகாப்பாக நோவாவையும் குடும்பத்தையும் மேலே கொண்டுவந்தது. பேழையை ஆதிசபை இரட்சிப்பின் சித்திரமாகக் கண்டது. நோவாவும், குடும்பமும் விசுவாசத்தால் இரட்சிக்கப்பட்டனர். ஏனெனில் அவர்கள் தேவனை விசுவாசித்துப் பாதுகாப்பாம் பேழைக்குள் பிரவேசித்தனர். அதுபோலவே பாவிகளும் கிறிஸ்துவை நம்பி அவரோடு ஒன்றாகும்போது விசுவாசத்தால் இரட்சிக்கப்படுகின்றனர்.

நோவாவும் குடும்பமும் "ஜலத்தினாலே காக்கப்பட்டார்கள்" என்று எழுதும் பேதுரு, அந்த எடுத்துக்காட்டு ஞானஸ்நானத்தினால் இரட்சிப்பு என்பதைக் குறிக்கவில்லை என்று கவனமாக விளக்குகிறார். நம்மை இரட்சிக்கும் "இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலின்" ஓர் அடையாளமே ஞானஸ்-நானம் (1 பேதுரு 3:21). சரீரத்தின் மேல் நீர் படுவதாலோ, அல்லது நீருக்குள் சரீரத்தை வைப்பதாலோ பாவக்கறைகளை நீக்க முடியாது. இயேசு கிறிஸ்துவின் இரத்தமே அதைச் செய்ய முடியும் (1 யோவான் 1:7-2:2). இருப்பினும்,

ஞானஸ்நானம் ஒரு விஷயத்தில் இருந்து நம்மைக் காக்கிறது: அதுவே துர் மனசாட்சி. ஒரு வெற்றிகரமான சாட்சிக்கு நல்மனசாட்சி முக்கியம் என்பதைப் பேதுரு ஏற்கெனவே தம் வாசகர்களுக்குக் கூறியுள்ளார் (பார்க்க: 1 பேதுரு 3:16). ஞானஸ்நானத்தில், கிறிஸ்துவுக்கு உண்மை உள்ளவர்களாய் இருப்போம் என்பதை நாம் வெளியரங்கமாக்குகிறோம்; இது அந்த "நல்மனசாட்சியின்" ஒரு பகுதியாகும்.

"உடன்படிக்கை" என்று 21-ஆம் வசனத்தில் மொழி-பெயர்க்கப்-பட்டுள்ளது ஒரு சட்டச்சொல். அதன் அர்த்தம்: "உறுதிமொழி, உறுதியுடன் கேட்பது". ஒருவர் ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திடும்போது அவரை, "இந்த ஒப்பந்தத்தின் ஷரத்துகளுக்கு கீழ்ப்படியவும், அதை நிறைவேற்றவும் உறுதி-மொழி அளிக்கிறீர்களா?" என்று கேட்பார்கள். அவரது பதில் "ஆம்! அப்படியே செய்வேன்!" என்று இருக்க வேண்டும். அல்லது அவரால் கையெழுத்திட முடியாது. மனமாற்றம் அடைந்தவர் ஞானஸ்நானத்துக்கு ஆயத்தம் செய்யப்படும்போது, அவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படிந்து அவரை சேவிக்கவும், தங்கள் பழைய பாவ வாழ்க்கையில் இருந்து விடுபடவும் தீர்மானித்துள்ளார்களா என்று கேட்கப்படுவார்கள். அவர்களது இருதயத்தில் மறைவாக எதுவும் இருந்தாலோ, அல்லது வேண்டுமென்றே பொய் சொன்னாலோ, அழுத்தங்கள் மற்றும் பாடுகளின் மத்தியில் கர்த்தரை மறுதலித்தாலோ அவர்களுக்கு நல்மனசாட்சி இல்லை என்று அர்த்தம் (பேதுருவுக்கு இதைப்பற்றி தெரியும்). எனவே, பேதுரு, ஞானஸ்நான உறுதி-மொழியைத் தமது வாசகர்களுக்கு ஞாபகப்படுத்தி கிறிஸ்துவுக்கு உண்மையாய் இருக்குமாறு அவர்களை உற்சாகப்படுத்துகிறார்.

ஜலப்பிரளயத்தின் காலக்கிரமமும், நமது கர்த்தரின் உயிர்த்தெழுந்த நாளும் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். நோவாவின் பேழை அராராத் மலையில் 7-ஆம் மாதம் 17-ஆம் நாள் தங்கிற்று (ஆதி. 8:4). யூத அரசாங்க ஆண்டு அக்டோபரில் இருந்து ஆரம்பிக்கிறது. மத ஆண்டு ஏப்ரலில் பஸ்காவில் இருந்து ஆரம்பமானது. (யாத். 12:1-2). ஆனால் இது மோசேயின் காலம் வரையில் பின்பற்றப்படவில்லை. அக்டோபரில் இருந்து ஏழாம் மாதம் என்பது ஏப்ரல். நமது கர்த்தர் பஸ்காவின் (யாத். 12:6) 14-ஆம் நாள் சிலுவையில் அறையப்பட்டு, 3 நாள் கழித்து உயிர்த்தெழுந்தார். இது அந்த மாதத்தின் 17-வது நாளாகும். இந்த நாளில்தான் பேழை அராராத்தில் தங்கியது. எனவே நோவாவின் உதாரணம் இரட்சகரின் உயிர்த்தெழுதலோடு நெருங்கிய சம்பந்தம் உள்ளதாக இருக்கிறது.

நமது கர்த்தரின் சிலுவை அனுபவம் ஜலப்பிரளயத்தைப் போலவே, ஒரு நியாயத்தீர்ப்பின் ஞானஸ்நானமாக இருந்தது என்று கூறுவதில் ஓர் அர்த்தம் இருக்கிறது. அவர் தமது பாடுகளை ஞானஸ்நானம் என்று குறிப்பிடுகிறார் (மத். 20:22; லூக். 12:50). அவர் தமது மரணம், அடக்கம், உயர்த்தெழுதலைச் சித்தரிக்க யோனாவையும் உபயோகப்படுத்துகிறார் (மத். 12:38-41). இயேசு தமது

அனுபவத்தை விளக்க யோனா 2:3-ஐ மேற்கோள் காட்டி இருந்தால் அது பொருத்தமாகவே இருக்கும். "உம்முடைய வெள்ளங்களும் அலைகளும் எல்லாம் என் மேல் புரண்டது."

### 3. இன்றைய கிறிஸ்தவர்களின் ஊழியம்

பேதுரு தமது வாசகர்களோடு பகிர்ந்து கொள்ளும் முக்கியமான பாடங்களோடு ஒத்துப்போவது எளிதான காரியமே. அவை நமக்கு இன்று தேவையான-வைகளும் கூட.

முதலாவதாக, *கிறிஸ்தவர்கள் எதிர்ப்பை எதிர்பார்க்க வேண்டும்.* கிறிஸ்துவின் வருகை நெருங்கிக்கொண்டு இருப்பதால், நாம் நன்மை செய்வது, தேவபக்தி அற்ற மக்களின் கோபத்தைக் கிளறி நம்மைத் தாக்க அவர்களைத் தூண்டும். இயேசு ஒரு பூரணமான வாழ்க்கையை இந்த உலகத்தில் நடத்தினார். எனினும் ஒரு சாதாரணக் குற்றவாளியைப் போல் சிலுவையில் அறையப்-பட்டார். பாவமே செய்யாத நீதிபரர் ஒருவரே இவ்வாறு கொடூரமாக நடத்தப்பட்டார் என்றால், முழுமையற்ற நமக்குப் பாடுகளில் இருந்து தப்பிக்க என்ன உரிமை உண்டு? நாம் கவனமாக இருக்க வேண்டும். நன்மை செய்வதனாலும், நீதிக்காகவுமே நாம் பாடுபடுகிறோம், கீழ்ப்படையாமைக்கு அல்ல.

இரண்டாவது பாடம் என்னவெனில், *கிறிஸ்தவர்கள் விளைவுகளின் மேல் நம்பிக்கை வைக்காமல், விசுவாசத்தோடு தேவனுக்கு சேவைசெய்ய வேண்டும்.* நோவா தேவனுக்கு சேவை செய்து ஜலப்பிரளயத்தில் இருந்து ஏழு பேரை மட்டுமே காப்பாற்றினான். இருப்பினும் தேவன் அவனைக் கனப்படுத்தினார். அந்த ஏழு ஜனங்களிடம் இருந்து நாம் தைரியம் பெற வேண்டும். சிலுவையில் மரித்தபோது கிறிஸ்து ஒரு முழுத் தோல்வியாகவே தென்பட்டார். ஆயினும் அவரது மரணம் ஒரு மகத்தான வெற்றியாகும். அவருடைய நோக்கம் உலகில் இன்று தோல்வியைப் போலத் தோன்றினாலும், அவர் தமது குறிக்கோளை நிறைவேற்றுவார். அறுவடை என்பது ஒரு கூட்டத்தின் முடிவல்ல; காலத்தின் முடிவு.

மூன்றாவதாக, *கிறிஸ்துவின் வெற்றியில் இனம் காணப்படுவதால் நாம் உற்சாகம் பெறலாம்.* இது ஞானஸ்நானத்தில் சித்திரமாக்கப்படுகிறது. இக்கொள்கை ரோமர் 6-ல் விவரிக்கப்படுகிறது. ஆவியின் ஞானஸ்நானமே ஒரு விசுவாசியைக் கிறிஸ்துவோடு இனம் காட்டுகிறது (1 கொரி. 12:12-13). இதுவே ஜலத்தினால் எடுக்கப்படும் ஞானஸ்நானத்தால் சித்தரிக்கப்படுகிறது. ஆவியின் வல்லமை மூலமாகவே நாம் கிறிஸ்துவுக்காக வாழ்ந்து அவருக்காக சாட்சி கொடுக்கிறோம் (அப். 1:8). மனிதனுக்கு விரோதமான எதிர்ப்பு சாத்தானால் சக்தியூட்டப்படுகிறது. இந்த அதிகாரங்களையும், வல்லமைகளையும் தான் கிறிஸ்து தோற்கடித்தார். அவருக்கு "வானத்திலும், பூமியிலும் சகல அதிகார-மும்" உண்டு (மத் 28:18). எனவே நாம் தன்னம்பிக்கையோடும், வெற்றியோடும் முன்னேறிச் செல்லலாம்.

இன்னுமொரு நடைமுறைப் பாடம் என்னவென்றால், *நமது ஞானஸ்நானம் முக்கியமானதாகும்.* அது கிறிஸ்துவோடு நம்மை இனம்காட்டி, சென்ற வாழ்நாட் காலத்தில் இருந்து நாம் பிரிந்துவிட்டோம் என்பதற்கும், அவரது உதவியால் ஒரு புதிய வாழ்க்கையை வாழ்வோம் என்பதற்கும் சாட்சி தருகிறது (1 பேதுரு 4:1-4-ஐப் பார்க்கவும்). ஞானஸ்நானம் என்பது நாம் அவருக்கு கீழ்ப்படிவோம் என்பதற்கு உறுதிமொழி. பேதுருவின் உதாரணத்தை உபயோகப்படுத்துவது என்றால், அந்த ஒப்பந்தத்துக்கு நாம் ஒப்புக்கொள்கிறோம் என்று அர்த்தம். ஞானஸ்நானத்தை சாதாரணமாக எடுத்துக்கொள்வது தேவனுக்கு எதிரான பாவம். ஒருசிலர் ஞானஸ்நானம் இரட்சிப்புக்கு வழி என்று அதை மிகைப்படுத்தி மொழிய, வேறுசிலர் அதைக் குறைத்து மதிப்பிடுகின்றனர். இரண்டுமே தவறானதாகும். ஒரு விசுவாசி நல்மனசாட்சியோடு இருக்க அவன் தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

இதைச் சொல்லிவிட்ட பிறகு, நான் அதைத் தெளிவாக்க விரும்புகிறேன். ஐக்கியத்திற்கோ, ஆவிக்குரிய தன்மைக்கோ ஞானஸ்நானத்தைக் கிறிஸ்தவர்கள் ஒரு பரீட்சையாக்கக் கூடாது. அர்ப்பணித்த விசுவாசிகள் இந்த விஷயங்களில் வேறுபாடு கொண்டாலும் அவர்களை நாம் மதிக்கிறோம். ஜெனரல் வில்லியம் பூத் (General William Booth) இரட்சணிய சேனையை அமைத்தபோது, அவர் அதை "இன்னொரு சபை" யாக்கி விடக்கூடாது என்று மதச்சடங்குகளை விலக்கினார். குவேக்கர்ஸ் (Quakers) என்ற ஒரு கிறிஸ்தவக் குழு, மனசாட்சி நிமித்தமாகவோ அல்லது கொள்கை விளக்கத்தின் காரணமாகவோ ஞானஸ்நானம் எடுப்பதில்லை. நான் என்னுடைய நிலையை எடுத்துக்கூறிவிட்டேன். ஆயினும் ஞானஸ்நானம் ஒரு பரீட்சையே என்ற நிலையை நான் எடுப்பதாகக் கருதிவிடக்கூடாது என்று விளக்கக் கடமைப்பட்டுள்ளேன். "ஆனபடியால் சமாதானத்துக்கு அடுத்தவைகளையும், அந்யோந்ய பக்திவிருத்தி உண்டாக்கத் தக்கவைகளையும் நாடக்கடவோம்" (ரோமர் 14:19). "அவனவன் தன்தன் மனதிலே முழு நிச்சயத்தை உடையவனாக இருக்கக்கடவன்" (14:5).

முக்கியமான விஷயம் என்னவென்றால், ஒவ்வொரு கிறிஸ்தவனும், கிறிஸ்துவுக்குத் தன்னை அர்ப்பணிக்க ஒப்புக்கொடுத்து, அதைத் தன் செயலால் உறுதிப்படுத்த வேண்டும். பெரும்பாலான கிறிஸ்தவர்கள் ஞானஸ்நானத்தின்போது இதைச் செய்கிறார்கள். ஆயினும் ஞானஸ்நானமே முக்கியமற்றதாக மறக்கப்பட்டு விடலாம். தினந்தோறும் நமது சிலுவையை எடுப்பதே நாம் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் என்பதை நிரூபிக்கும்.

இறுதியாக, *இயேசு கிறிஸ்துவே ஒரே இரட்சகர், இந்த கெட்டுப்போன உலகம் அவரது சுவிசேஷத்தைக் கேட்பது அவசியம்.* இந்த சிக்கலான வசனத்தை உபயோகித்து ஒருசிலர் "மரணத்துக்குப் பின் இரட்சிப்படைய இரண்டாவது வாய்ப்பு" என்ற கருத்தை நிறுவ முயலுகின்றனர். நமது விளக்கம், "காவலில் இருந்த ஆவிகள்" தூதர்களே என்றும், இறந்து போனவர்களின்

ஆத்துமா அல்லவென்றும் நிரூபிக்கப் போதுமானதாகத் தோன்றுகிறது. அப்படியே அந்த ஆவிகள் இரட்சிக்கப்படாத மக்களாக இருந்தாலும், இந்த வசனங்கள் அவர்களது இரட்சிப்பைப் பற்றி எதுவும் கூறவில்லை. மேலும், *நோவாவின் காலத்துப் பாவிகளுக்கு மட்டும்* இயேசு இரட்சிப்பை ஏன் அருள வேண்டும்? (அப்படியே அவர் செய்திருந்தாலும்). சுவிசேஷத்தைப் பிரசங்-கிப்பதைக் கூற வழக்கமாக உபயோகிக்கும் வார்த்தையை விட்டுவிட்டு பேதுரு ஏன் "ஒரு முன்னோடியைப் போல் அறிவித்தார்" என்று அர்த்தம் தரும் வினைச்சொல்லைக் கையாள வேண்டும்?

எபிரேயர் 9:27, மரணம் இரட்சிப்புக்கான வாய்ப்பை முடித்துவிடுகிறது என்று தெளிவாக்குகிறது. இக் காரணத்தினாலேயே, சுவிசேஷம் அறிவித்-தலையும், சுவிசேஷ ஸ்தாபனங்களைப் பற்றியும் அக்கறை எடுத்துக்கொள்வது சபைக்கு அவசியமாய் இருக்கிறது. ஏனெனில் இரட்சிப்பைப் பற்றிய நற்செய்தியை அறிந்துகொள்ளாமலேயே ஏராளமான மக்கள் இறந்துபோய்க்-கொண்டு இருக்கின்றனர். நாம் நிச்சயமாக நம்பும் ஒன்று, பிறருடன் சுவிசேஷத்தைப் பகிர்ந்துகொள்ள நம்மைத் தூண்டவில்லை என்றால், ஒரு கஷ்டமான வசனத்தைப்பற்றி கருத்து வேறுபாடு கொண்டு சொற்சிலம்பம் செய்வது நமக்கு எந்த நன்மையையும் தராது.

பாடுகளின் காலம் சாட்சி கொடுப்பதற்காக நமக்குப் பல்வேறுபட்ட வாய்ப்புகளை அளிக்கிறது என்று பேதுரு தெளிவுபடுத்துகிறார்.

நாம் நமக்குக் கிடைத்துள்ள வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளுகிறோமா?

1 பேதுரு 3:19-20-க்கு மேலும் சில குறிப்புகள். பாதாளத்தில் சிறைப்-பட்டுக்கிடந்த பாவிகளுக்கு (பேதுரு இதை எழுதும் காலகட்டத்தில்) நோவாவின் மூலமாக இயேசு *தமது ஆவியினால்* பிரசங்கித்தார் என்று, இந்த வசனங்களைக் குறித்த ஒரு பரவலாக அறியப்பட்ட விளக்கம் கூறுகிறது. இந்த விளக்கம், வசனம் 18-ல் உள்ள "மாம்சத்தினால்" மற்றும் "ஆவியினால்" ஆகியவற்றிற்கு இடையில் இருக்கும் முரண்பாட்டைப் புறக்கணிக்கிறது. மேலும், வேதாகம ஆதாரமின்றி "ஆவி" என்ற வார்த்தையைத் தனக்குச் சாதகமாக்-குகிறது. வசனம் 19-ல், "போய்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தைக்கான கிரேக்கப்பதத்திற்கு "தானே செல்லுதல்" என்று அர்த்தம். "தனக்குப் பதிலாக வேறொருவரை அனுப்புதல்" என்ற அர்த்தத்தைத் தரவில்லை. எளிமையான விளக்கம் என்னவெனில் இயேசு தாமே சென்று பிரசங்கித்தார் என்பதே.

# 9

# மீதியிருக்கும் உங்கள் வாழ்க்கைக் காலம்

## 1 பேதுரு 4:1-11

பல நூறு தேசிய போதகர்கள் கலந்துகொள்ளும் ஆப்பிரிக்க உள்நாட்டு சுவிசேஷ நிறுவன மாநாட்டில் பங்குகொள்ள நானும், என் மனைவியும் நைரோபிக்குச் சென்றிருந்தோம். நீண்ட விமானப் பயணத்தினால் களைப்பாக இருந்த போதிலும், நாங்கள் அந்த மாநாட்டில் பங்கு கொள்வதை நினைத்து மிகவும் உணர்ச்சி மயமாக இருந்தோம். அது எப்போது ஆரம்பிக்கப் போகிறது என்று நாங்கள் பொறுமையிழந்தவர்களாய் இருப்பதை மாநாட்டுத் தலைவர் கவனித்துவிட்டார்.

"நீங்கள் இப்போது ஆப்பிரிக்காவில் இருக்கிறீர்கள்!" ஒரு தந்தையைப் போல அவர் என்னிடம் கூறினார். "உங்கள் கடிகாரத்தைத் தூர வைத்து-விடுவதே நீங்கள் செய்யவேண்டிய முதற் காரியம்!"

அவரது வார்த்தைகளில் இருந்த ஞானத்தை நாங்கள் கென்யா மற்றும் ஜெயரில் (Zaire) ஊழியம் புரிந்த பின் வந்த நாட்களில் புரிந்து கொண்-டோம். துரதிர்ஷ்ட வசமாக, மீண்டும் அமெரிக்கா திரும்பியதும், கெடு நேரங்களுக்குள்ளும், நிகழ்ச்சி நிரல்களுக்குள்ளும் மாட்ட வேண்டியதாயிற்று.

பேதுருவுக்கு *நேரத்தைப்* பற்றிச் சொல்ல நிறையவே இருந்தது (1:5, 11, 17, 20; 4:2-3, 17; 5:6). அவருக்கு வரவிருந்த தியாகமரணமும் இவ்வாறு அவர் வலியுறுத்துவதற்கு நிச்சயமாக ஒருவிதத்தில் காரணமே (யோவான் 21:15-19; 2 பேதுரு 1:12 லிருந்து). ஒரு மனிதன் நித்தியத்தை நம்புகிறான் என்றால் காலத்தை அவன் சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டும். நாம் இயேசு வருகிறார் என்பதில் உறுதியாய் இருந்தால் ஆயத்தமான ஒரு வாழ்க்கையையே வாழ விரும்புவோம். இயேசு முன்னே வந்தாலும் சரி, மரணம் முன்னே வந்தாலும் சரி, நாம் நமது "மீதியான காலத்தை" நித்திய வாழ்வை நமக்குப் பெற்றுத்தரும்படியாக வாழ விரும்பவேண்டும்.

நம்மால் முடியக்கூடியதே! ஒரு கிறிஸ்தவன் தனது வாழ்க்கையை தேவன் விரும்புகின்றபடி அமைத்துக்கொள்ள, தனது வாழ்க்கைக் காலத்தில் ("மீதியிருக்கும் அவனது வாழ்க்கைக் காலத்தில்) வளர்த்தெடுக்க வேண்டிய நான்கு மனோபாவங்களைக் குறித்துப் பேதுரு விளக்குகிறார்.

**1. பாவத்திற்கு எதிரான உறுதியான சிந்தை (4:1-3)**

ஆயுதம் தரித்துப் போருக்குத் தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்ளும் ஒரு படைவீரனின் சித்திரம் இது. நமது சிந்தைகளே நமது ஆயுதங்கள்; பலவீனமானதும் தவறானதுமான சிந்தைகள் நம்மைத் தோல்வியை நோக்கியே வழிநடத்தும். எதிர்பார்ப்பே எதிர்வருவதைத் தீர்மானிக்கிறது. ஒரு விசுவாசி ஒரு நல்ல வாழ்க்கையை வாழ நல்ல சிந்தையைக் கொண்டிருக்க வேண்டும்.

நானும் என் நண்பர் ஒருவரும் ஓர் உணவுவிடுதியில் மதிய உணவுக்காக சந்தித்தோம். ஒளி மிகக்குறைவாக இருக்கும் இடங்களில் அதுவும் ஒன்று. உங்களது மேசையைக் கண்டுபிடிக்க உங்களுக்கு ஒரு சுரங்கத் தொழிலாளியின் தலைக்கவசம் தேவைப்படும். உட்கார்ந்து சில நிமிடங்கள் கழித்த பிறகே மெனுக் கார்டில் உள்ளவை கண்ணுக்குப் புலனாகிறது. இந்த இருட்டிலும் என்னால் எளிதாக படிக்க முடிகிறதே என்று நான் ஆச்சரியத்தோடு கூறினேன். என் நண்பர் சொன்னார்: "ஆமாம்! இருளோடு நாம் பழக்கமாகிக் கொள்ள அதிக நேரம் தேவைப்படுவதில்லை!"

இந்த வாக்கியத்துக்குள் ஒரு பிரசங்கமே அடங்கி இருக்கிறது. பாவத்தோடு பழகிக் கொள்வது என்பது கிறிஸ்தவர்களுக்கு எளிதானதே. வெறுத்து எதிர்க்கும் ஓர் உறுதியான சிந்தை இல்லை என்றால், நாம் மெதுவாகப் பாவத்தோடு பழகிக்கொண்டு விடுவோம். சில சமயங்களில் இது நமக்குத் தெரியாமலேயே நேர்ந்துவிடுகிறது. நமது "மீதியுள்ள வாழ்க்கைக் காலத்தைப்" பாழக்கும் ஒரு விஷயம் பாவமே. பாவத்தோடு வாழும் ஒரு விசுவாசி சாத்தானின் கையில் இருக்கும் ஓர் ஆயுதம். பாவத்தை நமது வாழ்க்கையில் நாம் எதிர்க்கவேண்டும் என்பதைப் புரியவைக்கப் பேதுரு பல விவாதங்களை முன் வைக்கிறார்.

***அ. பாவம் இயேசுவுக்கு என்ன செய்தது என்பதைச் சிந்தியுங்கள் (4:1).***

பாவத்தின் காரணமாக அவர் *பாடுபட* வேண்டியதாய் இருந்தது (பார்க்க:2:21; 3:18). இயேசுவைப் பாடுபட வைத்து, அவரைச் சிலுவையில் மரணமடையச் செய்த ஒன்றை எவ்வாறு நாம் மகிழ்ந்தனுபவிக்க முடியும்? உங்களுடைய குழந்தையைக் குத்திக்கொன்று விட்ட ஒரு மூர்க்கமான குற்றவாளியின் கத்தியைக் கண்ணாடிப் பேழையில் பட்டாடை விரித்து நீங்கள் பாதுகாப்பீர்களா? நான் நம்பமாட்டேன்! அந்த கத்தியை மறுபடியும் பார்க்கக்கூட நீங்கள் விரும்ப மாட்டீர்கள்.

நிரந்தரமாக வென்றடக்கிப் பாவத்துக்கு ஒரு முடிவு கட்டவே நமது கர்த்தர் பூலோகத்திற்கு வந்தார். சத்தியத்தைப் போதித்தும், மனிதர்களுடைய

கண்களுக்கு முன்பாக அதன்படி வாழ்ந்து காட்டியும், பாவத்தைக் குறித்த அறியாமையை அகற்ற முனைந்தார். பாவத்தின் விளைவுகளைக் குணப்படுத்தியும், மன்னித்தும் முறைசெய்தார். சிலுவையில் பாவத்துக்குக் கடைசி மரண அடியைக் கொடுத்தார். கெட்டுப்போன பாவிகளின் மேல் மாபெரும் இரக்கத்தைக் கொண்டவராக இருந்த போதிலும், அவர் பாவத்துக்கு எதிராக ஓர் உறுதியான சிந்தையை ஆயுதமாகத் தரித்தார்.

"பாவத்தில் இருந்து அறுந்து விடுவதே" நமது வாழ்க்கையின் குறிக்கோள். நாம் சாகும் வரை இக்குறிக்கோளை அடைய முடியாது; அல்லது கர்த்தர் திரும்பிவந்து நமது வீட்டுக்கு நம்மை அழைக்கும் வரை முடியாது. ஆனால் இது நமது முயற்சியைத் தடுத்துவிடக்கூடாது (1 யோவான் 2:28-3:9). *பாவத்தின் பாடுகளால் துன்புறுவது* ஒரு மனிதனைப் பாவம் செய்வதில் இருந்து தடுத்துவிடும் என்று பேதுரு கூறவில்லை. வாதைகளினால் எகிப்தின் பார்வோன் மிகுந்த துன்பத்திற்கு ஆளானான். ஆனாலும் அவன் மேலும் மேலும் பாவம் செய்தான். நான் துன்பப்படும் மக்களைச் சந்தித்து இருக்கிறேன். அவர்கள் தேவனை சபித்து, வேதனையின் காரணமாக மேலும் மேலும் கசப்பு நிறைந்தவர்களாக மாறுகின்றனர்.

பாடுகளோடு கூட *கிறிஸ்துவும் நம் வாழ்க்கையில் இருப்பது* பாவத்தை மேற்கொள்ள நமக்கு உதவியாக இருக்கும். ஆனால், இங்கு கூறப்படும் மையக்கருத்து ரோமர் 6-ல் போதிக்கப்பட்ட அதே சத்தியமாகவே தோன்றுகிறது. கிறிஸ்துவின் பாடு மரணத்தில் அவரோடு வைத்து நாமும் இனங்காணப்படுவதால், நம்மால் பாவத்தை மேற்கொள்ள முடியும். நாம் தேவனுக்கு நம்மை ஒப்புக்கொடுத்து, இயேசுவைப் போல பாவத்துக்கு எதிரான சிந்தைகொண்டவர்களாய் இருந்தால், பழைய வாழ்க்கையை மேற்கொண்டு புதிய வாழ்க்கையை வெளிப்படுத்த முடியும்.

### *ஆ. தேவசித்தத்தை அனுபவித்து மகிழுங்கள் (4:2).*

முரண்பாடு என்பது மனித இச்சைகளுக்கும் தேவ சித்தத்துக்கும் நடுவில்தான். நமது நீண்டகால நண்பர்களால் நமது வாழ்க்கையில் நிகழ்ந்துள்ள மாற்றங்களைப் புரிந்து கொள்ள முடியாது. முன்னனுபவித்த "மிகையான கேளிக்கைகளுக்குள்" மீண்டும் நாம் திரும்பிவிட வேண்டும் என்றே அவர்கள் விரும்புகின்றனர். ஆனால் தேவ சித்தம் அதைவிட மேலானது. நாம் தேவ சித்தத்தின்படி காரியமாற்றும்போது, அது நாம் நமது "மீதியான வாழ்க்கைக் காலத்தை" நீடித்திருப்பதும், திருப்தி அளிப்பதுமான ஒன்றில் *முதலீடு* செய்கிறோம் என்றாகிறது. ஆனால் நாம் நமது "மீதியான காலத்தை" நம்மைச் சுற்றியுள்ள உலகத்திற்குக் கொடுக்கும்போது, அதை நாம் *வீணாக்குகிறோம்*. இயேசுவுக்கு முன்னால் நிற்கும் வேளையில் அதற்காக வருத்தப்படுவோம்.

தேவசித்தம் என்பது பிதாவானவர் நம்மீது சுமத்தும் பாரம் அல்ல. மாறாக அதுவே எல்லா பாரங்களையும் இலகுவாக்கும் தெய்வீக அனுபவமும்,

உற்ற துணையும் ஆகும். தேவ சித்தம் தேவனுடைய இருதயத்தில் இருந்து வருகிறது (சங். 33:11). எனவே அது தேவ அன்பின் வெளிப்பாடு. அவர் செய்வதை எல்லா நேரமும் புரிந்து கொள்ள முடியாது என்றாலும். அவர் நமக்கு நன்மையானதையே செய்கிறார் என்பதை நாம் அறிவோம். நாம் விளக்கங்களினால் அல்ல. வாக்குத்தத்தங்களினாலேயே வாழ்கிறோம்.

***இ. கிறிஸ்துவைச் சந்திக்கும் முன் நீங்கள் என்னவாக இருந்தீர்கள் என்பதை ஞாபகப்படுத்திப் பாருங்கள் (4:3).***

உங்கள் இறந்தகால வாழ்க்கையைத் திரும்பிப் பார்ப்பது சில வேளைகளில் தவறாக முடியும். ஏனெனில் சாத்தான் இந்த நினைவுகளைக் கொண்டு உங்களை அதைரியப்படுத்திவிடலாம். ஆனால் தேவன், ஒரு காலத்தில் அவர்கள் எகிப்து தேசத்தில் அடிமையாய் இருந்ததை ஞாபகப்படுத்தி பார்க்குமாறு இஸ்ர-வேலரிடம் கூறினார் (உபா. 5:15). பவுல் தாம் விசுவாசிகளைத் துன்புறுத்-துபவராக இருந்ததை நினைவுகூர்ந்தார் (1 தீமோ. 1:12 லிருந்து). இது. கிறிஸ்துவுக்காக இன்னும் அதிகமாகச் செய்ய அவரைத் தூண்டியது. நாம் சிலசமயம் பாவத்தின் அடிமைத் தளைகளை மறந்துவிட்டு. பற்றுந்து போய்விடும் பாவத்தின் இன்பங்களை மட்டுமே நினைவுகூருகிறோம்.

"புறஜாதிகளுடைய இஷ்டம்" என்பது "இரட்சிக்கப்படாத உலகத்தின் இஷ்டம்" (1 பேதுரு 2:12). இந்த உலகத்திற்கு ஒத்த வேஷம் தரித்துக்கொள்ளும் போது. வழிவிலகிப்போன பாவிகள் ஒருவரைப்போல ஒருவர் நடந்து கொள்ளுகிறார்கள் (ரோமர் 12:2; எபே. 3:1-3). "காம விகாரம்", "துர் இச்சை" என்பவை பாலியல் பாவங்களை மட்டுமின்றி எல்லா தீய வேட்கைகளையும் விவரிக்கின்றன. "மதுபானம் பண்ணி களியாட்டுச் செய்து" என்பது புறஜாதியாரின் மதுபுரண்டோட நடைபெறும் களியாட்டங்களைக் குறிக்கிறது. நிச்சயமாக இவையாவும் புறஜாதி வழிபாட்டின் ஒரு பகுதியே; ஏனெனில் இவற்றில் "மத விபச்சாரம்" ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றே. இத்தகைய வழிபாட்டு முறைகள் சட்டத்தால் தடைப்படுத்தப்பட்டிருந்தாலும் (அருவருப்பான – "abominable" = சட்ட விரோதமான), அவைகள் இரகசியமாகக் கடைபிடிக்கப்பட்டன.

இரட்சிக்கப்படாத நாட்களில் இத்தகையப் பெரும் குற்றமான பாவங்களைச் செய்யவில்லை என்றாலும். நாமும் பாவிகளே - நமது பாவங்கள் கிறிஸ்துவைச் சிலுவையில் அறையத் துணை புரிந்தன. அத்தகைய வாழ்க்கைக்குள் திரும்பிப் போவது எவ்வளவு மடைமை நிறைந்தது.

**2. வழிவிலகிப் போனவர்களைக் குறித்து ஒரு பொறுமையான சிந்தை (4:4-6).**

தங்கள் நண்பர்கள் கிறிஸ்துவை நம்பி தேவப் பிள்ளைகள் ஆன பிறகு அனுபவிக்கும் அடிப்படை மாற்றத்தை இரட்சிப்பு அடையாத மக்கள் புரிந்து கொள்ளுவதில்லை. தங்கள் உடலைச் சீரழித்து. குடும்பத்தை அழித்து. ஒரு

பாவத்தில் இருந்து இன்னொரு பாவத்திற்குள்ளாக ஓடித் திரிந்து தங்கள் வாழ்க்கையை அழித்துக் கொள்பவர்களை ஜனங்கள் விநோதமாகப் பார்ப்பதில்லை. ஆனால், ஒரு குடிகாரன் நல்லவனாகவும், ஓர் ஒழுக்கம் கெட்டவன் பரிசுத்தவானாகவும் மாறும்போது அவனது குடும்பம் அவனைப் பைத்தியம் பிடித்தவன் என்று கூறுகிறது. பெஸ்து பவுலிடம் கூறினான்: "நீ பிதற்றுகிறாய்!" (அப். 26:24). மக்கள் அதேபோல்தான் நமது கர்த்தரைப் பற்றியும் நினைத்தனர் (மாற்கு 3:21).

நாம் வழிவிலகிப் போனவர்களின் வாழ்க்கை முறையோடு ஒத்துப்போக முடியாது; அவர்களது பாவத்தில் பங்குகொள்ள முடியாது; இருந்தாலும் அவர்களிடம் நாம் பொறுமையாகவே இருக்க வேண்டும். கூறப்போனால், இரட்சிப்படையாத மக்கள் ஆவிக்குரிய சத்தியத்தைக் காணமுடியாத குருடர்களாய் இருக்கின்றனர் (2 கொரி. 4:3-4). ஆவிக்குரிய அனுபவத்தைப் பொறுத்த வரையில் அவர்கள் செத்தவர்களாய் இருக்கிறார்கள் (எபே. 2:1). வழிவிலகிப் போனவர்களுக்கு உண்மையில் நமது தொடர்பு முக்கிய-மானதாகும். ஏனெனில் அவர்களுக்குத் தேவைப்படும் சத்தியத்தை ஏந்திச் செல்பவர்களாய் நாம் இருக்கிறோம். இரட்சிப்படையாத நண்பர்கள் நம்மைத் தாக்கும் போது, அதுவே நாம் அவர்களுக்குச் சாட்சி அளிக்கக் கிடைக்கும் வாய்ப்பாகும் (1 பேது. 3:15).

இரட்சிப்படையாதவர்கள் நம்மை நியாயம் தீர்க்கலாம். ஆனால் ஒருநாள் தேவன் அவர்களை நியாயம் தீர்ப்பார். கடைசியானத் தீர்ப்பு தேவனிடம் இருக்கிறது என்பதை அறிந்து, அவர்களோடு விவாதம் செய்யாமல், அவர்-களுக்காக நாம் ஜெபிக்க வேண்டும். இதுவே கிறிஸ்து கொண்டிருந்த சிந்தை (2:23); அப்போஸ்தலர் பவுலும் அவ்வாறே (2 தீமோ. 4:6-8).

ஆறாம் வசனத்தைப் பாடுகள் என்ற பொருளில்தான் நாம் விளக்க வேண்டும். இல்லாவிட்டால், மரணத்திற்குப் பின்னர் இரட்சிப்புக்கான இன்னொரு வாய்ப்பு உண்டு என்ற கருத்து எழுவதற்கு வாய்ப்பாகப்போகும். விசுவாசத்தின் நிமித்தமாக தியாக மரணமடைந்த கிறிஸ்தவர்களை தமது வாசகர்களுக்குப் பேதுரு ஞாபகப்படுத்துகிறார். அவர்கள் மனிதர்களால் தவறுதலாக நியாயத்தீர்ப்புக்கு உட்படுத்தப்பட்டனர்; ஆனால் இப்போதோ, தேவ சமூகத்தில் அவர்களுக்கு மெய்யான நியாயத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. "மரித்தோ-ரானவர்கள்" என்பது "*இப்போது* இறந்திருப்பவர்களைக்" குறிக்கிறது. அதாவது பேதுரு எழுதிக்கொண்டு இருக்கும் சமயத்தில். சுவிசேஷம் ஜீவனுள்ளவர்-களுக்கே பிரசங்கிக்கப்படுகிறது (1 பேதுரு 1:25); ஏனெனில் மரணத்துக்குப் பின் இரட்சிப்புக்கு வழி இல்லை (எபி. 9:27).

இரட்சிப்படையாத நண்பர்கள் நம்மைப் பற்றித் தீமையாகப் பேசலாம்; எதிர்க்கவும் செய்யலாம். ஆனால் கடைசியாக நியாயந் தீர்ப்பவர் தேவனே. பாடுகளின் மத்தியில் நாம் நம் உயிரைக்கூட தியாகம் செய்யலாம். ஆனால் தேவன் நம்மைக் கனப்படுத்திப் பலன் அளிப்பார். நாம் தேவனுக்கே பயப்படவேண்டும்; மனிதனுக்கல்ல! (1 பேதுரு 3:3-17; மத். 10:24-33). நாம் இந்த

மானிட உடலில் இருக்கும்போது ("மாம்சத்தில்") மனித அளவுகோல்களால் நியாயந்தீர்க்கப்படுவோம். ஒரு நாள் நாம் கர்த்தரோடு இருப்போம் ("ஆவியில்"): அப்போதே மெய்யான இறுதித் தீர்ப்பைப் பெறுவோம்.

**3. கிறிஸ்து வருவார் என்று எதிர்பார்க்கும் சிந்தை (4:7).**

ஆதி சபையில் இருந்து கிறிஸ்தவர்கள் தங்கள் வாழ்நாட் காலத்திலேயே கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை எதிர்பார்த்தனர் (ரோமா 13:12; 1 யோவான் 2:18). அவர் வரவில்லை என்ற உண்மை அவரது வாக்குத்தத்தத்தை இல்லாமல் ஆக்காது (2 பேதுரு 3; வெளி. 22:20). தீர்க்கதரிசன வசனங்களுக்கு நாம் என்ன விளக்கம் கொடுத்தாலும், நாம் எதிர்பார்ப்போடேயே வாழ-வேண்டும். முக்கியமான விஷயம் என்னவென்றால் நாம் ஒருநாள் கர்த்தரைப் பார்த்து அவர்முன் நிற்போம். இன்று நாம் எப்படி வாழ்ந்து சேவிக்கிறோம் என்பதே, அந்நாளில் நாம் எப்படி நியாயம் தீர்க்கப்பட்டு பலனைப்பெறுவோம் என்பதை நிர்ணயிக்கும்.

இந்த எதிர்நோக்கும் சிந்தை நம்மைக் கனவுகாணும் சோம்பேறி-களாகவோ, அதியார்வமிக்க வெறியர்களாகவோ மாற்றிவிடக்கூடாது (2 தெச. 3:6 லிருந்து). கர்த்தரின் வருகையைக் குறித்து சமநிலையோடு இருப்பதற்காகப் பேதுரு தமது வாசகர்களுக்குப் பத்து கட்டளைகளைத் தருகிறார்.

1. தெளிந்த புத்தியுள்ளவர்களாய் இருங்கள் (7)
2. ஜெபம் பண்ணுவதற்கு ஜாக்கிரதை உள்ளவர்களாய் இருங்கள் (7)
3. ஊக்கமான அன்புள்ளவர்களாய் இருங்கள் (8)
4. ஒருவரை ஒருவர் உபசரியுங்கள் (9)
5. ஆவிக்குரிய வரங்களைக் கொண்டு ஊழியம் செய்யுங்கள் (10-11)
6. புதுமை என்று திகையாது இருங்கள் (12)
7. களிகூர்ந்து மகிழுங்கள் (13)
8. வெட்கப்படாமல் இருங்கள் (15-16)
9. தேவனை மகிமைப்படுத்துங்கள் (16-18)
10. உங்களை தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள் (19).

"தெளிந்த புத்தி உள்ளவர்களாய் இருங்கள்" என்பதற்கு "உங்கள் மனதை நிலையாகவும், தெளிவாகவும் வைத்திருங்கள்" என்று அர்த்தம். நவீன மொழியில் "அமைதியாய் இருங்கள்" (keep cool) என்று கூறலாம். அது தீர்க்க தரிசனங்களைப் பற்றி அதீத கற்பனை செய்வதற்கு எதிரான எச்சரிக்கை. ஏனெனில், அது சமநிலை அற்ற வாழ்க்கைக்குள்ளும், ஊழியத்-திற்குள்ளும் வழிநடத்திச் சென்றுவிடும். ஒரு தீர்க்கதரிசனத்தை வேதாகமத்திற்கு புறம்பான முறையில் வலியுறுத்துவதாலும், அதைத் தவறான முறையில் விளக்குவதாலும், உண்மையுள்ள ஜனங்கள் "நிலை தடுமாறிப்" போவதைப்

பற்றி கேள்விப்படுகிறோம். கிறிஸ்துவின் எச்சரிக்கைக்கு மாறாக, அவரது வருகைக்கு நாள் குறிப்போரும் இருக்கவே செய்கின்றனர் (மத். 25:13; அப். 1:6-8). வெளிப்படுத்தின விசேஷத்தில் வரும் மிருகத்தின் பெயர் தெரியும் என்று சிலர் கூறுகின்றனர். என்னுடைய நூலகத்தில் உண்மையான தேவபக்தியுள்ள மனிதர்கள் எழுதிய புத்தகங்கள் உண்டு; அவற்றில் இத்தகைய பல கருத்துக்கள் இருக்கின்றன. இத்தகைய விளக்கங்கள் எழுதியவருக்கே சங்கடங்களை ஏற்படுத்திவிடும்.

"தெளிந்த புத்தி" என்பதற்கு எதிர் பதம் "பைத்தியம்" அதற்கு கிரேக்க மொழியில் "மேனியா". இது ஆங்கில மொழிக்கு மனவியல் மூலமாக வந்தது. நாம் தெளிந்த புத்தி உள்ளவர்களாய் இருந்தால் அறிவார்ந்தவர்களாய் இருப்போம். சில "புதிய" வேத விளக்கங்களால் திசை மாறிச் சென்றுவிடமாட்டோம். விஷயங்களை எதார்த்தமாக அணுகி, மாயமானவற்றில் இருந்து நீங்கி இருப்போம். தெளிந்த புத்தியுள்ள பரிசுத்தவான், ஒரு குறிக்கோளோடு வாழ்ந்து, பாதை மாறி அலையாமல், கட்டுப்பாட்டுடனும், உணர்ச்சிவசப்படாமலும் இருப்பான். கொள்கை சம்பந்தமான விஷயங்களில் மட்டுமன்றி, வாழ்க்கையின் அன்றாடக் காரியங்களிலும் அவன் "உறுதியான எண்ணம்" உடையவனாக இருப்பான்.

போதகம் குறித்த தனது நிருபங்களில் பவுல் பத்து முறை "தெளிந்தபுத்தி உள்ளவர்களாய்" இருக்குமாறு மக்களுக்குப் புத்திமதி கூறுகிறார். அது கண்காணிக்கு மட்டுமல்லாமல் (1 தீமோ. 3:2) சபை உறுப்பினர்களுக்கும் ஒரு தகுதியாகும் (தீத்து 2:1-6). பண்படாத சிந்தனைகளுக்கு ஆட்பட்ட ஓர் உலகில், சபை தெளிந்தபுத்தி உள்ளதாக இருக்கவேண்டும்.

எனது ஊழியத்தின் ஆரம்ப காலத்தில், தீர்க்கதரிசனங்களை விளக்கி ஒரு செய்தி கொடுத்தேன். அதன் குறிப்புகளை இப்போது கோர்ப்பில் (File) வைத்துவிட்டேன். அதைப் பெரும்பாலும் திருப்பிப் பார்க்கவே மாட்டேன் (நான் தாழ்மையை உணர வேண்டும் என்ற நிலை ஏற்பட்டால் ஒழிய). ஆராதனை முடிந்த பிறகு, என் செய்தியைக் கேட்டு வேதனை அடைந்த ஒரு போதகர் நண்பர் என்னிடம் கூறினார்: "சகோதரரே, நீங்கள் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கான திட்டக் குழுவில் இருக்கிறீர்கள் என நினைக்கிறேன்." நான் அவர் சொல்லவரும் கருத்தைப் புரிந்துகொண்டேன். அவர் அமைதியாக இன்னும் பொருத்தமான முறையில் கூறினார்: "நான் நிகழ்ச்சிநிரல் குழுவில் இருந்து வரவேற்புக் குழுவுக்கு மாறிவிட்டேன்!"

தீர்க்கதரிசனங்களை ஆராயக்கூடாது என்றோ, அல்லது நமது விளக்கங்களைப் பகிர்ந்து கொள்வதில் தயக்கம் காட்ட வேண்டும் என்றோ நான் கூறவில்லை. நான் கூறவருவது என்னவென்றால், ஒரு தீர்க்கதரிசனத்தைத் தவறாக விளக்கி நம்மைச் சமநிலை இழக்க நாமே அனுமதிக்கக் கூடாது என்பதுதான். தீர்க்கதரிசன வசனங்களைப் பொறுத்தவரையில் ஒரு நடைமுறைக்கு உகந்த பயன்பாடு உண்டு. நாம் செய்வதற்காக நமக்கு தேவன்

தந்தருளியுள்ள வேலை எதுவானலும் அதில் *இன்று* நாம் உண்மை உள்ளவர்களாக இருக்கும்படி பேதுரு வலியுறுத்திக் கூறும் நம்பிக்கையும், தேவ மகிமையும் நம்மை உற்சாகப்படுத்த வேண்டும் (லூக். 12:31-48).

உங்களுடைய "மீதியான வாழ்நாளை" சிறந்த முறையில் உபயோகப்படுத்த விரும்பினால் இயேசுவின் இரண்டாம் வருகை என்ற வெளிச்சத்தில் வாழுங்கள். அந்நிகழச்சி எவ்வாறு இருக்கும் என்பதில் கிறிஸ்தவர்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் வேறுபடலாம். ஆனால் அந்த அனுபவத்திற்குத் தேவையாக இருப்பவைகளைக் குறித்து நாம் ஒத்துப்-போகலாம். நாம் கர்த்தருக்கு முன்பாக நிற்போம். இதன் நடைமுறைக்கு உதவும் அர்த்தத்தைப் புரிந்து கொள்ள ரோமர் 14:10-23-ஐயும், 2 கொரிந்தியர் 5:1-21-ஐயும் வாசியுங்கள்.

நாம் தெளிந்த புத்தி உள்ளவர்களாய் இருந்தால், "ஜெபம் பண்ணுவதற்கு ஜாக்கிரதை உள்ளவர்களாய்" இருப்போம். ஜெப வாழ்க்கை குழப்பம் அடைவதற்குக் காரணம், மனம் குழப்பத்தில் இருப்பதே. இந்த இரண்டுக்கும் இடையில் உள்ள சம்பந்தத்தை டாக்டர். கென்னத் உயஸ்ட் (Dr. Kenneth Wuest) இவ்வாறு காட்டுகிறார்: "ஜெபத்தில் உங்களை ஈடுபடுத்த அமைதி-யாகவும், ஆவியில் ஒருமைப்பாடு உள்ளவர்களாய் இருங்கள்." "ஜாக்கிரதை" என்ற வார்த்தை கவனம் மற்றும் சுய கட்டுப்பாடு ஆகிய கருத்துக்களை உள்ளடக்கியுள்ளது. இதற்கு எதிர்பதம் குடிபோதை அல்லது உறக்கம் (1 தெச. 5:6-8). இந்த புத்திமதி பேதுருவுக்கு விசேஷமான அர்த்தமுடையது. ஏனெனில் "ஜெபம் பண்ணுவதற்கு ஜாக்கிரதையாக இருக்கவேண்டிய" வேளையில் அவர் தூங்கிவிட்டார் (மாற்கு 14:37-40).

"விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்" (KJV) என்ற சொற்றொடரை ஆங்கில அதிகாரப் பூர்வமான பதிப்பில் நீங்கள் அடிக்கடி காணலாம் (மாற்கு 13:33; 14:38; எபே. 6:18; கொலோ. 4:2). இது "ஜெபிப்பதில் கவனமாய் இருங்கள், கட்டுப்பாட்டுடன் இருங்கள்" என்ற அர்த்தத்தைத் தருகிறது. கிறிஸ்தவ வாழ்க்கையில் சோம்பலான, வளவளவென்ற ஜெபத்துக்கு இடமில்லை. நெகேமியாவின் நாட்களில் இருந்தது போல, கவன சிந்தையுடனும், காவலுடனும் இருக்க வேண்டும் (நெகே. 4:9).

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை எதிர்பார்க்கும் சிந்தைக்கு, தீவிரமான, நிலையான மனமும், கவனமும் விழித்திருத்தலும் உள்ள ஜெபவாழ்க்கையும் தேவை. கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக் கொள்கையில் நாம் உறுதியாய் இருக்கிறோம் என்பதற்கான பரீட்சை, வரைபடங்களை வரைவதிலும் (drawing charts) அடையாளங்களைப் பகுத்தறிந்து கொள்வதிலும் இல்லை; நமது சிந்தனையிலும், ஜெபத்திலேயுமே உள்ளது. நமது சிந்தனையும், ஜெபமும் சரியானவை என்றால், நமது வாழ்க்கையும் சரியாகவே இருக்கும்.

**4. பரிசுத்தவான்கள் மேல் ஆர்வமுள்ள சிந்தை (4:8-11).**

நாம் உண்மையிலேயே கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை எதிர்நோக்கினால், மற்றவர்களைக் குறித்து நினைத்துப் பார்த்து அவர்களோடுள்ள நமது உறவை சரியாக வைத்துக்கொள்வோம். "எல்லாவற்றிற்கும் மேலாகப்" பரிசுத்தவான்களிடம் அன்புகூருதல் முக்கியமானது. அன்பே இந்த உலகில் விசுவாசிகளுக்கு அடையாளச் சின்னம் (யோவான் 13:34-35). குறிப்பாக சோதனை மற்றும் பாடுகளின் காலத்தில், கிறிஸ்தவர்கள் ஒருவரில் ஒருவர் அன்புகூர்ந்து, இதயப்பூர்வமாக இணைந்திருக்க வேண்டும்.

இந்த அன்பு ஊக்கமானதாக இருக்க வேண்டும். இந்த வார்த்தைக்குப் பின்னணியில் உள்ள சித்திரம் ஒரு போட்டியாளர் தன் இலக்கை அடைய எடுக்கும் முயற்சியைக் காட்டுகிறது. அது ஆர்வத்தையும், ஆழத்தையும் உணர்த்துகிறது. ஒரு போட்டியாளர் தன் திறமைகளைத் தீட்டுவதுபோல், கிறிஸ்தவ அன்பும் நாம் முனைந்து உருவாக்க வேண்டிய ஒன்றாகும். அது ஓர் உணர்ச்சிகரமான விஷயம் மட்டுமல்ல; சித்தத்தை அர்ப்பணிக்கும் விஷயமாகும். தேவ கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து, அவர் நம்மை நடத்துவது போல நாம் மற்றவர்களை நடத்துவதே கிறிஸ்தவ அன்பின் அர்த்தம். நாம் விரும்பாத ஜனங்களைக் கூட நம்மால் நேசிக்க முடியும்.

கிறிஸ்தவ அன்பு மன்னிக்கிறது. பேதுரு நீதிமொழிகள் 10:12-ஐ இங்கு மேற்கோள் காட்டுகிறார். "பகை விரோதங்களை எழுப்பும்; அன்போ சகல பாவங்களையும் மூடும்." இதே வசனம் யாக்கோபு 5:20-லும், 1 கொரிந்தியர் 13:4-லும், 7-லும் சுட்டிக்காட்டப்படுகிறது. அன்பு பாவத்தை *மன்னிக்காது*; ஏனெனில், நாம் நேசிக்கின்ற ஒருவர் பாவம் செய்து தன்னையும் பிறரையும் வேதனைப்படுத்தும்போது, அதைப் பார்த்து நாம் வேதனைப்படுகிறோம். மாறாக, அன்பு பாவத்தை மூடுகிறது; எப்படி எனில் அந்த பாவத்தைப் பிறரிடம் இருந்து மறைத்து, அது மேலும் பரவாமல் தடுக்க அன்பு ஊக்குவிக்கிறது. வெறுப்பு இருக்கும் இடத்தில் வன்மம் இருக்கும். வன்மம் எதிரியின் புகழைக் கிழித்தெறியும் விருப்பத்தை ஒரு மனிதனிடத்தில் தூண்டிவிடுகிறது. இது புறங்கூறுதலுக்கும், அவதூறு செய்வதற்கும் வழிகோலுகிறது (நீதி. 11:13; 17:9; 1 பேதுரு 2:1). "ஜனங்கள் அறிவுப்பூர்வமாக ஜெபிக்க" ஏதுவான விஷயங்களைக் கூறுவதாக எண்ணி சில சமயம் நாம் நமது விண்பேச்சுக்களையும் ஆவிக்குரிய விஷயமாகப் பேச முற்படுகிறோம்.

ஒருவரும் தேவனிடம் இருந்து பாவங்களை மறைக்க முடியாது என்றாலும், விசுவாசிகள் அன்பின் நிமித்தமாக ஒருவர் பாவத்தை ஒருவர் மூட முயற்சி செய்ய வேண்டும்: குறைந்த பட்சமாக இரட்சிப்படையாதோரின் கண்களில் இருந்தாவது. நமது *நல்ல* வார்த்தைகளுக்கும் செயல்களுக்காகவுமே நம்மைத் துன்புறுத்தத் துணியும் இரட்சிப்படையாத கூட்டம் (1 பேதுரு 2:19-20; 3:14), கிறிஸ்தவர்கள் பேசும் அல்லது செய்யும் *மோசமான* விஷயங்கள் கையில் கிடைத்தால் என்ன செய்வார்களோ?

இந்த கொள்கையை விளக்கும் ஓர் அருமையான எடுத்துக்காட்டை ஆதியாகமம் 9:18-27 நமக்குத் தருகிறது. நோவா குடித்துவிட்டு, அவமான-கரமாக ஆடை விலகிக் கிடந்தான். அவனது மகனான காம் தனது தந்தையின் வெட்கக்கேடான நிலையைக் கண்டு தன் குடும்பத்தாரிடம் அந்த விஷயத்தைக் கூறினான். ஆயினும் அன்பு நிறைந்த காமின் இரு சகோதரர்களும் தங்கள் தகப்பனையும் அவனது அவமானத்தையும் மூடினர். நாம் மற்றவர்களுடைய பாவத்தை மூடுவது கடினமான காரியம் அல்ல; எல்லாவற்றிற்கும் மேலாக, இயேசு கிறிஸ்து நமது பாவம் கழுவப்பட வேண்டும் என்றல்லவா மரித்தார்.

நமது கிறிஸ்தவ அன்பு ஊக்கமானதாகவும், மன்னிப்பதாகவும் மட்டுமல்லாமல் நடைமுறைக்கு ஒத்ததாகவும் இருக்கவேண்டும். நமது இல்லத்துக்கு வருவோரை (முறுமுறுக்காமல்) வரவேற்று உபசரிக்க வேண்டும். நமது ஆவிக்குரிய வரங்களை பிறரோடு பகிர்ந்துகொள்ள வேண்டும். புதிய ஏற்பாட்டின் காலத்தில் உபசரிப்பு ஒரு முக்கியமான விஷயமாகும். ஏனெனில் அப்போது சத்திரங்கள் மிகவும் குறைவாகவே இருந்தன. ஆனால், ஏழைகளுக்கோ அதற்குக்கூட பணம் இருப்பதில்லை. குறிப்பாக பாடனுபவித்துக் கொண்டிருந்த பரிசுத்தவான்களுக்கு தங்கும் இடமும், உதவியும், ஊக்கமும் தேவைப்பட்டன.

வேதாகமத்தில் எங்கும் உபசரிப்பு ஒரு நற்குணமாகப் போற்றப்-பட்டுள்ளது. மோசே அதைப் பிரமாணத்தில் சேர்த்தார் (யாத். 22:21; உபா. 14:28-29). இயேசு உலகத்தில் இருந்தபோது உபசரிப்பைப் பெற்று மகிழ்ந்தார்; ஊழியம் செய்த அப்போஸ்தலர்களும் அவ்வாறே உபசரிக்கப்பட்டனர் (அப். 28:7; பிலி. 22). தேவ உபசரிப்பின் ஒரு பிரதிபலிப்பே மனித உபசரிப்பு (லூக். 14:16 லிருந்து). குறிப்பாகக் கிறிஸ்தவத் தலைவர்கள் "உபசரிக்கிறவர்களாக" இருக்க வேண்டும் (1 தீமோ. 3:2; தீத்து 1:8).

ஆபிரகாம் மூன்று அந்நியர்களை உபசரித்துப் பின் அவர்கள் தேவனும் இரண்டு தூதர்களும் என்று கண்டு கொண்டான் (ஆதி. 18; எபி. 13:2). நமது வீட்டுக் கதவுகளை தேவ ஊழியர்களுக்குத் திறப்பதின் மூலம் நாம் இந்த சத்தியத்தை ஸ்தாபிக்கலாம் (3 யோவான் 5-8). மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளும்போது, நாம் அதைக் கிறிஸ்துவோடு பகிர்ந்து கொள்ளுகிறோம் (மத். 25:35, 43). பிறர் நம்மைத் திருப்பி அழைப்பார்கள் என்ற எதிர்பார்ப்போடு நமது வீட்டு வாசலைத் திறந்து வைத்து அவர்களை உபசரிக்கக் கூடாது. தேவனை மகிமைப்படுத்துவதற்காகவே நாம் அவ்வாறு செய்ய வேண்டும்.

நான் ஊர் ஊராகச் சென்று ஊழியம் செய்யும்போது, கிறிஸ்தவ இல்லங்களில் தங்கும் வாய்ப்பு எனக்கு அடிக்கடி கிடைக்கும். அவர்கள் காட்டிய அன்பையும், கிறிஸ்துவை நேசித்து மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்பும் பரிசுத்தவான்கள் சிலரின் தியாகத்தையும் நான் பாராட்டி இருக்கிறேன். நானும், எனது மனைவியும் பல நாடுகளில் இவ்வாறு புதிய நண்பர்களைப் பெற்றிருக்கிறோம். நாங்கள் கிறிஸ்தவ உபசரிப்பை

அனுபவித்தும், அனுசரித்தும் வருவதால் எங்கள் குழந்தைகளும் ஆசீர்வதிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

கடைசியாக, கிறிஸ்தவ அன்பு சேவையாக மலரவேண்டும். ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் குறைந்தபட்சம் ஒரு ஆவிக்குரிய வரமாவது இருக்கும். அதை அவன் தேவ மகிமைக்காகவும், சபையைக் கட்டுவதற்காகவும் உபயோகப்படுத்த வேண்டும் (ரோமர் 12:1-13; எபே. 4:1-16; 1 கொரி. 12). நாம் அதிகாரிகளாக இருக்கிறோம். தேவனுடைய சபைக்கு நன்மை செய்வதற்காகவே தேவன் இந்த வரங்களை நம்மிடம் ஒப்படைத்துள்ளார். நமது வரங்களை வளர்த்து உண்மையுள்ள சபை ஊழியர்களாகத் தேவையான ஆவிக்குரிய திறமைகளையும் கூட அவர் நமக்குத் தந்தருளுகிறார்.

பேசும் வரமும், சேவை செய்யும் வரமும் உண்டு; இரண்டுமே சபைக்கு அவசியம். எல்லோராலும் போதகராகவோ, பிரசங்கியாகவோ மாறிவிட முடியாது. ஆனால் யாவரும் கிறிஸ்துவுக்கு சாட்சியாக வாழ முடியும். பொது ஊழியங்களை சாத்தியமாக்க "திரைக்குப்பின் இருந்து" ஊழியம் செய்வோரும் உண்டு. தேவன் நமக்கு வரங்களையும், திறமைகளையும், வரங்களை உபயோகிக்கும் வாய்ப்புகளையும் தருகிறார். ஆயினும், அவர் மட்டுமே மகிமையைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

1 பேதுரு 4:11-ல் வரும், "தேவனுடைய வாக்கியங்களின் படி" என்ற வாக்கியத் தொடர், ஒரு பிரசங்கியோ, போதகரோ இன்று சொல்லுவது எல்லாம் தேவ சத்தியமே என்ற கருத்தைத் தரவில்லை; ஏனெனில் மனிதப் பேச்சாளர்கள் எல்லாம் தவறு செய்யக்கூடியர்களே. ஆதி சபையில் தேவ வார்த்தைகளைப் பேசக்கூடிய வரம் பெற்றத் தீர்க்கதரிசிகள் இருந்தனர். ஆனால் இன்று நமக்கு அந்த வரம் இல்லை; ஏனெனில் தேவ வார்த்தை பூரணமடைந்து விட்டது. தேவ வார்த்தைகளை யார் பகிர்ந்து கொண்டாலும், தாங்கள் என்ன சொல்லுகிறார்கள், அதை எவ்வாறு சொல்லுகிறார்கள் என்பதில் கவனமாக இருக்கவேண்டும்; மேலும், எல்லாம் எழுதப்பட்ட தேவவார்த்தைகளோடு ஒத்துப்போக வேண்டும்.

இந்த அதிகாரத்தின் ஆரம்பத்தில் நான் குறிப்பிட்ட எங்களுடைய ஆப்பிரிக்கப் பயணத்தில் இருந்து நாங்கள் திரும்பி வரும்போது, இங்கிலாந்து தேசத்திற்கே உரிய ஒரு பனிமூட்டத்தினால் எங்கள் பயணம் இலண்டனில் தாமதமாயிற்று. இலண்டன் எனக்கு மிகவும் பிடித்தமான இடங்களில் ஒன்றானதால் நான் அதைப்பற்றி கொஞ்சமும் கவலைப்படவில்லை. ஆயினும் இந்த தாமதம், எங்களோடு பயணம் செய்த ஒரு தம்பதிக்கு இலண்டனைச் சுற்றிக்காட்டும் ஒரு வாய்ப்பை எனக்கும் என் மனைவிக்கும் நல்கியது. ஒரே நாளில் அந்த அதியற்புதமான மாநகரைச் சுற்றிப்பார்க்க முயற்சி செய்வதைக் கற்பனை செய்து பாருங்களேன்!

கிடைத்திருக்கும் நேரத்தை முழுமையாகப் பயன்படுத்தியே ஆகவேண்டும். நாங்கள் அதைச் செய்தோம். எங்களுடைய நண்பர்கள் அந்த மாநகரத்தில் அமைந்துள்ள அற்புதமான பல இடங்களைக் கண்டுகளித்தனர்.

உங்களுடைய "மீதியான வாழ்க்கைக் காலம்" எவ்வளவு நீண்டது? தேவன் மட்டுமே அதை அறிவார்.

அதை விரயமாக்க வேண்டாம்! தேவ சித்தத்தைச் செய்வதற்காக அதை முடக்குங்கள்.

# உலைகளைப் பற்றிய உண்மைகள்

1 பேதுரு 4:12-19

தேவ பக்தியோடு வாழும் ஒவ்வொரு கிறிஸ்தவனும் சில பாடுகளை அனுபவிக்கவே செய்கிறான். வேலை இடத்திலும், பள்ளியிலும், அயலகத்திலும், ஏன் ஒருவேளை குடும்பத்தில் கூட கிறிஸ்துவின் சுவிசேஷத்தையும், சத்தியத்தையும் எதிர்க்கும் மக்கள் உண்டு. ஒரு விசுவாசி எதைச் சொன்-னாலும், செய்தாலும் இவர்கள் குற்றம் கண்டுபிடித்து விமரிசனம் செய்கின்றனர். இத்தகைய "பொதுவான பாடுகளைப்" பற்றி, தமது நிருபத்தின் சென்ற பகுதியில் பேதுரு விவாதித்தார்.

ஆனால் இப்பகுதியில், சபை முழுவதையும் ஆக்கிரமிக்கப்போகும் ஒரு தனிப்பட்ட வகையான பாடுகளைப் பற்றி – "அக்கினி சோதனை" – விளக்குகிறார். இது அவர்களைச் சுற்றி இருப்பவர்களால் எப்போதாவது ஏற்படும் தனிமனிதனின் பாடுகள் அல்ல. மாறாக, அவர்களுக்கு மேல் இருப்பவர்களால் ஏற்படப்போகும் அதிகாரப் பூர்வமான பாடுகள். இதுவரை, கிறிஸ்தவம் யூத மதத்தின் ஒரு பிரிவென்று கருதப்பட்டதாலும், யூதர்கள் சுதந்திரமாக வழிபட அனுமதிக்கப்பட்டிருந்ததாலும், அது ரோமாபுரியில் சகித்துக் கொள்ளப்பட்டது. அந்த மனோபாவம் மாறி, முதலில் நீரோவாலும் அதன்பின் தொடர்ந்து வரும் பேரரசர்களாலும் பாடுகளின் நெருப்பு கொளுத்தப்பட இருந்தது.

வரப்போகும் "அக்கினி சோதனைகளின்" போது விசுவாசிகள் பின்பற்ற வேண்டிய நான்கு அறிவுரைகளைப் பேதுரு தருகிறார்.

### 1. பாடுகளை எதிர்பாருங்கள் (4:12)

கிறிஸ்தவ வாழ்க்கைக்குப் பாடுகள் ஏதோ அந்நியமான ஒன்றல்ல. வரலாறு முழுவதும், ஒரு விசுவாசமற்ற உலகத்தின் கரங்களில் தேவ மக்கள் துன்பப்-பட்டே வந்துள்ளனர். கிறிஸ்தவர்கள் அவிசுவாசிகளிடம் இருந்து வேறுபட்ட-வர்கள் (2 கொரி. 6:14-18). இந்த வேறுபட்ட வாழ்க்கை, வேறு வகையான

வாழ்க்கை முறையை உருவாக்குகிறது. இந்த உலகில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பெரும்பாலான விஷயங்கள், பொய், பெருமை, இன்பம், "மேலும் மேலும் வேண்டுமென்ற" பேராசை ஆகிய இவைகளையே சார்ந்துள்ளன. ஓர் அர்ப்பணித்த கிறிஸ்தவன் தனது வாழ்க்கையை சத்தியம், தாழ்மை, பரிசுத்தம், தேவனை மகிமைப்படுத்தும் ஆசை ஆகியவற்றின் மேல் கட்டுகிறான்.

இப்போராட்டம் வேதாகமம் முழுவதும் காட்டப்படுகிறது. காயீன் பக்தியுள்ள ஒரு மனிதனே; எனினும் அவன் தன் சகோதரனை வெறுத்துக் கொன்றான் (ஆதி. 4:1-8). இந்த உலகம் மதசார்புடைய மக்களைத் துன்புறுத்துவதில்லை; ஆனால் அது நீதியுள்ள மக்களைத் துன்புறுத்துகிறது. காயீன் ஏன் ஆபேலைக் கொன்றான் என்பது 1 யோவான் 3:12-ல் விளக்கப்படுகிறது. "தன் கிரியைகள் பொல்லாதவைகளும், தன் சகோதரனுடைய கிரியைகள் நீதி உள்ளவைகளுமாய் இருந்ததின் நிமித்தம்தானே?" பரிசேயர்களும், யூதத் தலைவர்களும் மதவாதிகளே. ஆயினும் அவர்கள் இயேசுவைச் சிலுவையில் அறைந்து, ஆதி சபையைத் துன்புறுத்தினர். "மனுஷரைக் குறித்து எச்சரிக்கையாய் இருங்கள்!" என்று இயேசு தமது சீடர்களை எச்சரித்தார். "அவர்கள் உங்களை ஆலோசனை சங்கங்களுக்கு ஒப்புக்கொடுத்து, தங்கள் ஜெப ஆலயங்களில் உங்களை வாரினால் அடிப்பார்கள்!" (மத். 10:17). தேவ ஊழியர்களை தேவனுடைய வீட்டிலேயே வைத்து அடிக்கும் காட்சியைக் கற்பனை செய்து பாருங்கள்!

மனிதனின் வீழ்ச்சிக்குப் பின் தேவன் சாத்தானின் மேல் போர்ப்பிரகடனம் செய்தார் (ஆதி. 3:15). அன்றிலிருந்து தேவ ஜனங்களைத் தாக்குவதின் மூலமாக சாத்தான் அவரைத் தாக்குகிறான். சாத்தானே தெய்வமாகவும், இராஜாவாகவும் இருக்கும் ஓர் உலகில் கிறிஸ்தவர்கள் "அந்நியர்களும் பரதேசிகளுமாய்" இருக்கிறார்கள் (யோவான் 14:30; 2 கொரி. 4:3-4). தேவனை மகிமைப்படுத்தும் எதுவும் எதிரியைக் கோபப்படுத்துவதால், அவன் தாக்குகிறான். விசுவாசிக்குப் பாடுகள் ஒரு புதுமையான விஷயம் அல்ல. சாத்தானின் எதிர்ப்பு இல்லாமல் இருந்தால் அதுவே புதுமையாகும்!

உலகத்தின் எதிர்ப்பையும், துன்புறுத்தலையும் எதிர்பார்க்க வேண்டும் என்று இயேசு தமது சீடர்களுக்கு விளக்கியுரைத்தார் (யோவான் 15:17-16:4). ஆயினும் அதே சமயம் ஓர் உற்சாகமூட்டும் வாக்குத்தத்தத்தையும் அவர் அவர்களுக்கு அருளினார். "உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு. ஆனாலும் திடன் கொள்ளுங்கள். நான் உலகத்தை ஜெயித்தேன்" (16:33). கல்வாரி சிலுவையில் தமது மரணத்தின் மூலமும், உயிர்த்தெழுதலின் மூலமும் அவர் பாவத்தையும் இந்த உலகத்தையும் மேற்கொண்டார் (யோவான் 12:23-33; கலா. 6:14).

இன்றையப் பேச்சு வழக்கில் கூட சோதனைக்கும், பாடனுபவிப்பதற்கும் அக்கினி ஒரு படிமமாக (Image) காட்டப்படுகிறது. 'அவர் நெருப்பின்

வழியாக நடந்து போகிறார்' என்பது சொந்த கஷ்டங்களை அனுபவிக்கும் ஒருவரை வர்ணிக்கும் வழக்கமான வாக்கியமே ஆகும். பழைய ஏற்பாட்டில் அக்கினி தேவனுடைய பரிசுத்தத்துக்கும், பிரசன்னத்துக்கும் அடையாளம். பலிபீடத்தில் இருக்கும் பலியை அக்கினி பட்சித்தது (எபி. 12:28-29). ஆனால் பேதுரு, அக்கினியின் படிமத்தில், ஒரு தெய்வீக நியாயத்தீர்ப்பை விடவும் *ஒரு சுத்திகரிக்கும் செயலையே* கண்டார் (1 பேதுரு 1:7; யோபு 23:10).

வாழ்க்கையின் எல்லா உபத்திரவங்களும் அக்கினி சோதனைகளாக இருக்க வேண்டிய அவசியமில்லை என்பதே முக்கியமாகக் கவனிக்கத் தக்கது. சில உபத்திரவம் மனித வாழ்க்கையின் ஒரு பகுதியே. அநேகமாக யாவரும் அதை அனுபவிக்கவே செய்வார்கள். துரதிர்ஷ்டவசமாக, கீழ்ப்படியாமை மற்றும் பாவத்தின் காரணமாக சில துன்பங்களை நமக்கு நாமே கொண்டுவந்து விடுகிறோம். பேதுரு இவற்றை 2:18-20-லும், 3:13-17-லும் குறிப்பிடுகிறார். 4:12-ல் அவர் குறிப்பிடும் அக்கினி சோதனை, நாம் தேவனுக்கு உண்மையாக இருப்பதாலும், நியாயத்துக்காக நிற்பதாலும் வருகிறது. நாம் கிறிஸ்துவின் நாமத்தைத் தாங்கி இருப்பதே, கெட்டுப்போன உலகம் நம்மைத் தாக்குவதற்குக் காரணமாகும்.. கிறிஸ்து தமது சீடர்களிடம், தம்மை அவர்கள் தரித்திருப்பதே மக்கள் அவர்களைத் துன்புறுத்துவதற்குக் காரணம் என்று கூறினார்; ஏனெனில் அவர்களைத் துன்பப்படுத்துகிறவர்கள் தேவனை அறியார்கள் (யோவான் 15:20-21).

"நேரிட்டது" (happened - KJV) என்ற வார்த்தை முக்கியமானது. அதற்கு அர்த்தம் "இணைந்து செல்லுதல்" (to go together). பாடுகளும், சோதனைகளும் சும்மா ஒரு விபத்து போல "நேரிடாது". அவைகள் தேவ திட்டத்தின் ஒரு பகுதியே; அவர் அவற்றைத் தமது கட்டுப்பாட்டிலேயே வைத்திருக்கிறார். ரோமர் 8:28-ல் கூறப்பட்டுள்ளவைகளின் ஒரு பகுதியே அவை. தேவன் தமது வழியில் காரியமாற்றும்படி நாம் அனுமதித்தால் அவை நன்மையாகவே வந்து முடியும்.

**2. பாடுகளில் சந்தோஷப்படுங்கள் (4:13-14).**

"எப்போதும் சந்தோஷமாயிருங்கள்" என்று பேதுரு சரியாகவே எழுதினார். ஒரு வகையில் அல்லது இன்னொரு வகையில் அவர் மகிழ்ச்சியை நான்கு முறை இந்த இரண்டு வசனங்களிலும் குறிப்பிடுகிறார்! "களிகூர்ந்து மகிழும்படி.. சந்தோஷப்படுங்கள்" ("Rejoice .. be glad also with joy .. Happy are ye." - KJV). பாடுகள் நிறைந்த சூழ்நிலை எவ்வாறு மிகுந்த சந்தோஷத்தைத் தரும் என்று இந்த உலகத்தால் புரிந்துகொள்ள முடியாது; ஏனெனில் தேவ கிருபையை இந்த உலகம் ஒரு போதும் அனுபவித்தது இல்லை (2 கொரி. 8:1-5). அக்கினி சோதனைகளின் மத்தியில், நாம் பகிர்ந்து கொள்ளக் கூடியதும், நம்மைக் களிகூரும்படியாக ஊக்குவிக்க வல்லதுமான பல பாக்கியங்களைப் பற்றி பேதுரு குறிப்பிடுகிறார்.

### *அ. நாம் பாடனுபவிப்பது என்பது கிறிஸ்துவோடு நாம் ஐக்கியமாக இருக்கிறோம் என்று அர்த்தமாகிறது.*

கிறிஸ்துவோடு நாம் பாடனுபவித்து, அவரைப் போலவே இந்த உலகத்தால் நடத்தப்படுவது என்பது நமக்குக் கிடைத்துள்ள கனமும், பாக்கியமும் ஆகும். "அவருடைய பாடுகளுக்குப் பங்காளிகள் ஆனது, தேவனிடத்தில் இருந்து நமக்குக் கிடைத்த வரம் (பிலி. 1:29; 3:10). இத்தகைய அனுபவத்தில் தேவன் நம்பும் ஒரு நிலைக்கு எலலோராலும் வளர்ந்துவிட முடியாது. ஆதலால், இந்த பாக்கியம் நமக்குக் கிடைக்கும் போது களிகூர்ந்து மகிழ வேண்டும். "அவருடைய நாமத்துக்காக தாங்கள் அவமானம் அடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியால், சந்தோஷமாய் ஆலோசனை சங்கத்தை விட்டுப் புறப்பட்டு போனார்கள்" - அப்போஸ்தலர்கள் (அப். 5:41).

பாடுகள் என்ற உலையில் கிறிஸ்து நம்மோடு இருக்கிறார் (ஏசா. 41:10; 43:2). அந்த மூன்று எபிரேயப் பிள்ளைகளும் அக்கினி உலையில் போடப்பட்டபோது அவர்கள் தாங்கள் தனியாக இல்லை என்பதைக் கண்டு கொண்டார்கள் (தானி. 3:23-25). எல்லா பாடுகளின் போதும் கர்த்தர் பவுலோடு இருந்தார் (அப். 23:11; 27:21-25; 2 தீமோ. 4:9-18). "உலகத்தின் முடிவு பரியந்தம்" அவர் நம்மோடு இருப்பதாக வாக்குத்தத்தம் செய்துள்ளார் (மத். 28:20). பாவிகள் நம்மைப் பாடுபடுத்தும் போது அவர்கள் உண்மையில் இயேசு கிறிஸ்துவையே துன்புறுத்துகிறார்கள் (அப். 9:4).

### *ஆ. நாம் அனுபவிக்கும் பாடுகள் என்பது எதிர்கால மகிமையே (4.13).*

"பாடுகளும் மகிமையும்" பேதுருவின் நிருபத்தில் பின்னப்பட்டுள்ள இரட்டை சத்தியங்கள். பாடுகள் *இல்லாமல் இருப்பதே* மகிமை என்று இந்த உலகம் நம்புகிறது. ஆனால் ஒரு கிறிஸ்தவனின் பார்வை வேறாகும். நமது விசுவாசத்திற்கு ஏற்படும் சோதனையே இயேசு திரும்பி வரும்போது நாம் அடையப்போகும், மகிமைக்கான உறுதியாகும் (1 பேதுரு 1:7-8). இதுவே நமது கர்த்தரின் அனுபவம் (5:1). அதுவே நமது அனுபவமாகவும் இருக்கும்.

தேவன் துன்பத்தை மகிமையால் *இடமாற்றம்* செய்ய மாட்டார் என்பதைப் புரிந்து கொள்வது அவசியம்; மாறாக அவர் துன்பத்தை மகிமையாக *உருமாற்றம்* செய்வார். பிரசவ காலம் வந்திருக்கும் ஒரு ஸ்திரியின் உதாரணத்தை இயேசு உபயோகப்படுத்துகிறார் (யோவான் 16:20-22). அவளுக்கு வேதனையை அளித்த அதே குழந்தையே சந்தோஷத்தையும் தருகிறது. மாம்சத்தில் இருந்த முள்ளே பவுலுக்குத் துன்பத்தையும் அதே நேரத்தில் வல்லமையையும், மகிமையையும் தந்தது (2 கொரி. 12:7-10). இயேசுவுக்கு அவமானத்தையும் வேதனையையும் தந்த அதே சிலுவைதானே வல்லமையையும், மகிமையையும் கொண்டு வந்தது.

வாழ்க்கையில் சில 'காலம் தாழ்ந்து வரும் மகிழ்ச்சிகளும்' அடக்கம் என்பதை அனுபவம் வாய்ந்தவர்கள் அறிவார்கள். *நாளைய* மகிழ்ச்சியைப் பெறுவதற்காக *இன்று* நாம் ஒரு வேலையைக் கொடுக்கிறோம். பியானோ கற்றுக்கொள்ளும் மாணவர், சுரங்களை மணிக்கணக்காய்ப் பயிற்சி செய்வதை அனுபவித்து மகிழ முடியாமல் இருக்கலாம்; ஆயினும் அற்புதமான இசையை ஒரு நாள் மீட்டும்போது கிடைக்கப் போகும் இன்பத்தை எண்ணி எதிர்நோக்குகிறார். ஒரு போட்டியாளர் உடலையும், திறமையையும் வளர்க்கும் பயிற்சிகளில் ஈடுபடுகின்ற வேளையில் மகிழாமல் இருந்தாலும் தன் திறமை எல்லாம் பயன்படுத்தி போட்டியில் வெற்றிபெறுவதை எதிர்நோக்குகிறார். கிறிஸ்தவர்களுக்கு அதைவிட மேலான விஷயம் உண்டு; நமது பாடுகளே ஒருநாள் மகிமையாக மாற்றப்படும்; நாம் "களிகூர்ந்து மகிழ்வோம்" (ரோமர் 8:17; தீமோ. 3:11).

*இ. பாடுகள் நமக்குப் பரிசுத்த ஆவியின் ஊழியத்தைக் கொண்டு வருகிறது (4:14).*

அவரே மகிமையுள்ள ஆவியானவர். இயேசு கிறிஸ்துவின் மகிமைக்காகப் பாடுபடும் யாவர் நிமித்தமாகவும் அவருக்கு ஒரு சிறப்பான ஊழியம் உண்டு. இந்த வசனம் இவ்வாறு மொழிபெயர்க்கப் படலாம்: "மகிமையின் பிரசன்னத்திற்காக, பரிசுத்த ஆவியானவரும் கூட, உங்கள் மேல் தங்கி இருக்கிறார்." இது கூடாரத்திலும், தேவாலயத்திலும் தங்கி இருந்த தேவ மகிமையைப் பற்றிய குறிப்பாகும் (யாத். 40:34; 1 இராஜா 8:10-11). ஸ்தேவான் கல்லெறியப்பட்டபோது, பரலோகத்தில் இயேசுவைப் பார்த்து, தேவ மகிமையை அனுபவித்தான் (அப். 6:15; 7:54-60). இதுவே "சொல்லி முடியாததும், மகிமையால் நிறைந்ததுமாய் இருக்கிற சந்தோஷம்" என 1:7-8-ல் பேதுரு எழுதியது.

வேறு வார்த்தைகளில் கூறுவது என்றால், பாடனுபவிக்கும் கிறிஸ்தவர்கள் அவரது மகிமையை அனுபவிப்பதற்காக, பரலோகம் செல்லும் வரை காத்திருக்க வேண்டியது இல்லை. பரிசுத்த ஆவியின் மூலமாக *அவர்களால் இப்போதே மகிமையைப் பெறமுடியும்.* கொழுந்துவிட்டு எரியும் நெருப்பின் மத்தியில் கட்டப்பட்டு இருந்தாலும், தியாக மரணம் அடைபவர்களால் எவ்வாறு தேவனைத் துதிபாட முடிகிறது என்பதை இது விளக்குகிறது. மேலும், பாடனுபவிக்கும் கிறிஸ்தவர்களால் (இன்றைய உலகில் அநேகர் உண்டு) தங்களைச் சிறைப்படுத்தி மரணத்துக்கு நேராக கொண்டு போகிறவர்களை எதிர்க்காமலும், குற்றம்சாட்டாமலும் எவ்வாறு அமைதியாகச் செல்லமுடிகிறது என்பதையும் இதுவே விளக்குகிறது.

*ஈ. நமது பாடுகள் அவரது நாமத்தை மகிமைப்படுத்த நமக்கு உதவுகிறது (4:14).*
அவரது நாமத்தின் நிமித்தமாகவே நாம் பாடனுபவிக்கிறோம் (யோவான் 15:21). உங்களுடைய இரட்சிப்படையாத நண்பர்களிடம் நீங்கள், நானொரு பேப்டிஸ்ட்,

ஒரு பிரஸ்பிடேரியன், ஒரு மெத்தடிஸ்ட் அல்லது அறியொணாயியலைப் பின்பற்றுவன் என்று கூடக் கூறலாம். ஆனால் அவர்களிடம் நீங்கள் ஒரு கிறிஸ்தவர் என்று சொல்லுங்கள் - கிறிஸ்துவின் பெயரை உரையாடலில் உச்சரியுங்கள் - விஷயங்கள் நிகழத் தொடங்கிவிடும். நமது அதிகாரம் கிறிஸ்துவின் நாமத்தில் இருக்கிறது. சாத்தான் அந்த பெயரை வெறுக்கிறான். கிறிஸ்துவின் நாமத்தின் நிமித்தமாகத் தூஷிக்கப்படும் ஒவ்வொரு சமயமும், அந்த நாமத்துக்கு மகிமை கொண்டு வரும் ஒரு வாய்ப்பைப் பெறுகிறோம். உலகம் அவரது நாமத்துக்கு விரோதமாகப் பேசலாம்; ஆனால், தேவன் மகிழும்படியாக, நாம் அவரது நாமத்தை கனப்படுத்தி பேசி வாழ்வோம்.

“கிறிஸ்தவன்” என்ற வார்த்தை புதிய ஏற்பாடு முழுவதிலும் மூன்று முறை மட்டுமே காணப்படுகிறது. (1 பேதுரு 4:16; அப். 11:26; 26:28). ஆதி சபை மக்களுக்கு எதிரிகளால் சூட்டப்பட்ட நிந்தனைப் பெயர் அது. ஆனால் நாளடைவில் அது மரியாதைக்கு உரிய ஒரு பெயராக மலர்ந்தது. நிச்சயமாக இன்றைக்கு, “கிறிஸ்தவன்” என்ற சொல்லைப் “புறஜாதி” மக்கள் என்பதற்கு எதிர்பதமாகவே பெரும்பான்மையோர் கருதுகின்றனர். ஆயினும் அந்த வார்த்தை ஏந்திநிற்கும் கருத்தாவது: “கிறிஸ்துவுக்குரிய ஒருவன், கிறிஸ்துவுக்குச் சொந்தமானவன்.” உண்மையில் அந்த பெயரைத் தாங்கி அதற்காகப் பாடனுபவிப்பது என்பது பாக்கியமாகும் (அப். 5:41).

ஏறக்குறைய இரண்டாம் நூற்றாண்டின் மத்திய பகுதியில் சிமிர்ணாவின் பேராயராக இருந்தவர் பாலிகார்ப். அவர் தமது விசுவாசத்திற்காகக் கைதுசெய்யப்பட்டார். தமது கொள்கையைக் கைவிடாவிட்டால் மரணதண்டனை என்று மிரட்டலுக்குள்ளானார். அந்த பரிசுத்தவானான பேராயர் பதிலளித்தார். “அவரை எண்பத்தாறு ஆண்டுகள் சேவித்துவிட்டேன். அவர் ஒரு போதும் எந்த தீங்கையும் எனக்குச் செய்யவில்லை. எவ்வாறு எனது இராஜாவும் இரட்சகருமாகிய அவரை அவதூறு செய்யமுடியும்?”

ரோம அதிகாரி கூறினான்: “நான் உமது வயதுக்கு மதிப்பளிக்கிறேன். நாத்திகர்களே ஒழிந்து போங்கள்! என்று ஒரு வார்த்தை மட்டும் கூறிவிடும்! விடுதலையாகி விடலாம்!” நாத்திகர்கள் என்று அவன் குறிப்பிட்டது இராயனைக் “கடவுள்” என்று ஒத்துக்கொள்ளாத கிறிஸ்தவர்களையே.

அந்த வயோதிகர் தன்னைச் சுற்றிலும் கும்பலாய் நின்ற ரோம புறஜாதியாரைச் சுட்டிக்காட்டி கத்தினார்: “நாத்திகர்களே ஒழிந்து போங்கள்!” அவர் எரிக்கப்பட்டார். அவரது தியாக மரணம் இயேசு கிறிஸ்துவின் நாமத்துக்கு மகிமை சேர்த்தது.

**3. உங்கள் வாழ்க்கையை ஆராய்ந்து பாருங்கள் (4:15-18).**

துன்புறுத்தலும், பாடுகளுமாகிய உலையில் நமக்குக் கிடைக்கும் அதிக வெளிச்சத்தைக் கொண்டு நமது வாழ்க்கையையும், ஊழியத்தையும் நம்மால் ஆராய்ந்து பார்க்க முடியும். அக்கினி சோதனை என்னும் புடமிடுதலைக்

கொண்டு தேவன் நமது அழுக்கை அகற்றி நம்மைச் சுத்திகரிக்கிறார். ஒருநாள் நெருப்பால் நடைபெறும் ஒரு நியாயத்தீர்ப்பு முழு உலகத்தையும் மேற்கொள்ளும் (2 பேதுரு 3:7-16). அதே வேளையில், தேவனின் நியாயத்தீர்ப்பு, சபை என்ற 'தேவனுடைய வீட்டிலேயே' தொடங்குகிறது (1 பேதுரு 2:5). இந்த உண்மை முடிந்த அளவிற்கு நம்மைப் பரிசுத்தமாகவும், கீழ்ப்படிதலோடும் இருப்பதற்குத் தூண்ட வேண்டும் (இந்த உண்மைக்கு ஒரு பழைய ஏற்பாட்டு எடுத்துக்காட்டை காண எசேக்கியேல் 9-ஐப் பார்க்கவும்).

நமது வாழ்க்கையை நாம் ஆராயும்போது நமக்கு நாமே பல கேள்விகளைக் கேட்டுக்கொள்ள வேண்டும்.

### *அ. நான் ஏன் துன்பப்படுகிறேன்? (4:15).*

நாம் ஏற்கனவே பார்த்தபடி, எல்லா பாடுகளுமே கர்த்தரிடத்தில் இருந்து வரும் 'அக்கினி சோதனை' அல்ல. தன்னைக் கிறிஸ்தவன் என்று வெளிப்படையாகக் கூறிக்கொள்ளும் ஒருவன், சட்டத்தை மீறி அதனால் பிரச்சினைக்குள்ளானாலோ அல்லது தேவையின்றி அடுத்தவர்களின் வாழ்க்கையில் குறுக்கிட்டாலோ அவன் துன்பப்பட்டே *ஆகவேண்டும்*. நாம் கிறிஸ்தவர்கள் என்ற உண்மை, நமது தவறான நடவடிக்கைகளினால் ஏற்படும் விளைவுகளில் இருந்து தப்பிக்க நமக்கு உத்தரவாதம் ஆகாது. நாம் கொலைக் குற்றவாளிகளாக இல்லாமல் இருக்கலாம் (எனினும் இதயத்தில் இருக்கும் கோபம் கொலைக்கு சமமே — மத். 5:21-26). ஆனால் களவைப் பற்றி அல்லது அடுத்தவர்கள் விஷயத்தில் அநாவசியமாகத் தலையிடுவது பற்றி என்ன கூறுவது? ஆனானப்பட்ட ஆபிரகாம், தாவீது, பேதுரு போன்ற வேதம் போற்றியுரைக்கும் பெரியோர்களே தேவனுக்குக் கீழ்ப்படியத் தவறியபோது அதற்காகத் துன்பப்பட நேர்ந்தது என்றால் தப்பித்துக்கொள்ள நாம் எம்மாத்திரம்? நாம் கிறிஸ்தவர்களாக இருப்பதனால் துன்பப்பட வேண்டுமே தவிர, குற்றவாளிகளாய் இருப்பதற்காக அல்ல என்பதில் உறுதியாக இருக்க வேண்டும்.

### *ஆ. நான் வெட்கப்படுகிறேனா அல்லது கிறிஸ்துவை மகிமைப்படுத்துகிறேனா (4:16).*

தான் கிறிஸ்துவை மறுதலித்த சம்பவத்தை இந்த அறிக்கை பேதுருவுக்கு ஞாபகப்படுத்தி இருக்கும் (லூக். 22:54-62). இயேசு கிறிஸ்து நம்மைக் குறித்து வெட்கப்படவில்லை (எபி. 2:11) — ஆயினும் அநேக முறை அவர் வெட்கப்படும் அளவுக்கு நாம் நடந்திருக்கிறோம். நமது தேவன் என்று நாம் அழைப்பது குறித்துப் பிதாவானவர் வெட்கப்படவில்லை (11:16). இயேசு கிறிஸ்து நமக்காக சிலுவையில் அவமானத்தைத் தாங்கிக் கொண்டார் (12:2). எனவே நாமும் நிச்சயமாக நிந்தனைகளை அவருக்காகத் தாங்கிக்கொண்டு அது குறித்து வெட்கப்படாமலும் இருக்கலாம். மாற்கு 8:38-ல் உள்ள எச்சரிக்கை சிந்தித்துப்பார்க்க வேண்டிய ஒன்றாகும்.

"வெட்கப்படாதே" என்பது எதிர்மறையானது (Negative); "தேவனை மகிமைப்படுத்து" என்பது நேர்மறையானதாகும் (Positive). சமநிலை வாய்ந்த சாட்சிக்கு இரண்டுமே தேவையாக இருக்கின்றன. நாம் தேவனை மகிமைப்படுத்த விரும்பினால், இயேசு கிறிஸ்துவின் பெயரின் நிமித்தமாக வெட்கப்படக்கூடாது. ரோமாபுரிக்குச் சென்றபோதும் (ரோமர் 1:16), ரோமாபுரியில் பாடுகளை அனுபவித்தபோதும் (பிலி. 1:20-21), தியாக மரணத்தை ரோமாபுரியில் எதிர்நோக்கியபோதும் (2 தீமோ. 1:12) வெட்கப்-படக்கூடாது என்ற உறுதியான தீர்மானமே பவுலை உற்சாகப்படுத்தியது.

### *இ. நான் வழிவிலகிப் போனவர்களை வென்றெடுப்பதை நாடுகிறேனா? (4:17-18).*

வழிவிலகிப் போனவர்களை வருணிக்கப் பேதுரு பயன்படுத்தும் வார்த்தை-களைப் பாருங்கள்: "சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்கள், பக்தியில்லாதவனும் பாவியும்". இந்த வசனம் எடுத்து வைக்கும் வாதம் தெளிவானதே: தேவன் "அக்கினி சோதனையைத்" தமது பிள்ளைகளுக்கே கூட அனுப்புகிறார் என்றால், அவர்களே "இரட்சிக்கப்படுவது அரிதாக" இருக்குமேயானால், தேவ கோபாக்கினையான நியாயத் தீர்ப்பு நிகழும்போது, கெட்டுப்போன பாவியின் நிலை என்னவாயிருக்கும்?

பாடனுபவிக்கும் ஒரு விசுவாசி, கூடவே மகிமையையும் அனுபவிப்பதோடு, வருங்காலத்தில் இதற்கும் மேலான மகிமை கிடைக்கும் என்பதையும் அறிந்திருக்கிறான். ஆனால் அவனைத் துன்புறுத்தும் பாவியோ தேவ கோபத்தின் அளவை மென்மேலும் அதிகரிக்கிறான் (மத். 23:29-33). நம்மைப்பற்றி மட்டுமே அக்கறை உள்ளவர்களாக இருப்பதற்குப் பதிலாக, நம்மைச் சுற்றி இருக்கும் வழிவிலகிப் போன பாவிகளைப் குறித்து அக்கறை உள்ளவர்களாக இருக்க வேண்டும். வழிவிலகிப் போனவர்களை நியாயம் தீர்த்து ஆக்கினையை அளிப்பதற்காக இயேசு திரும்பி வரும்போது வெளிப்-படும் "ஜீவாலித்து எரியும் அக்கினியோடு" ஒப்பிடும்போது, தற்போதைய நமது "அக்கினி சோதனை" ஒன்றுமே இல்லை எனலாம் (2 தெச. 1:7-10). இதே கருத்து நீதிமொழிகள் 11:31-ல் கூறப்படுகிறது: "இதோ, நீதிமானுக்கு பூமியில் சரிகட்டப்படுமே; துன்மார்க்கனுக்கும் பாவிக்கும் எத்தனை அதிகம்?"

"இரட்சிக்கப்படுவது அரிது" என்ற சொற்றொடருக்கு "சிரமத்தோடு இரட்சிக்கப்படுதல்" என்று பொருள். ஆனால் தேவன், நம்மை இரட்சிக்கக் கூடாத அளவுக்கு பலவீனமானவர் என்ற கருத்து இங்கு எழவில்லை. அக்குறிப்பு ஆதியாகமம் 19:15-26-ஐப் பற்றியதாக இருக்கலாம். சோதோம் நகரை அழித்தபோது லோத்தைக் காப்பாற்ற தேவன் எடுத்துக்கொண்டு பிரயாசத்தை அது குறிக்கலாம். தேவனால் கூடும் - ஆனால் லோத்து ஒத்துழைக்க மறுத்தான். அவன் தயங்கி நின்றான்; தூதர்களோடு விவாதம்

புரிந்தான். கடைசியில் கரத்தைப் பிடித்து நகருக்கு வெளியில் இழுத்துச்செல்லப் பட்டான். லோத்து "அக்கினியில் அகப்பட்டு தப்பினது போல் தப்பினான்"; அவன் எவற்றிற்காக வாழ்ந்தானோ அவை எல்லாம் புகையாகப் போய் மறைந்தன (1 கொரி. 3:9-15).

பாடனுபவிக்கும் நேரங்கள், நம்மைத் துன்புறுத்துபவர்களுக்கு அன்போடு சாட்சியளிக்க நமக்குக் கிடைக்கும் வாய்ப்புகள் ஆகும் (மத். 5:10-12, 43-48). நிலநடுக்கம் பிலிப்பிய சிறையதிகாரியை இயேசுவினிடத்தில் கொண்டு-வரவில்லை. ஏனெனில் தற்கொலை செய்துகொள்ளப்போகும் அளவுக்கு அது அவனை அச்சுறுத்திவிட்டது. பவுலின் அன்பான அக்கறையே அந்த சிறை-யதிகாரியைக் கிறிஸ்துவின் மேல் விசுவாசம் கொள்ள வைத்தது. நம்மைத் துன்புறுத்துபவர்களை கிறிஸ்தவர்களாகிய நாம் பழி வாங்க முனையக் கூடாது. மாறாக, நாம் ஜெபித்து அவர்களை இயேசுவுக்குள் வழிநடத்துவதையே நாட வேண்டும்.

**4. தேவனுக்கு உங்களை ஒப்புக்கொடுங்கள் (4:19).**

தேவ சித்தத்தின்படி பாடனுபவிக்கும் போது நம்மால் தேவனுடைய அரவணைப்பில் நம்மை ஒப்புக்கொடுக்க முடியும். கிறிஸ்தவர்களாக நாம் செய்யக் கூடிய எல்லாம் இதைச் சார்ந்தே இருக்கின்றன. இந்த வார்த்தை வங்கியியல் சம்பந்தப்பட்டது. "பாதுகாப்பிற்காக இட்டு வைப்பது" என்று அதற்கு அர்த்தம் (2 தீமோ. 1:12). உங்களுடைய வாழ்க்கையை தேவனுடைய வங்கியில் இட்டுவைக்கும்போது (deposit your life in God's bank), உங்கள் முதலீட்டிற்கு நிச்சயமாக நித்திய இலாபங்களை எப்போதும் பெறுவீர்கள்.

நாம் தேவனுக்கு விலையேறப்பெற்றவர்கள் என்பதையே இச்சித்திரம் நமக்கு நினைவூட்டுகிறது. அவர் நம்மை உருவாக்கி, இரட்சித்து, நமக்குள் வாழ்ந்து, நம்மைக் காவல் காத்து, பாதுகாக்கிறார். நான் ஒரு சேமிப்பு மற்றும் கடன் வழங்கும் சங்கத்தின் விளம்பரத்தைச் செய்தித்தாளில் பார்த்தேன். அது அந்த நிறுவனத்தின் ஸ்திரத்தன்மையையும், அதற்கு ஒருங்கிணைந்த வைப்புத்தொகை காப்பீட்டுக் கழகத்தின் (FDIC) பின்பலம் இருப்பதையும் உறுதி செய்தது. நிதி நிலைமை தடுமாறும் நாட்களில் இத்தகைய உறுதிமொழி முதலீட்டாளர்களுக்கு தேவையானதே. உங்கள் வாழ்க்கையை தேவனிடத்தில் விட்டுவைக்கும் போது, நீங்கள் எதற்கும் பயப்படத் தேவை இல்லை; ஏனெனில் அவரால் உங்களைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள முடியும்.

இந்த ஒப்புக்கொடுத்தல் தனித்த ஒரே செயல் (a single action) அல்ல; அது ஒரு தொடர் மனோபாவம். "தொடர்ந்து ஒப்புக்-கொடுத்துக் கொண்டே இருப்பது" என்பதுதான் இந்த புத்திமதியின் உந்துசக்தி. இதை எவ்வாறு நம்மால் செய்ய முடியும்? "நன்மை செய்வதின் மூலமே." தீமைக்குப் பதில் நன்மை செய்யும் போதும், துன்பம் வரும் போதிலும்

நன்மையே செய்வதாலும், நாம் நம்மை தேவனுக்கு ஒப்புக் கொடுப்பதால் அவர் நம்மை கவனமாகப் பார்த்துக் கொள்கிறார். இந்த ஒப்புக் கொடுத்தல் நமது வாழ்க்கையின் எல்லா பகுதியையும், நமது வாழ்க்கைக் காலத்தின் ஒவ்வொரு மணி நேரத்தையும் உள்ளடக்கியது ஆகும்.

நமக்கு உண்மையிலேயே நம்பிக்கை இருந்து, இயேசு மீண்டும் வருகிறார் என்று விசுவாசித்தால், நாம் அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, பரலோகத்தில் பொக்கிஷங்களையும் மகிமையையும் சேர்க்க ஆரம்பிப்போம். தங்களுடைய இறந்த காலத்தால் கட்டுப்படுத்தப்படும் ஒரு நிகழ்காலம் இரட்சிக்-கப்படாத ஜனங்களுக்கு உண்டு. ஆயினும் கிறிஸ்தவர்களின் நிகழ்காலத்தையோ எதிர்காலம் கட்டுப்படுத்துகிறது (பிலி. 3:12-21). நாம் சேவிப்பதின் மூலமாகவே நம்மை தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, எதிர்காலத்திற்காக முதலீடு செய்பவர்களாக இருக்கிறோம்.

எரேமியா 32-ல் இந்த உண்மைகளுக்கு ஒரு தெளிவான உதாரணம் உண்டு. எரேமியா தீர்க்கதரிசி ஜனங்களிடம், ஒருநாள் அவர்களது நிலைமை மாறி அவர்கள் சொந்த பூமிக்குத் திரும்பி வருவார்கள் என்று கூறிவந்தான். ஆனால் அச்சமயத்திலோ பாபிலோனியப் படை தேசத்தை ஆக்கிரமித்து, எருசலேமைப் பிடிக்கும் தருவாயில் இருந்தது. எரேமியாவின் பெரிய தகப்பன் மகனாகிய அனாமெயேல் தங்கள் குடும்ப நிலத்தை வாங்கிக்கொள்ள எரேமியாவுக்கு ஒரு வாய்ப்பளித்தான். *அந்த நிலமோ அப்போது விரோதிகளின் படையால் கைப்பற்றப்பட்டுக் கிடந்தது.* சொன்னபடி எரேமியா அதை வாங்கிக்கொண்டான். ஒரு விசுவாச நடவடிக்கையாக அதை வாங்கி, சந்தேகமில்லாமல், எருசலேம் மக்களுடைய சிரிப்புக்குப் பாத்திரமானான். தேவன் அவனுடைய விசுவாசத்-தைக் கனப்படுத்தினார். ஏனெனில் எரேமியா தான் பிரசங்கித்த வார்த்தையின் படியே வாழ்ந்து வந்தான்.

பேதுரு தேவனை "உண்மையுள்ள நியாயாதிபதி" அல்லது "உண்மையுள்ள இரட்சகர்" என்று கூறாமல், "உண்மையுள்ள சிருஷ்டி கர்த்தர்" என்று ஏன் குறிப்பிடுகிறார்? ஏனெனில் சிருஷ்டிகர்த்தராகிய தேவன் தமது மக்களின் தேவைகளைச் சந்திக்கிறார் (மத். 6:24-34). சிருஷ்டிகர்த்தரே துன்பப்படும் கிறிஸ்தவர்களுக்கு உணவும் உடையும் அளித்து, ஆபத்துக் காலங்களில் பாதுகாக்கிறார். ஆதி சபை துன்புறுத்தப்பட்ட போது, அவர்கள் ஒன்று கூடிவந்து ஜெபம் செய்து கர்த்தரை நோக்கி இவ்வாறு அழைத்தனர்: "கர்த்தாவே, நீர் வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளில் உள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனாக இருக்கின்றீர்" (அப். 4:24). அவர்கள் சிருஷ்டிகர்த்தரையே நோக்கி ஜெபித்தனர்!

நமது பரலோகப் பிதா "வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவர்" (மத். 11:25). இத்தகையப் பிதாவானவர் நமக்கு இருக்கும் போது நாம் கவலைப்படத் தேவை இல்லை. அவர் உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தர்; அவரது உண்மை ஒருபோதும் பொய்த்துப் போவதில்லை.

தேவன் தமது கோபத்தை இந்த தீய உலகத்தின் மேல் பொழிவதற்கு முன் ஒரு "பற்றி எரியும் அக்கினி சோதனை" தேவ சபைக்கு வரும்; அது சபையை ஒருங்கிணைத்து சுத்தப்படுத்தி, விலகிப்போனவர்களுக்கு முன் அதை ஒரு வல்லமையான சாட்சியாக நிறுத்தும். நாம் தேவ சித்தத்திற்காகப் பாடனுபவித்தால் ஒன்றிற்கும் பயப்படத் தேவை இல்லை. நமது உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தராகிய பிதாவானவர் நம்மை வெற்றியோடு கடந்துபோகச் செய்வார்.

11

# ஒரு நல்ல மேய்ப்பனாக இருப்பது எப்படி?

1 பேதுரு 5:1-4

பாடுகளின் காலத்தில் தேவ ஜனங்களுக்குத் தகுதிவாய்ந்த ஆவிக்குரிய தலைமை தேவைப்படுகிறது. நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டில் ஆரம்பிக்கும் என்றால், அந்த வீடு சிறந்த ஒழுங்கு முறையில் பராமரிக்கப்பட வேண்டும்; அல்லது அது சிதறி விழுந்துவிடும். இந்த செய்தியைக் குறிப்பாக சபைத்-தலைவர்களுக்கு பேதுரு ஏன் எழுதினார் என்பதற்கான காரணத்தை இதுவே விளக்குகிறது. அவர்கள் தங்களுடைய பணிகளை உத்தமத்தோடு செய்ய ஊக்கம் அளிப்பதே பேதுருவின் நோக்கம். துன்ப நேரங்களில் ஓடிப்-போய்விடும் தலைவர்கள் தாங்கள் கூலிக்காக வேலை செய்தவர்களே ஒழிய நல்ல மேய்ப்பர்கள் அல்ல என்பதையே நிரூபிக்கின்றனர் (யோவான் 10:12-14).

புதிய ஏற்பாட்டு சபைகள் கண்காணிகள் மற்றும் உதவிக்காரர்களின் தலைமையிலேயே அமைக்கப்பட்டன (1 தீமோ. 3). “மூப்பர்” மற்றும் “கண்-காணி” ஆகிய வார்த்தைகள் ஒரே அலுவலையே குறிக்கின்றன (அப். 20:17, 28). “கண்காணி” என்ற சொல் பெரும்பாலும் “மேய்ப்பன்” என்று மொழி-பெயர்க்கப் பட்டுள்ளது (1 பேதுரு 5:2-ஐப் பார்க்கவும். இநத பட்டம் 2:25-ல் கிறிஸ்துவுக்கும் உபயோகிக்கப்படுகிறது). “மூப்பர்” என்பது அலுவலரின் முதிர்ச்சியையும், “கண்காணி” என்பது அலுவலரின் பொறுப்பையும் குறிக்-கின்றன. “ஆயர்” என்ற வார்த்தை (அதற்கு அர்த்தம் மேய்ப்பர்) இதே அலுவலுக்கு இன்னொரு பட்டம் (எபே. 4:11). மூப்பர்கள் அந்த பதவிக்கு நியமிக்கப்பட்டனர் (அப். 14:23. இங்கு “ஒப்புவித்தல்” என்பது “கைகளை உயர்த்தி நியமித்தல்” என்று பொருள்படுகிறது). தகுதிவாய்ந்தவர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை ஒவ்வொரு சபைப்பிரிவும் பெற்றிருக்கின்றன.

ஒவ்வொரு சபையும் சிறப்பு வாய்ந்த தலைமையை உடையதாக இருக்க வேண்டும் என்பதில் பேதுரு அக்கறை உள்ளவராக இருக்கிறார். அக்கினி சோதனைகள் வரும்போது, சபையின் விசுவாசிகள் தங்கள் மூப்பர்களிடம்

இருந்து வழிகாட்டுதலையும் ஊக்கத்தையும் பெறலாம். ஒரு வெற்றிகரமான போதகருக்கு இருக்க வேண்டிய தனிப்பட்ட குணநலன்கள் யாவை?

**1. கிறிஸ்துவோடுள்ள முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சொந்த அனுபவம் (5:1).** இந்த நிருபத்தில் பேதுரு தன்னை ஒரு அப்போஸ்தலராகவோ அல்லது ஒரு பெரும் ஆவிக்குரிய தலைவராகவோ அறிமுகப்படுத்திக் கொள்ளவில்லை. மாறாக தன்னையும் இன்னொரு மூப்பராகவே கூறிக்கொள்ளுகிறார். இருப்பினும் கிறிஸ்துவின் பாடுகளுக்கு தான் ஒரு நேரடி சாட்சி என்ற உண்மையைக் குறிப்பிடுகிறார் (பார்க்க: மத். 26:36 லிருந்து). "சாட்சி" என்று மொழிபெயர்க்கப்-பட்டுள்ள கிரேக்க வார்த்தையே ஆங்கிலத்துக்கு "martyr" என்ற சொல்லைத் தந்தது. கிறிஸ்துவுக்காகத் தியாக மரணம் ஏற்பவர்களையே பொதுவாக நாம் "martyr" என்று நினைக்கிறோம்; பேதுருவும் அதையே செய்தார்; ஆயினும் அடிப்படையில் "martyr" என்பவர் தான் கண்டதையும் கேட்டதையும் குறித்து சாட்சி கொடுப்பவராகும்.

கிறிஸ்துவோடு தனிப்பட்ட முறையில் பேதுருவுக்குக் கிடைத்த சொந்த அனுபவங்கள் என்ற வெளிச்சத்தில் 1 பேதுரு 5-ஐ தியானிப்பது சுவையாக இருக்கிறது. ஒன்றாம் வசனம் நம்மைக் கெத்செமெனேக்கும் கல்வாரிக்கும் கொண்டு செல்கிறது. "இனி வெளிப்படும் மகிமை" நமக்கு மறுரூப மலையில் கிறிஸ்துவுடன் பேதுருவுக்குக் கிடைத்த அனுபவத்தை ஞாபகப்படுத்துகிறது (2 பேதுரு 1:15-18; மத். 17:1-5). இரண்டாவது வசனத்தில் மேய்ப்பன் மற்றும் ஆடுகளைப் பற்றி வலியுறுத்திக் கூறுவது, யோவான் 10-ஐயும், யோவான் 21:15-17-ல் கர்த்தர் பேதுருவுக்குக் கூறும் புத்திமதியையும் நிச்சயமாக நினைவுக்குக் கொண்டு வரும்.

மூன்றாவது வசனத்தில் உள்ள "இறுமாப்பாய் ஆளுவது" என்பது, லூக்கா 22:24-30-ல் உள்ள உண்மையில் யார் பெரியவர் என்ற கிறிஸ்துவின் பாடத்தையும், வேறுசில இடங்களில் தாழ்மையுள்ள சேவையைப் பற்றி தமது சீடர்களுக்குப் போதித்தவைகளையும் நமது நினைவுக்குக் கொண்டு வருகிறது. ஐந்தாவது வசனத்தில் இருக்கும் "மனத்தாழ்மையை அணிந்து கொள்ளுங்கள்" என்ற அறிவுரை, மேல் வீட்டு அறையில் சீஷர்களின் பாதத்தைக் கழுவி துண்டால் துடைத்த நிகழ்ச்சிக்கு நம்மைக் கொண்டு செல்கிறது (யோவான் 13:1-17).

எட்டாம் வசனத்தில் உள்ள எச்சரிக்கை, சாத்தான் உன்னையும் மற்ற அப்போஸ்தலர்களையும் புடைக்கப் போகிறான் என்று நமது கர்த்தர் பேதுருவுக்குக் கொடுத்த எச்சரிக்கைக்கு இணையானது (லூக். 22:31). பேதுரு அந்த எச்சரிக்கைக்கு செவிசாய்க்கவில்லை கடைசியில் மூன்று முறை தனது கர்த்தரை மறுதலிக்க வேண்டியதாயிற்று.

"சீர்ப்படுத்தி" என்ற வினைச்சொல் (வச.10), மத்தேயு 4:21-ல் "வலையைப் பழுதுபார்த்தல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது சுவையாக

இருக்கிறது: இது நான்கு மீனவர்களைக் கர்த்தரின் சேவைக்கு அழைத்தது பற்றிய வருணனை ஆகும்.

வேறு வார்த்தைகளில் கூறப்போனால், ஆவியானவரால் ஏவப்பட்ட பேதுரு, இயேசு கிறிஸ்துவோடு தமக்குள்ள சொந்த அனுபவத்தையே இந்த வார்த்தைகளின் மூலம் எழுதுகிறார். அவருக்குக் கிறிஸ்துவோடு ஒரு ஜீவாதாரமானதும், வளர்ச்சி அடைந்து வந்ததுமான உறவு இருந்தது. இதுவே தேவ ஜனங்களுக்குத் தீவிரமாக ஊழியம் செய்ய அவருக்கு உதவி செய்தது.

சபைப் போதகர் தேவனோடு சஞ்சரிக்கிறவராகவும், ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ச்சி அடைகிறவருமாக இருக்க வேண்டும். இளைஞனான தீமோத்தேயுவுக்கு பவுல் புத்திமதி கூறினார்: "நீ தேறுகிறது யாவருக்கும் விளங்கும்படி, இவைகளையே சிந்தித்துக்கொண்டு, இவைகளிலே நிலைத்திரு" (1 தீமோ. 4:15). மூல பாஷையில் "தேறுகிறது" என்ற வார்த்தை "முன்னோடியாக முன்னேறுதல்" என்பதாகும். மூப்பர்கள் தொடர்ந்து புதிய ஆராய்ச்சிகளுக்குள்ளும், சாதனைகளுக்குள்ளும், ஊழியங்களுக்குள்ளும் முன்னேறிச் செல்ல வேண்டும். சபையின் தலைவர்கள் முன்னேறிப் போகாவிட்டால் சபையும் முன்னேற்றம் அடையாது.

ஒரு மாநாட்டில் கலந்துகொண்ட போது ஒரு சபையின் உறுப்பினர் ஒருவர் என்னிடம் கூறினார்: "நாங்கள் எங்களுடைய போதகரை நேசிக்கிறோம். ஆனால் எப்போதும் அவர் ஒரே விஷயத்தைக் குறித்தே பேசுவதால் சோர்வடைந்து விடுகிறோம். அவர் சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்லுகிறார். சங்கீதத்தையும், வெளிப்படுத்தின விசேஷத்தையும் தவிர வேறு புத்தகங்கள் வேதாகமத்தில் இருப்பது அவருக்குத் தெரியவில்லை போல் தோன்றுகிறது." அப்போதகர் "ஆவிக்குரிய விஷயங்களில் ஒரு முன்னோடியாக" மாறி, புதிய பகுதிகளுக்குள் செல்ல வேண்டியது அவசியம். அப்போதுதான் அவரால் தமது ஜனங்களைப் புதிய ஆசீர்வாதங்களுக்குள்ளும், சவால்களுக்குள்ளும் வழிநடத்திச் செல்ல முடியும்.

சில வேளைகளில் ஒரு சபைக்கு தேவன் சோதனைகளை அனுமதிக்கிறார். இதனால் சபை மக்கள் வளரவும், புதிய உண்மைகளைக் கண்டுணரவும், பதிய வாய்ப்புகளைக் காணவும் நிர்ப்பந்தப் படுத்தப்படுகின்றனர். எருசலேம் நகரில் கிறிஸ்துவுக்காகத் துன்பப்பட்டபோது தமது ஆவிக்குரிய அனுபவத்தில் பேதுரு வளர்ச்சி அடைந்தார் என்பது உண்மையே. அவர் எவ்வகையிலும் முழுமையானவராக இல்லை; உண்மையைக் கூறப்போனால் இவரது முன்னுக்குப்பின் முரணான நிலைக்காக பவுல் ஒருமுறை இவரைக் கண்டிக்க வேண்டியதாயிற்று (கலா. 2:11-21). ஆனால் பேதுருவோ கிறிஸ்துவுக்காகத் தன்னை ஒப்புக்கொடுத்து, தேவன் அவருக்காக வைத்திருந்தவற்றைக் கற்றுக்கொள்ளவே விரும்பினார்.

நான் இன்றைய தேவ மேய்ப்பர்களுக்கு ஏதாவது ஆலோசனை கூறுவதாக இருந்தால் அது இதுவே: கிறிஸ்துவோடு ஒரு வளரும் உறவை

உருவாக்கிக் கொள்ளுங்கள். அவர் அருளுவதை உங்கள் மக்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள். இவ்வகையில் நீங்களும் வளர்ந்து அவர்களும் வளர்வார்கள்.

**2. தேவ மந்தையின் மேல் ஓர் அன்புநிறைந்த அக்கறை (5:2-3).**

மந்தை என்ற படிமம் (Image) வேதாகமத்தில் அடிக்கடி பயன்படுத்தப்படுவதே; அது அறிவுரைகள் நிறைந்த ஒன்றாகும் (பார்க்க: சங். 23. 100; ஏசா. 40:11; லூக். 15:4-6; யோவான் 10; அப். 20:28; எபி. 13:20-21; 1 பேதுரு 2:25; வெளி. 7:17). நாம் ஒருகாலத்தில் அழிவை நோக்கி அலைந்து திரிந்த வழி தப்பிப்போன ஆடுகள்; ஆயினும் நல்ல மேய்ப்பன் நம்மைக் கண்டு பிடித்து, மந்தையோடு திரும்பவும் சேர்த்துவிட்டார்.

நாய்களையும், பன்றிகளையும் போலல்லாமல், ஆடுகள் சுத்தமான மிருகங்களாகும் (2 பேதுரு 2:20-22). ஆடுகள் மந்தைகளாகத் திரளும் இயல்புடையவை; தேவ மக்களும் ஒன்றுசேர்ந்து இருப்பது அவசியமாகும். ஆடுகள் அறியாமைக்குப் பேர் போனவை; மேய்ப்பனைப் பின் தொடராவிட்டால் அலைந்து தொலைந்துபோகும். ஆடுகள் தங்களைத் தற்காத்துக் கொள்ள இயலாதவை. எனவே மேய்ப்பனின் பாதுகாப்பு அவைகளுக்கு அவசியமானதாகும் (சங். 23:4).

ஆடுகள் மிகவும் உபயோகமுள்ள மிருகங்கள். யூத மேய்ப்பர்கள் தங்கள் ஆடுகளைப் பேணிப் பாதுகாத்தனர்: இறைச்சிக்காக அல்லாமல் (அது மிகவும் விலையுள்ளது), கம்பளி, பால், குட்டிகள் ஆகியவற்றிற்காகவே அவ்வாறு செய்தனர். தேவ மக்கள் அவருக்குப் பயனுள்ளவர்களாக இருக்க வேண்டும். பிறரைக் கிறிஸ்துவுக்குள் அழைத்து வருவதின் மூலம் பெருகவும் வேண்டும். ஆடுகள் பலிசெலுத்தப் பயன்பட்டன; நாமும் "ஜீவனுள்ள பலியாக" இருந்து தேவ சித்தத்தை நிறைவேற்ற வேண்டும்.

மேய்ப்பர் - மூப்பர்களுக்கு தேவன் தந்துள்ள பொறுப்புகளைப் பேதுரு அவர்களுக்கு ஞாபகப்படுத்துகிறார்.

***அ. தேவ மந்தையை மேய்க்கவேண்டும் (5:2).***

"மேய்த்து" என்ற வார்த்தை "கவனிப்பு" என்று அர்த்தம் தருகிறது. மந்தையை மேய்க்கும் மேய்ப்பன் பல பணிகளைச் செய்யவேண்டி உள்ளது. ஆடுகளைத் திருடர்களிடம் இருந்தும், கொள்ளையிட்டு சூறையாடுபவர்களிடம் இருந்தும் பாதுகாக்க வேண்டும்; ஆயரும் தேவ மக்களை, மந்தையைக் கெடுக்க நினைப்போரிடம் இருந்து காக்க வேண்டும் (அப். 20:28-35). சில சமயம் மேய்ப்பன் அதட்டி எச்சரிக்கும்போது ஆடுகள் செவிசாய்க்க விரும்புவதில்லை; ஆயினும் இந்த ஊழியம் ஆடுகளின் நன்மைக்காகவே.

ஓர் உண்மையான மேய்ப்பன் தன் மந்தையைக் காப்பதோடு, புல்லுள்ள இடங்களுக்கு வழிநடத்தி அவை பசியாறப் புசிக்குமாறு செய்கிறான். அந்த மேய்ப்பன் எப்போதும் தன் மந்தைக்கு முன்னாக நடந்து, போகும் நிலத்தை நோட்டமிட்டு, அங்கு தன் மந்தைக்குத் தீங்கு செய்ய ஒன்றுமில்லை என்று

தெளிகிறான். பாம்புகள், குழிகள், விஷவிருட்சங்கள், அபாயகரமான விலங்குகள் இருக்கின்றனவா என்று சோதித்தறிகிறான். ஒரு போதகருக்கு தமது மக்களை தேவ வார்த்தை என்னும் தழைத்தோங்கிய பசும்புல்லுக்கு நேராய் வழிநடத்தி, அவைகள் அவற்றைத் தாங்களாகவே உண்டு வளரச் செய்ய வேண்டியது எவ்வளவு முக்கியமான காரியம்!

சில சமயம் பின்தங்கிய ஆட்டைப் பிரித்தெடுத்துத் தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்துவது ஒரு மேய்ப்பனுக்கு முக்கியமான கடமையாகும். சில போதகர்கள் இன்று கூட்டங்களில் மட்டுமே விருப்பம் காட்டுகின்றனர். தனி மனிதர்களைக் கவனிக்க அவர்களுக்கு நேரமில்லை. இயேசு பெரும் திரளான ஜனங்களுக்குப் போதித்தார். ஆயினும் நிகோதேமுவுடனும் (யோவான் 3), கிணற்றருகில் இருந்த பெண்ணுடனும் (யோவான் 4), ஆவிக்குரிய தேவைகளோடு இருந்த பிறருடனும் பேச நேரம் ஒதுக்கினார். தெசலோனிக்கியாவில் பவுல் மக்களோடு மக்களாகக் கலந்து பழகி ஊழியம் செய்து (1 தெச. 2:11) அவர்களை மிகவும் நேசித்தார்.

முரண்டுபிடிக்கும் ஆட்டை எவ்விதத்திலாவது மேய்ப்பன் கட்டுக்குள் கொண்டு வந்தேயாக வேண்டும். ஓர் ஆட்டிற்கு தனிப்பட்ட முறையில் கவனம் தேவைப்பட்டால், மேய்ப்பன் அதைத் தன் நெஞ்சோடு நெஞ்சாக அணைத்துத் தோளின் மேல் தூக்கி வரவேண்டும். ஒவ்வொரு நாளின் முடிவிலும், மெய்யான மேய்ப்பன் ஒவ்வொரு ஆடாக கவனமாய்ப் பார்த்து, ஏதாவது விசேஷமான பராமரிப்பு தேவையா என்று ஆராய்வான். காயங்களுக்கு எண்ணெய் பூசி, ரோமத்தில் இருக்கும் முட்களை அகற்றுவான். ஓர் உண்மை மேய்ப்பன் ஒவ்வொரு ஆட்டின் பெயரையும் அறிவான். ஒவ்வொன்றின் போக்கையும் அறிவான்.

தேவ ஆடுகளின் உண்மை மேய்ப்பனாக இருப்பது என்பது எளிதான காரியம் அல்ல. அது ஒருபோதும் முடிவடையாத பணி; அதைச் சரியான முறையில் செய்ய வேண்டுமானால் தேவனுடைய மகத்தான வல்லமை தேவைப்படுகிறது. இது இன்னும் சவாலாக அமைவதற்குக் காரணம், அவன் மேய்ப்பது அவனது சொந்த மந்தையல்ல; அது தேவனுடையது. நான் சில சமயம் "*எனது* சபையில்" என்று சில போதகர்கள் கூறுவதைக் கேட்டிருக்கிறேன். அவர்கள் என்ன அர்த்தத்தில் கூறுகிறார்கள் என்பதை நான் அறிவேன்; ஆனால் சரியாகச் சொல்ல வேண்டுமானால் அது தேவனின் மந்தை; தமது சொந்தக் குமாரனின் விலையேறப்பெற்ற இரத்தத்தால் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டது (அப். 20:28). போதகர்களாகிய நாம் எவ்வாறு தேவ ஆடுகளை மேய்க்கிறோம் என்பதில் கவனமாக இருக்க வேண்டும். ஏனெனில் நமது ஊழியத்தைக் குறித்த கணக்கை ஒருநாள் நாம் ஒப்புவிக்க வேண்டும். ஆயினும், ஆடுகளும் தங்கள் மேய்ப்பர்களுக்கு எவ்விதம் கீழ்ப்படிந்தன என்ற கணக்கையும் கொடுக்க வேண்டும் (எபி. 13:17). ஆக மேய்ப்பர்களும், ஆடுகளும் ஒருவருக்கொருவர் மிகுந்த பொறுப்புடையவர்களே.

*ஆ. மேலான பார்வை.*

"கண்காணி" என்ற வார்த்தைக்கு "மேற்பார்வையாளர். வழிநடத்துவதற்காக கண்காணிப்பவர்" என்று அர்த்தம். மேய்ப்பன் மந்தைக்குள் ஒருவராகவும். அதே சமயத்தில் மேலானவராகவும் இருப்பதை உங்களால் நோக்கமுடியும். இதை ஆடு புரிந்துகொள்ளா விட்டால் சிக்கல் உருவாகும். ஆடுகளில் ஒருவராக ஆயர் இருப்பதால் அவரும் "மந்தையின் ஓர் உறுப்பினர்" ஆவார். ஆனால் வழிநடத்தும்படி அவர் அழைக்கப்பட்டுள்ளதால் மந்தைக்கு "மேலானவராகவும்" இருக்கிறார். சிலர் "மந்தையில் ஒருவரே" ஆயரும் என்ற உறவை மட்டுமே வலியுறுத்துவதால். மேய்ப்பனின் அதிகாரத்துக்குக் கட்டுப்பட மறுக்கின்றனர். வேறு சிலரோ போதகரை மேடையில் ஏற்றி வைத்து. அவரை "மேன்மையான பரிசுத்தவானாக்கி" மக்களோடு மக்களாகப் பழகவிட விரும்புவதில்லை.

ஓர் ஆற்றல் வாய்ந்த போதகருக்கு இந்த இரண்டு விதமான உறவுகளும் தேவையே. அவர் தமது மக்களோடு மக்களாக இருக்க வேண்டும். அப்போதுதான் அவரால் அவர்களையும். அவர்களது தேவைகளையும். பிரச்சினைகளையும் அறிய முடியும். அவர் அவர்களுக்கு "மேலாகவும்" இருக்க வேண்டும். அப்போதே அவர்களை வழிநடத்தி அவர்களது பிரச்சினைகளையும் தீர்க்க முடியும். *மேய்ப்பதற்கும் போதிப்பதற்கும்* இடையில் எந்த முரண்பாடும் இருக்கக் கூடாது. ஏனெனில் அவை இரண்டுமே ஓர் ஆயரின் ஊழியங்களே. ஒரு போதகர் மேய்ப்பராக இருந்தால்தான், மக்களின் தேவைகளுக்கு ஏற்ப தேவ வார்த்தையை பிரயோகிக்கமுடியும். ஓர் ஆயர் போதகராக இருக்கவேண்டும். அப்போதுதான் அவர்களுடைய தினசரி தேவைகளிலும், பிரச்சினைகளிலும் பங்கெடுத்து அவற்றை சந்திக்கத் தேவையான அதிகாரத்தைப் பெற முடியும். போதகர், வாரந்தோறும் வேதாகமத்தைப் பற்றிய விவரங்களைத் தெரிவிக்கும் மத விரிவுரையாளர் அல்ல. அவர் ஒரு மேய்ப்பர். அவர் தமது ஜனங்களை அறிவார். வார்த்தையின் மூலம் அவர்களுக்கு உதவி செய்வதையே அவர் நாடுவார்.

ஒரு மந்தையின் ஆவிக்குரிய தலைவராக இருப்பதில் அபாயங்கள் உண்டு. மூப்பர்கள் விலக்க வேண்டிய சில பாவங்களைப் பேதுரு குறிப்பிடுகிறார். முதலாவது சோம்பேறித்தனம் - "கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாய்." செய்யும் ஒரு தொழில் அல்ல ஊழியம். அவர் தேவ சித்தத்தை இதயபூர்வமாகச் செய்ய வேண்டும் (எபே. 6:6). ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளாய் டெக்சாசின் டல்லஸில் உள்ள முதல் பேப்டிஸ்ட் சபையின் போதகராக இருந்தவர் டாக்டர். ஜார்ஜ் டபிள்யூ. ட்ருயெட் (Dr. George W. Truett). வேறு பதவிகளை ஏற்குமாறு பலமுறை அவரிடம் கூறப்பட்டதுண்டு. அவர் மறுத்து. "நான் ஒரு போதகரின் உள்ளத்தை நாடிப் பெற்றுக் கொண்டேன்" என்று கூறுவார். ஒரு மனிதனுக்குப் போதகரின் உள்ளம் இருந்தால் அவர் ஆடுகளை நேசித்து சேவை செய்வார்: ஏனெனில் செய்ய

வேண்டி இருக்கிறதே என்று கட்டாயத்தால் அல்லாமல் விருப்பத்தோடு அதைச் செய்கிறார்.

மனசாட்சி இல்லாத ஒரு மனிதனுக்கு சோம்பேறித்தனமாக இருப்பதற்கேற்ற நல்ல இடம் ஊழியம். ஒரு போதகர் தன் நேரத்தை எவ்வாறு செலவிடுகிறார் என்பதைப் பொதுவாக சபை உறுப்பினர்கள் கேட்பதில்லை. மேலும், பிரசங்கத்தை வேறு ஒரு பிரசங்கியிடமிருந்து "கடன்" வாங்கி தமக்குரியது போல உபயோகித்துக் கொள்ளலாம். பெரும்பாலான தமது நேரத்தை கோல்ஃப் களத்தில் செலவிடும் ஒரு போதகரை நான் சந்தித்தேன். சனிக்கிழமைகளில் ஒலிநாடக்களில் மற்றவர்களின் பிரசங்கத்தைக் கேட்டு அதை ஞாயிறு பயன்படுத்திக் கொள்ளுவார். அவர் தப்பித்துக்கொண்டே போகலாம். ஆனால் தலைமை மேய்ப்பனைச் சந்திக்கும்போது என்ன கூறுவார்?

சோம்பேறித்தனத்துக்கு அடுத்த படியாக மேய்ப்பன் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய விஷயம்: பேராசை. "அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனத்தோடு." ஒரு சபை தன் போதகருக்கு ஊதியம் கொடுப்பது மிகவும் சரியானதே (1 கொரி. 9; 1 தீமோ. 5:17-18). மேலும் சபையார் நியாயமாகவும், முடிந்தவரை தாராளமாகவும் இருக்க வேண்டும். ஆனால், பணம் சம்பாதிப்பது அவருடைய ஊழியத்தின் முக்கியமான குறிக்கோளாக இருக்கக்கூடாது. பவுல் இதை மூப்பர்களுக்கான தகுதிகளில் வலியுறுத்துகிறார். "பண ஆசை இல்லாதவனாய் இருந்து" (1 தீமோ. 3:3); "இழிவான ஆதா-யத்தை இச்சியாதவனும்." அவன் பண ஆசை இல்லாதவனும், பணத்திற்குப் பின்னாக அதைத் தேடித் திரிய தன்னை ஒப்புக் கொடாதவனாகவும் இருக்க வேண்டும்.

குடும்பத்தின் நிலை அல்லது சூழ்நிலையின் காரணமாகச் சில போதகர்கள் வெளி வேலைகளில் ஈடுபட வேண்டிய அவசியம் இருக்கும். பவுல் கூடாரவேலை பார்த்தவர். எனவே பகுதிநேர வேலை செய்வதில் அவமானம் எதுவும் இல்லை. ஆனால் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரமாகப் போதகரை சபை மக்கள் வெளி வேலைகளில் இருந்து விடுவித்துவிட வேண்டும். அப்போதுதான் அவரால் சுவிசேஷ ஊழியத்தில் முழுமையாகத் தம்மை ஈடுபடுத்திக்கொள்ள முடியும். ஊழியப்பாதையில் இருந்து வழிவிலகச் செய்துவிடுமாதலால் போதகர்கள் பணம் சம்பாதிக்கும் திட்டங்களில் ஈடுபடாமல் கவனமாக இருக்க வேண்டும். "தண்டில் சேவகம் பண்ணுகிற எவனும், தன்னைச் சேவகம் எழுதிக் கொண்டவனுக்கு ஏற்றவனாய் இருக்கும்படி, பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக்கொள்ள மாட்டான்" (2 தீமோ. 2:4).

"உற்சாக மனது" என்ற சொற்றொடருக்கு "ஆர்வமுள்ள மனது" என்று பொருள். இந்த வார்த்தையையே பவுல் ரோமர் 1:15-ல் உபயோகப்படுத்துகிறார். "நான் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கு மிகவும் ஆவலாய் இருக்கிறேன்" (NIV). இருதயத்திற்குள் இருக்கும் ஆவலினாலும், ஆயத்தத்தினாலும் சேவை

செய்ய விரும்புவது என்று இதற்கு அர்த்தம். இதுவே ஒரு மெய்யான மேய்ப்பனுக்கும் கூலிக்கு அமர்த்தப்பட்டவனுக்கும் இடையில் உள்ள வேறுபாடு. ஒரு கூலிக்காரன் சம்பளம் கிடைப்பதால் வேலை பார்க்கிறான். ஒரு மேய்ப்பன் ஆடுகளை நேசிப்பதாலும், உள்ளத்தை அவைகளுக்காக அர்ப்பணித்ததாலும் சேவை செய்கிறான். ஓர் உண்மையான மேய்ப்பனின் உள்ளத்தையும் ஊழியத்தையும் பற்றிய விளக்கத்துக்கு அப்போஸ்தலர் 20:17-38-ஐ வாசிக்கவும்.

*இ. மந்தைக்கு மாதிரியாய் இருங்கள் (5:3).*

ஏதேச்சதிகாரத்துக்கும் தலைமைக்கும் இடையில் இருக்கிறது முரண்பாடு. ஆடுகளை விரட்ட உங்களால் முடியாது; முன்னால் நடந்து வழிநடத்த வேண்டும். சபைக்கு, சேவை செய்யும் தலைவர்களும், வழிநடத்தும் சேவகர்களும் வேண்டும். ஒரு கிறிஸ்தவத் தலைவர் என்னிடம் கூறினார்: "இன்றைக்கு இருக்கும் பிரச்சினை என்னவென்றால், நமக்குப் பல புகழ்வாய்ந்த தலைவர்கள் உண்டு; ஆனால் போதுமான அளவுக்கு ஊழியர்கள் இல்லை."

மந்தையில் "ஒருவராகவும்", அதே சமயத்தில் மந்தைக்கு "மேலானவராகவும்" இருப்பதற்கு இடையில் உள்ள இழுபறியான தன்மையை, தான் ஒரு முன்மாதிரியாக நடப்பதின் மூலமே ஒரு மேய்ப்பனால் தீர்க்க முடியும். போதிப்பதற்கு ஏற்ப நடப்பவராகவும், பின்பற்றுவதற்கு ஏற்ற முன்மாதிரியாகவும் திகழும் தலைவர் ஒருவரையே ஜனங்கள் பின்பற்ற விரும்புவார்கள். எனக்குத் தெரிந்த ஒரு சபையில் எப்போதுமே பணப்-பிரச்சினை. அதற்கான காரணத்தை யாராலுமே புரிந்துகொள்ள முடியவில்லை. அந்த சபையை விட்டு அதன் போதகர் விலகிச் சென்ற பின்தான் காரணம் பிடிபட்டது: சபையின் பணிகளுக்கு மனமுவந்து கொடுக்குமாறு அவர் மற்றவர்களுக்குப் போதித்தாரே ஒழிய அவர் எதுவுமே கொடுத்ததில்லை. நாம் இல்லாத இடத்துக்கு மற்றவர்களை வழிநடத்த முடியாது.

பேதுரு சபையை தேவனுடைய "சுதந்திரம்" என்று சொல்லுவதால் உருவகத்தை (Image) மாற்றி உரைக்கவில்லை. தேவனுடைய மக்கள் அவருக்கு விலைமதிப்பற்ற பொக்கிஷம் (உபா. 32:9; சங். 33:12). இந்த வார்த்தைக்குப் பொருளாவது, தேசத்தைப் பங்கிட்டது போல (எண். 26:55). "சீட்டுப்போட்டு தெரிந்தெடுக்கப் படுவது" ஆகும். ஒவ்வொரு மூப்பருக்கும் பேணிப் பாதுகாப்பதற்குச் சொந்த மந்தை உண்டு. ஆயினும் ஆடுகள் எல்லாம் தலைமை மேய்ப்பரான இயேசு கிறிஸ்துவுக்குரிய ஒரே மந்தையைச் சேர்ந்தனவே. கர்த்தர் தாம் தெரிந்து கொள்ளும் இடத்துக்கு வேலையாட்களை நியமிக்கிறார். நாம் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும். தேவ சித்தப்படி நாம் சேவை செய்யும்போது, தேவப் பணிகளில் போட்டி இருக்க முடியாது. எனவே யார் ஒருவரும் தம்மையே முக்கியமானவர் எனக் கருதி நடந்து தேவ மக்களை "இறுமாப்பாய் ஆளக்கூடாது." போதகர்கள் "மேய்ப்பர்களே"; மேலான பிரபுக்கள் அல்ல.

**3. கிறிஸ்துவை மட்டுமே மனமகிழ்ச்சியாக்கும் விருப்பம் (5:4).**
இது நம்பிக்கையைக் குறித்த நிருபம் ஆதலால், மீண்டும் கிறிஸ்துவின் வருகையைப் பற்றிய வாக்குத்தத்தத்தைப் பேதுரு கவனத்துக்குக் கொண்டுவருகிறார். அவரது வருகை பாடுகளின் மத்தியில் உற்சாகம் தருகிறது (1:7-8). மேலும் அது உண்மையுள்ள ஊழியத்திற்கு ஊக்கம் அளிக்கிறது. ஒரு போதகன் தன்னையோ அல்லது மக்களையோ மகிழ்விப்பதற்காக ஊழியம் செய்தால், கஷ்டமும் ஏமாற்றமும் நிறைந்த ஊழியமே மிஞ்சும். ஆராதனை முடிந்தபிறகு ஒருவர் என்னிடம் கூறினார்: "இந்த ஜனங்களை எல்லாம் மகிழ்ச்சியாய் வைப்பது என்பது கடினமான காரியமே." நான் ஒரு புன்னகை-யோடு அவரிடம் கூறினேன்: "நான் அவர்களை மகிழ்ச்சியாக வைத்திருப்பது குறித்து நினைத்துக்கூட பார்ப்பதில்லை. நான் கர்த்தரை மகிழ்ச்சிப்படுத்தவே விரும்புகிறேன். மீதி காரியத்தை அவர் பார்த்துக்கொள்வார்."

இயேசு கிறிஸ்துவே ஆடுகளுக்காக மரித்த நல்ல மேய்ப்பன் (யோவான் 10:11). அந்த மாபெரும் மேய்ப்பன் தன் ஆடுகளுக்காக ஜீவிக்கிறார் (எபி. 13:20-21). தலைமை மேய்ப்பனாகிய அவர் ஆடுகளுக்காக வருகிறார் (1 பேதுரு 5:4). தலைமை மேய்ப்பராகிய அவரே ஒரு மனிதனின் ஊழியத்தைச் சீர்தூக்கிப் பார்த்து தகுந்த பலனை அளிக்க முடியும். ஒவ்வொரு மனிதனின் ஊழியத்தையும் கர்த்தர் ஆராய்ந்து பார்க்கும்போது முந்தினோராகத் தோற்றமளிக்கும் சிலர் பிந்தினோராகப் போய்விடலாம்..

கோடை காலத்தில் ஒருநாள் நான் ஸ்காட்லாந்தில் உள்ள அன்வோத் (Anwoth) என்ற இடத்தில் இருந்த ஒரு பாழடைந்த தேவாலயத்தின் இடிபாடுகளின் மத்தியில் நின்றேன். அக்கட்டிடம் ஒருவேளை 150 ஜனங்கள் அமரும்படியாக இருந்திருக்கலாம். தற்போதைய மதிப்பீடுகளின்படி அது ஒரு வெற்றிகரமான சபையாக இருந்திருக்க முடியாது. ஆனால், அங்கிருந்த மந்தைக்கு மேய்ப்பராக இருந்தவரோ பரிசுத்தரான சாமுவேல் ரூதர்ஃபோர்ட் (Samuel Rutherford). *சாமுவேல் ரூதர்ஃபோர்டின் கடிதங்கள்* என்ற அவரது படைப்பு ஒரு சிறந்த ஆன்மீகச் செவ்விலக்கியமாகும் (spiritual classic). அவரது சபைக் கட்டிடம் இன்று பாழடைந்து கிடக்கின்ற போதிலும் அவரது ஊழியம் தொடர்கிறது. மிகுந்த பாடுகளும் சரீரத் துன்பங்களும் நிறைந்த அவரது உண்மையுள்ள உழைப்புக்கு ஏற்ற பலனை தலைமை மேய்ப்பர் அளித்திருக்கிறார்.

அக்காலத்தில் பலவகையான "கிரீடங்கள்" இருந்தன. பேதுரு குறிப்பிடுவது போட்டி வீரர்கள் அணியும் கிரீடம்: பொதுவாக எளிதில் வாடிவிடக் கூடிய இலைகளாலும் மலர்களாலுமான மாலை அது. ஓர் உண்மையுள்ள போதகருக்கான கிரீடமோ மகிமையின் கிரீடம்; ஒரு *சுதந்திரத்துக்கான* ஒருநாளும் வாடாத முழுமையான பிரதிபலன்.

இன்று ஒரு கிறிஸ்தவ ஊழியன் பல்வேறு விதமான பலன்களுக்காக உழைக்கலாம். சொந்த சாம்ராஜ்யங்களை நிறுவுவதற்காக சிலர் கஷ்டப்பட்டு வேலை செய்யலாம்; மற்றும் சிலர் மனிதர்களின் பாராட்டைப் பெறுவதை நாடலாம்; மேலும் சிலர் தமது சபையில் பதவி உயர்வுகளைத் தேடலாம். இவை யாவும் ஒருநாள் வாடிவிடும். நாம் நாட வேண்டிய ஒரே பலன், "நன்றாகச் செய்தாய்" என்ற இரட்சகரின் பாராட்டும், அதனோடு சேர்ந்து வரும் வாடாத மகிமையின் கிரீடமும் தான். அக்கிரீடத்தை அவரது பாதத்தில் சமர்ப்பிப்பதும் (வெளி. 4:10), அவரது கிருபையினாலும் வல்லமையினாலுமே எல்லாவற்றையும் செய்தோம் என்பதை ஒப்புக் கொள்ளுவதும் எத்தகைய ஆனந்தம்? (1 கொரி. 15:10; 1 பேதுரு 4:11). கிறிஸ்துவை முகமுகமாய்ப் பார்க்கும்போது நமது தனிப்பட்ட மகிமையின் மேல் நமக்கு நாட்டமே இருக்காது.

ஒரு சபையின் வீழ்ச்சியும் உயர்வும் தலைமையிடமே உள்ளது. ஓர் ஐக்கியம் எவ்வளவு பெரியது அல்லது சிறியது என்பதில் ஒன்றுமே இல்லை. தலைவர்கள் கிறிஸ்தவர்களாகவும், ஒவ்வொருவரும் கிறிஸ்துவோடு ஒரு தனிப்பட்ட ஜீவாதார உறவு உடையவர்களாகவும், தமது ஜனங்களைக் குறித்த அன்பு நிறைந்த அக்கறை உள்ளவர்களாகவும், இயேசு கிறிஸ்துவை மனமகிழ்ச்சிக்குள்ளாக்கும் உண்மை ஆர்வம் உடையவர்களாகவும் இருக்க வேண்டும்.

சேவைசெய்து நாம் வழிநடத்துகிறோம்; பாடனுபவித்து சேவை செய்கிறோம்.

இந்த வகையிலேயே இயேசுவும் இதைச் செய்தார். அவரை உண்மையிலேயே மகிமைப் படுத்தும் ஒரே வழியும் இதுதான்.

# கிருபையில் இருந்து மகிமைக்கு!

1 பேதுரு 5:5-11

இரண்டாம் உலகப்போர் நடைபெற்ற போது நான் ஓர் இளநிலை உயர்நிலைப்பள்ளி மாணவனாக இருந்தேன். எங்களது வடக்கு இந்தியானா நகரில் இருந்து போர் வெகுதொலைவில் நடப்பதாகத் தோன்றியது. ஆயினும் ஒவ்வொரு அண்டை அயலகத்திலும் நகர மக்கள் பாதுகாப்பு அணிகளை அமைக்க ஆரம்பித்தனர். அதிகாரிகள் என் தந்தையை ஓர் உதவி தொகுதி காப்டனாக நியமித்தனர். அடிக்கடி நானும் என் தந்தையோடு சென்று பயிற்சி பற்றிய திரைப்படங்களையும், பேச்சாளரின் சொற்பொழிவுகளையும் கேட்பதுண்டு (ஐஸ்கிரீம் கோனை அருந்துவதே அந்த மாலை நேரங்களில் எனக்கு சுவையான அனுபவம்). ஆனால், எத்தனைத் திரைப்படங்களைப் பார்த்தாலும், எங்கள் அயலகம் குண்டு விபத்துக்கு உள்ளாகப் போவதில்லை என்றே நாங்கள் உணர்ந்தோம். எங்களது தத்துவம் என்னவென்றால், "இங்கு அது நிகழப்போவதில்லை!"

ஓர் "அக்கினி சோதனை" வரப்போவதை அறிந்த பேதுரு முழு சபைக் குடும்பமும் அதற்காக ஆயத்தப்பட வேண்டும் என்று விரும்பினார். இந்த கஷ்டமான அனுபவத்தில் தேவனை மகிமைப்படுத்தத் தேவைப்படும், கீழ்ப்படிய வேண்டிய மூன்று புத்திமதிகளைத் தமது நிருபத்தை முடிக்கும் தருவாயில் பேதுரு சபைக்கு வழங்குகிறார்.

### 1. தாழ்மை உள்ளவர்களாய் இருங்கள் (5:5-7).

பரிசுத்தவான்கள் அரசு அதிகாரங்களுக்குக் கீழ்ப்படியவும் (2:13-17), அடிமைகள் தங்கள் எஜமானர்களுக்கு அடங்கி இருக்கவும் (2:18-25), மனைவிகள் கணவர்களுக்குக் கீழ்ப்படியவும் (3:1-7) பேதுரு ஏற்கெனவே புத்திமதி கூறிவிட்டார். இப்போது எல்லா விசுவாசிகளும் தேவனுக்கும், ஒருவருக்கொருவரும் கீழ்ப்படிந்து நடக்கக் கட்டளை இடுகிறார்.

இளம் விசுவாசிகள், வயதுக்கு மதிப்பு கொடுப்பதோடு மட்டுமன்றி, ஆவிக்குரிய முதிர்ச்சி கருதியும் வயதான விசுவாசிகளுக்குக் கீழ்ப்படிய

வேண்டும். எல்லா "வயதான பரிசுத்தவான்களும்" முதிர்ச்சி அடைந்த கிறிஸ்தவர்களாக நிச்சயமாய் இருக்க முடியாது; ஏனெனில், வருடங்கள் அதிகமாக இருப்பது மட்டுமே அனுபவத்தின் மேன்மைக்கு உத்தரவாதமாக அமைய முடியாது. அதற்காக, வயதான சபை உறுப்பினர்கள் "சபையை நடத்த வேண்டும்", இளம் உறுப்பினர்கள் கூறுவதைக் கேட்கவே கூடாது என்பது அர்த்தமல்ல. தலைமுறை யுத்தம் சபைகளில் அதிகமாகக் காணப்படுகிறது: வயதான உறுப்பினர்கள் மாற்றங்களை எதிர்பார்ப்பார்கள்; இளைய தலைமுறையினர் வயோதிகர்களை எதிர்ப்பார்கள்.

இதற்கான தீர்வு இரு கட்டங்களைக் கொண்டது: (1) இளையவர்களானாலும் சரி, வயதானவர்களானாலும் சரி, எல்லா விசுவாசிகளும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிய வேண்டும் (2) எல்லோரும் தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும். "மனத்தாழ்மையை உடுத்திக்கொள்ளுங்கள்" என்பதே இப்பிரச்சினைக்குத் தீர்வு. தமது மேலங்கியைக் களைந்து விட்டு, ஒரு துண்டை உடுத்திக் கொண்டு ஒரு பணியாளரான இயேசுவைப் போல, நாம் யாவரும் ஒரு பணியாளனின் மனோபாவத்தோடு ஒருவருக்கொருவர் ஊழியம் செய்யவேண்டும். பிலிப்பியர் 2:1-11-ல் உண்மையான தாழ்மை விளக்கப்படுகிறது. தாழ்மை என்பது நம்மைப் பொருட்படுத்திக்கொள்ளாமல், நம்மைப் பற்றி நாமே மோசமாக நினைத்துக்கொள்வது அல்ல. நம்மைப் பற்றி சிந்திக்காமலே இருப்பதுதான்.

தேவனுக்குக் கீழ்ப்படியாமல் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிவது என்பது ஒருபோதும் முடியாத காரியம். தமது கருத்தை வலியுறுத்த பேதுரு நீதி 3:34-ஐ மேற்கோள் காட்டுகிறார். யாக் 4:6-லும் இதே வசனம் சுட்டிக் காட்டப்படுகிறது. இன்னொரு விசுவாசிக்குக் கீழ்ப்படியவும் கிருபை தேவை. தேவனுக்கு முன்பாக நம்மை நாமே *தாழ்த்தும்* போது தேவையான கிருபையை தேவன் நமக்கு அளிக்கிறார்.

பெருமை என்ற பாவத்தை தேவன் வெறுப்பதால் அவர் பெருமைக்கு எதிர்த்துநிற்கிறார் (நீதி. 6:16-17; 8:13). பெருமையே லூசிபரை சாத்தானாக மாற்றியது (ஏசா. 14:12-15). தேவனைப் போல ஆக வேண்டும் என்ற ஆசை — பெருமை — ஏவாளை விலக்கப்பட்ட கனியைப் புசிக்கும்படி உசுப்பி விட்டது. உலகைச் சார்ந்து இருப்பதற்கு ஓர் ஆதாரமே "ஜீவனத்தின் பெருமை" (1 யோவான் 2:16). பெருமையை முறிக்கும் ஒரே மருந்து தேவ கிருபையே. நாம் நம்மை அவருக்கு ஒப்புக்கொடுக்கும் போதே அக்கிருபையைப் பெற்றுக்கொள்ள முடியும். நாம் ஒருவருக்கொருவர் தாழ்மையோடு விட்டுக் கொடுக்கும்போது அந்த கிருபை வெளிப்படுகிறது.

தாழ்மை விசுவாசத்தின்பாற்பட்ட ஒரு காரியம். நமது வாழ்க்கையில் நமக்கு வழிகாட்டவும், அவர் குறித்த காலத்தில் அவரது குறிக்கோளை நிறைவேற்றவும் நாம் அவரை நம்பி இருக்கிறோம். மற்றவர்களிடம் தாழ்ந்து போவதில் ஓர் அபாயம் இருக்கிறது. அவர்கள் அதைத் தங்களுக்குச்

சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளலாம். ஆனால் நாம் தேவனுக்கு நம்மை ஒப்புக்கொடுத்து, ஒருவருக்கொருவர் கீழ்ப்படியும்போது இவ்வாறு நடக்காது. உண்மையாகவே தன்னை தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, தன்னோடு வாழும் கிறிஸ்தவர்களுக்கு சேவை செய்ய விரும்புகிறவன், அது இரட்சிக்கப்-பட்டவனாக இருந்தாலும் சரி, இரட்சிக்கப்படாதவனாக இருந்தாலும் சரி, யாரையும் தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ள நினைத்துக்கூடப் பார்க்க-மாட்டான். நமது வாழ்க்கையை வழிநடத்தும் தேவனுடைய "பலத்த கை" பிறருடைய வாழ்க்கையையும் வழிநடத்தும்.

"ஏற்ற காலம்" என்ற சொற்றொடரே இங்கு முக்கியமானது. ஒரு மனிதன் தகுதியாகும் வரை தேவன் அவனை உயர்த்த மாட்டார். முதலில் சிலுவை, அதன்பின் கிரீடம்; முதலில் பாடுகள், பின் மகிமை. மோசே நாற்பது ஆண்டுகள் தமது கரத்தில் இருந்த பிறகே தேவன் அவனை எகிப்தில் இருந்து யூதர்களை விடுவிக்கும்படி அனுப்பினார். யோசேப்பு ஏறக்குறைய பதின்மூன்று ஆண்டுகள் தேவனின் கரத்தின் கீழ் இருந்த பிறகுதான் அவர் அவனை சிம்மாசனத்திற்கு உயர்த்தினார். தேவனிடத்தில் பொறுமை இழந்தவர்களாய் இருப்பது நமது பெருமைக்கு ஓர் அடையாளமாகும். நாம் பாடனுபவிப்பதற்கு ஒரு காரணம் பொறுமையைக் கற்றுக் கொள்ளுவதற்காகத்தான் (யாக் 1:1-6). தமது போதகர் கூறக் கேட்ட வார்த்தைகளையே பேதுரு இங்கு குறிப்பிடுகிறார்: "தன்னைத்தான் உயர்த்துகிற எவனும் தாழ்த்தப்படுவான். தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்."(லூக். 14:11)

தேவனோடு கூடிய இத்தகைய உறவின் ஒரு நன்மை என்னவென்றால், நமது பாரங்களை அவர் கவனித்துக்கொள்ள அவரிடமே விட்டுவிடக் கிடைக்கும் உரிமையே. 1 பேதுரு 5:5-6-ல் கூறப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை நாம் கைக்கொள்ளாவிட்டால், வசனம் 7-ல் உள்ள அற்புதமான வாக்குத்-தத்தத்தை நாம் உரிமை கொண்டாட முடியாது. "கவலை" என்று மொழி-பெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையின் அர்த்தமாவது, "மனக்கிலேசம், பிய்த்துக்-கொள்ளலாமா என்ற நிலை". சூழ்நிலை கஷ்டமாக இருக்கும்போது மனக்கிலேசமும், கவலையும் அடைவது நமக்கு எளிதானதே; ஆயினும் அவ்வாறு நிகழ்ந்தால் நாம் தேவ ஆசீர்வாதத்தை இழந்து விடுவதோடு, கெட்டுப்போனவர்களின் மத்தியில் மோசமான சாட்சிகளாய்த் திகழ்வோம். அக்கினி சோதனையில் நாம் மாபெரும் வெற்றி அடைந்து, அவரது நாமத்துக்கு மகிமை கொண்டுவர வேண்டுமானால் அவரது உள்ளான சமாதானம் நமக்குத் தேவை. டாக்டர். ஜார்ஜ் மோரிசன் (Dr. George Morrison) கூறினார்: "தமது பிள்ளைகள் கவலையீனமாய் இருந்துவிடும் அளவுக்கு தேவன் அவர்களைக் கவலையற்றவர்களாக ஆக்க மாட்டார்".

1 பேதுரு 5:7-ன் படி, கடந்துபோனது நடப்பது, வருவது ஆகிய எல்லா கவலைகளையும் *முதலும் இறுதியுமாக* நாம் கர்த்தர் மேல் வைத்துவிட வேண்டும். கவலைகளை நாமே தீர்த்துக்கொள்ளலாம் என்ற எண்ணத்தில்

அவைகளை நம்மிடமே வைத்துக் கொண்டு, பின் முடியாத கட்டத்தில் துண்டுதுண்டாக அவரிடம் அளிக்கக் கூடாது. சிறுசிறு கவலைகளை நம்மிடமே வைத்துக் கொண்டால் சீக்கிரமாக அவைகள் பெரிய பிரச்சினைகள் ஆகிவிடும். ஒவ்வொரு தடவையும் ஒரு புதிய பிரச்சினை எழும்போது, நாம் ஏற்கனவே அதை அவர்மேல் வைத்துவிட்டதைக் கர்த்தருக்கு ஞாபகப்படுத்த வேண்டும் (நமக்கு நாமேயும் கூட).

தேவன் தம்முடையவர்களை விசாரிக்கிறவர் என்ற உண்மையை அனுபவபூர்வமாக அறிந்தவர் யாராவது உண்டென்றால் அது பேதுருவாகத்தான் இருக்க முடியும். நான்கு சுவிசேஷங்களையும் நீங்கள் வாசிக்கும்போது பேதுரு சில அற்புதமான அதிசயங்களில் நேரடியாகப் பங்குகொண்டவர் என்பதைக் காண முடியும். இயேசு பேதுருவின் மாமியைக் குணப்படுத்தினார் (மாற்கு 1:29-31); திரளான மீன்களைப் பிடிக்க உதவி செய்தார் (லூக். 5:1-11); அவரது ஆலய வரியைச் செலுத்த உதவி செய்தார் (மத். 17:24-27); நீர்மேல் நடக்க உதவிபுரிந்தார் (14:22-33); மல்குஸின் காதுக்கு அவர் செய்த கேட்டை நிவிர்த்தி செய்தார் (லூக். 22:50-51; யோவான் 18:10-11); மேலும் பேதுருவைச் சிறையில் இருந்து விடுவித்தார் (அப். 12).

நாம் நமது கவலைகளை தேவனிடம் விட்டுவிடும் போது அவர் எவ்வாறு நம் மீதுள்ள தமது அன்பையும், கவனத்தையும் வெளிப்படுத்துகிறார்? அவர் நான்கு அற்புதமான கிரியைகளை நமது சார்பாக நிகழ்த்துகிறார் என்று நான் நம்புகிறேன் (1) ஓடி ஒளியாமல் நேர்மையாக நமது பிரச்சினைகளைச் சந்திக்கத் தேவையான தைரியத்தை அவர் நமக்குத் தருகிறார் (ஏசா. 41:10). (2) அந்த சூழ்நிலையைப் புரிந்துகொள்ளும் ஞானத்தை நமக்கு அளிக்கிறார் (யாக். 1:5). (3) நாம் செய்ய வேண்டியதைச் செய்யும் பலத்தை அவர் நமக்குக் கொடுக்கிறார் (பிலி. 4:13). (4) மீதியானவற்றை அவர் செய்வார் என்று நம்பத் தேவையான விசுவாசத்தை அவர் நமக்குத் தந்தருளுகிறார் (சங். 37:5).

சிலர் தேவனிடம் தமது பாரங்களை எல்லாம் கொடுத்துவிட்டு அவர் எல்லாவற்றையும் செய்வார் என்று எதிர்பார்க்கின்றனர். இதில் முக்கியமானது என்னவென்றால், அவரை *நமக்குள்ளாகச்* செயலாற்றவும், *நமக்காகச்* செயலாற்றவும் விட வேண்டும். அப்போதுதான் பதில் வரும்போது நாம் ஆயத்தமாக இருக்க முடியும். "கர்த்தர் மேல் உன் பாரத்தை வைத்துவிடு; அவர் உன்னை ஆதரிப்பார்" (சங். 55:22).

**2. விழித்திருங்கள் (5:8-9).**

நாம் கவலை உள்ளவர்களாய் இருப்பதற்கு ஒரு காரணம் நமக்கு ஓர் எதிரி இருப்பதுதான். பாம்பாக சாத்தான் வஞ்சிக்கிறான் (2 கொரி. 11:3); சிங்கமாக அவன் விழுங்குகிறான். "சாத்தான்" என்ற வார்த்தைக்கு அர்த்தம் எதிரி; "பிசாசு" என்ற சொல்லின் பொருள் "குற்றம் சுமத்துபவன், பழிதூற்றுகிறவன்". இக் கடிதத்தைப் பெறுபவர்கள் ஏற்கெனவே இந்த பழிதூற்றுகிறவனின் தாக்குதலை அனுபவித்து விட்டனர் (1 பேதுரு 4:4, 14). இனி அவர்கள்

தங்களது அக்கினி பரீட்சையில் "சிங்கத்தை" சந்திப்பார்கள். தங்கள் எதிராளியை ஜெயங்கொள்ள உதவி செய்வதற்காகப் பேதுரு அவர்களுக்குப் பல நடைமுறைக்கு உதவும் அறிவுரைகளைக் கூறுகிறார்.

*அ. அவனைப் பொருட்படுத்துங்கள் - அவன் அபாயகரமானவன்.*
எனக்கு இயந்திரவியலில் திறமை இல்லாத காரணத்தால், கட்டுவோரையும், பழுதுபார்ப்போரையும் பார்த்து நான் வியந்து நிற்பதுண்டு. ஓர் ஆலயக் கட்டுமானப் பணியின் போது, மின்வேலை பார்க்கும் ஒருவர் மிகவும் சிக்கல் நிறைந்த கட்டுப்பாட்டுப் பொறி ஒன்றை நிறுவுவதைப் பார்த்துக்கொண்டு இருந்தேன். நான் அந்த மனிதரிடம் கூறினேன்; "மின்சாரம் பாயும் கம்பிகளில் நீங்கள் எல்லோரும் அமைதியாக வேலைபார்த்துக் கொண்டு இருப்பது என்னை ஆச்சரியப்பட வைக்கிறது. இதை எவ்வாறு செய்கிறீர்கள்?" அவர் புன்னகையோடு கூறினார்: "நீங்கள் செய்ய வேண்டிய முதல் விஷயம் அதைப் பொருட்படுத்தி அதற்குரிய மதிப்பை அதற்கு அளிப்பதுதான். பிறகு அதை நீங்கள் கையாளுவது சுலபமே!"

சாத்தான் ஓர் அபாயகரமான எதிரி. அவன் ஒரு சர்ப்பம். நாம் எதிர்பார்க்காத போது அவனால் கொத்திவிட முடியும். அவன் அழிக்கிறவன் (வெளி. 9:11: "அபொத்தோன்", "அப்பொல்லியோன்" ஆகிய இரண்டிற்குமே "அழிவு" என்று பொருள்). அவன் குற்றம் சாட்டுகிறவன் (வெளி. 12:9-11; சக. 3:1-5). அவனுக்குப் பெரும் சக்தியும், அறிவும் உண்டு. மேலும், தேவ மக்களைத் தாக்குவதற்காக உதவி செய்யும் ஒரு கூட்டம் பேய்கள் அவனுக்கு உண்டு (எபே. 6:10-லிருந்து). அவன் ஒரு வலுவான எதிரி; நாம் ஒருபோதும் அவனைக் குறித்து நகைத்து, அலட்சியப்படுத்தி, அவனது திறமைகளைக் குறைத்து மதிப்பிட்டுவிடக் கூடாது. சாத்தானோடு நேரிடும் நமது போராட்டத்தின் போது, "நாம் தெளிந்த புத்தி உள்ளவர்களாய்" நமது மனதைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும்.

எல்லா பழியையும் பிசாசின் மேல் போடக்கூடாது என்பதே "தெளிந்த புத்தி" என்று கூறுவதில் உள்ள ஒரு குறிப்பாகும். சிலர் எல்லா புதர்களுக்குள்ளும் ஒரு பேயைக் கண்டு, தங்கள் தலைவலிக்கும், ஓட்டையான கார்ச்சக்கரத்துக்கும், அதிகமான வீட்டு வாடகைக்கும் சாத்தானையே குறைசொல்லுகின்றனர். சரீர நோயையும், வலியையும் சாத்தானால் உண்டாக்க முடியும் என்றாலும் (லூக். 13:16; யோபின் புத்தகம்), 'தலைவலியின் பிசாசுகளையும்', 'முதுகுவலியின் பிசாசுகளையும்' துரத்த நமக்கு வேதாகம அதிகாரம் இல்லை. வெகு தூரத்தில் இருந்து ஒரு பெண் எனக்குத் தொலைபேசியில் பேசி, சாத்தான் அவரை ஏழரை அங்குலம் சுருங்க வைத்துவிட்டதாகப் புகார் கூறினார். பிசாசின் வஞ்சகத்திலும் வல்லமையிலும் எனக்கு நம்பிக்கை உண்டு என்ற போதிலும், நாம் அவனைப் பற்றிய

செய்திகளை வேதாகமத்தில் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டுமே தவிர நமது அனுபவத்திற்கு நாமே அளித்துக் கொள்ளும் சொந்த விளக்கங்களிலிருந்து அல்ல என்பதே என்னுடைய கருத்தாகும்.

*ஆ. அவனை அறிந்து கொள்ளுங்கள் - அவன் ஒரு பெரும் வேடதாரி (2 கொரி. 11:13-15; யோவன் 8:44).*

அவன் ஒரு தந்திரம் வாய்ந்த எதிரியாக இருப்பதால், நாம் 'விழிப்புடனும்' எப்போதும் எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும். தேவன் செய்வது எதுவாக இருந்தாலும் சரி அதற்கொப்ப ஒரு போலியை உருவாக்குவதே அவனது யுத்ததந்திரம். களைகளைப் பற்றிய உவமையில், தேவன் ஓர் உண்மைக் கிறிஸ்தவனை நடுகிறார்; சாத்தான் ஒரு போலியை நடுகிறார் (மத் 13:24-30, 36-43). தேவ வார்த்தையும், தேவ ஆவியும் இல்லை என்றால் அவன் நம்மை ஏமாற்றி விடுவான் (1 யோவான் 2:18-27). தேவ வார்த்தையை நாம் நன்கு அறியும்போதே, ஆவிக்குரிய உணர்வுகள் கூர்மைபெற்று, சாத்தானின் கிரியைகளை அறிந்துகொள்ள முடியும். நாம் "ஆவிகளைச் சோதித்தறியும்" திறம்பெற்று பொய்யானவைகளையும், மெய்யானவைகளையும் பிரித்தறிய வேண்டும் (4:1-6).

*இ. அவனை எதிர்த்து நில்லுங்கள்.*

நாம் தேவ வார்த்தையின் அடிப்படையில் நிலை எடுத்து நின்று அதை விட்டு நகரக் கூடாது என்பதே இதற்கு அர்த்தம். எபேசியர் 6:10-13, "நிற்கவும் .. எதிர்த்து நிற்கவும் .. நிற்கவும்" நமக்கு அறிவுரை கூறுகிறது. நாம் முதலில் நிற்காமல் எதிர்த்துநிற்க முடியாது. நமது ஆயுதங்கள் தேவ வார்த்தையும் ஜெபமுமே (எபே. 6:17-18). நமது பாதுகாப்பு தேவனருளிய சர்வாயுதவர்க்கமே. நாம் அவனை "விசுவாசத்தால்" எதிர்க்கிறோம். அதாவது, தேவனிடத்தில் உள்ள நமது விசுவாசம். யேகோவா என்ற நாமத்தை நம்பி, கோலியாத்துக்கு எதிராகத் தனது நிலையை எடுத்து நின்ற தாவீதைப் போல, நாமும் ஜெயம்தரும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் சாத்தானுக்கு எதிராக நமது நிலையை எடுத்து நிற்க வேண்டும்.

இங்கு ஓர் எச்சரிக்கை: சாத்தானோடும் அவனது கூட்டாளிகளோடும் ஒருபோதும் விஷயங்களை விவாதிக்கக் கூடாது. ஏவாள் இதே தவறைச் செய்தாள்; அதன் மோசமான விளைவை நாம் யாவரும் அறிவோம். மேலும், உங்களது தனிப்பட்டப் போக்கில் ஒருபோதும் சாத்தானோடு சண்டையிட முயலவேண்டாம். இயேசு செய்தது போல தேவ வார்த்தையைக் கொண்டு அவனை எதிர்த்து நில்லுங்கள் (மத். 4:1-11). இந்த போராட்டத்தில் நீங்கள் மட்டுமே இருக்கிறீர்கள் என்ற எண்ணம் ஒருபோதும் உங்களுக்கு வேண்டாம். ஏனெனில் உலகத்தில் உள்ள உங்கள் சகோதரர்களும் இத்தகைய சோதனையை எதிர்கொள்ளுகிறார்கள். கர்த்தருக்குள் ஒருவருக்காக ஒருவர் ஜெபித்து, ஒருவரை ஒருவர் தாங்க வேண்டும். நம்முடைய தனிப்பட்ட வெற்றி மற்றவர்களுக்கு

உதவும். அதுபோல் அவர்களுடைய வெற்றியும் நமக்கு உதவும் என்பதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும்.

இந்த மூன்று அறிவுரைகளுக்கும் பேதுரு கீழ்ப்படிந்து இருப்பாரேயானால், அவர் கெத்செமெனே தோட்டத்தில் தூங்கி இருக்கவும், மல்கூசைத் தாக்கவும், கர்த்தரை மறுதலிக்கவும் செய்திருக்கமாட்டார். அவர் கர்த்தரின் எச்சரிக்கையை மனதில் எடுத்துக்கொள்ளாமல் அவரோடு விவாதம் செய்தார். மேலும், எதிரி அவரது தானெனும் அகங்காரத்தைப் பெருமையால் பெரிதாக்கியபோதும், "விழித்திருந்து ஜெபம் செய்யத்" தேவையில்லை என்று கூறியபோதும், வாளை உபயோகிக்கத் தூண்டிய போதும் அவர் சாத்தானை அறிந்து கொள்ளவில்லை. அவர் கர்த்தருடைய வார்த்தைகளைக் கேட்டு எதிரியோடு எதிர்த்து நின்றிருப்பாரேயானால் இந்த தோல்விகளில் இருந்து தப்பித்திருக்க முடியும்.

பேதுரு, யாக்கோபு ஆகிய இருவருமே வெற்றிக்கான ஒரே சூத்திரத்தையே தருகின்றனர். "தேவனுக்குக் கீழ்ப்படிந்து இருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்" (யாக். 4:7). சாத்தானுக்கு முன் நாம் நிற்கவேண்டுமானால், அதற்கு முன் நாம் தேவனுக்கு முன்பாகப் பணியவேண்டும். பேதுரு கர்த்தருக்கு எதிர்த்து நின்று, முடிவாக சாத்தானுக்குக் கீழ்ப்படிய நேரிட்டது.

### 3. நம்பிக்கையோடு இருங்கள் (5:10-11).

பேதுரு ஒரு நல்நம்பிக்கையோடு முடிக்கிறார். தேவன் தாம் செய்து கொண்டிருப்பதை அறிந்திருக்கிறார் என்றும், அவர் முழுக்கட்டுப்பாட்டைத் தமது கரத்தில் வைத்திருக்கிறார் என்றும் பேதுரு தனது வாசகர்களுக்கு நினைவூட்டுகிறார். அக்கினி சோதனை எவ்வளவு கடினமாக இருந்தாலும் ஒரு கிறிஸ்தவனுக்கு எப்போதும் நம்பிக்கை உண்டு. இந்த நம்பிக்கையுள்ள சிந்தைக்கு பேதுரு பல காரணங்களைத் தருகிறார்.

#### *அ. நாம் தேவகிருபையைப் பெற்றிருக்கிறோம்.*

அவரது கிருபையினாலேயே நமக்கு இரட்சிப்பு உண்டு (1 பேதுரு 1:10). நாம் அவரை அழைக்கும் முன்னரே அவர் நம்மை அழைத்தார் (1:2). 'கர்த்தர் தயை உள்ளவர் என்பதை' நாம் ருசி பார்த்துவிட்டோம் (2:3). ஆகவே அவர் நமக்கெனக் குறிக்கும் எந்த விஷயத்துக்கும் நாம் பயப்பட மாட்டோம். அவரது கிருபை பற்பல ஈவுகளைக் கொண்டது (4:10). அது வாழ்க்கையின் எந்த சூழ்நிலையையும் சந்திக்கப் போதுமானது. நாம் அவருக்குக் கீழ்ப்படியும் போது, நமக்குத் தேவையான கிருபையை அவர் அளிக்கிறார். மெய்யாகவே அவர் "சகல கிருபையின் தேவன்". ஏற்ற சமயத்தில் சகாயம் செய்யும் கிருபை அவரிடம் உண்டு (எபி. 4:16). 'அவர் அதிகமான கிருபையை அளிக்கிறார்'

(யாக். 4:6). அந்த கிருபையில் நாம் நிலைநிற்க வேண்டும் (1 பேதுரு 5:12; ரோமர் 5:2).

### *ஆ. நாம் மகிமையை நோக்கிச் சென்றுகொண்டு இருக்கிறோம் என்பதை நாம் அறிவோம்.*

அவர் "கிறிஸ்துவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு" அழைத்து இருக்கிறார். இந்த அற்புதமான சுதந்திரத்துக்கு ஏதுவாகவே நாம் ஜெநிப்பிக்கப் பட்டிருக்கிறோம் (1 பேதுரு 1:4). தேவ கிருபையோடு ஆரம்பமாகும் எதுவும் தேவ மகிமைக்கு நேராகவே வழிநடத்திச் செல்லும் (சங். 84:11). பாடனுபவிக்கும் போது நாம் தேவ கிருபையைச் சார்ந்திருந்தால், அந்த பாடும் மகிமையாகவே முடியும் (1 பேதுரு 4:13-16). பாதை கஷ்டமானதாக இருக்கலாம்; ஆனால் அது மகிமையை நோக்கி வழிநடத்துகிறது; நாம் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டியது அதை மட்டுமே.

### *இ. நமது தற்போதைய பாடுகள் கொஞ்சக் காலத்திற்கே.*

நமது பல்விதமான சோதனைகள் "கொஞ்சக்காலம்" மட்டுமே (1 பேதுரு 1:6). ஆனால் அதனால் வரும் மகிமையோ *நித்தியமானது*. 2 கொரிந்தியர் 4:17-ஐ எழுதியபோது பவுலின் மனதிலும் இதே எண்ணம்தான் இருந்தது. "அதி சீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது."

### *ஈ. நமது சோதனைகள் கிறிஸ்தவ குணாதிசயத்தைக் கட்டுகிறது என்பதை நாம் அறிவோம்.*

"சீர்ப்படுத்தி" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்கப் பதத்திற்கு "தேவைகளைத் தருதல், சரிப்படுத்துதல், ஒன்றாகப் பொருத்துதல்" என்று அர்த்தம். அது மத்தேயு 4:21-ல் "வலைகளைப் பழுதுபார்த்தல்" என்று மொழி-பெயர்க்கப்பட்டுள்ளது. வாழ்வதற்கும் சேவை செய்வதற்கும் தமது மக்களைப் பலப்படுத்த தேவனிடம் பல கருவிகள் உண்டு; பாடுகள் அவற்றில் ஒன்று. தேவ வார்த்தை இன்னொன்று (2 தீமோ. 3:16-17; "முழு நிறைவு உடையவன் ஆக்கப்பட்டிருக்கிறான்" (KJV) என்பதற்கு அர்த்தம் "தேவைகளை முற்றி-லுமாகப் பெற்றவன்"). மேலும் அவர் சபை ஐக்கியத்தையும் ஊழியத்தையும் பயன்படுத்துகிறார் (எபே. 4:11-16). தமது சித்தத்தையும், தமது வேலைகளையும் செய்வதற்காகப் பரலோகத்தில் இருக்கும் நமது இரட்சகர் தமது பிள்ளைகளை முழுமையாக்கிக்கொண்டே இருக்கிறார் (எபி. 13:20-21).

நமக்கு இருக்க வேண்டும் என்று தேவன் விரும்பும் குணாதிசயத்தை மூன்று வார்த்தைகளை உபயோகித்துப் பேதுரு விளக்குகிறார்.

*ஸ்திரப்படுத்துதல்* என்பதற்கு "உறுதியாகப் பொருத்துதல், நிலையாக ஸ்தாபித்தல்" என்பது பொருள். கிறிஸ்துவுக்காக நிற்பதில் கிறிஸ்தவர்கள் உறுதியற்றவர்களாக இருக்கக்கூடாது. நமது இருதயத்தை ஸ்திரப்படுத்த வேண்டும் (1 தெச. 3:13; யாக். 5:5). இது தேவ சத்தியத்தாலேயே கைக்கூடும் (2 பேது. 1:12). ஸ்திரப்பட்ட விசுவாசி பாடுகளால் அசைக்கப்படவோ, தவறான கொள்கையால் வழிவிலகியோ போகமாட்டான்.

*பலப்படுத்துதல்* என்பதற்கு அர்த்தம் அதுவேதான். வாழ்க்கைத் தேவைகளைச் சந்திக்க தேவ பலம் நமக்குத் தரப்படுகிறது. செயலாற்ற பலமின்றி உறுதியான அடித்தளத்தின் மேல் நிற்பது நமக்கு என்ன நன்மையைத் தரும்?

*நிலை நிறுத்துதல்* என்பது "அடித்தளம் இடுதல்" என்று பொருள்படும் ஒரு வார்த்தையின் மொழிபெயர்ப்பு. எபிரேயர் 1:10-ல் இது இவ்வாறே பயன்படுத்தப்படுகிறது. பாறையின் மேல் ஸ்தாபிக்கப்பட்ட வீடு புயலுக்கு எதிர்த்து நின்றது (மத். 7:24-27). தேவனால் தேவைகள் யாவும் நிறைவாக்கப்பட்ட ஒரு விசுவாசி "ஸ்திரமாயும் உறுதியாயும் விசுவாசத்திலே நிலைத்திருப்பான்" (கொலோ. 1:23). அவன் "தந்திரமுள்ள போதகமாகிய பலவிதக் காற்றினாலே அலைகளைப் போல அடிபட்டு அலைகிறவனாய்" இருக்க மாட்டான் (எபி. 4:14).

ஓர் அவிசுவாசி துன்பத்தின் ஊடே செல்லும்போது தன் நம்பிக்கையை இழந்து போகிறான்; ஆனால் ஒரு விசுவாசிக்கோ பாடுகள் நம்பிக்கையை அதிகரிக்கச் செய்கிறது. "உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறது என்று நாங்கள் அறிந்து, உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம்" (ரோமர் 5:3-4). ஒரு விசுவாசி தேவனை நம்பி அவரது கிருபையைச் சார்ந்திருக்கும்போது, அவர் அவனில் சிறந்த குணநலனை உருவாக்கி நம்பிக்கையைப் பிரகாசிக்க வைக்கிறார். இதன் விளைவாக தேவன் மகிமையை எப்போதுக்கெப்போதுமாய்ப் பெற்றுக் கொள்கிறார்.

நாம் ஏற்கெனவே வசனங்கள் 12, 13-ஐ நமது அறிமுக அத்தியாயத்தில் ஆராய்ந்துவிட்டோம்.

பவுல் தமது கடிதங்களைக் கிருபையின் வாழ்த்துதலோடு முடிப்பார் (2 தெச. 3:17-18). பேதுரு தமது நிருபத்தை சமாதான வாழ்த்துதலோடு நிறைவு செய்கிறார் (1 பேதுரு 1:2). ஆகவே இந்த நிருபம் முதலில் இருந்து இறுதி வரை முற்றிலுமாக தேவ சமாதானத்தையே சுட்டிக்காட்டுகிறது. அக்கினி சோதனை வரவிருப்பதை அறிவிக்கும் ஒரு மடலை நிறைவு செய்ய எத்தகைய அற்புதமான வழிமுறை இது.

புதிய ஏற்பாட்டில் நான்கு முறை "பரிசுத்த முத்தத்தைப்" பற்றியப் புத்திமதியை நாம் காணலாம் (ரோமர் 16:16; 1 கொரி. 16:20; 2 கொரி. 13:12;

1 தெச. 5:26). பேதுரு அதை “அன்பின் முத்தம்” என்று அழைத்தார். ஆண்கள் ஆண்களையும், பெண்கள் பெண்களையும் முத்தமிட்டனர் என்பதை நினைவிற் கொள்க. இன்று லத்தீன் நாடுகளில் உள்ளது போல, அந்நாட்களில் அப்பகுதியில் அது வரவேற்பதிலும், வழியனுப்புவதிலும் கடைபிடிக்கப்பட்ட ஒரு பழக்க வழக்கம். கிறிஸ்துவுக்குள்ளாகக் கிறிஸ்தவ அடிமைகளும், எஜமானர்களும் ஒருவரை ஒருவர் அவ்வாறு வாழ்த்திக் கொள்வது எவ்வளவு அற்புதமான காரியம்!

எவ்வளவு கொடிய சோதனை காலங்களிலும் கர்த்தரிடத்தில் நம்பிக்கை வைக்குமாறு நம்மை உற்சாகப்படுத்தும் ஒரு விலைமதிப்பற்ற கடிதத்தைப் பேதுரு நமக்குக் கொடுத்துள்ளார். நூற்றாண்டுகளின் வழியாகக் கடந்து வரும் சபை, பல்வேறு அக்கினி பரீட்சைகளைக் கடந்து வந்த போதிலும், சாத்தானால் அதை அழிக்க முடியவில்லை. இன்று அக்கினி சோதனைகளைச் சபை எதிர் கொள்ளுகிறது. அதற்கு நாம் ஆயத்தமாக வேண்டும்.

ஆயினும், வருவது என்னவாக இருந்தாலும் சரி, நாம் ஒவ்வொருவருக்கும் பேதுரு இன்னும் சொல்லிக்கொண்டு இருப்பது – நம்பிக்கை உள்ளவர்களாய் இருங்கள்! மகிமை சீக்கிரமாகவே வரவிருக்கிறது.

## அத்தியாயம் ஒன்று

# *எங்கு கிறிஸ்து இருக்கிறாரோ, அங்கு நம்பிக்கை இருக்கிறது*

(1 பேதுரு 1:1; 5:12-14)

1. உங்களுடைய கிறிஸ்தவ நம்பிக்கைகளுக்காக எப்போது நீங்கள் பாடனுபவித்தீர்கள்?

2. 1 பேதுரு 1:1, 5:12-14 ஆகிய பகுதிகளை வாசியுங்கள். இந்த புத்தகத்தை எழுதியவரைப் பற்றி நாம் என்ன அறிந்து கொள்ளுகிறோம் (பார்க்க: யோவான் 1:35-42; 21:15-17; அப். 4:13; கலா. 2:1-10).

3. யாருக்குப் பேதுரு இந்த நிருபத்தை எழுதினார்?

4. எவ்வாறு விசுவாசிகள் இன்று "அந்நியர்களாய்" இருக்கிறார்கள்?

5. இந்த நிருபத்தை எழுதிய போது பேதுரு எங்கு இருந்தார்? அந்த இடத்தின் முக்கியத்துவம் என்ன?

6. பேதுரு ஏன் இந்த நிருபத்தை எழுதினார்?

7. இந்த நிருபத்தில் 15 முறை பேதுரு பாடுகளைப் பற்றி குறிப்பிடுகிறார். இந்த நிருபத்தைப் பெற்றுக்கொண்டவர்கள் ஏன் பாடனுபவித்தார்கள் என்பதை இந்த நிருபத்தைத் துரிதமாக ஒரு முறை வாசித்துக் கண்டுபிடியுங்கள்.

8. தேவ கிருபை பாடனுபவித்தலோடு எவ்வாறு சம்பந்தப்பட்டுள்ளது?

9. உலகம் முழுவதும் விசுவாசிகள் எவ்விதம் துன்பப்படுகின்றனர்?

10. உங்களுடைய இன்றைய துன்பங்களுக்காக தேவ கிருபையை உங்களால் எவ்வாறு பிரயோஜனப்படுத்திக்கொள்ள முடியும்?

# அத்தியாயம் இரண்டு

## எவ்வகையிலும் மகிமையே!

(1 பேதுரு 1:2-12)

1. வரலாற்றில் ஏராளமான மகிமையை அனுபவித்து இன்று பெயரற்றவர்களாய்ப் போய்விட்ட சிலருடைய பெயர்களைக் குறிப்பிடுக.
2. 1 பேதுரு 1:2-12-ஐ வாசியுங்கள். நமது ஆவிக்குரிய பிறப்பைப் பற்றிப் பேதுரு எவ்வாறு விளக்குகிறார்?
3. திரித்துவத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் நமது இரட்சிப்பில் என்ன பங்கு வகிக்கின்றனர்?
4. தேவன் நம்மை ஏன் இரட்சித்தார்?
5. நாம் அனுபவிக்கும் பாடுகளைக் குறித்துப் பேதுரு போதிப்பது என்ன?
6. சோதனைகளில் வேதனைகள் இல்லை என்று மறுப்பது எவ்வாறு துன்பங்களை மேலும் மோசமாக்கும்?
7. பாடுகளைக் கடந்து நாம் போகும்போது, தேவன் அவற்றைக் கட்டுப்படுத்துகிறார் என்ற உண்மை எவ்வாறு நம்மைத் தேற்றுகிறது?
8. இன்றைய நமது இரட்சிப்புக்கு பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் எவ்வாறு சம்பந்தம் உடையவர்கள்?
9. சோதனைகளின் போது நாம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்று பேதுரு கூறுகிறார்?
10. இவ்வாறு நடந்து கொள்வது பாடனுபவிப்பவர்களுக்கு எவ்வாறு மகிமையைக் கொண்டுவருகிறது?

## அத்தியாயம் மூன்று

# *ஒரு மாசடைந்த உலகில் பரிசுத்தமாக இருத்தல்*

(1 பேதுரு 1:13-21)

1. *பரிசுத்தமான ஆள்* என்ற சொற்றொடரைக் கேட்கும்போது உங்கள் மனதில் தோன்றுவது என்ன?

2. ஒரு பரிசுத்தமான மனிதனைப் பற்றி வேதாகமம் எவ்வாறு விளக்குகிறது என்பதை அறிய 1 பேதுரு:13-21-ஐ வாசிக்கவும். பரிசுத்தமாக இருப்பது என்பது உங்களுக்கு என்ன அர்த்தத்தைத் தருகிறது?

3. ஒரு பரிசுத்தமான வாழ்க்கை வாழ பேதுரு அளிக்கும் ஊக்க உயர்வுகள் என்ன?

4. இந்த ஊக்க உயர்வுகள் (Incentives) ஒவ்வொன்றையும், ஒரு பரிசுத்தமான வாழ்க்கை நடையைப் பராமரிக்கும் கொள்கையாக எவ்வாறு நாம் மாற்றலாம்?

5. நாம் எவ்வாறு "மனதின் அரையைக் கட்ட" முடியும்?

6. பேதுரு குறிப்பிடும் நியாயத்தீர்ப்பு பரிசுத்தமாக வாழ்வதற்கான ஓர் ஊக்க உயர்வாக எவ்வாறு செயல்படுகிறது?

7. நமது இரட்சிப்பின் அனுபவத்தை ஞாபகம் வைத்துக் கொள்வது ஏன் முக்கியமானது? இந்த இரட்சிப்புக்கு தேவன் அளித்த கிரயம் என்ன?

8. இந்த வாரத்தில் மேலும் பரிசுத்தமாவதற்காக என்னென்ன நடைமுறை முயற்சிகளை உங்களால் எடுக்க முடியும்?

## அத்தியாயம் நான்கு

# *கிறிஸ்தவ ஒற்றுமை*

(1 பேதுரு 1:22-2:10)

1. சபை உறுப்பினர்களுக்குள் மாறுபாடுகள் அடிக்கடி உண்டாவதற்குக் காரணம் என்ன?

2. 1 பேதுரு 1:22-2:10-ஐ வாசிக்கவும். ஆவிக்குரிய ஒற்றுமையை வலியுறுத்துவதற்காக இந்த வசனங்களில் பேதுரு சபையை எவ்வாறு விளக்குகிறார்.

3. கிறிஸ்துவின் சபையில் ஜனங்கள் எவ்வாறு உறுப்பினர்கள் ஆகின்றனர்.

4. விசுவாசிகள் ஒருவருக்கொருவர் பொதுவாகக் கொண்டிருப்பது என்ன?

5. நம்மைப் பிரிக்கத் துடிக்கும் மாம்ச இச்சைகளோடு போராட பரிசுத்த ஆவியின் மேல் சிந்தையை ஒருமுகப்படுத்துவது எவ்விதம் உதவி செய்யும்?

6. விசுவாசிகள் தங்கள் வாழ்க்கையில் இருந்து ஒழித்துவிட வேண்டியவை என்ன? ஏன்?

7. தேவ வார்த்தையைப் பொறுத்த வரையில் ஒரு விசுவாசியின் வளர்ச்சி நிலைகள் என்ன?

8. விசுவாசி – ஆசாரியர்களின் உரிமைகளும் பொறுப்புகளும் என்ன?

9. தேவனுக்கு நாம் செலுத்தக்கூடிய பலிகள் என்ன?

10. மற்ற விசுவாசிகளோடு உங்களுக்கு ஒற்றுமையின் அனுபவம் கிடைக்காவிட்டால், இந்த வாரத்தில் ஒற்றுமைக்காக நீங்கள் என்ன முயற்சிகளை எடுக்கலாம்.

## அத்தியாயம் ஐந்து

# யாரோ ஒருவர் உங்களை கவனித்துக்கொண்டு இருக்கிறார்!

(1 பேதுரு 2:11-25)

1. கீழ்ப்படிதல் என்ற வார்த்தையைக் கேட்கும்போது நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? ஏன்?

2. 1 பேதுரு2:11-25-ஐ வாசிக்கவும். அதிகாரத்திற்குக் கீழ்ப்படிந்து, தாழ்மையான கிறிஸ்தவ வாழ்க்கையை வாழும் போது கிடைக்கும் ஊக்க உயர்வுகள் என்ன என்று பேதுரு கூறுகிறார்? ஏன்?

3. நாம் யார் என்று அறிந்து கொள்வது, நமக்கு மேலாக இருப்பவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்க எவ்வாறு உதவும்?

4. பதின்மூன்றாவது வசனத்திற்கு கீழ்ப்படிவது எவ்வாறு என்று தானியேல் மற்றும் அவனது மூன்று நண்பர்களின் உதாரணம் எவ்வாறு சிறந்த முறையில் விளக்குகிறது?

5. அரசு இயந்திரங்களுக்கு (Governmental Institutions) கீழ்ப்படியும் அதே நேரத்தில் சட்டங்களுக்குக் கீழ்ப்படியாமலும் இருக்கலாம் என்பதைப் பேதுருவும் மற்ற அப்போஸ்தலர்களும் எவ்வாறு விளக்குகின்றனர்.

6. எல்லா நேரங்களிலும் நம்மால் ஒத்துப்போக முடியாத நமது குடியரசுத் தலைவர் மற்றும் அரசியல் தலைவர்களைப் பொறுத்தவரையில் நமக்குள்ள பொறுப்பு என்ன?

7. கிறிஸ்தவ அடிமைகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகளில் இருந்து என்ன கொள்கைகளை நமது பணியிடங்களில் நடைமுறைப்படுத்த முடியும்?

8. அதிகாரத்துக்கு கீழ்ப்படியும்படி நம்மை ஊக்கப்படுத்தும் மிகமேலான உத்வேகமாக கிறிஸ்து எவ்வாறு திகழ்கிறார்?

9. உங்களுக்கு அதிக பிரச்சினைகளை ஏற்படுத்தும் அதிகாரமாக (authority) எதைக் கருதுகிறீர்கள்?

10. இந்த வாரம் பேதுருவின் அறிவுரைக்கேற்ப உங்களை மாற்றிக்கொள்ள எவ்வாறு முயற்சி செய்யப்போகிறீர்கள்?

## அத்தியாயம் ஆறு

# திருமண இணைப்பா? அல்லது மரணப் பிணைப்பா?

(1 பேதுரு 3:1-7)

1. ஒரு வெற்றிகரமான திருமண வாழ்க்கைக்குத் தேவையான சில கொள்கை-கள் எவை?

2. இருவரில் ஒருவர் ஒத்துழையாமல் இருக்கும் திருமண உறவைப் பற்றி பேதுரு குறிப்பிடுகிறார். 1 பேதுரு 3:1-7-ஐ வாசிக்கவும். திருமணத்தில் மனைவிமார்கள் என்ன பங்கு வகிக்க வேண்டும் என்று பேதுரு குறிப்பிடுகிறார்?

3. இரட்சிப்படையாத கணவனாக இருந்தாலும் மனைவி அந்த கணவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பதற்கு பேதுரு என்ன காரணங்களைத் தருகிறார்?

4. இரட்சிப்படையாத கணவனுக்குக் கீழ்ப்படியும் போது அந்த மனைவிக்குக் கிடைக்கும் சாதகமான வாய்ப்பு என்ன?

5. ஒரு மனைவிக்கு ஊதாரித்தனத்தைப் போலவே அவலட்சணமான புற அலங்கரிப்பும் ஏன் ஒரு பெரும் தவறாக இருக்கிறது?

6. தாழ்மை எவ்வாறு ஓர் ஆபரணமாகும்?

7. கீழ்ப்படிதலுள்ள ஒரு மனைவி, தனது இரட்சிப்படையாத கணவனைக் கிறிஸ்துவுக்குள் வென்றெடுக்கும் முயற்சியில் "ஓர் ஆபத்துக்கும் பயப்படாதிருப்பது" எவ்வாறு அவருக்குத் தன்னம்பிக்கையை அளிக்கும்.

8. தனது மனைவியின் நன்மைக்காக ஒரு கிறிஸ்தவக் கணவன் எவ்வாறு கவனம் செலுத்த வேண்டும்?

9. ஏழாவது வசனத்தின் கடைசிப்பகுதியின் முக்கியத்துவம் என்ன?

10. இந்த வாரத்தில் ஒரு சிறந்த வாழ்க்கைத் துணைவராக எவ்வாறு நடந்து கொள்ளப் போகிறீர்கள்?

## அத்தியாயம் ஏழு

# *சிறந்தவற்றிற்காக ஆயத்தப்படுதல்!*

(1 பேதுரு 3:8-17)

1. 1 பேதுரு 3:8-17-ஐ வாசிக்கவும். மோசமான காலத்திலும் தேவனுடைய சிறந்த ஆசீர்வாதங்களை எவ்வாறு நம்மால் அனுபவிக்க முடியும்?

2. இத்தகைய அன்பை நமது தினசரி நடைமுறை வாழ்க்கையில் எவ்வாறு காட்டமுடியும்?

3. எவ்வகையில் சில சபைகள் ஒன்றுபோல் இருப்பதை ஒற்றுமையாக இருப்பதாகத் தவறாக எண்ணிக்கொள்ளுகின்றன?

4. இரக்கம் உள்ளவர்களாய் இருப்பதற்குக் கற்றுக்கொள்வது, பாடுகள் நம் வாழ்க்கையில் வரும்போது அவற்றை சந்திக்க சிறந்த முறையில் ஆயத்தப்படுத்துவதாக ஏன் அமையும்?

5. தேவ எதிர்ப்பாளர்களான அரசியல் கட்சிகள் ஆளும் நாடுகளில் வாழ்ந்து பாடுகளை அனுபவிக்கும் நமது சகோதர சகோதரிகளுக்கு நம்மால் எவ்வாறு இரக்கம் காட்ட முடியும்?

6. எவ்வாறு தாழ்மை உபசரிப்பின் அடித்தளமாக அமைகிறது?

7. எதிரிகளை எதிர்கொள்ளும் வேளையில் நாம் வாழக்கூடிய மூன்று நிலைகள் என்ன?

8. நீதியை விடவும் இரக்கம் செய்தலின் அடிப்படையிலேயே நாம் ஏன் இயங்க வேண்டும்?

9. பயத்தைப் பற்றி பேதுரு தரும் ஆவிக்குரிய கொள்கை என்ன?

10. சோதனை மற்றும் எதிர்ப்புகளின் மத்தியில் ஒரு விசுவாசிக்கு நல்மனசாட்சி எவ்விதம் உதவும்?

11. மோசமான நேரத்தை எதிர்கொள்ளும்போது, இந்த வசனங்களின் அடிப்படையில், உங்கள் சிந்தையிலும் நடவடிக்கைகளிலும் நீங்கள் செய்ய வேண்டிய மாற்றங்கள் என்ன?

## அத்தியாயம் எட்டு

# நோவாவிடம் இருந்து கற்றறிவது

(1 பேதுரு 3:18-22)

1. விசுவாசிகளை ஒன்றாக இணைக்கும் விசுவாசத்தின் சில முக்கியக் கூறுகள் எவை?

2. 1 பேதுரு 3:18-22-ஐ வாசிக்கவும். கிறிஸ்துவின் மரணத்தில் இருந்து அவருடைய ஊழியத்தைப் பற்றி என்ன அறிந்து கொள்ளுகிறீர்கள்? ஆவிகளுக்கு அவர் செய்த பிரசங்கத்திலிருந்து? அவரது உயிர்த்தெழுதலில் இருந்து? அவர் பரத்துக்கேறியதில் இருந்து?

3. கிறிஸ்து பிரசங்கித்த ஆவிகள் யாவை?

4. வேதாகமத்தில் நோவாவுக்கு இருக்கும் சிறப்புவாய்ந்த இடத்துக்குக் காரணம் என்ன?

5. பேதுருவின் வாசகர்களுக்கும், நோவாவின் ஊழியத்திற்கும் இடையில் இருக்கும் சம்பந்தம் என்ன?

6. ஒரு கிறிஸ்தவனின் ஞானஸ்நான அனுபவம் நோவா காலத்து ஜலப்பிரளயத்துக்கு எவ்வாறு ஒப்பாக இருக்கிறது?

7. இந்த வசனங்களில் பேதுரு போதிக்கும் கிறிஸ்தவ வாழ்க்கைக்கான முக்கிய பாடங்கள் எவை?

8. இந்த வசனங்களை உபயோகித்து, ஓர் இரட்சிக்கப்படாதவருக்கு எவ்வாறு இரட்சிப்பைக் குறித்து விளக்குவீர்கள்?

9. இந்த வாரம் இந்த இரட்சிப்பைக் குறித்த விளக்கத்தை உங்களால் எவ்வாறு பகிர்ந்து கொள்ள முடியும்?

## அத்தியாயம் ஒன்பது

# *மீதி இருக்கும் உங்கள் வாழ்க்கைக் காலம்*

(1 பேதுரு 4:1-11)

1. ஒரு குறிப்பிட்ட தினத்தில் உங்கள் பணிகளுக்காக செலவிடும் நேரம் எவ்வளவு? குடும்பத்தோடு? தேவனோடு? தூங்குவதற்கு? பொழுதுபோக்க? தொலைக்காட்சி பார்ப்பது போன்ற மற்ற விஷயங்களுக்கு?

2. 1 பேதுரு 4:1-11-ஐ வாசிக்கவும். நமது நேரத்தை நித்தியத்தின் கணக்கில் நம்மால் எவ்வாறு சேர்க்க முடியும்?

3. பாவத்துக்கு எதிரான ஓர் உறுதியான சிந்தையை எவ்வாறு உருவாக்க முடியும்?

4. இரட்சிப்படையாதோரிடம் நாம் ஏன் பொறுமையான சிந்தை உள்ளவர்களாய் இருக்க முடியும்?

5. கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்து எத்தகைய சிந்தை உள்ளவர்களாய் இருக்க வேண்டும்? ஏன்?

6. கிறிஸ்துவின் வருகை குறித்து விசுவாசிகள் சமநிலையோடு இருக்க வேண்டும் என்பதற்காக பேதுரு கொடுக்கும் கட்டளைகள் என்ன?

7. இந்த கட்டளைக்கு குறிப்பாகவும், நடைமுறைக்கு ஒத்த வகையிலும் இன்று நம்மால் எவ்வாறு கீழ்ப்படிய முடியும்?

8. கர்த்தரின் வருகைக்கு ஆயத்தப்படும் அதே வேளையில், அவருடைய வருகை குறித்த போதனைகளோடு அதை ஏன் நாம் சமநிலையோடு சீர்தூக்கி நோக்க வேண்டும்?

9. தேவ சித்தத்தைச் செய்வது நமது மீதியான வாழ்க்கை காலத்திற்கு எவ்வாறு ஒரு முதலீடாகும்?

10. உங்கள் நேரம் நித்தியத்திற்கு எண்ணப்பட இந்த வாரம் நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?

## அத்தியாயம் பத்து

# உலைகளைப் பற்றிய உண்மைகள்

(1 பேதுரு 4:12-19)

1. உங்களது அசட்டு தைரியத்தினால் எப்போது துன்பத்திற்கு உள்ளானீர்கள்? பக்தியுள்ள ஒரு வாழ்க்கை வாழ்ந்ததனால்?

2. 1 பேதுரு 4:12-19-ஐ வாசிக்கவும். வரலாற்றில் தங்கள் விசுவாசத்தின் நிமித்தமாக தேவ மக்கள் எவ்வகையில் எல்லாம் பாடனுபவித்தார்கள்?

3. விசுவாசிகள் பாடுகளைக் குறித்து எத்தகையச் சிந்தை உடையவர்களாக இருக்க வேண்டும்?

4. சோதனைகளின் மத்தியில் களிகூர விசுவாசிகளுக்கு உதவும்படி அவர்களிடம் இருப்பது என்ன?

5. இன்றைய நமது சோதனைகளினால் என்ன விளையும்?

6. வரலாற்றில் கிறிஸ்தவன் என்ற பெயர் தனது அர்த்தத்தில் எவ்வாறெல்லாம் மாறுதலுக்கு உள்ளாகியது?

7. விசுவாசத்திற்காகப் பாடனுபவிக்கும் போது, நம்மை நாமே நாம் என்ன கேட்டுக்கொள்ள வேண்டும்?

8. பாடனுபவிக்கும்போது தேவனுக்கு நம்மை எவ்வாறு ஒப்புக் கொடுக்கலாம்?

9. நமது நாட்டிற்குள் துன்புறுத்தல் நுழையும்போது நாம் எவ்வாறு நடந்து கொள்வோம் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

10. இந்த பகுதியில் இருந்து உங்களுக்கு கிடைத்த நடைமுறைக்கேற்ற உதவிகள் எவை?

## அத்தியாயம் பதினொன்று

# ஒரு நல்ல மேய்ப்பனாக இருப்பது எப்படி?

(1 பேதுரு 5:1-4)

1. சபையின் பொதுவான நிலைமைகளை நீங்கள் எவ்வாறு விவரிப்பீர்கள்?

2. சபையின் தற்போதைய நிலைக்கு மிகுந்த காரணமாக இருப்பது என்ன?

3. 1 பேதுரு 5:1-4-ஐ வாசிக்கவும். இந்த வசனங்களில் பேதுரு தம்மைப் பற்றி எவ்வாறு விவரிக்கிறார்? ஏன்?

4. ஒரு போதகர் வெற்றி பெற உதவியாக இருக்கும் தன்மைகள் யாவை?

5. போதகர் ஆற்ற வேண்டிய பாத்திரம் என்ன?

6. தேவ மக்களை விவரிக்க ஆடுகளின் படிமத்தைப் பேதுரு பயன்படுத்துவது ஏன்?

7. தங்கள் சபையை போதகர்கள்/மூப்பர்கள் எவ்வாறு இறுமாப்பாய் ஆளுகிறார்கள்?

8. போதகரை ஊக்கப்படுத்துவதாக இருக்க வேண்டிய என்ன? ஏன்?

9. சபை மக்கள் தங்கள் போதகர்களுக்கு எவ்வாறு கீழ்ப்படிந்து நடக்க வேண்டும்?

10. உங்கள் போதகரை சிறப்பான. நடைமுறைக்கு ஏற்ற வகையில் உங்களால் எவ்வாறு ஆதரிக்க முடியும்?

## அத்தியாயம் பன்னிரண்டு

# *கிருபையில் இருந்து மகிமைக்கு!*

(1 பேதுரு 5:5-11)

1. உங்களது பாடுகளைக் குறித்த தத்துவத்தை நீங்கள் பேசினால் அது என்னவாக இருக்கும்?

2. 1 பேதுரு 5:5-11-ஐ வாசிக்கவும். கஷ்ட அனுபவங்களின்போது தேவனை மகிமைப்படுத்த பேதுரு என்ன புத்திமதிகளைக் கூறுகிறார்.

3. பல சபைகளில் நிலவும் தலைமுறை இடைவெளியை நிரப்ப விசுவாசிகள் எடுக்கக் கூடிய நடைமுறைக்குதவும் வழிமுறைகள் என்ன?

4. பெருமையை நாசகரமானதொரு பாவமாக தேவன் ஏன் கண்ணோக்குகிறார்?

5. கீழ்ப்படிதல் எவ்வாறு ஒரு விசுவாச நடக்கை ஆகும்?

6. ஏழாவது வசனத்தில் உள்ள வாக்குத்தத்தத்தைப் பெற்றுக்கொள்ள தேவையான முன்நிபந்தனைகள் என்ன?

7. தேவன் தம்முடையவர்களை விசாரிக்கிறவர் என்பதைப் பேதுருவுக்கு உறுதிப்படுத்திய அனுபவங்கள் எவை?

8. நமது பெரும்பாலான மனக்கவலைகளை உருவாக்கும் நமது எதிரியின் தந்திரங்கள் யாவை?

9. சாத்தானை முறியடிக்கும் வெற்றிக்கு உறுதியான என்ன சூத்திரம் நம்மிடம் உள்ளது?

10. தேவனிடம் விட்டுவிடாமல் எந்த குறிப்பிட்ட கவலைகளை நீங்கள் சுமந்துகொண்டு திரிகிறீர்கள்?

11. இந்த நிருபத்தின் மூலம் நீங்கள் கற்றுக்கொண்ட எந்த கீழ்ப்படிதலை இந்த வாரம் நடைமுறைப்படுத்தப் போகிறீர்கள்?

# இரட்சிப்பின் கவிதை

## (ஒரு இரட்சிப்பின் ஜெபம்)

இயேசுவே நீர் சிலுவையில் மரித்தீர்
இழந்து போனோரை மீட்க உயிரோடு எழும்பினீர்
இப்போது என் பாவங்கள் அனைத்தும் மன்னியும்
மீட்பராக, ஆண்டவராக, நண்பனாக என்னிடம் வாரும்
என் வாழ்வை மாற்றி புதிதாக்கும்
ஆண்டவரே! உமக்காக வாழ உதவி செய்யும்.

ஆமென்

மேட் & ஷெரி மெக்பெர்சன்

அக்கினி சோதனைகளை முறியடிப்பது எப்படி

பேதுருவின் நிருபத்தை முதலில் படித்தவர்கள், துன்புறுத்தல் மற்றும் பாடுகளை, கிறிஸ்துவின் மேல் தங்களுக்குள்ள உண்மையின் காரணமாக அனுபவித்து அறிந்தவர்களாக இருந்தனர். ஆயினும் புதிதான ஒன்று சீக்கிரமாக நிகழப் போவது குறித்து பேதுரு அவர்களை எச்சரித்தார்: அதிகார பூர்வமான ஓர் அடக்கு முறையாம் "அக்கினி சோதனை" தொடங்க இருந்தது. தேவ மகிமைக்காக அவர்களால் மகத்தான வெற்றி-யடைய முடியும் என்று பேதுரு அவர்களுக்குக் கூற விரும்பினார்

நமது விசுவாசத்தின் நிமித்தமாக நாமும் துன்பப்படலாம். ஆனால் நம்மாலும் நம்பிக்கையோடு இருக்க முடியும். தேவ கிருபையை நம்மால் கேட்டுப் பெற்றுக்கொள்ள முடியும். தேவ சித்தத்தின்படி பாடனுபவிப்பது தேவ மகிமைக்கு நேராய் நம்மை வழிநடத்துகிறது. மனிதனின் வெறுப்பு காரணமாக நிகழும் மோசமானதை எண்ணி பயப்படுவதற்கு மாறாக, சிறந்த தேவ ஆசீர்வாதங்களுக்காக நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்ளலாம்.

இயேசு கிறிஸ்துவை நோக்கிப் பார்! நம்பிக்கை உள்ளவனாயிரு!

டாக்டர். வாரன் டபிள்யூ. வியர்ஸ்பி, மிக்சிகனின் கிராண்ட் ராப்பிட்சில் உள்ள கார்னர் ஸ்டோன் கல்லூரியின் ரைட்டர்-இன்-ரெசிடென்ஸ் ஆக இருக்கிறார். மேலும் அவர் கிராண்ட் ராப்பிட்ஸ் பேப்டிஸ்ட் செமினரியில் போதிக்கும் தலைசிறந்த பேராசிரியரும் ஆவார். சிக்காகோவில் உள்ள மூடி சபை உட்பட மூன்று சபைகளில் ஆயராக இருந்தவர். "பேக் டு த பைபிள்" ஒலிபரப்பின் பொது இயக்குநராகவும், வேதாகம ஆசிரியராகவும் பணிபுரிந்தவர்.

தனிப்பட்ட மற்றும் குழு ஆய்வுக்கான கையேடு இணைக்கப்பட்டுள்ளது.

COOK INTERNATIONAL
a grassroots partner
&

Be Hopeful
(Tamil)